# முரசொலி

## பொங்கல் மலர் 1957



ஆசிரியர்:
மு. கருணாநிதி

வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது!




காஸினோ

கிரௌன்

சயானியில்

★

எமது அடுத்த வெளியீடுகள்:

மக்களைப் பெற்ற மகராசி ★ வணங்காமுடி

சிவாஜி பிலிம்ஸ் (பிரைவேட்) லிட்.

3. பெஸண்ட் ரோட்

மதருஸ் - 6


வருகிறது!
வளரும்
தமிழ்க் கலைக்கு
ஒரு வண்ணப்படைப்பு!
சரவணபவா & யூனிட்டி வழங்கும்
வணங்காமுடி
டைரக்ஷன்
P. புல்லையா B.A
Jupiter Advts

கைத்தறி ஆடைகளில்

எலிபெண்ட் கிசான் மார்க்

சிறந்தது

பட்டு & நூல்

ஜவுளிகளும்

நயமாக கிடைக்கும்



கருப்பணமுதலியார் ஸ்டோர்ஸ்

53, கிடங்கு தெரு, சென்னை-1

Madras Arts

இந்தியாவில் முதன்மை ஸ்தானம் வகிப்பதும் தமிழ் நாட்டுத் தயாரிப்பில் பெருமை வாய்ந்ததும் உபயோகிப்போருக்கு உத்திரவாத மளிப்பதும் நாட்டுத்தேவைக்கு பூரண திருப்தி அளிப்பதும்

ஸ்டார் பித்தளை லைட்



எமது

ஸ்டார் பித்தளை : பெட்ரும் லைட்டுகள்

குறிப்பு:— எமது சிலேட், சிலேட் பென்சில், சாக்பீஸ், கேன்வாஸ், துணி, பை ரகங்கள், குத்து விளக்குகள் தென்னாட்டில் பிரசித்தி பெற்றவை.

தேவைக்கு ;

போன் : நெ. 72 தந்தி , சிலேட்ஸ்.

மேனகா சுதேசி சிலேட் பாக்டரி

தபால் பெட்டி எண் : 12

கும்பகோணம்

கவனிப்பு : இன்னும் இந்நாட்டின் சுயதேவை பூர்த்திக்கானபொருள்களும் வெளிவர இருக்கின்றன.



வருகிறது!
ஸ்ரீ லக்ஷ்மி பிக்சர்ஸ்...
மக்களைப்பெற்ற
மகராசி
டைரக்ஷன் வசனம் சங்கீதம்
K. சோமு. A.P. நாகராஜன். K.V. மஹாதேவன்
BHARAT STUDIO

விற்பனையாகி வருகிறது!

# மணி மகுடம்

( நாடகம் — மு. க தீட்டியது )

★

விரைவில் கிடைக்கும்

★ 'முரசொலி' மாறன் எம். ஏ. தீட்டிய ★

## ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?

## தங்கப்பேழை

முத்து வேல் பதிப்பகம்

77, மதுரை ரோடு, : : திருச்சி—1.





தயாராகிறது!
பாரகன் பிக்சர்ஸ்
அன்னையின் ஆணை
சிவாஜி கணேசன் • சாவித்திரி
M.N.நம்பியார் • M.N.ராஜம்
S.V.ரங்காராவ் • பண்டரிபாய்
மாஸ்டர் பாஜி • பேபி உமா
மற்றும் பலர்.
டைரக்ஷன்
Ch.நாராயணமூர்த்தி
தயாரிப்பு
A.M.M.இஸ்மாயில்
பாரகன்
சென்னை

விற்பனையாகின்றன!

கற்கண்டு நிகர் ஏடுகள்!

மு. க. தீட்டிய

## "வெள்ளிக்கிழமை"

விலை ரூ. 2-0-0

"முரசொலி" மாறன் எம். ஏ., எழுதிய

## "வால் நட்சத்திரம்"

விலை ரூ. 1-0-0

## திராவிடப்பண்ணை

தெப்பக்குளம்... திருச்சி-2

## புதையல்

"முரசொலியி"ல் பல்லாயிரம் மக்கள் படித்துப் பரவச மடைந்த தொடர்ச்சித்திரம்

## புதையல்

புத்தகவடிவில் தயாராகிவிட்டது!

மற்றும் கைவசமுள்ளவை :—

இராம. அரங்கண்ணல் தீட்டிய

புழுதிமேடு

ரூ. 1—4—0

சிறந்த

புகைப்படங்களுக்கு

## லெட்சுமி போட்டோ ஸ்டுடியோ

கூறைநாடு—மாயூரம்

(நமது இயக்கத் தலைவர்களின் படங்கள் எல்லா அளவுகளிலும் கிடைக்கும்.)

# பொங்கல் திருநாளில்
# எங்கள் வாழ்த்துக்கள்!

| | | |
|---|---|---|
| சென்னை | — | வெலிங்டன் |
| மைலாப்பூர் | — | கபாலி |
| சைதாப்பேட்டை | — | நூர்ஜஹான் |
| பெரம்பூர் | — | வீனஸ் |
| அமிஞ்சிக்கரை | — | லக்ஷ்மி |
| தண்டையார்பேட்டை | — | தங்கம் |

★



எஸ்.கே.பிக்சர்ஸ்

# குலதெய்வம்

...ஒரு குடும்பக் காவியம்...

டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு • வசனம்: மாறன் M.A.

ஸ்டூடியோ: ஏவி எம்

தந்தி : குருக்யூர்ஸ் தபால் பெட்டி : 22 போன் : 248

பொங்கல் நன்னாளில்

# எங்கள் வாழ்த்து!

## குரு மருந்துகள்

## 60 வருட அனுபவம்

ஆங்கிலம் - தமிழ் முறை

★

## குரு தைலம் : குரு பல் பொடி

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை.

★

## குரு கோரோஜனை

## குரு கஸ்தூரி

மற்றும் குழந்தை மருந்துகள் உத்திரவாத குண முடையவை.

—: பரீட்சியுங்கள் :—

உங்கள் ஊர் மருந்து - ஷாப் கடைகளில் கிடைக்கும்.

## டாக்டர் ஏ. மதுரம் - சன்ஸ்,

குரு மருந்துசாலை, : : திருச்சிருப்பள்ளி.

அனுப்புனர்,
இராம. சிவநாதன்
சென்னை-106.
77 வது வட்டம்
அண்ணாநகர் பகுதி





# காணிக்கை!

“நல்லாட்சி காண்போம்” என அழைக்கிறார் அண்ணன்.

“நாட்டுக்கொரு சேதி” சொல்லி நல்வாழ்த்து குவிக்கிறார் நாவலர்.

நாமும், தூத்துக்குடி தோழன்—தூய்மை நிறை தங்கம் கே. வி. கே. சாமியின் நினைவாக இந்த மலரைத் தென்னகத்திற்குப் படைக்கிறோம்.

பழையநாள் தமிழகத்துக் காட்சி யொன்றை முகப்போவியம் சித்தரிக்கிறது. ஆனைமீது மானுடன் சென்று புலி வேட்டையாடித் திரும்பும் சிங்க மொன்றைக் காணுகிறோம், இன்று படமாக! இது ஒரு காலம் தமிழகத்தில் அன்றாட நிகழ்ச்சியாக இருந்தது. அந்த வீரத் தமிழகம்—வெற்றி கண்ட தென்புலம்—இன்று வீணர் தம் வலையில் வீழ்ந்ததை யெண்ணி இந்த மகிழ்ச்சிக்குரிய பொங்கல் பெருநாளிலே கூட உளம் நெகிழ்கிறோம்!

வாட்டம் தவிர்த்து, வலிமை சேர்த்து உரிமைப்போருக்கு வழியனுப்பிவைக்கும் உணர்ச்சித் திருவிழாதான் பொங்கல் என்னும் எண்ணம் பெறுகிறோம். புதிய வண்ணமும் பொலிவும் நிலவ வேண்டும் திருவிடத்தில் என்ற எழுச்சிப்படை அணி வகுத்து நிற்கிறது. அந்தப்படை வரிசைக்கு ஊக்கமளிக்கும் சிறு பங்கைச் செலுத்தத்தவறாது முரசொலி பொங்கல் மலர், என்ற நம்பிக்கையோடு நல்ல பெரும் விழாவில் இதனை உங்கள் முன் படைக்கிறோம்.

மலர் இந்த ஆண்டு வெளியிடாமலே நிறுத்தி விடலாமா என்ற குழப்பத்தில் நெடுநாள் இருந்தோம். தேர்தல் அலைச்சல்கள் எனக்கு! தாள் விலை ஏற்றம் பற்றிய கவலை மாறனுக்கு! சகோதரர்கள் சத்தி, முத்து, கருணானந்தம் ஆகியோர் மலர் வெளியிடத்தான் வேண்டுமெனப் பிடிவாதம் காட்டி, மாறனின் மனதைத் திருப்பினர். சென்ற ஆண்டைப்போல எழிலோடு அமைக்க முடியுமா? என்ற கவலை பிறந்தது; காரணம் நாள் அதிகமில்லாமல் போயிற்று. அதற்கும் அஞ்ச வேண்டாமென்று கருணானந்தமும், பண்ணைமுத்துவும் முரசொலி அலுவலகத்திலேயே குடியேறினர். அலுவலகத் தோழர்களோடு சேர்ந்து இருவரும் உண்ணாமல் உறங்காமல் உழைத்தனர். அலுவலகமே மலரின் வெற்றியில் என்னைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாமல்ஈடுபட்டது. விளம்பர இலாகாவை சகோதரர் சண்முகவடிவேல் கவனித்துக்கொண்டார். நானோ,ஊரும்சுற்றிக்கொண்டுஇடையிடையே மலரையும் கவனிக்க இயலாதவனானேன். இருந்தாலும், மலர் இரண்டு ஆண்டுகளையும்விட மிகச் சிறப்பாக அமைந்துவிட்டது என்று நீங்கள் புகழ்வது என்காதில் விழுகிறது; களிப்படைகிறேன். அந்தப் பாராட்டுதலை மலருக்காக உழைத்த தோழர்களின் பக்கம் திருப்பி விடுகிறேன்.

லாபத்தைக் குறிக்கோளாகக் கருதாமல்தான் முரசொலியின் ஒவ்வொரு பொங்கல் மலரும் வெளிவந்திருக்கின்றன என்பதை அறிவீர்கள். அதைப்போலவே இந்த மலரும் இலட்சியத்தைக் காம்பாகப் பெற்று மலர்ந்திருக்கிறது என்பதைப் பெருமையோடு அறிவித்துக் கொள்கிறேன்.

மலரின் எழிலுக்குப் பாடுபட்ட அனைவருக்கும், மலரை வண்ணமிகு வானவில்லாகமாற்றிக்காட்டும் ஓவியர்கள் மாதவன், அய்க்கன், முரசொலி செல்லப்பன், சது ஆகியோருக்கும் நன்றி தெரிவித்து,

எங்கள் அலுவலகச் சார்பில் திராவிடத்திற்குப் பொங்கல் வாழ்த்து கூறிக்கொள்கிறோம்.

அன்பு,


அன்று கனகவிசயரைத் தோற்-
-கடிக்க செங்குட்டுவன் தலைமையில்
வடநாட்டு யாத்திரை நடத்தினேம்...
இன்று விசுவநாதர் தரிசனத்துக்கு
காசி யாத்திரை செய்கிறேம்!
அன்றும்
அன்று பர்மாவிலே படையெடுக்க
ராஜேந்திர சோழன் தலைமையில்
அணிவகுத்துச் சென்றேம்....
இன்று பர்மாவில் பிழைப்புதேடி
'பாஸ்போர்ட்டுக்கு 'கீயூவில்'
நிற்கிறேம்!


அன்று கரிகால் பெருவளத்தான்
பனிரெண்டாயிரம் சிங்களவரை
கைதிகளாக்கி வந்தான்....
இன்று இலங்கையில் இடமில்லை
யென்று அந்தக் கைதிகளினும்
கேவலமாய் க்கப்படுகிறோம்!
இன்றும
அன்று அசோகனும் ஹர்ஷனும்
அடியெடுத்து வைக்க பயந்தனர்.
செல்லப்பன்
இன்று அசோக சின்னத்தின் கீழே
அடிமையாகிக் கிடக்கிறோம்!

# நல்லாட்சி காண்போம்!

வளம் தரு நெல்லும் வானுயர் கரும்பும் முத்தும் பொன்னும் விளைகின்ற திருவிடத்து மக்களுக்கோர் திருவிழாவாம் பொங்கற் புதுநாளில் மலர் வெளியிட்டு என்னையும் உங்களையும் மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க விடுகிறான் என் தம்பி.

'முரசொலி' திராவிடர் விடுதலைப் படைக்கோர் கூரிய போர்வாள் என்பதை நாடறியும். ஏற்றமிகு எழுத்தோவியங்களும், சித்திர விளக்கங்களும் இடம் பெற்று இந்த இலட்சிய ஏடு பெருமைக்குரிய அளவிலும், நான் பூரிப்படைகிறவகையிலும் தொண்டாற்றிவருகிறது. இனியும் தொண்டாற்றும்.

கேடுகள் களைய சமுதாயத்தில் ஒரு புறம் மேடுகளும் மறுபுறம் பள்ளங்களும் அமைதல் கூடாதெனச் சுட்டிக் காட்டிச் சமநிலை ஏற்படுத்த—அரசியலில் ஆணவப்போக்கும், அடக்குமுறை தர்பாரும், அலட்சிய சித்தமும் இருந்தலாகாதென்ற உரிய சித்தாந்தத்தை உணர்த்த தி. மு. கழகம் பாடுபடுகிறது. அதற்கான ஜனநாயகக் கடமைகளில் ஒன்றான தேர்தல் மார்க்கத்தையும் தேர்ந்தெடுத்திருக்கிறது.

பொங்கல் திருநாள்—தமிழருக்கு, திராவிடருக்கு—புதுமை வழங்குதல் போலவே, அரசியலிலும் புதியதோர் மாற்றத்தை—தேவைப்படும் திருப்பத்தை ஏற்படுத்துவதாக இந்த ஆண்டு அமையட்டும்.

நாட்டில் நல்லாட்சி காண்பதற்கு நாமெல்லாம் முனைந்து நிற்கும் நேரத்திலே பூரிப்பு வழங்கும் தன்மையில் பொங்கல் வருகிறது. அதனை யொட்டி முரசொலி மலரும் வருகிறது. பொங்கலைச் சுவைத்து மகிழுங்கள்! 'மலரை'ப் படித்து மகிழுங்கள்! ஆணவ அரசியலை மாற்றி மகிழுங்கள்.

அன்பன்

அண்ணாதுரை

---




தன்னலங் கருதாத்

தென்னவர் கோ.

# நாட்டுக்கு ஒரு சேதி!

"தேர்தல் வருகிறது! திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் போட்டியிடப் பூரிப்போடும், பெருமையோடும், பொலிவோடும், வலிவோடும் கிளர்ந்தெழுந்து நிற்கிறது!

கழகத்தின் கையிலே காசு இல்லை என்ருலும், மனத்திலே மாசு இல்லை என்ற மாண்பு மிகு மகிழ்ச்சியோடு மக்களை நெருங்குகிறது!

கழகம் தன்னுடைய நேர்மையை, நீதியை, நாணயத்தை, உழைப்பை, உயர்வை, சொல்லாற்றலைச், செயலாற்றலை முன்னிறுத்தி, மக்களின் ஆதரவை நாடி அண்மையில் நாடெங்கும் உலா வர இருக்கிறது!

நாடு வாழ, நலிவு போக, வாழ்வு மலர, வளம் பெருக திராவிட முன்னேற்றக்கழகத்துக்கு ஆதரவு தர வாரீர்! வாரீர்!! வாரீர்!!" என்ற வேண்டுகோளைத்தான் நாட்டிற்கு ஒரு நல்ல செய்தியாக இப்பொங்கற்புது நாளில் 'முரசொலி' மூலம் நாடெங்கும் பரப்பிட விரும்புகிறேன்!

அனைவர்க்கும் என் பொங்கல் வாழ்த்துக்கள்'

இரா. நெடுஞ்செழியன்







# வா அண்ணே, வா!

கண்ணும் சிலையோடிக் காதைத் துளைத்துவரப்
பண்ணோ டிழையுமே பாதமலர்—பெண்ணாள்நம்
பொங்கலை வாழ்த்தும் புதுமையினைக் காண நீ
இங்கெழுந்து வா அண்ணே! வா!



நன்செய் பழுக்க நற் காபழுக்கச் செங்கதிரோன்
புன்செய் பழுக்கப் புறப்பட்டான்!—இன்சொல்
தமிழால் கதிர்வாழ்த்தித் தைவாழ்த்திப் பொங்கல்
அமிழ்துண்போம் வா அண்ணே! வா!



சின்ன கரும்பு கணுக்கரும்பைத் துண்டாக்கித்
தின்னும் கதிர்வாழ்த்தும் தாயோடு—பொன்னான
செம்பரிதி வாழ்த்தித் தைத் தீம்பொங்கல்
உண்டாடும்
நன்னாளாம்! வா அண்ணே! வா!

நீலக் கடலும் நெடுவானும் பொன்னாக்கிக்
கோலம் புனைந்தான் குளிர்பரிதி!— ஏலவே
புத்தம் புதுப் பொங்கல் தைப் பொங்கல் உண்டாடி
இத்திங்கள் போலிருப் போம்.





கவிஞர் வாணிதாசன்..



படங்கொண்டு பரவுதலே யிடங் கொண்ட
நாமமுயர் பாம்பு போலும்
பாங்கறுவண் ணுன் கழுதை தான்புரண்டு
சாம்பலணி பண்பு போலும்,
சடங்குளிரச் சலதி நதித் தண்ணீர் தோய்ந்
திடுமுதலே தவளை போலும்,
தருக்களடர் வனத்தினிடை மலேக்குகையுள்
வரிப்புலிகள் தனித்தல் போலும்,
கடங் கொண்டான் கொலேயாளி
கள்வனர சியலாருக் கஞ்சி நின்ருன்
கருதுமனே மக்களிலான் கவலேயின்றிக்
காசினியை யேய்க்கும் வீணர்
அடவிமலேக் குகைபுகுந்தென்? அருவிநதி
ஆடியுமென்? சாம்பல் காவி
அணிவதனுல் ஆத்மசுத்தி யாவதற்குண்
டானவகை அறிகு வாரோ ?

# அறிவாரோ?



நாராயணகவி

# மேகலா

தரும்

மேன்மை மிகு சித்திரங்கள்!

# குறவஞ்சி

கதை வசனம் மு.கருணாநிதி • டைரக்ஷன் A.காசிலிங்கம்

# வெள்ளிக்கிழமை

[முரசொலியில் பல்லாயிரவர்
படித்துமகிழ்ந்த தொடரோவியம்]

கதை : மு.கருணாநிதி

வசனம் முரசொலி-மாறன் M.A., • டைரக்ஷன் A.காசிலிங்கம்

மேகலா பிக்சர்ஸ்......சென்னை-17

G.H.RAO


அவருக்குப் பிறகு....?
வடநாட்டில் பண்டித நேரு தொழிற்சாலைகளை ஏற்படுத்தினார்!
அணைகளை அமைத்தார்!
பாலங்களைக் கட்டினார்!
மரங்களை 'நட்டார்'
சமாதானப் புறாக்களை வளர்த்தார்.
ஆனால்......
அவருக்குப் பிறகு தலைவர்களை வளர்க்க மறந்தார்.

# இன்றுபோல் என்றும் வாழ்வோம்!

ஏழைகளுக்கும், இருப்பவருக்கும் இணைந்தாற்போல இன்பம் தருவது இந்த ஒரே ஒரு நாள்தான்! ஏழை உண்ணும் பொங்கலைப் போன்றுதான் இருப்பவனும் உண்ணுகிறான்; இருப்பவன் தனக்கென தங்கத்தினால் அரிசி தயாரித்துப் பொங்கி உண்ணுவதில்லை; இன்று, ஏழையும் பட்டினி கிடக்க நேருவதில்லை! எல்லோரின் வீட்டிலும் ஒரே விதமான பச்சரிசிப் பொங்கல்! அனைவரையும் சமத்துவ நிலையில் வைக்கும் இந்தத் திருநாளை நாம் வாழ்த்துவதைவிட வணங்குவதே பொருத்தம்!

மேலும் நாம் அடைய வேண்டிய மேன்மைகளைப் பற்றி இன்று கொஞ்சம் சிந்திப்போம்.

நாட்டிலே எத்தனையோ நல்ல காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எவ்வளவோ காரியங்களுக்கு நிதிகள் திரட்டப் படுகின்றன. மெய்யாகவே, முன்னைவிட எத்தனையோ மடங்கு நாடு வளர்ந்து கொண்டுதானிருக்கிறது; ஆயினும், நாட்டிலுள்ள மக்களின் மனதில் அன்பு மட்டும் முன்னிருந்த நிலையிலேயே இருக்கிறது; அணுவளவும் அது வளரவில்லை! ஒவ்வொருவனும், மற்றொருவனைச் சந்தேகிக்கிறான்; அருவருக்கிறான்; சண்டைக்கிழுக்கிறான்! போட்டி மனப்பான்மை மக்களிடமிருப்பது நல்லதுதான் ஆயினும், அது பொறாமையாக மாறும் அளவுக்கு வலுப்பெற்று விடக்கூடாது! அப்போதுதான், தவறுகள் தோன்றுகின்றன!

ஒரு உதாரணம்:

முதலில், நாமும் அவனைப்போல் கடை வைத்தாலென்ன என்று ஒருவன், முன்னொருவனின் கடையின் பக்கத்தில் எதிர்க் கடைபோடுகிறான். போட்டி மனப்

கலைவாணர்

**என்.எஸ்.கிருஷ்ணன்**

செ.

பான்மை வளருகிறது. அதன் உச்ச கட்டத்தில், ஏதாவது ஒரு கடை தீப் பற்ற நேரிடுகிறது! மூல காரணம், மனத்துறையில் அன்பு நிலையில், இன்னும் மக்கள் வளர்ச்சி பெருததுதான்!

பெரிய மேதைகளிடம் கூட—பிரபல தியாகிகளிடம் கூட—கால் கை முடமும், கண் குருடுமான ஒரு பிச்சைக்காரன், காலணு, பிச்சையாகப் பெற முடிவதில்லை! ஏந்திய கைக்கு ஈந்துதவும் கைகள் இன்று நம் நாட்டில் மிகவும் அபூர்வமாகத்தான் காணப்படுகின்றன: "ஊம்...ஊம்...வேற எங்கேயாவது போய்க் கேளப்பா" என்றே விரட்டியடிக்கிருர்கள்! பிறந்த நாட்டை விட்டு, அவர்கள் வேறு எங்கு போவார்கள்? இதைப்பற்றியல்லவா, நாட்டின் மேதைகள் முதலில் சிந்திக்கவேண்டும். மனிதன் என்பவனுக்குரிய முதல் அம்சம் மனம்தான்; ஏந்திய கைக்கு ஈந்து விட்ட பிறகல்லவா சூயஸ்பற்றி சொல்மாரி பொழிய வேண்டும்; ஹங்கேரி பற்றி பங்குபோட்டுப் பேசவேண்டும்! நாட்டுக்குப் பாடு படுவதும், நாட்டைப்பற்றிப் பேசுவதும் கூட, ஒரு "பேஷன்" ஆகிவிட்டது; அதைப் பேஷனுகக் கருதாமல், கடமையாகக் கருதி பணி புரியும் காலம் என்று வருமோ?

"எல்லோரும் ஓர் நிறை-எல்லோரும் ஓர் விலை" என்று சொன்ன கவிஞனின் வாக்குக்கே வரவர விலையில்லாமல் போய் விட்டது! இந்த நிலை மாற வேண்டும்! எல்லோரும் மனிதராக வாழ வேண்டும்! எல்லா நாட்களும் பொங்கல் நாளாய்த் திகழ வேண்டும்! இதுவே, என் இதயத்து வாழும் ஏகப் பெரும் ஆசை!

○○○



# எழுக!

பொங்கற் புதுநாளிற் புத்துணர்ச்சி எய்துக
பொங்குக பால்போற் பொலிவெலாம் - தங்கத்
தமிழ்நாட் டியாவரும் தம்மொழியுந் தாமுமாய்
வாழ எழுக உடன்.

டாக்டர் அ. சிதம்பரநாதனார்...


விரைவில் வருகிறது !..
பத்மினி
பிக்சர்ஸ்
தயாரிப்பு...
தங்கமலை
ரகசியம்
முற்றிலும் மாறுபட்ட புதுமைச்சித்திரம்
டி.ஆர். ராஜகுமாரி • சிவாஜி கணேசன்
எம்.வி.ராஜம்மா • எம்.என்.நம்பியார்
ஜமுனா • ராஜசுலோசனா • தனம்
வீரப்பா • சாரங்கபாணி
டி.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் பலர்
தயாரிப்பு • டைரக்ஷன்: பி.ஆர்.பந்துலு
பத்மினி பிக்சர்ஸ் ☆ பாலகிருஷ்ண ரோடு, மதராஸ்-4.

# சென்னையில் சிலைகள்!

* * *

வடநாட்டுக் கொள்ளையரிடம் நாட்டைக் கொடுத்துவிட்டு, வெள்ளையன் வெளியேறிவிட்டான்! ஆனால் அவன் விட்டுச் சென்ற அடிமைச் சின்னங்கள் இன்னும் நமது தலைநகரை விட்டு அகலவில்லை!

ஆதிபத்தியச் சின்னங்களாம் ஐந்தாம் ஜார்ஜ்; ஏழாம் எட்வர்டு; விக்டோரியா போன்றவர்களும்—கொடுங் கோன்மையின் சிகரமாம் வெலிங்டனும்; மற்றும் மன்றோவும் சிலை வடிவிலே நின்று கொண்டு வீர சுதந்திரத்தைப் பரிகசித்துக் கொண்டிருக்கிறார்கள், சென்னையிலே!

அண்மையில் எகிப்து நாட்டிலே 1885-ம் ஆண்டு ஆங்கிலேயருக்கு வெற்றி தேடித் தந்த ஜெனரல் கார்டனின் சிலையும்; சூடானின் முதல் கவர்னர் ஜெனரலாயிருந்த ஏர்ல் கிச்சனரின் சிலையும் கார்ட்டூம் என்னும் இடத்திலிருந்து அகற்றப் பட்டதாகக் கேள்விப்படுகிறோம்! சூயசின் நுழைவு வாயிலாம் போர்ட் செட் துறைமுகத்திலிருந்த பெர்டினண்ட் டிலெஸப்ஸ் என்னும் பிரெஞ்சுக்காரரின் சிலையை எகிப்தியர்கள் சுக்குநூறு செய்து விட்டார்கள்.

ஹங்கேரியிலே அடிமைத்தளையின் அறிகுறியாயிருந்த ஸ்டாலின் சிலையைப் பொதுமக்களே பொடி செய்திருக்கிறார்கள்.

இங்கே ஆட்சி பீடம் அந்தக் காரியத்தைச் செய்யப் போகிறதா; அல்லது பொதுமக்களே அந்தத் திருப்பணியைச் செய்து முடிப்பார்களா—என்பதற்குக் காலம் தான் பதில் கூற வேண்டும்!

* * *

[புகைப்படம்: சாமுவேல்]



# நான் கண்ட வ.உ.சி



திருவாளர் வ. உ. சிதம்பரனார் அவர்களைத் தமிழகப் பெருமக்கள் அனைவரும் நன்கறிவார்கள். அவர், காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் தொண்டு செய்து கொண்டிருந்த காலத்தில் இந்தியாவில் தேசத் தொண்டு செய்ய ஆரம்பித்தார்; லோகமான்ய பால கங்காதர திலகர் அவர்களின் அரசியல் மாணவருங் கூட.

திரு. சிதம்பரனார் அவர்கள் பல முறை சிறை சென்றவர்கள். அவர் செய்த குற்றமெல்லாம், இந்நாட்டின் மீதும், மக்களின் மீதும், அன்பு கொண்டது ஒன்றுதான். அந்தக் காலத்தில் சிறைக்குச் செல்ல விரும்புவோர் அனைவருக்கும் தெரியும், சிறையில் செக்கு இழுத்துச் சீரழிய வேண்டும் என்று. சிறைக் கைதிகள் மட்டும் அல்லாமல் அரசியல் கைதிகளுங்கூட குத்துவதெல்லாம் நெல்லாக இருக்கும். உண்பதெல்லாம் களியாக இருக்கும். அதுவும் வேகாத களியாக இருக்கும். நாள் தோறும் கற்கள் உடைக்க வேண்டும், இன்றேல் பற்கள் உடைபட்டுப் போகும். என்றாலுங்கூட திரு வ. உ. சி. அவர்கள் எக்காலத்திலும் இவற்றைக் கண்டு மனங்கலங்கினாரில்லை, இதையெல்லாம்விட ஒரு பெரும் வியப்பிற்குரிய செய்தி, அக்காலத்தில் சிறை சென்றவர்கள் போற்றுதலுக்தும் பூமாலைக்கும் உரியவர்கள் அல்ல. தூற்றுதலுக்கும் ஏளனத்திற்குமே உரியவர். முடிவாகக் கூற வேண்டுமானால் சிறைக்குச் சென்றவர்கள்



செ. கி. ஆ. பெ. விசுவநாதம்

சமூகத்திலிருந்து விலக்கப் பெற்ற காலத்தில்தான் நம் சிதம்பரனார் அவர்கள் சிறை புகுந்தார்கள். மகிழ்ச்சியோடு புகுந்தார்கள். செக்கும் இழுத்தார்கள். களைப்பு மிகுதியினால் பருகத் தண்ணீர் கேட்டும் நீர் பெறாமல் சவுக்கடியையே பெற்றார்கள். சில நாட்கள் மட்டும் பெறவில்லை; பல நாட்கள்; பல ஆண்டுகள் தொடர்ந்து பெற்றார்கள். நாட்டுப் பற்று காரணமாக உயிர் போகும் வேதனையைப் பெற்று மகிழ்ந்தார்கள்,

படிப்பு இல்லாமல் தேசத் தொண்டு செய்யப்போனவர் அல்லர் அவர். கல்லூரியில் பயின்று பட்டம் பெற்று சிறப்போடு வாழ்ந்தவர்கள். தொழில் இல்லாமல் தேசத் தொண்டு செய்யப் புறப்பட்டவர் அல்லர். வழக்கறிஞர் தொழிலில் நல்ல வருமானம் பெற்றுத் திருநெல்வேலி மாவட்டத்தில் புகழ் பெற்றவர் அவர். புகழுக்கும் பெருமைக்கும் ஆசைப்பட்டுப் பொது நலம் தேடச் சென்றவரல்ல. பிரிட்டிசாரின் ஏகாதிபத்தியத்தை வேரறுக்க வேண்டும் என்ற ஒரே கொள்கையை அடிப்படையாகக் கொண்டு நாட்டுக்கு நலம் தேடச் சென்றவர். அவரது அருஞ்செயலையும், பெருங் குணத்தையும் உள்ளத் தூய்மையையும், உழைப்பின் சிறப்பையும் விளக்க இதைவிட வேறெதும் கூற வேண்டியதில்லை. திரு வ. உ. சி. அவர்களின் பேச்சு இரத்தத் துடிப்பை மட்டும் அல்ல, எலும்புகளையும் துடிக்கச் செய்யும்.

அவருடைய தமிழ்ப் பற்று தமிழ் நாட்டிலே நன்கு மதிக்கப் பெற்றிருக்கிறது. அதுதான் திருக்குறள் வ உ. சிதம்பரம் பிள்ளை பதிப்பு என்பதாகும். இது இன்னும் நம்மிடையே இருந்து கொண்டு அவர்களையும் அவர்களது தமிழ்ப் பற்றையும் நினைப்பூட்டி வருகிறது.

பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிகள் தூத்துக்குடியிலிருந்து கொழும்புக்குச் செல்லக் கப்பல் கட்டணத்தை உயர்த்தித் தமிழ் நாட்டு வர்த்தகத்திற்குக் கேடு விளைவித்த செய்தியறிந்த திரு சிதம்பரனார் போட்டியிடுத்தானே ஒரு கப்பலை ஓட்டித்



தமிழக வர்த்தகத்திற்குத் தொண்டு செய்தார்கள். இதன் காரணமாக அவர் உடன் சிறை சென்றதனால் அவருடைய முயற்சி வெற்றி பெறவில்லை என்றாலும் சிதம்பரனார் சிறையடைக்கப்பட்ட செய்தியறிந்ததும் தூத்துக்குடியில், இரயில்வே நிலையங்களும், தபால் நிலையங்களும், போலிஸ் அலுவலகங்களும் தூள் தூளாக்கப்பட்டன. நெருப்புப் பொறிகள் பறந்தன. வெள்ளைக்கார அரசாங்கமே நடுங்கி அஞ்சுகின்ற அளவுக்கு அவர் ஒரு ஆபத்தான மனிதராகக் கருதப்பட்டார்.

திருவாளர் வ. உ. சிதம்பரனார் அவர்கள் தமிழ்நாட்டு தேசபக்தர்களுள் சிறந்த ஒருவர். தேசபக்தர் என்றாலே வ. உ. சி. அவர்களைத் தான் குறிக்கும். நாட்டின் மீது உள்ள பற்று உள்ளபடியே அளவைக் கடந்தது எனத்துணிந்து கூறலாம்.

அவர் வாழ்ந்த காலத்தில் நான்கு முறை அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றேன். கோவில்பட்டி தட்டப்பாறை ஆகிய இடங்களில் நான்கு கூட்டத்தில் அவர்களோடு சேர்ந்து பேசியிருக்கிறேன். தமிழுக்காக அவர்மீது எனக்குப் பற்றுதலுண்டு: அதற்காக என்மீது அவருக்குப் பற்றுதலுண்டு. தமிழ் ஒன்றே எங்களைப் பிணைத்தது.

அரசியலிலே நாங்கள் இருவரும் மாறுபட்ட கொள்கையுடையவர்கள். இன்றைக்கு 36 ஆண்டுகள் ஆயின என்றாலும் தட்டப்பாறையில் அவர் சொன்ன சொற்கள் நேற்றைக்குச் சொன்னது போலிருக்கிறது. அவர் சொன்னதாவது, "உங்களைப் போன்றவர்கள் ஜஸ்டிஸ் கட்சியை விட்டு விலகி காங்கிரஸ் கட்சிக்கு வந்து சேர வேண்டும்" என்பது. எனது இளமை முறுக்கினால் அப்போது அவர்களை கடுமையாகத்தாக்கி, இரண்டு சுடுசொற்களைச் சொல்லிவிட்டேன். நான் சொன்னதாவது "தங்கள் அறிவும் திறமையும், உழைப்பும் தமிழர் நலனுக்குப் பயன்படாமல் அறியாமையின் காரணமாக வேறொரு இனத்தவருக்குப் பயன்படுகிறதே? அந்தத் தவறை நானும் செய்ய வேண்டுமா?" என்பதுதான். இதற்காக அவர்கள் எனக்களித்த தண்டனை அவர்களின் இல்லத்திற்கு என்னை அழைத்துச் சென்று பல மணி நேரம் பேசினார்கள்.

அவரது மனைவியார் என் வயிற்றுக்கு ஒரு வேளை உணவளித்தார்கள். ஆனால் அவரோ என் அறிவுக்குப் பல நாள் உணவை அளித்து மறைந்தார். அவர் அளித்த உணவு 'எவரையும் வையாதே, எக்காரணத்தை முன்னிட்டும் வையாதே. ஏனெனில் வைவது தமிழனின் மரபல்ல. பிறரை வைவதுதான் முன்னேறும் வழி என்று எண்ணாதே. எவன் முன்னேறினாலும் வைபவன் முன்னேற முடியாது என்பதை நம்பு. தவறு என்று கண்டால் தீமையற்ற சொற்களால் அச்சமற்றுக் கூறு" என்பதாகும். திரு பிள்ளை அவர்களின் அறிவுரையும், அறவுரையுமாகிய இது எனக்கு ஓரளவு பயன்பட்டது. இவை உங்கள் அனைவருக்கும் பயன்படவேண்டுமென இப்பொங்கற் பெருநாளிலே பெரிதும் விரும்புகிறேன்.

வாழ்க வ. உ. சி. புகழ்!
வாழ்க அவர் பிறந்த நாடு!



" நடவு நடும் உழத்தியரின்
பாடலில் உள்ளத்தைச்
செல்லவிட்டு ஓய்வெடுக்கும்
உழவர் பெருந்தகை "
(படம் : காரைப்பிடாகை பக்கிரிசாமி.)

# இரணியன்

புவிப் பெண்ணாள் கழுத்தினிலே
புரளுகின்ற முத்துவடம் தென்னாடு!
எடுத்து மீட்டுகின்ற எழில் வீணை!
கவிக்கூட்டம் பாமாலை கட்டுகின்ற கலைச் சோலை!
காசினியோர் காணிக்கை கப்பங்கட்டிக்
குவிக்கின்ற கரம்போல இலங்கைத் தீவு!
செவிக்கினிய தேமதுரத் தமிழோசை...
செகமெங்கும் தமிழ்வீரம் பரப்புகின்ற பழைய நாளில்......
இருமலையைத் தோளாகப் பெற்ற வீரன்...
திருமலியும் தேகங் கொண்டோன்...
திராவிடர்க்குத் தேனாய்......நிலவாய்......
தீந்தமிழ்க் கோர் படைக் கலனாய்த் திகழ்ந்த பெரியோன்!...
போர் வாட்கள் உறங்குகின்ற உறைபோல மீசை யுண்டு!...
புவிமெச்ச வாழவேண்டும் தமிழ் நிலம் என்பதிலும்
தணியாத ஆசை உண்டு!...
புல்லேந்திப் படையெடுத்த ஆரியரைக் கண்டு விட்டால்
குரலில் சிங்கத்தின் ஓசை உண்டு!
இந்தத் தரங்குன்றாத் தமிழனுக்குப்
பெற்றோர்கள் இட்ட பெயர் பெருந்தகை வேந்து-
இழிகுணத்தார்–ஆரியர்கள் இட்ட பெயர் இரணியனாம்!
திருக்குறளின் முப்பாலும் உணர்ந்த வேந்தன்...
பொருட்பாலும் அறத்துப்பாலும் ஆட்சிக்கப்பால்
விலகா வண்ணம் காத்து வந்தான்!.........
இறுதிப்பால் இன்பப் பாலை இனியவளாம்
அரசியின்பால் கண்டு வந்தான்!...





அதன் விளைவாய்க்,......
குழல் மிஞ்சி, யாழ்மீறி. மழலைச் சொல் அவிழ்ப்பதற்கு...
மாதரசின் வயிற்றினிலே மாணிக்கப் பேழை தோன்ற...
மகிழ்ச்சியினால் ஆர்ப்பரித்தார் நாட்டு மக்கள்!

* * * *

கண்ணழகும் கவிதை சொல்லும் முகத்தழகும்கொண்ட காளை...
பெண்ணழகை மிஞ்சுகின்ற பிறை நெற்றி கொண்டதாலே...
பிறைநுதலான் எனச் சொல்லி அழைத்தார் பெற்றோர்;
பிற்போக்கு ஆரியரோ, பிரகலாதன் என்றார்!......
மன்னவனை அழிப்பதற்கு மார்க்கமிலா இச் சமயம்...
மறவேந்தன் பரம்பரையில் குலக்கொடியும்முளைத்து விட்டால்...
மறையோதும் குலத்துக்கே நாசந்தான் எனச் சொல்லிக்
கொழுந்து விடும் ஓமகுண்டத் தீ போலக்
கொதித்தெழுந்தார் சதி வகுக்க ஆரியர்கள்!...
நரித்திட்டம் வகுத்துப் பின் கலைந்து சென்றார்...
நாட்டைக் காடாக்க வந்த புல்லோர்!......

* * * *

நாளொரு மேனிப் பொழுதொரு வண்ணம்
வளர்கின்ற மன்னவனின் செல்வனுக்கு...
வாள்வித்தை, வில் வித்தை, கலைஞானம் கற்பிக்க
நானொருவன் திறனுடையேன் எனச் சொல்லி
நரியொன்று குறுக்கிடவே.......
வெகுண்ட வேந்தன்,



"தாழை மடலை எதிர்ப் புறமாய்த் தடவுதற்கும்
அஞ்சுகின்ற கோழை நீ......
வாழைமரம் வெட்டுதற்கும் வாள்பிடிக்கத் தெரியா மோழை!
வந்தவழி போ" என்றான்......
நொந்த மனங் கொண்டு அவன் போவது நன்றல்ல
எனச்சொல்லி......
கல்வி கற்பிக்கக் குல வேற்றுமை காட்டாதீர் மன்னா!
என ஊடி நின்றாள்; கொற்றவனின் 'குறுநோக்கைக்' குறை கூறி!
பரந்தமனப் பான்மைக்குத் தவறான இலக்கணத்தைப்
படித்துவிட்ட பட்டத் தரசி அவள்...
பாம்புக்குப் பால், முட்டை படைக்கச் சொன்னாள்!
குறுகிய நோக்கிற் கோர் அடையாளம்; பூணூல்-மார்பில்!
குள்ளநரிச் செயல் உதிக்கும் கூனல் உள்ளம்—
ஆரியக் கொள்கை கூறும் சுவடி கையில்!
ஆனாலும் பெரு நோக்கால் ஏற்கச் சொன்னாள்—
அடுத்துக் கெடுக்கவந்த ஆரியத்தின் தூதுவனை!
வட்டமுகப் பெருந்தேவி வார்த்தைக்குப் பதில் வார்த்தை
வழக்கத்தில் இல்லாத காரணத்தால்
பொட்டென்று சம்மதித்துப் போய்விட்டான்,
போர்முகத்தில் புலிவேகம் புயல்வேகம் காட்டுகின்ற பெருவீரன்!
'வாள்' என்றால் வானரத்தின் வால் என்றும்
'வேல்' எனிலோ கருவேல மரமென்றும்
களம்' என்றால் நெல்குவிக்கும் இடமென்றும்.



கருதி வாழும் உறுதியற்ற கூட்டத்தின்
உறுதுணைவன்-ஓதியமிலார்—ஓணான் குஞ்சு—
ஒப்பற்ற ஆசான்போல் உட்கார்ந்து பாடஞ் சொல்ல;
ஒடுக்கமுடன் எதிர் அமர்ந்து இளவரசு கல்வி கற்றான்.
ஆசானின் மூத்த மகள் -ஆஷாதேவி
அருகிருந்து அவனோடு நட்புக் கொண்டாள்!
ஆரியத்தின் கருவுக்கும் சூழ்ச்சியுண்டு—அதன்
சுழற்சியிலே சிக்காதார் அவனியிலே யார்தான் உண்டு?
அரி நமோத்து சிந்தமென ஆரம்பித்தான்!...
நரி பரியான கதை நயமாய்ச் சொன்னான்!
நங்கையும் பழமானாள்; இளவரசு கிளியானான்!...
திங்களணி செஞ்சடையான், திருத்தொண்டர்
மனைவிதனைத் திருவிளையாடல் புரிந்த காதை...
திருலோகம் படைக்கின்ற பிரம்மதேவன்—மகள்,
திலோத்தமையைப் புணர்ந்த காதை...
கடலோரம் நதியோரம் காட்டோரம் வீட்டோரம்...
ஆயக் கன்னியரின் குடம் கவிழ்த்த கண்ணன் காதை...
தாபமிகும் காமக் கதையெல்லாம் கற்பித்தான்!...
தந்தை ஆடுகின்ற சூதுக்குக் காயானாள் தத்தை!
தளராது கற்பித்தாள் இளவலுக்கு இன்ப வித்தை!...

* * * *

விவேகபுரி வீரனாக வந்திருப்பான் செல்வன் என்று
வில்வித்தை ஆனையேற்றம் முடிந்ததா எனக் கேட்ட இரணியனை



இடித்துரைத்து மைந்தன் சொல்வான்:
"ஏனப்பா அந்த இழவெல்லாம்,
எழிலெல்லாம் கூட்டியுள்ள இன்பவல்லி தந்த
சுகம் கண்டேன்......இறைவனது
பாதார விந்தம் காண வழி கண்டேன்!"—
என உரைத்த மகன்மீது சீறிப் பாய்ந்தான்,
தீன வெடுத்த தோளாலே திசையை உலுக்கும்...
பனைமரத்து வைரம்போல் உறுதி கொண்டோன்!
"இயற்கையை வழிபடுகின்ற இனத்தின்மீது
இறைவனென்ற பெயராலே சிலையை நுழைக்கும்
இழிகுணத்தார் வாய் கிழிக்க வாள்பிடித்தேன்!...
காட்டடா யாரென்று உந்தன் தெய்வம்... இல்லையேல்!
காட்டாற்றில்...நடுக் கடலில்...எரி தணலில்...
போட்டமுக்கிப் பொடி செய்து மண்ணில் இறைப்பேன்..."
வேட்டு முழக்கம்போல் வெட்டொன்று
துண்டிரண்டாய் வீசிய வார்த்தைகளால்......
ஆட்டுமூளை பெற்றுவந்த அரச மைந்தன்...அஞ்சி நின்றான்...
அரசி அங்கு குறுக்கிடா திருந்திருந்தால்......
தமிழரின் மானம் தங்கும்...இரணியனின்
மகன்தான் சாவான்!......
"நாளை இரவுக்குள் கடவுளை நீ காட்டாவிட்டால்...
பாரமாய் உன்னைச் சுமந்து பெற்ற தாயாரும்...
பாஷாணமாய் வாய்த்துவிட்ட காதலியும்...



பதறி அழப் பாடையிலே ஏறிடுவாய்......
மகனில்லை—மறவனில்லை...என் மரபுக்கு
இனிப் புகழ்ச்சியில்லை...போ போ மறைந்து விடு!''
...எனப் புலம்பி நின்றான்.........
மலைமோதும் விதம் போலப் படைமோதும் போதும்...
மாற்றார்கள் வெட்டுக்கிளி போலச் சூழ்ந்து வந்த போதும்...
மனங்குலையா மாவீரன்...
மறத் தமிழர் சரித்திரத்தின் பொன்னேடு...
மகன் ஆரியர்க்குத் துணைபோனான் எனக் கேட்டு ஒடிந்து
போனான்!

* * * *

ஒளிந்து சென்று இளவரசன்
ஓமகுண்டத்தின் பால் அமர்ந்திருந்த வேதியன்முன்,
உயிர் போகும் நிலை பெற்றேன்...உமது
கடவுள்களை வரச்சொல்லும் என உரைத்தான் நடந்தவற்றை!—
பயம் வேண்டாம் வா என்று...
பைங்கிளியாம் ஆஷாதேவி......
மடிதனிலே போட்டுக்கொண்டு......
மாறி மாறி முத்தம் தந்தாள்!...அவன்
மனம் மாற்றிப் போடுதற்குத்
தனம் போர்த்தி அணைத்து நின்றாள்!...
விதவிதமாய்க் காம இன்பம்—கற்றபாடமெல்லாம்
முடித்துவிட்டுப், புதிதாகக் கை வரிசை ஆரம்பித்தாள்!...




கலவி இன்பப் புதிய அகராதி யாத்தாள்!
குலவி மகிழ்ந்தாள்...புழுவைப் புலன் மாற்றும் குளவியானாள்!
கொட்டினாள்...கொவ்வை இதழால்!...
அவ்வைத் தமிழ் பாடும் பெரும் நாட்டை
ஆளவந்த இளவரசன் அடங்கினான் அவள் பிடியில்!
அதுதான் சமயமென அரியதோர் சதித் திட்டம்...
ஆரியம் நிலைக்கும் திட்டம்...
ஓமகுண்டத் திருச்சபையில் உடனடி நிறைவேற்றம்!...
அதை அறியாப் பிரகலாதன், அப்பாவின் முன் சென்று...
ஆண்டவனைக் காட்டுகிறேன் எனச் சொன்னான்!
எங்கே என உறுமிற்று இரண்ய சிங்கம்!
இந்தத் தூணிலே எனச் சொன்னான்;
அது, ஆஷாவின் தூண்டுதலால் சொன்ன சொல்லாம்!
"தூணிலோ இருக்கின்றான்; தூ, தூ! மிக வெட்கம்!
தூயவரின் மனத்திலே இருக்கின்றான் எனச்
சொன்னால்...அறிவுலகம் மறுக்காது......
அறிவற்றோய்...இந்தத் தூணிலா? தூணிலா?..."
எனக்கேட்டு...இடிமுழக்கம் செய்தவாறு
இரும்புக் காலணியால் தூணைத் தூளாக்க ஓங்கிவிட்டான்!
துரோகிகளின் ஏற்பாட்டால் தூண்முழுதும் காந்தம்,
பரவியிருக்கின்ற சேதி பாதுகாப்பாளரும் அறியார்!......
பகுத்தறிவை இழந்துவிட்ட மகனுந்தான் நின்றான்;
பாதகரின் ஏற்பாடு.......பாவை தந்த சுகத்தாலே மறந்தான்!...



ஓங்கிய இரும்புக் காலணி ஒட்டியது காந்தத் தூணோடு!...
வீங்கிய புயத்தோன் வியப்பினில் ஆழ்ந்தான்............
ஆங்கு மறைந்த சூதனொருவன்......
அரிமாக் கோலம் பூண்ட படியால்
ஆரியன் என்று யார்க்கும் தெரியாமல்......தெற்குச்
சூரியன் மார்பில் ஈட்டி நுழைத்தான்!
குபு குபுவெனப் பெருகிற்று உதிரம்!.........
குடலை அறுத்தனர்; நாவை அறுத்தனர்......
உடலை வெட்டினர்; உருவை அழித்தனர்...
நமதாண்டவன் நரசிங்க வடிவில் வந்தான் என
நம்புதற்குக் கதையும் விற்றனர்!...
மூடிற்று, மூடுபனி ஆரியத்தை
எதிர்ப்பதற்கு முணுமுணுத்த வாயென்று
ஆடிற்று; ஆரியம் திருக்கூத்து!...
தெய்வந்தான் தந்தை உயிர் கொண்டதெனத்
தெளிவற்ற மைந்தனுமே பறையடித்தான்!
அவனறியான் ஆரியத்தின் முழு உருவை...
ஆளுதற்கு ஆஷாவுடன் ஏறிவிட்டான் அரியணையில்!...
அந்தத் துரோக மகன் இன்றில்லை
ஆயின் என்ன...அவன் வடிவில்...
ஆரியத்தின் கால்பிடிக்கும் எண்ணற்ற
பிரகலாதர் இருக்கின்றாரே; இந்த நாட்டில்!...

# இவர்தான் நேரு!




உயர்ந்து காணப்படுகிறுர் பண்டிதர்!




அவர் ஆட்சியில் எதிர்க்கட்சிகள் (?)
தோன்றவில்லை!




..... 'குடியிருப்பு' வசதிக்குப் (?) பஞ்சமில்லை!




ஆகவே, இனி அவருக்கு இந்திய அரசியலில்
வேலை முடிந்துவிட்டது போலும்!



# தாழை மரம்

நச்கண்ணையார் என்பவர் சங்ககாலப் புலவர்களில் ஒருவர். அவர் கடற்கரைப் பகுதியில் பல ஆண்டுகள் வாழ்ந்து அங்குள்ள இயற்கையழகை நுகர்ந்தவர். கடற்கரையின் சோலை அவர் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. சோலையில் உள்ள மரங்கள் பலவற்றுள்ளும் தாழை மரம் அவருக்கு எழில் விருந்தளித்தது.

தாழைமரம் பலவகையில் மற்ற மரங்களிலிருந்து வேறுபட்டது. அதன் அடிமரம், இலை, அரும்பு, மலர் ஆகிய எல்லாமே வேறுபாடான அமைப்பு உடையவை. மலரின் மணமும் மற்ற மணங்களைவிட வேறுபட்ட தனி மணமாகும். ஆகவே புலவருடைய கட்புலனுக்கும், முகர்வுப் புலனுக்கும் தாழை நல்ல விருந்தாக விளங்கியது.



புலவர்கள் மற்ற மக்களைப் போலவே கண்ணும் செவியும் மூக்கும் பெற்றவர்களே ஆயினும், மற்றவர்களின் உணர்வுகளைவிட நுட்பமான உணர்வு பெற்றவர்கள். ஆகவே பொதுமக்கள் காணும் காட்சிக்கும், புலவர்கள் காணும் காட்சிக்கும் வேறுபாடு உண்டு. எதையும் ஆழ்ந்து உணர்வதும், உணர்ந்ததை உள்ளத்தில் நெடுங் காலம் பதித்துக் காப்பதும் புலவர்களின் சிறப்பியல்பு. அவர்கள் பெற்ற பயிற்சியும் கற்பனைத் திறனுமே அந்தச் சிறப்பியல்புக்குக் காரணமாகும்.

டாக்டர் மு. வரதராசனார்

பயிற்சியால் இத்தகைய நுட்ப ஆற்றலைப் பெற முடியும். ஆட்டு மந்தையை நாம் காணும்போது, எழுபது எண்பது ஆடுகள் சேர்ந்த ஒரு தொகுதியாக மட்டுமே காண்போம், இது மேற்போக்கான காட்சி; ஆழ்ந்துணராத காட்சி. ஆனால் ஆடுமேய்க்கும் இடையன் அந்த மந்தையைக் காண்பானானால், அவன் நுணுகி உணர்வன பல. அந்த ஆடுகள் வளமான ஆடுகளா, இல்லையா, அவற்றுள் மூத்த ஆடுகள் பெரும்பான்மையா. இளமையானவை பெரும்பான்மையா, சினையாக உள்ளவை எத்தனை, குட்டி ஈன்றவை எத்தனை என்றெல்லாம் பலவாறு பகுத்துணர்வான். தவிர, நாம் கண்ட காட்சியை மறுநாள் அல்லது மறு வாரமே மறந்து விடுவோம். ஆடு மேய்ப்பவனோ, அந்தக் காட்சியை நெடுங் காலம் மறக்காமல் போற்றுவான். இவ்வாறே ஒவ்வொரு துறையிலும் பயின்றவர்கள் நுணுகிக் காணும் காட்சி வேறு; பயிலாதவர்கள் மேற்போக்காகக் காணும் காட்சி வேறு. மரக் கடையில் நாம் நுழைந்து கண்டு வரும் காட்சி மேற் போக்கானது; மரத்தைக்கொண்டு தொழில் செய்யும் தச்சன் அந்தக் கடையில் கண்டு வரும் காட்சி விரிவானது; ஆழமும் நுட்பமும் உடையது. பயிற்சியால் பெற்ற புலன் வளர்ச்சி இது.

ஓவியக் கலையில் பயின்றவர்களின் கண்கள் பலவகை வடிவங்களையும் வண்ணங்களையும் உணர்ந்து போற்றும் ஆற்றல் பெறுவதும் இப்படியே. இங்கிலாந்தில் முதலமைச்சராக விளங்கிய அறிஞர் வின்ஸ்டன் சர்ச்சில் நாற்பது வயதுக்கு மேல் ஓவியக் கலையில் ஈடுபாடு உடையவரானார். அதன் பிறகு ஓய்வு நேரத்தில் வண்ண ஓவியங்கள் தீட்டும் பழக்கத்தை மேற்கொண்டார். அந்தக் கலை அவருக்குப் பொழுது போக்கு ஆயிற்று. அதன் பயனாக, தாம் பெற்ற பயனைப் பற்றி அவர் மகிழ்ந்து குறிப்பிடுகிறார். தம் கட்புலன் நுட்பமாக வளர்ந்தது ஓவியப் பயிற்சியால்தான் என்று கூறுகிறார். அவர் ஓவியக் கலையில் பெரிய கலைஞராக விளங்கா விட்டாலும், அந்தக் கலையில் பயின்ற பயிற்சியால், கண்ணுக்கு நுணுகிக் காணும் ஆற்றல் வளர்ந்து விட்டது. அவருடைய நாற்பதாம் வயதுக்கு முன், விண்ணில் காணும் முகில்களின் நிறங்களும், மண்ணில் பயிர் முதலியவைகளின் நிறங்களும் பொதுவாகப் பலவகை நிறங்களாக மட்டுமே தோற்றமளித்தனவாம். அசற்குப் பிறகு ஓவியப் பயிற்சியின் பயனாய், விண்ணிலும், மண்ணிலும் புதுப்புது அழகுகளையும் அமைப்புகளையும் அவரால் காண முடிந்ததாம். விண்ணிலும் மண்ணிலும் புதிய வண்ணங்களோ வடிவங்களோ தோன்றிவிடவில்லை. ஆனால், இருந்த வண்ணங்களையும் வடிவங்களையும் கண்டு உணரும் கண் அதற்குப் பிறகுதான் பெற முடிந்தது. இதை எண்ணினால் பயிற்சிக்கு முன் இருந்த கண் நுண்ணிய ஆற்றல் இல்லாதிருந்தமையும், பயிற்சியால் அந்த ஆற்றல் பெற்றமையும் தெளியலாம். ஏறக்குறைய ஒரு வகைக் குருட்டு நிலையிலிருந்து விழிப்பு நிலை பெற்றதாகக் கூறலாம்.

அழகைக் கண்ணால் காண்பதில் கவிஞர்களும் இளைத்தவர்கள் அல்லர். ஓவியர் தாம் கண்ட அழகை வண்ணங்களாலும் கீற்றுக்களாலும் தீட்டுவது போலவே, கவிஞரும் தாம் கண்ட அழகைச் சொற்களால் தீட்டுகிறார்.

நக்கண்ணையார் நுட்பமான கட்புலன் கொண்டு கடற்கரையில் தாழை மரங்களின் அமைப்பையும் அழகையும் கண்டவர். ஆதலால் அவரால் ஒரு சொல்லோவியம் தீட்ட முடிந்தது.

தாழை மரத்தின் அடிப்பகுதியை நினைந்தார். அதன் சருச்சரை—சொர சொரப்பான மேற்புறம் அவருடைய உள்ளத்தின் காட்சியில் நின்றது. அதையே நினைந்து பார்த்தார். அவ்வாறு சொர சொரப்பான மேற்பகுதியை உடைய மற்றொரு பொருள் நினைவுக்கு வந்தது. அது தான் இறாமீனின் முதுகு. இறாமீனின் மேற்புறத்தைப் போன்ற சருச்சரை உடைய பெரிய அடிமரம் என்றார்.

"இறவுப்புறத் தன்ன
பிணர்படு தடவுமுதல்!"

தாழையின் இலைகளை எண்ணிப் பார்த்தார். இரு பக்கமும் முள் அமைந்த அதன் அமைப்பு சுறாமீனின் நீண்ட கொம்பு போன்ற முள்ளை நினைவூட்டியது.

"சுறவுக்கோட் டன்ன
முள்ளிலை" என்றார்.

தாழையின் அடிப்பகுதியை விட்டு, இலைகளையும் கடந்து அங்கங்கே தொங்கும் வெண்ணிற அரும்புகளை எண்ணினார். அதன் வெண்மையும் திரண்டு நீண்ட வடிவும், கூரிய முனையும் அவருக்கு வேறொரு பொருளை நினைவூட்டியது. யானையின் கொம்பை—தந்

தத்தை—நினைவூட்டியது. பெரிய யானையின் கொம்பு போன்ற அரும்பு என்றார்.

"பெருங்களிற்று மருப்பின்
அன்ன அரும்பு."

அந்த அரும்புகளுக்கு இடையே இரண்டொரு மலர் தனியே இதழ்கள் விரிந்து மலர்ந்திருப்பதைக் கண்ட காட்சி நினைவுக்கு வந்தது. அதற்கு ஒப்புமையாக மற்றோர் இயற்கைக் காட்சியும் நினைவுக்கு வந்தது: அது என்ன? அழகான பெண்மான் தலை சாய்த்து நிற்கும் எழில் மிகுந்த காட்சி நினைவுக்கு வந்தது. தாழை மலர் தனியே இதழ் விரிந்து நிற்பது, பெண்மான் அழகாகத் தலை சாய்த்து நிற்பதைப் போல் உள்ளது என்றார்.

"அரும்பு முதிர்பு
நன்மான் உழையின்
வேறுபடத் தோன்றி"

இவையெல்லாம் கடற்கரையில் அவருடைய கண்கண்ட அழகிய காட்சிகள். புலவர் நக்கண்ணையார் அந்த அழகை ஒரு புலன் வாயிலாக மட்டும் நுகரவில்லை. ஓவியக் கலைஞர் கட்புலம் வாயிலாக மட்டும் அழகைக் கண்டு காட்ட முடியும். ஆனால் கவிஞரோ ஐம்புலன் வாயிலாகவும் அழகை நுகர முடியும்; நுகர்விக்க முடியும். ஆதலால், நக்கண்ணையார் அந்தத் தாழைமரத்தின் அழகை நினைந்து போற்றிய போது, தம் மூக்கால் முகர்ந்து பெற்ற புதுமண அனுபவத்தையும் நினைந்து இந்தச் சொல்லோவியத்தில் தீட்டலானார். சிறந்த ஓவியத்தில் ஒரு புலனுக்கு மட்டுமே விருந்து உள்ளது. சிறந்த பாட்டில் ஐந்து புலனுக்கும் விருந்து உண்டு. அதனால்தான் அந்தத் தாழை மலர் வீசும் மணத்தையும் நக்கண்ணையாரின் பாட்டில் பெற முடிகின்றது.

தமிழர்கள் எங்கும் என்றும் மலர்களைப் போற்றுபவர். தமிழர் [illegible] விழா என்றால், ம[illegible] அங்கே சிறப்பிடம் [illegible] திருவிழாக் களம் மலர் மணம் கமழ்ந்து விளங்கும். கடற்கரையில் மலர்ந்த தாழை மலரின் மணம், நக்கண்ணையாரின் கற்பனையில் திருவிழாக் களத்தின் மணத்தை நினைவூட்டியது. திருவிழாக் களம் போல் கடற்கரையில் தாழை மணம் கமழ்கின்றது என்றார்.

"விழவுக்களம் கமழும்
உரவுநீர்ச் சேர்ப்பு"

இவ்வாறு புலவர் கடற்கரையில் கண்டு மகிழ்ந்து பெற்ற உணர்வை ஒரு பாட்டில் வடித்துத் தந்துள்ளார்.

இறவுப்புறத் தன்ன
பிணர்படு தடவுமுதல்
சுறவுக்கோட் டன்ன
முள்ளிலைத் தாழை
பெருங்களிற்று மருப்பின்
அன்ன அரும்புமுதிர்பு
நன்மான் உழையின்
வேறுபடத் தோன்றி
விழவுக்களம் கமழும்—
(நற்றிணை—19)

## வாலிபராக வாழும் வழி!

எப்போதும் இளமையாக இருக்கும் இந்த அற்புதத்தைச் சாதிக்கக்கூடிய கூட்டத்தினர் இருக்கின்றனர் என்பதைக் கேட்க நீங்கள் நிச்சயம் ஆச்சரியப்படுவீர்கள்!

ஆமாம், பர்மாவிலேயுள்ள ஓரங் காக்யா என்னும் ஆதிவாசிகள் விசித்திரமான விதத்திலே தங்கள் வயதைக் கணக்கிடுகின்றனர்.

அந்தக் கூட்டத்தில் குழந்தை பிறந்தவுடனேயே அந்தக் குழந்தையின் வயதை ஒன்று எனக் கணக்கிடுவதில்லை, அவர்கள்!

பிறந்த குழந்தைக்கு அறுபது வயதாவதாக அவர்கள் கருதுகிறார்கள்.

பிறகு ஒவ்வொரு ஆண்டும் போகப்போக அந்தக் குழந்தையின் மொத்த வயதான அறுபதிலிருந்து ஒவ்வொன்றைக் கழித்துக் கொள்கின்றனர். அதாவது அந்தக் குழந்தை பிறந்து இரண்டு வருஷமானால் அதன் வயதை அவர்கள் 58-என்று கணக்கிடுகின்றனர்.



குழந்தை வளர்ந்து அந்த மனிதருக்கு வயது 0-ஆகி விட்டபோது (அதாவது அறுபது வருஷங்களும் முடிந்து விட்டால்) அந்த நபருக்கு இன்னுமொரு பத்து வருஷங்களைத் தந்து— அவைகளைப் பிறகு வருஷத்திற்கு ஒன்று வீதம் குறைத்துக் கொண்டே வருகின்றனர்.

இந்த முறை வேடிக்கையாக இருக்கிற தல்லவா?



"என்னடா இது; உங்கப்பா இரும்புப் பெட்டிக்குள்ளே தலையை வச்சுட்டுத் தூங்குறாரு!"
"அவரு தங்கப்பல்லு கட்டியிருக்காருடா! அது திருட்டுப் போகாம இருக்கத்தான் இப்படிச் செய்றாரு!"



# நாட்டுத் தலைவர் ஹாபிட்ஸ்!

ANAND.



தமிழ்நாட்டு பெர்னுட்ஷா ஆரம்பக் கல்வி பயின்ற இடம் இதுதான்!



திருவிடத்தின் தனிப் பெரும் பேராசிரியர் மாணவராயிருந்த உயர்தரப் பள்ளி இது!



நடமாடும் பல்
கலைக் கழகத்தின்
வீட்டு நூலகம்.

காலத்தால் அழியாத
பேரிலக்கியங்கள் பல
வற்றை அறிஞர்
அண்ணா உருவாக்கி
யது இந்த இடத்தி
லிருந்துதான்!





தென்னகத்தின்
ஒளி விளக்கு உப
யோகித்த சுடர்
விளக்கு!

அண்ணனும் அண்ணியும்



# நனவாக வேண்டிய கனவு!

அறிஞர் அண்ணா அவர்கள் சென்னையில் நடைபெற்ற முதல் மாநில மாநாட்டிலே;

"திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு நாள் தேர்தலிலே வெற்றி பெற்று மந்திரி சபை அமைக்கும்; அப்போது திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்—என்று தீர்மானம் நிறைவேற்றும். அதை வடநாட்டு மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது. உடன் நமது மந்திரி சபை ராஜிநாமா செய்யும். அதைத் தொடர்ந்து மீண்டும் பொதுத் தேர்தல் வரும். அதிலும் தி.மு. கழகம் போட்டியிட்டு வெற்றி பெறும். மறுபடியும், முதலில் நிறைவேற்றிய தீர்மானத்தை வற்புறுத்தும். மத்திய அரசாங்கம் அதை ஏற்க மறுக்கும்; மந்திரி சபை ராஜிநாமா செய்யும்; மறுபடியும் தேர்தல்; நமது வெற்றி—இப்படி நடந்து கொண்டே சென்றால் அதன் விளைவு திராவிட நாட்டுப் பிரிவினையில்தான் முடிவுறும்.'

—என்னும் பொருள்படப் பேசினார்கள். அதைக் கருப் பொருளாகக் கொண்டு, கற்பனைப் பாத்திரங்களையும், சம்பவங்களையும் வைத்துத் தீட்டப்பட்ட சித்திரம்தான் இது!

இதைப் படித்து விட்டு இப்படித்தான் நிகழப் போகிறதா—என்று கேட்டுவிடாதீர்கள்; கற்பனைதானே; இப்படி நடந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லையல்லவா!



அது 1963-ம் ஆண்டு; வித்து வளர்ந்து விளைவு தந்த காலம்! சொத்துக்கு உரியவர்கள் அதை அனுபவிக்க முனைந்த நேரம்! ஆமாம்...திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் பங்கு பெற்று; கங்குல் அகற்ற வந்த பரிதிபோல் பதவியைக் கைப்பற்றிக் கொண்டு விட்டது.

பொதுத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப் பட்டு விட்டன. ஓட்டுச் சீட்டுகள் அனைத்தும் எண்ணி முடிக்கப்பட்டுவிட்டன. உண்மைதான்; தென்னகத்து மக்கள் விடுதலைப் பட்டாளத் திற்கு முடிசூட்டி விட்டார்கள்!

நாட்டினை நமதாக்கு; கேட்டினைப் போக்கு; அதற்கு இந்தா எமது வோட்டு-என சாரை சாரையாய் மக்கள் அணிவகுத்து வந்து பாறையினும் வலிவு கொண்ட வடநாட்டு ஆதிக்கத்தைச் சுக்கு நூறு செய்ய திராவிட முன்னேற்றக் கழகத்திடம் சம்மட்டியைத் தூக்கிக் கொடுத்து விட்டார்கள்!

தேக்கிய வீரச்சுனையின் கரைகளை உடைத்து விட்டார்கள்!

தீட்டிய கூர்வாளுக்குத் திட்டம் கொடுத்து விட்டார்கள்!

தேக்கினும் வன்மை கொண்ட உன் கரங்களைத் தூக்கு! தூள் தூளாக்கு, உன் அன்னையின் விலங்கினை!-என ஆணையிட்டு விட்டார்கள்!

பொதுத் தேர்தலில் மட்டுமல்ல; அதைத் தொடர்ந்து நடைபெற்ற மறு தேர்தலிலும் அவர்கள் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு நின்றார்கள். ஆனால் அதிலும் அவர்கள் எந்த நாட்டு விடுதலை இயக்கமும் பெற்றிராத வெற்றியைப் பெற்றிருக்கின்றனர்!

ஆனால்; தேர்தல் முடிவு தெரிந்தும் தேசத்திலே வெற்றிக் களிப்புக்கான அறிகுறிகள் தென்படக் காணோம்!

ஜெயபேரிகை காதுகளின் கர்ணபேரிகையை கிழித்தெறிய வேண்டியிருக்க; நாடு மயான அமைதி பெற்றிருந்தது!

மகிழ்ச்சி ஆரவாரம் இல்லை; மங்கல வாத்தியங்கள் முழங்கவில்லை. மாலையிட்ட மணவாளனைப் பறிகொடுத்த விதவை அளவுக்கு மிஞ்சிய சோகத்தால்தாக்கப்பட்டு; அமைதியாக இருந்து உள்ளம் உருகிக்கொண்டிருப்பதைப் போல நாடும் வீடும் உற்சாகம் இழந்து கிடந்தன.

கலைக்கப்பட்ட தேன்கூடு போல பட்டணமே அசைவற்று இருந்தது. இருந்தும் அந்தச் சாலையிலே ஓரிருவர் நடமாடிக் கொண்டிருந்தனர். அதோ; அந்தக் கிழவியைப் பாருங்கள். தனது ஆள் காட்டி விரலினால் சிறுவன் ஒருவனது கையைக் கோர்த்துக் கொண்டு வேகமாக நடந்து கொண்டிருக்கிறாள்!

அந்தச் சிறுவனால் அந்தப் பாட்டியோடு போட்டி போட்டுக்கொண்டு நடக்க முடியவில்லை. பாவம்; மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்க அவன் அவளுக்குப் பின்னால் ஓடிவந்துகொண்டிருந்தான்.

"பாட்டி! ஒன்றுமட்டும் கேட்கிறேன்: கோபித்துக்கொள்ள மாட்டாயே!"

"சரி, சரி! கேட்க வேண்டியவைகளைச் சீக்கிரமாகக் கேள்!"

"இப்போது என்ன; ஓட்டப்பந்தயமா நடைபெறுகிறது? நாம் ஏன் இவ்வளவு அவசரமாக ஓடுகிறோம்?"

"ஆமாண்டா, கண்ணா! ஓட்டப் பந்தயம் தான் நடக்கிறது-வடநாட்டிற்கும், தென்னாட்டிற்கும்! இதிலே நாம் தோற்றுவிட்டால் பின், ஜென்மத்திற்கும் ஜெயிக்கவே முடியாது!"

"அது, சரி பாட்டி!...நீ அடிக்கடி நமது இயக்கத்தின் வரலாறு பற்றியும்; நாம் நடத்திய மொழிப் போராட்டங்கள் பற்றியும் எனக்கு கதை சொல்வாயல்லவா! அப்படியானால் நமது முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் நம்ம தாத்தாவும் இப்படித்தான் ஓடினாரா, பாட்டி?"

"நீ எந்தத் தாத்தாவைப்பற்றிக் கேட்கிறாய்; ஈரோட்டு ராமசாமி தாத்தாவைப் பற்றியா?"

"இல்லை பாட்டி!...என் அப்பாவின் அப்பா-உனது ஆசைக் கணவன்-தாளமுத்து (நடராசனைப்) பற்றித்தான் கேட்கிறேன்! அவர் இப்படி நம்மைப்போல் ஓடியதுண்டா?"

"சாவுக்கும், சிறைச்சாலைக்கும் பயப்படும் ஒரு கோழையைக் கணவனாகப் பெற்றிருந்தால் நான் அன்றைக்கே தற்கொலை செய்து கொண்டிருப்பேனடா!...என் கணவர் ஈட்டியின் முனைகண்டு இமை கொட்டுவது ஈனச் செயலென்று நம்பும் வீரர் வழியில் வந்தவர்! தவறிப் போய்த் தனது வீரர்கள் சேரனின் முதுகில் காயப்படுத்தியதற்காக; புறங்காட்டி ஓடுபவனைத் தாக்கியது தமிழர் குலத்துக்கே இழுக்கென்று கருதி வடக்கிருந்து உயிர் நீத்த சோழனின் சொந்தக்காரனடா உனது பாட்டன்!...அவர் இந்தியின் கோரப்பிடியிலிருந்து தமிழைக் காக்க ஓடினார்; பயந்து ஒளிந்து கொள்வதற்குச் சமயலறை நோக்கி அல்ல! அப்படி ஓடிவந்திருந்தால்கூட நான்அங்கேயே அவருக்கு அறிவுரை புகட்டியிருப்பேன்! ஆனால் அவர் காராக் கிரகம் நோக்கி ஓடினார்! யாருக்கும் முன்னதாக--மஞ்சள் நீர் நிறைந்த தட்டிலே என் மாணிக்கத்திற்கு ஆரத்தி எடுத்து நான்தானடா அவரை சிறைச்சாலைக்கு வழியனுப்பி வைத்தேன்......ஆனால் அவரோ என் மஞ்சளையும் குங்குமத்தையும் பறித்துக் கொண்டு; என்னை விதவையாக்கி விட்டுச் சிறையிலேயே மடிந்து விட்டாரடா!..."

"அழாதே பாட்டி!...நீ கண்ணீர் வடிப்பது எனக்கு என்னவோ போலிருக்கிறது. முதலில் நீ உன் கண்களைத் துடைத்துக் கொண்டால் தான் நான் உன்னோடு வருவேன்"

"சரி; சரி...நேரமாகிறது. நீ வா!"

"பாட்டி... !"

"என்னடா தம்பி !"

"புறநானூற்றுப் பாட்டிலிருந்து நீ ஒரு கதை சொல்வாயல்லவா; முதல் நாள் போரில் தன் கணவனையும், மறு நாள் போரில் தன் சகோதரனையும் இழந்த தாய் மறுநாளும்

போர் முரசு முழங்கக் கேட்டுத் தன் இளைய மகனது கையில் வேல் கொடுத்துச் செரு முனைக்கு அனுப்பி வைத்ததாக!...அந்த வீரப் பெண்மணி அசல் நீயேதான் பாட்டி!''

''என்னடா சொல்கிறாய்?''

''பின் என்னவாம்? இந்தி எதிர்ப்புப் போரிலே உன் கணவனை இழந்து விட்டாய். நான் சிறு பிள்ளையாக இருக்கும்போதே என் அப்பாவையும் மும்முனைப் போராட்டத்திலே பலி கொடுத்து விட்டாய். நேற்று முதல் அம்மாவையும் நீ ஏதோ ஒரு போராட்டத்துக்குத்தான் அனுப்பியிருக்கிறாய்...இல்லையா?''

''சரி; சரி!...பொல்லாதவனாக இருக்கிறாயே!...சிறிது நேரம் பேசாமல்தான் இரேன்!''

—சிறுவன் சிறிது நேரம் மௌனமாகவே இருந்தான். இருந்தும் அலைமோதிக்கொண்டிருக்கும் அவனது பிஞ்சு மனத்திலே ஆர்வப் படகுகள் ஒன்றன்பின் ஒன்றாய் வட்டமிடலாயின.

''பாட்டி!''

''என்னடா?''

''நம் அப்பா, தாத்தாவுக்கு நேர்ந்த கதி அம்மாவிற்கும் நேர்ந்து விடாதே?''

''போடா; பைத்தியம்!...முன்பு ஆட்சிபீடம் நம் கையில் இல்லை! இப்போது நம் கையில் அல்லவா ஆட்சி இருக்கிறது?''

''ஆனால் போன வாரம் பத்திரிகையைப் படித்து நீ அப்படிச் சொல்லவில்லையே, பாட்டி!''

''ஓ, நீ அதைச் சொல்கிறாயா? ஆமாம்; இந்தத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் பெருவாரியான வாக்குகள் பெற்று ஆட்சிக்கு வந்தது. ஆட்சிக்கு வந்தவுடனேயே நமது மந்திரிசபை திராவிட நாடு தனியாகப் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது. இதை டெல்லியிலிருக்கும் மத்திய அரசாங்கத்தினர் ஒத்துக் கொள்ளவில்லை. அதனால் நம்மவர்கள் பதவியை ராஜிநாமா செய்து விட்டார்கள்!''

''ஆனால் மறுபடியும்தான் பொதுத்தேர்தல் நடத்தினார்களே, பாட்டி?''

''அதிலும் திராவிட முன்னேற்றக் கழகமே வெற்றி மாலை சூடிக் கொண்டதே தம்பி!...இரண்டாவது முறை பதவிக்கு வந்ததும்; மீண்டும் திராவிடநாடு பிரிய வேண்டும் என்ற முதல் தீர்மானத்தை தி. மு. கழக மந்திரி சபை வற்புறுத்தியது. அதனால் வடநாட்டுக் குடியரசுத் தலைவர் இப்போதுள்ள மந்திரி சபையைக் கலைத்து விட்டாரே!''

''அப்படியானால் இது ஜனநாயகத்துக்கு விரோதமானதல்லவா, பாட்டி!''

''ஆமாம், தம்பி! அதனால்தான் இப்போது நாடெங்கும் கிளர்ச்சி நடக்கிறது.''

''ஆனால் என்றுமில்லாத அளவுக்கு இந்தக் கிளர்ச்சியைக் கண்டு நீ ஏன் பாட்டி பயப்படுவதுபோல் தோன்றுகிறாய்?''

''இதுதானடா வடநாட்டை எதிர்த்து நாம் நடத்தும் கடைசிப் போராட்டம். தேர்தலில் வெற்றி பெற்று, ஜனநாயக முறையில் நாம் விடுதலை பெறலாமென்று நினைத்தோம். ஆனால் இன்று நாட்டில் நமது விடுதலைக்கு மட்டுமல்ல; ஜனநாயகத்துக்கே ஆபத்து வந்திருக்கிறதடா, தம்பி!''

—அதற்குள் புகைவண்டி நிலையம் வந்து விட்டது. மூன்று தலைமுறைகளாக விடுதலைச் சேனைக்குப் படைக் கருவிகள் தந்து கொண்டிருக்கும் அந்தப்பைந்தமிழ் மூதாட்டி டிக்கெட் விற்கும் பலகணியைத் தாண்டி அதிவேகமாக உள்ளே நுழைந்தாள்.

''பாட்டி; பாட்டி!...டிக்கெட் வாங்காமல் போகிறாயே; காசில்லாமல் ஏற்றிச் செல்ல அது என்ன உங்கள் தாத்தாவீட்டு ரயிலோ?''

''ஆமாம் தம்பி!...நம் தாத்தா வீட்டு சொத்துக்களைக் கொண்டு வடநாட்டு சேட்டுக்கள் கட்டிய ரயில்தான் இது...கண்ணே! நீ நினைப்பதுபோல் நாம் இன்று ரயிலுக்கு டிக்கெட் வாங்கவேண்டியதில்லை. நம் தலைவர் அண்ணா பல வருஷங்களுக்கு முன்னே அறிவித்ததைப் போல் இப்போது டிக்கெட் வாங்காத கிளர்ச்சியும், பல போராட்டங்களில் ஒன்றாய் நடந்து கொண்டிருக்கிறது, கண்ணே!''

—பாட்டியும், பேரனும் ரயில் வண்டியில் ஏறி உட்கார்ந்தார்கள். 'கோ' என ஓங்காரக் கூச்சலெழுப்பிக் கொண்டு ரயில் வண்டி புறப்பட்டது.

''பாட்டி!...நாம் டிக்கெட் வாங்காமல் போகிறோம்; நம்மை யாரும் ஒன்றும் கேட்கவில்லையே; ஏன், பாட்டி?''

''முதலில் சில நாட்கள் கேட்டுப் பார்த்தார்கள்; டிக்கட் வாங்காத நம் போராட்ட வீரர்களை யெல்லாம் கைது செய்தார்கள்''

''பிறகு?''



இதயத்தில் ஓடும்
இரத்தக் குழாய்களோ,
இலைதனில் ஓடும்
எண்ணிலா நரம்புகள்?

புகைப்படம்: பி. குருமூர்த்தி

"சிறைச்சாலையிலே இடமில்லை தம்பி!...வடநாட்டிலே உள்ள சிறைச்சாலைகளில் கூட நமது கைதிகள் நிரம்பி வழிகின்றனராம். அதனால் இப்போது ஒன்றுமே கேட்காமல் விட்டு விட்டார்கள்!"

"அப்படியானால் நாம் தினமும் இப்படி 'டிக்கெட் வாங்காமல் பிரயாணம் செய்து கொண்டேயிருக்கலாமா, பாட்டி ?"

"அதுதான் முடியாதுகண்ணே! இப்போது நாம் பிரயாணம் செய்கிறோமே; இதுதான் கடைசி வண்டி! இதற்குப் பிறகு ரயில்வே தொழிலாளர்கள் அனைவரும், வேலை நிறுத்தம் செய்கிறார்கள்!...அதனால்தான், தம்பி, நான் உன்னை அவ்வளவு சிக்கிரமாக அழைத்து வந்தேன் !"

"அய்யையோ!... இனிமேல் ரயிலே ஓடாதா ?"

"ஊஹூம்; ஓடாது...அடிமை பூமியில் ஓடுகிற கடைசி ரயிலில்தான், தம்பி, நாம் இப்போது பிரயாணம் செய்துகொண்டிருக்கிறோம் !"

"அப்படியானால் இந்தக் கடைசி ரயிலை நான் இப்போதே நிறுத்தி விடுகிறேன், பாட்டி !"

—சிறுவன் 'பக்' கென்று அபாய



அறிவிப்புச் சங்கிலியைப் பிடித்து இழுத்தான். ரயில் நின்றது. ஆனால் அவர்களைக் கைதுசெய்வதற்குப் போலிஸ்காரர்கள் யாருமே அங்கு இல்லை! அவர்களது வேலை நிறுத்தம்தான் முதல் நாளே துவங்கி விட்டதே!...

ஆனால் பாட்டிக்குச் சிறுவனின் செயல் குறித்து சிறிது வருத்தம்தான்!



"போக்கிரிப் பையனே!...இந்தத் தள்ளாத வயதில் என்னை அவ்வளவு தூரம் நடக்கும்படிச் செய்துவிட்டாயே!"—என்று செல்லமாகக் கோபித்துக்கொண்டே, பையனைக் கையில் பிடித்துக் கொண்டு வேகமாக அழைத்துச் சென்றாள்.

ஆனால் சிறுவனோ சும்மாயிருக்கவில்லை. இருதயத்திலே காஞ்சூறு இலை பட்டுவிட்டதைப்போல அவன் கேள்விக்கு மேல் கேள்வி எழுப்பிக்கொண்டே வந்தான்!

"பாட்டி; பாட்டி! அதோ, இரும்புத் தொப்பியுடனும், கையில் துப்பாக்கியுடனும் நின்றுகொண்டிருக்கிறார்களே; அவர்கள் எல்லாம் யார்?"

"சிப்பாய்கள்! நம்முடைய போலிஸ்காரர்களெல்லாம், அமைதி வழியில் போர் நடத்திக் கொண்டிருக்கும் நமது கிளர்ச்சியை அடக்குவதற்கு முன் வராத காரணத்தால், இவர்கள் வரவழைக்கப்பட்டிருக்கிறார்கள்."

"பாட்டி!...அதோ மோட்டார் போல ஒரு பயங்கரமான எந்திரம் போய்க்கொண்டிருக்கிறதே; அது என்ன பாட்டி?"

"அதைத்தான் 'டாங்குகள்' என்பார்கள். போர்க் காலத்தில்தான் அதை உபயோகிப்பது வழக்கம். இப்போதோ நமது கிளர்ச்சிக்காரர்களை அச்சுறுத்த அவைகளைத் தெருவிலே அலைய விட்டிருக்கிறார்கள் வடநாட்டு அரசாங்கத்தினர்!"

—சிறுவனுக்கு வியப்பிற்கு மேல் வியப்பும்; ஆனால் அதே நேரம் ஒரு இனமறியாத பயமும் மனதிலே தோன்றியது!

"விரைவிலே புதிய திராவிடம் பிறக்கப் போகிறது என்கிறார்களே!...அப்படியானால் அது எப்படி இருக்கும்?"—யோசித்துக் கொண்டே வந்தான், அவன்!

இன்னும் மூன்று மாதத்திலே அம்மா வயிற்றிலிருந்து உனக்கு ஒரு தம்பி பிறக்கப் போகிறான்!—என்று கேட்டு அவன் எவ்வளவு திகைப்படைந்தானோ; அவ்வளவு திகைப் படைந்தான், அவன், இப்போது!

அவனது சிந்தனைத் தேருக்கு முட்டுக் கட்டையிடும் விதத்திலே வீடு வந்து சேர்ந்தது. வீட்டுப் படிகளை மிதித்ததும்; தான் ஏதோ பத்திரமானதொரு இடத்துக்கு வந்து சேர்ந்ததாக எண்ணமொன்று மேலிட அவன் சின்ன விழிகள் மலர்ந்தன.

நாடு பிரிக்கப்படுவதையும்; அப்போது எழும் விழா வைபவங்களையும் ஜன்னலில் உட்கார்ந்தவாறே வேடிக்கை பார்க்கலாம்—என்று நினைத்துக் கொண்டு தனக்குத்தானே சிரித்துக் கொண்டான்; அரும்புப் பிராயத்தில் அம்மா சொல்லிக் கொடுத்த "வாழ்க வாழ்கவே வளமார் எமது திராவிட நாடு!"-என்னும் எழுச்சிப் பாட்டினை அவனது உதடுகள் முணுமுணுத்தன.

"என்ன பாட்டி; இருட்டிலே நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்? சீக்கிரம் 'லைட்'டைப் போடேன்!"

பாட்டி மின் விளக்குப் பித்தானை அமுக்கினாள். 'கிளிக்' என்ற அந்த ஒலிதான் கேட்டதே தவிர; விளக்கு எரியவில்லை.

"என்ன பாட்டி, இது?"—நடுங்கும் குரலிலே சிறுவன் கேட்டான்!

"பயப்படாதே!......முன்பே அறிவித்ததைப் போல் மின்சார இலாக்காத் தொழிலாளர்கள் அனைவரும் இப்போது வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்! திராவிடம் வடநாட்டுக்குக் கப்பம் கட்டிக் கொண்டிருக்கும் 'காலனி' நாடாக இருந்தால் இப்படித்தான் இருண்டு கிடக்கும்—என்பதை எல்லோருக்கும் அனுபவ பூர்வமாக உணர்த்துகிறார்கள், தம்பி!"

"விளக்கு இல்லாவிட்டால் எனக்குப் பயமாக இருக்குமே, பாட்டி!"

"பயப்படாதே. அதற்குத்தான் நான் முன் ஜாக்கிரதையாகவே மண்ணெண்ணெய் வாங்கி வைத்திருக்கிறேனே!"

—கிழவி மூலையில் கிடந்த 'அரிக்கன்' விளக்கைத் தேடி எடுத்து, அதனால் இருண்ட வீட்டிற்கு ஒளி கொடுத்தாள்!

விளக்கு சிந்திய அந்தச் சிறு வெளிச்சத்தில் சுவற்றிலே மாட்டப்பட்டிருந்த படங்கள் யாவும் தெரிந்தன.

சிறுவன் அண்ணாந்து பார்த்தான். அதோ அங்கே அவனது தாத்தா தாளமுத்து— வீரமும் தியாகமும் ததும்பக் கண்ணாடி வழியே பார்த்துக் கொண்டிருந்தார்.

"பாட்டி?"

"என்னடா?"

"நம் தாத்தா இருந்திருந்தால் நமது போராட்டத்தின் இறுதிக் கட்டத்தைப் பார்த்து எவ்வளவு குதூகலப்படுவார்?"

"அப்படி நினைப்பதுதான் தவறு தம்பி!...... அன்று உன் தாத்தாவும், அவருக்குப் பின்னால் ஆயிரக் கணக்கானவர்களும் சாவு முனையிலே தங்கள் உயிர்களைக் காவு கொடுத்திருக்காவிட்டால் திராவிடத்தின் விடுதலை இன்னும் எத்தனையோ ஆண்டுகளுக்குத் தள்ளிப் போடப்பட்டிருக்குமடா, தம்பி! நாட்டுக்கு உயிர் தந்த அந்த வைரங்களின் சாவு அன்று வருந்தக்கூடியதாக இருந்தாலும் அவையனைத்தும் விலை மதிக்கவொண்ணாத வைரத்தினும் மேலானவை. அன்று அவர்கள் பறிமாறிய பச்சை இரத்தத்தின் உயிரணுக்கள் ஒவ்வொன்றும்தான் இன்றைய புரட்சிப் பயிரின் செழுமைக்குக் காரணமாக இருக்கின்றன!...துப்பாக்கி ரவைகளுக்கு முன்னால் பிளந்தெறியப் பட்ட அவர்களது கபால ஓடுகள் ஒவ்வொன்றும்தான் நமது இலட்சியப் பாதையிலே நடப்பட்ட மைல் கற்களாக நிற்கின்றன தம்பீ! தாயகத்தின் விடுதலைக்காகத் தலைகளைக் கொய்து தரும் அந்த பாக்கியம் எனக்குக் கிடைக்காமற் போய் விட்டதே......!"

"பாட்டி, பாட்டி!...அதோ, பார்!...நமது வீட்டு வாசலில் யாரோ செய்தித் தாளை வீசிவிட்டுப்போயிருக்கிறார்கள்...இந்தா! நீயே...படித்துக் காட்டு, எனக்கு!...அட; இது என்ன ஆச்சரியமாயிருக்கிறது; செய்தித்தாள் அச்சாக்கப்படாமல் கையினால் எழுதப்பட்டிருக்கிறதே; ஏன் பாட்டி!"

"தெரியாதா,உனக்கு? கழக ஏடான 'நம்நாடு' தடை செய்யப்பட்டு; அதன் அச்சுப் பொறிகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டு விட்டன. அதன் விளைவாகத்தான் நமது தோழர்கள் அன்றாடச் செய்திகளை கையினாலேயே எழுதி வீட்டுக்கு வீடு கொடுக்கிறார்கள்!"

"அடடே...என்ன பாட்டி...நீயே மனதிற்குள்ளாகவே செய்திகளைப் படிக்கிறாய்—சிரிக்கிறாய்...சொல்லு பாட்டி, என்ன நடந்திருக்கிறது?"

"நடக்க வேண்டியது நடந்துவிட்டது: பண்டித நேரு தென்னகத்தில் நடைபெறும் கிளர்ச்சிகளை அடக்குவதற்கு நேரிலேயே விஜயம் செய்வதற்காக நேற்று புறப்பட்டு வந்தார். விமான மூலம் பிரயாணம் செய்தால் பொது மக்களோடு அதிகத் தொடர்புகொள்ள முடியாது என்று நினைத்து, புகைவண்டி மூலமே தனது சுற்றுப் பயணத்தைத் தொடங்கினார். ஒவ்வொரு ஊரிலும் ரயிலை நிறுத்தி, கூடியிருந்த மக்களிடமெல்லாம் கிளர்ச்சிக்காரர்களுக்கு ஆதரவு தராதீர்கள் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டே வந்தார். இறுதியில், சென்னைக்கு இருபதாவது மைலில் அவர் ஏறி வந்த புகைவண்டியின் இஞ்சினை ஓட்டுவதற்கு ஆளில்லாமல் போய்விட்டது. உடனே கூடியிருந்த பொது மக்கள் 'திராவிட நாட்டைப் பிரித்துக் கொடு—' என்று அமைதிவழியில் மறியல் செய்து அவரைக் கேட்டுக்கொண்

டார்கள்' இராணுவத்தினர்பிரவேசித்து ஆயுதமேதும் கொண்டிராத அந்தக் கூட்டத்தினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் நூற்றுக் கணக்கான ஆண்களும், பெண்களும் பிணமானார்கள்''

—அதற்கு மேல் பாட்டியால் படிக்க முடியவில்லை.

''நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் பிணமானார்கள்!'':—பாட்டியின் வாய் அவளை யறியாமலேயே அசைந்து கொடுத்தது.

''கரும்பைக் கடித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் உதட்டில் சூடுபோடுவதைப் போல் நல்ல சமயத்தில் நிறுத்தி விட்டாயே!...மேலே படி, பாட்டி!''

பாட்டி தொடர்ந்தாள்.

''இராணுவத்தினரால் அலை அலையாய் வந்து கொண்டிருந்த கூட்டத்தினரைச் சமாளிக்க முடியவில்லை. இறுதியில் 'டாங்குப்' படைகள் வந்து சேர்ந்தன. ஆனால் நெருப்புக் கக்கும் அந்த டாங்குகளுக்கு முன்னால் மார்பைத் திறந்து காட்டும் வீரர்களை என்னென்பது? பாருக்கெல்லாம் பஞ்சசீலம் தந்த பண்டிதநேருவின் முன்னால் குற்றால அருவிபோல் செங்குருதி வெள்ளம் ஓடியது. வெள்ளைப் புறாக்களைத் தடவிக்கொடுத்த அந்தச் சமாதானப் பிரியரின் முன்னால் சவமலைகள் குவிந்தன. ஒரு மணி நேரம் தொடர்ந்து நடைபெற்ற இந்தப் போராட்டத்திற்குப் பிறகு பண்டித நேரு தன்னுடைய ரயில் பெட்டியிலிருந்து ஆவேசத்துடன் கீழேயிறங்கி: ''நிறுத்துங்கள் இராணுவ நடவடிக்கையை!'' என்று பக்கத்திலிருந்த தளபதியை நோக்கி உத்தரவிட்டார்.

துப்பாக்கி வேட்டுகள் கிளப்பிய பயங்கர சப்தம் ஓய்ந்தது. உடன் குடல் சரிந்து விழுந்த போராட்ட வீரர்களின் சாவுக் குரலும்; கையிழந்து, காலிழந்து, கல்லறை நோக்கிப் பிரயாணப் பட்டுக்கொண்டிருக்கும் 'அரைப்பிரேதங்களின்' பரிதாப தொனியும் பண்டிதரின் முகத்திலே பிரேதக் களையை வரவழைத்தன.

உடனே அங்கு கூடியிருந்த பொது மக்களைப் பார்த்து: ''சென்னை செல்வதற்கு எனக்கு அனுமதி தாருங்கள். அங்கிருந்து குடியரசுத் தலைவருடன் பேசி உங்கள் பிரிவினைக்கு ஏற்பாடு செய்கிறேன்!'' என்று அவர் ஆங்கிலத்தில் முழக்கமிட்டார்.

அந்தக் கணமே கூட்டத்திலிருந்த தோழர் ஒருவர் முன் வந்து; ஒரு சிறு காகிதத்தையும், பென்சிலையும் நீட்டி இதில் நீங்கள் கூறியனவற்றை எழுதி; கையெழுத்துப் போட்டுத் தாருங்கள்''—எனக் கேட்டுக் கொண்டார்.

பண்டிதர் சிறிது யோசித்தார். ஆனால் கூடியிருந்த மக்களும் சேர்ந்து வற்புறுத்தவே அவர் அந்தச் சிறு துண்டுக் காகிதத்தில் தன் கையாலேயே உடனடியாக திராவிட நாட்டுப் பிரிவினைக்கு ஏற்பாடு செய்வேன் என்று எழுதிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார்...''

—பாட்டி முடித்தாள்; இரக்கமற்றோரின் துப்பாக்கிகளிலிருந்து தொடர்ந்து வந்த குண்டுகளைப் போல் நீர் தாரை தாரையாய் வடிந்தது. ஆம்; ஆனந்தக் கண்ணீர்தான் அது!

''பாட்டி! அப்படியானால் பொழுதுவிடிவதற்குள் திராவிடம் கிடைத்துவிடுமா?''

''ஆமடா; பண்டிதர் இந்நேரம் சென்னைக் கோட்டைக்கு வந்திருப்பார்; திராவிட நாட்டுப் பிரிவினைப் பிரகடனத்தில் கையெழுத்துப் போட்டிருப்பார்!''

''பாட்டி!''

''என்னடா?''

''நேருவிடம் நமது தோழர்கள் கையெழுத்து வாங்கிய காட்சி சரித்திரத்திலே வேறொரு நிகழ்ச்சியை நினைவுபடுத்துகிறதே, எனக்கு?''

''என்னடா அது?''

''நான் ருஷ்யச் சரித்திரத்தில் படித்ததை ஒப்புவிக்கிறேன், கேள்:

*1917*-ம் ஆண்டு மார்ச் மாதம் 14-ம் தேதி திடீரென்று ஜார் மன்னன் இரண்டாம் நிக்கோலசின் சேனைகள் துப்பாக்கியைத்தொடுவதற்கும் மறுத்து விட்டார்கள். அவன் பிரயாணம் செய்துகொண்டிருந்த ரயிலும் பாதி வழியில் நின்றது. அதை ஓட்டுவதற்கும் ஆள் கிடைக்கவில்லை- புரட்சிக்காரர்கள் அவன் முன்னால் திரண்டனர். ஜார் மன்னன் முன்பு பட்டம் துறப்பதற்கான சீட்டு ஒன்று நீட்டப்பட்டது. அதிலே அவன் பென்சில் ஒன்றினால் கையெழுத்துப் போட்டான்.

—பாட்டி உவமை சரிதானா?''

''என்பேரனல்லவா நீ; புலிக்குப் பிறந்தது எப்படிப் பூனையாகும்?''

''பாட்டி; ஒரு சந்தேகம். ரஷ்யாவிலே ஜார் கொலை செய்யப்பட்டு விட்டானே, பாட்டி!...அதுபோல இங்கும் நேரு...''

''நேரு கொலைசெய்யப்படமாட்டார். ஆனால் அவரது ஏகபாரதத் தத்துப் பிள்ளைதான் அவமானம் தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டு செத்திருக்கிறது!''

அந்த நேரம் தெரு முனையிலே 'ஓ' வென்ற பெரு மிரைச்சல் பூமியை ஆட்டுவதைப்போல் கேட்டது;

இன்பத் திராவிடம் காண இடிக் குழாம் தாம் திரண்டு வந்து விட்டதோ—என எண்ணிடும் வகையிலே அந்த ஓசை நெருங்கி வந்து கொண்டே இருந்தது.

சிறுவன் ஆர்வத்தால் உந்தப்பட்டு, பாட்டியையும் இழுத்துக்கொண்டு தெருப்புறத்திற்கு வந்தான்; பார்த்தான்! ஆனால் அவன் கண்களையே நம்ப முடியவில்லை.

கூட்டம் கூட்டமாக யுவர்களும், யுவதிகளும் அந்த மாபெரும் ஊர்வலத்திற்கு முன்பாக நடனமாடிக் கொண்டு வந்தனர்.

தப்பும் தாரையும் ஒலித்துக் கொண்டிருந்தன.

தாளமுத்து, நடராசன் போன்ற தியாகிகளின் உருவம் பொறிக்கப்பட்ட பெரும் தட்டிகளைக் கையிலேந்தியிருந்தனர்.

அண்ணாவின் திருவுருவம் அந்த நில வொளியில் அழகுறத் தெரிந்தது.

ஆனால் இன்னொன்று; அவர்கள் கரங்களிலே இராணுவத்தினரின் காட்டுமிராண்டித் தாக்குதல் காரணமாக உயிர் நீத்த உத்தமர் களின் பிணங்கள் காட்சி தந்தன!

ஊர்வலம் வீட்டை நெருங்கியது.

வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோளெங்கள் தோள்கள்! கங்கையைப்போல், காவிரியைப்போல் உணர்ச்சிகள் ஊறும் உள் ளம் எங்கள் உள்ளம் என்று கூறுவதைப்போல் அவர்களுக்கு முன்னால் ஊர்வலத் தலைவன் கம் பீர நடை போட்டுப் பாட்டியின் முன்னால் வந்து நின்றான்.

ஒரு முறை குனிந்து நிமிர்ந்தான்.

"அன்னை யென்னும் தத்துவத்தை அம்பு விக்குக் காட்ட வந்த மின்னே; விளக்கே; விரி நிலவே வணங்குகின்றேன்!"

"படைத் தலைவா; என்ன சேதி கொண்டு வந்திருக்கிறாய்?"

"நல்ல சேதிதான், மூதாட்டி! நள்ளிரவில் கள்ளர்கள் போல் நம் நாட்டில் நுழைந்துவிட்ட குள்ளநரிகள் வெளியேறி விட்டார்கள். பணச் சாதனையால் நம்மை வென்று; கெட்ட போதனை யால் தினம் கொன்று வாழ்ந்த திமிர்பிடித்த மனிதர்கள் உயிர் இழந்த சவங்கள் போல் சத் தற்றுப் போய் விட்டார்கள்! ஆமாம்; பாட்டி! திராவிடம் நமக்காகி விட்டது. குடியரசுத் தலை வர் பிரிவினைப் பத்திரத்திலே கையெழுத்துப் போட்டு விட்டார்!"

"தலைவரே...!"

"ஏன் தயங்குகிறீர்கள்; இதைவிட, வேறெ ன்ன வேண்டுமம்மா உங்களுக்கு?"

"என் மருமகள்; போருக்குச் சென்ற இந்த மழலையின் தாய்..."

"வருந்துகிறோம், அம்மா! பண்டிதருக்கு முன் னால் நடைபெற்ற மறியல் போராட்டத்திலே அந்த வீராங்கனை சுட்டுக் கொல்லப்பட்டு விட் டார்கள். அந்த மறவர் குல மாணிக்கத்தை உங் களிடம் சேர்ப்பிப்பதற்குத்தான் நாங்கள் வந் திருக்கிறோம், தாயே!"

—குளிர் மலர்க்காவிலே கோடையிடி விழுந் ததைப் போல அதிர்ச்சியடைந்தாள், அந்தக் கிழவி!

"அய்யோ; என் செல்வமே! சென்று வரு வேன்; அதுபோது வென்றும் வருவேன் என்று சொல்லிச் சென்ற சிங்காரப் பைங்கிளியே; சிந்து பாடும் தென்றலே; சீரிளமைத் தமிழே; சித்திரமே; கோட்டைப் பொன் உருக்கி வார்த்த குத்து விளக்கே; சீரழியா என் குடும்ப விளக்கின் அணையாத ஜோதியே! நீ அணைந்து விட்டாயா! விடுதலைக்கு வித்திட்டு; அதன் அறு வடை செய்து அழகு பார்ப்பதற்கு முன்பே அதற்கு உரமாகவும் ஆகிவிட்டாயா? அய்யோ; இனி நான் என் செய்வேன்! வளமார் திரா விடம் என் கண்ணீர்க் குளத்தினிலே தாமரை போன்றா மலர வேண்டும்?"

"என்ன பாட்டி இது? அழுது புலம்புகிறாய்? தொழுது வாழும் கோழையைப் போல் பதறு கிறாய்-சே; சே! வெட்கம்!...வெட்கம்!! நம் தமிழ் மரபுக்கே தாங்க முடியாத வெட்கம்!"

"தவறாக நினைக்காதேடா, என் தங்கமே! அழகுமிழும் முத்தாரம் என் கழுத்தைவிட்டுக் களவுபோனதே என்று நான் கவலைப்படவில்லை. உன் நீலோத்பல மலர் விழிகள் என்னைப் பார்க் கும்போதெல்லாம், "தவழும் பிராயத்திலேயே என்னைத் தாயில்லாப் பிள்ளையாக்கி விட்ட துரோகி!" என்று உன் உள்ளம் சபிக்குமே என் பதற்குத்தானடா நான் கலங்குகிறேன்!"

"கலங்காதே பாட்டி; நான் அப்படி நினைக்க மாட்டேன்! நான் தமிழ்காத்த தாளமுத்துவின் பேரன் என்பதை மறந்து விட்டாயா? நான் ஒன் றும் கவலைப்படமாட்டேன்!"

—தளபதி அந்தச் சிறுவனின் வார்த்தை கேட்டுத் திகைப்படைந்தான்,

"தம்பீ! மறந்து விட்டாயா அதற்குள்? உன்தாய் போய் விட்டாள்!"

"என் தாய் போனாலென்ன? என் தாயகம் வந்துவிட்டதே, தலைவரே!"

—இது கேட்டுக் கூடியிருந்தவர் கூத்தாடி னர்! வீரர் குடிப்பிறந்த அந்த வீரவிளக்கினைத் தோளில் ஏற்றி, ஆனந்தப் பள்ளுப் பாடினர்.

**எல்லார்க்கும் தேசம்,**
**எல்லார்க்கும் உடைமை எலாம்!**
**எல்லார்க்கும் எல்லா**
**உரிமைகளும் ஆகுகவே!**
**எல்லார்க்கும் கல்வி**
**சுகாதாரம் வாய்க்கிடுக!**
**எல்லார்க்கும் நல்ல**
**இதயம் பொருந்திடுக!**
**வல்லார்க்கும் மற்றுள்ள**
**செல்வர்க்கும் நாட்டுடைமை**
**வாய்க்கரிசி என்னும்**
**மனப்பான்மை போயொழிக;**
**வில்லார்க்கும் நல்ல**
**நுதல்மாதர் எல்லார்க்கும்**
**விடுதலையாம் என்றே**
**மணிமுரசம் ஆர்ப்பீரே!**

—இந்தப் பாட்டினைப் பாடியவாறே சுதந் திரவிழாவினைக் காண அவர்கள் சென்னைக் கோட்டைக்குப் பயணமாயினர்!

# நடந்ததும் நடக்காததும்!

"பொய்யுடை யொருவன் சொல்வன் மையினுல் மெய்போ லும்மே— மெய்போ லும்மே!" என்ற வெற்றி வேற்கைப் பாடல்உண்மை யானது தானு? அடுத்த பக்கத்திலுள்ள கதையைப் படித்த பின்பு கூறுங்கள்.



அதிகமான்

## முதல் பாகம்

### 1

வக்கீல் ராமசாமிக் கவுண்டருக்கு. இந்த வழக்கில் தம் பக்கம் நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. கிடைக்காமல் எங்கே போய்விடப் போகிறது? அவர்தான் வெற்றி தரக்கூடிய வழக்குகளை மட்டும் ஏற்று நடத்தும் வழக்க முடையவராயிற்றே...!

இந்த வழக்கு ஒரு கொலையைப் பற்றியது. சிரங்கப்பாளையம் ஜமீன்தாரின் மனைவி ரங்கநாயகி...ஜமீன் கணக்கன் சின்னசாமியைச் சுட்டுக் கொன்று விட்டாள். ஜமீன்தார் ஆறுமுகக் கவுண்டரோ, வக்கீல் ராமசாமிக்கு நெருங்கிய உறவு முறைக்காரர். மேலும் வக்கீலின் திறமை அவருக்குத் தெரியும், அதனால்தான் வழக்கு ராமசாமிக் கவுண்டரிடம் ஒப்படைக்கப்பட்டது. கொலை வழக்குகள் எல்லாம் விரைவில் முடிந்துவிடக் கூடியவையா? சரியாக ஆறு மாதங்களுக்குப் பின். இன்னும் இரண்டு தினங்களில் தீர்ப்பு சொல்வதாக முடிவாகி இருக்கிறது...அது எப்படியோ இருக்கட்டும்...முதலில் இவ்வழக்கு விபரங்கள் என்னவென்பதைப் பார்ப்போம்:

* * *

சிரங்கப்பாளையம் ஜமீன்தார் ஆறுமுகக் கவுண்டர் தன் முதல் மனைவி இறந்தவுடன், இரண்டாவது தடவையாக ஒரு கல்யாணம் செய்து கொள்ள எளிதில் சம்மதிக்கவில்லை. வயதென்னவோ நாற்பதாகி விட்டது. வாழ்க்கையில் அவர் அனுபவிக்காத சுகம் எதுவுமே பாக்கி இல்லை. அதனால் இரண்டாவது தடவையாக கல்யாணம் வேண்டாம் என்று அவர் முடிவு செய்திருந்தார். சொந்தக்காரர்கள் சும்மா இருக்கிறார்களா? சொத்துக்கு வாரிசு இல்லை. அதுதானே அவர்களுக்கு முக்கிய கவலை? ஜமீன்தாருக்கும் தனக்கும் குழந்தை இல்லையே என்ற கவலை ஒரு புறம் இருந்தாலும்...அதற்காக இன்னொருத்தியை மணந்து கொள்ள அவர் தயாராக இல்லை ...இரண்டு வருடங்கள் பேச்சு வார்த்தைகள் நடந்தபின், கடைசியில் சொந்தக்காரர்கள் தான் வெற்றி பெற்றார்கள். ஜமீந்தார் இரண்டாவது முறையாக மாப்பிள்ளையானார். ரங்கநாயகி பாக்கியம் செய்தவள் என்று எல்லோரும் சொன்னார்கள். கல்யாணமாகாமல் வீட்டிலிருக்கும் பெண்ணுக்கு விடிவு காலம் வந்தால் யார்தான் திருப்தி அடையமாட்டார்கள்? ரங்கநாயகி நல்ல அழகி, சுமாராகப் படித்தவள். உயரத்திற்கேற்ற உடற் கட்டு. ஜமீன்தாருக் கென்றே பிறந்தவள் என்று பார்த்தவர்கள் சொன்னார்கள். இதுவரை அவளுக்கு ஏன் மணமாகவில்லை என்பதற்கு மட்டும் யாரும் சரியான காரணத்தைச் சொல்லவில்லை. கிராமத்தில் அவளுக் கேற்ற மாப்பிள்ளை கிடைக்கவில்லை என்று பேசிக் கொண்டார்கள். ஜமீன்தார் எதைப் பற்றியும் கவலைப்படவில்லை. ஏனெனில் ரங்கநாயகியைப் பார்த்தவுடன் அவருக்குப் பிடித்துப் போய் விட்டது. ஆனால் ஜமீன்தாரை ரங்கநாயகிக்கு பிடித்ததா என்பதை யாரும் கேட்டறியவில்லை!

### 2

ஜமீன் மாளிகை நகரத்தை விட்டு ஒரு மைலுக்கு அப்பாலிருந்தது. சுற்றிலும் அடர்த்தியாக வளர்ந்திருந்த மரங்கள் பங்களாவின் சுற்றுப்புறத்திற்கு எல்லை வகுத்திருந்தன. பங்களாவின் வேலைக்காரர்கள் கூப்பிடு தூரத்திலிருந்த குடிசைகளில் இருந்தனர். அதனால் இரவு நேரத்தில் மாளிகையில் ஒரு வேலைக்காரனும் தங்குவதில்லை! ஜமீன்தாரும் அடிக்கடி நகரத்திற்கும், வேட்டைக்கும் போய் விடுவது வழக்கம் முதல் மனைவி எப்படித் தனியாக இருக்கப்பழகிக்கொண்டிருந்தாளோ அதே போல் ரங்க நாயகியும் சீக்கிரம் தன்னை அந்தச் சூழ்நிலைக்குப் பழக்கப் படுத்திக் கொண்டாள்......மேலும் ரங்கநாயகி கொஞ்சம் தைரிய சாலி அதனால்தான் இரவு நேரத்தில் அவளுக்குத் துணையாக ஒரு வேலைக்காரி கூடத் தேவையாக இருக்கவில்லை. ஜமீன்தார் ஊரில் இல்லாத போது!

கல்யாணமாகி இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. அப்போது ஒரு நாள்.........ஜமீன்தாருக்கு டவுனில் ஏதோ வேலையிருந்தது. போய்விட்டார். இரவு திரும்புவார் என்று ரங்கநாயகி எதிர் பார்க்கவில்லை. ஏனெனில் சாயங்காலம் திரும்பவில்லை யென்றால், இரவும் வர மாட்டார் என்பது நடைமுறையில் அவள் கண்டு கொண்டிருந்த நிகழ்ச்சி.

இரவு மணி ஒன்பதுக்கு மேலிருக்கும். வெளியே மழை பெய்து கொண்டிருந்தது. ரங்கநாயகி படுக்கையில் அமர்ந்து ஏதோ படித்துக் கொண்டிருந்தாள். மழையின் சப்தத்தைத் தவிர வேறெதுவும் இரவின் அமைதியைக் கலைக்கவில்லை. ஆனால் வேறொரு சப்தம் ரங்கநாயகியின் கவனத்தைக் கவர்ந்தது. அந்த நேரத்தில் கதவைத் தட்டுவது யாராக இருக்கும்?

ரங்க நாயகி படுக்கையை விட்டு எழுந்து போய்க் கதவைத் திறந்தாள். ஜமீன் கணக்கன் சின்னசாமி நின்று கொண்டிருந்தான். மழையில் நனைந்து விட்டதற்கடையாளமாக அவனது உடை தெப்பலாக நனைந்திருந்தது.

"ஐயா இல்லையா?" என்றான் அவன். அவர் டவுனுக்குப் போயிருப்பது கணக்கனுக்குத் தெரியாமலா இருக்கும்?

"டவுனுக்குப் போயிருக்கார்...காலையில்தான் வருவார்!" என்றாள் ரங்க நாயகி. அதற்கு மேல் சின்னசாமி அங்கிருந்து போய் விட வேண்டியதுதானே முறை? அவன் போகவில்லை! ரங்கநாயகியின் விழிகள் கேட்ட கேள்வியைப் புரிந்து கொண்டவன் போல்.........

"மழை...நிற்கவில்லை!" என்றான். உடைகளை மாற்றிக் கொள்ள வசதி செய்து

## விசித்திர மரணம்!



● தான் எப்போது சாகப் போகிறோம் என்பதை முன் கூட்டியே தெரிந்துவைத் திருக்கும் மனிதர்கள் யாருமே கிடையாது என்று தான் நினைப்பீர்கள்!

அநேக ஆண்டுகளுக்கு முன்னதாகவே; தான் எப் போது சாகப்போகிறோம் என்பதைத் தெரிந்துவைத் திருக்கும் மனிதர் இந்த உல கத்தில் ஒரே ஒருவர்தான் இருக்கிறார்?

டெம்னி என்கிற ஆதிவாசி களின் தலைவன்தான் அந்த மனிதன்!

அவன் தலைவனாகப் பட் டம் சூட்டிக்கொள்ளும் போது; அவனை கூழாங்கற் கள் செறிந்த கடற் கரை வழியாக அழைத்துச் செல் வார்கள்.

அவன் கண்களை மூடி அவனுடைய கையால் ஒரு தடவையில் எவ்வளவு கூழாங்கற்களைப் பொறுக்க முடியுமோ அவ்வளவு கூழாங்கற்களைப் பொறுக்கச் சொல்லுவார்கள்.

அவை மிகவும் கவன மாகக் கணக்கிடப்படும்.

அதன்படி அந்தத் தலை வன் எத்தனை கூழாங்கற் களைப் பொறுக்கி எடுத் தானோ அத்தனை ஆண்டுகள் தான் அவன் உயிர்வாழ அனு மதிக்கப்படுவான்!

கூழாங்கற்களால் கணக் கிடப்பட்ட ஆண்டுகள் முடிவடையும்போது எல்லா காட்டு மனிதர்களும் சேர் ந்து; தலைவனுக்கு விஷம் கொடுத்து "சாக்ரட்டீஸ்" பாணியிலே கொன்றுவிடு வார்கள்.

அடுத்த தலைவனுடைய ஆயுட் காலமும் கூழாங்கற் களால் கணிக்கப்பட்டு விடும்!

கொடுத்து, விடியும் வரை அவன் அங்கேயே படுத் துக் கொள்ள ஏற்பாடு செய்த ரங்கநாயகி பின்னால் அதனால் ஏதாவது விபரீதம் ஏற்படு மென்று முன் கூட்டியே எதிர் பார்க்கவில்லை! யார்தான் எதிர் பார்ப்பார்கள்?

படுக்கையில் அயர்ந்து தூங் கிக் கொண்டிருந்த ரங்கநாயகி ஏதோ சப்தம் கேட்டுத் திடீ ரென விழித்தாள். அருகில் சின்னசாமி நின்று கொண்டி ருந்தது அவளுக்குத் தெரிந்தது. அந்த நேரத்தில் தனியாக உறங்கும் ஒரு பெண்ணின் படுக்கையறைக்கு அவன் ஏன் வருகிறான்?... அவன் கண்களே அவனைக் காட்டிக் கொடுத்து விட்டன! வெறி!! இருபது நிமிடங்கள் சர்ச்சை: அதைத் தொடர்ந்து பலாத்காரம்! ரங்க நாயகி தைரியசாலிதானே? அதனால் சின்னசாமி, ஜமீன் தாரின் கைத்துப்பாக்கிக்குப்பலி யாகிப்பிணமாகக் கீழே விழுந் தான்! தற்காப்புக்காக, அவள் அதைத் தவிர வேறு எம்மாதிரி நடவடிக்கை எடுக்க முடியும்?

சின்னசாமி ஒரு பக்கம் பிண மாகக் கிடந்தான். நள்ளிரவு... மழை இன்னும் விடவில்லை. ரங்கநாயகிக்கு எப்படித் தூக் கம் வரும்? விடியும் வரை யாரும் உதவிக்கும் வரமாட் டார்கள். அதுவரை பிணத்திற்கும் அவள் காவல் இருக்க வேண்டும்!

இறந்து கிடக்கிறானே சின்ன சாமி.........அவனைப்பற்றிச் சில வார்த்தைகள் இங்கே அவசியம் சொல்லியாக வேண்டும். ஏனெனில் கதையில் அவன் ஒரு முக்கியமான பாத்திரம்...

* * *

சின்னசாமி, ரங்க நாயகியின் ஊரைச் சேர்ந்தவன். சொல்லப் போனால் அவன் அவளுக்கு ஒரு வகையில் சொந்தம் கூட! ஏதோ நாலெழுத்துப் படித்து விட்டு, வயல் வரப்பில் வேலை பார்க்கப் பிடிக்காமல், ஊரைச் சுற்றிக் கொண்டிருந்தவனை ஜமீன் கணக்கன் உத்தியோகத் திற்கு, ரங்க நாயகியின் தகப்ப னார்தான் சிபார்சு செய்தார். அதில் ரங்கநாயகிக்கும் பங் குண்டு. சின்னசாமிக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை. ஆனால் அவனோடு ஒரு பெண் இருந் தாள். இது எல்லோருக்கும் தெரிந்த இரகசியம். அவள் பெயர் அஞ்சலை. விதவை போக் கற்று இருந்தவளிடம் சின்ன சாமி ஆதரவு காட்டித் தன்னு டன் வைத்துக் கொண்டான். அஞ்சலை அழகி மட்டுமல்ல, பொறுப்புணர்ந்தவள். ஆதரவு தந்தவன் மனங் கோணாமல் நடக்க வேண்டும் என்பதை நன்றாக அறிந்தவள். இதை விடக் கட்டின மனைவி என்ன சாதித்துவிடப் போகிறாள்? அதனால்தான் சின்னசாமி கல் யாணத்தைப் பற்றி நினைக்க வில்லை! இம்மாதிரி விஷயங் களில் தலையிட்டு, புத்திசொல்ல ஜமீன்தார் கூட ஆசைப்பட வில்லை—அவரைத் தூக்கி எறிந்து பேசி விட்டால்.........? இந்த ஒரு குறையைத் தவிர, சின்ன சாமியிடம் எல்லா நல்ல குணங் களும் இருந்தன. ஜமீன் மாளி கைக்கு ஆறுமுகக் கவுண்டர் வரச் சொன்னால்தான் வரு வான். ரங்க நாயகியிடம் எட்ட இருந்துதான் பேசுவான். மரி யாதை அதிகம். அவனைப்பற்றிய

புகார் மிகவும் குறைச்சல்......! இப்படிப்பட்ட ஒருவன், ஜமீன்தார் இல்லாத நேரத்தில், மாளிகைக்கு வந்து, ஜமீன்தாரிணியிடம் தகாத முறையில் நடந்து கொண்டான் என்றால் யார்தான் ஆச்சரியப் படமாட்டார்கள்?

## 3

ரங்க நாயகியின் வாக்குமூலம் மிகவும் விளக்கமாகவும், தெளிவாகவும் இருந்தது. கொலைக்கு சாட்சி கிடையாது. நடந்த நேரமோ இரவு! ஆக, ரங்க நாயகியின் வாக்குமூல பலத்தில்தான் எல்லாம் நடக்க வேண்டும். ஜமீன்தாரிணி, ஊரில் நாலு பேர் மதிக்கத்தக்க நிலையில் இருப்பவள், காரணமில்லாமல் ஒருவனைச் சுட்டுக் கொல்வாளா? சூழ்நிலை அமைத்திருந்த அரங்கமோ விசித்திரமானது! அந்த நேரத்தில் கொலை நடந்ததென்றால் அதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லைதான்! சின்னசாமி, ரங்கநாயகியிடம் நெருங்கும் அளவுக்குத் துணிவு படைத்தவனா என்பதுதான் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய பிரச்னை. ஆனால் எவ்வளவோ விஷயங்கள் சிபாரிசினாலும், பண பலத்தினாலும் அடிபட்டுப் போவதில்லையா?.......இங்கேயும் அப்படித்தான் நடந்தது. ரங்கநாயகி சொன்னதை ஆறுமுகக் கவுண்டர் அப்படியே நம்பிவிட்டார்...வேறு எந்தக் கணவனும் அந்த மாதிரி நேரத்தில் என்ன செய்வானோ அதையேதான் அவரும் செய்தார். வழக்கு தம் பக்கம் வெற்றியடைய அவர் செய்த வேலைகள் அநேகம்—அதற்குப் பலன் கிடைக்காமல் போகுமா?

* * *

இரண்டு தினங்களுக்குப் பின் எல்லோரும் எதிர் பார்த்தது போலவே நீதிபதியின் தீர்ப்பும் இருந்தது. ரங்கநாயகி தற்காப்புக்காகவே சின்னசாமியை சுட்டுக் கொன்றாள் என்பதை நீதிபதி எடுத்துக் கொண்டு, அவளை விடுதலை செய்தார்—வக்கீல் ராமசாமிக் கவுண்டருக்கு இது இன்னொரு வெற்றி. தமது வாழ்நாளில் இதுவரையில் எதிலும் அடையாத திருப்தியை ஜமீன்தார் இப்போது அடைந்தார். விடுதலை அடைந்ததைக் குறித்து மிக்க மகிழ்ச்சி அடையாதவள் ரங்க நாயகி ஒருத்திதான்! கொலைக் குற்றம் சாட்டப்பட்டு விடுதலை அடைந்த ஒருத்தி எவ்வளவு குதூகலமாக இருக்க வேண்டும்? ஏன் ரங்க நாயகி இப்படியிருக்கிறாள்?......

## இரண்டாம் பாகம்

## 1

### ஜமீன்தாரின் வாழ்க்கை



பழைய பாதையில் மீண்டும் நடை போட ஒரு மாத காலமாகியது. எல்லோரும் ஏறக்குறைய சின்னசாமியை மறந்து விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ரங்க நாயகி அவசரப்பட்டு விட்டாள் என்றும், சின்னசாமி அப்படிச் செய்தது மிகவும் தவறுதான் என்றும், ஜமீன்தாரின் நல்ல பெயருக்கு இந்த மாதிரிப் பொல்லாங்கு வந்திருக்கக் கூடாதென்றும் பலவிதமாகப் பேசிக் கொண்டிருந்தவர்கள் கூடக் கொஞ்சங் கொஞ்சமாக ஓய்ந்து விட்டார்கள். சின்னசாமியின் விஷயம் ஓயும்போது அஞ்சலையைப் பற்றி கவனிப்பவர்களின் எண்ணிக்கையும் குறைந்து விடும் அல்லவா? ஏற்கனவே அவள் மீது அனைவருக்கும் துவேஷம். நன்றாக வாழக் கூடிய ஒரு வாலிபனைக் கெடுத்து விட்டாள் என்ற காரணம் ஒரு பக்கம் இருக்கட்டும்! ஒரு விதவை...தாலி பாக்கியம் இல்லாதவள், எப்படி மஞ்சள் குங்குமத்தோடு மீண்டும் வாழ்க்கை நடத்தலாம்? இதனால் ஏற்பட்ட எரிச்சலில், சின்னசாமி இறந்தவுடன், அஞ்சலையிடம் பேசுபவர்களின் எண்ணிக்கையும் ஓரளவு குறைந்துதான் விட்டது. சொல்லப் போனால் அவளுக்கு அந்தக் கிராமத்தில் மிகவும் கஷ்ட ஜீவனம். ஆதரவற்ற ஒரு பெண் அபவாதங்களைச் சுமந்து கொண்டு அவதூறுகளுக்குப் பெயர் போன ஒரு கிராமத்தில் எவ்வளவு நாள் நிம்மதியாக வாழ முடியும்? எப்படி வந்தாளோ, அப்படியே ஆதரவற்ற நிலையில் வெளியேறிவிட அஞ்சலை முடிவு செய்து, அதை நடைமுறையில் செயலாற்றுவதற்குள், ஒரு நாள் எதிர்பாராத விதமாக ஜமீன்தாரை அவள் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டு விட்டது:

சின்னசாமியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்க, ஆறுமுகக் கவுண்டர் ஒரு தடவை அஞ்சலையைச் சந்திக்க விரும்பினார். ஆனால் கௌரவம் குறுக்கே நின்றது. மேலும் தன் மனைவியிடம் தகாத முறையில் நடந்து கொண்டவனின் நாயகியிடம் ஏன் அனுதாபம் காட்ட வேண்டும்? இவ்வளவு இருந்தும் மனதில் இரக்க சிந்தனை இருந்த அவர் அஞ்சலைக்கு ஏதாவது உதவி செய்யத்தான் விரும்பினார். அதற்கு, எல்லாம் ஒத்து வர வேண்டுமே? பார்ப்பவர்கள் அவரது நல்லெண்ணத்தைத் தப்பாக எடுத்துக் கொண்டால்......?

எதிர்பாராத விதமாக அஞ்சலையைச் சந்தித்து விட்ட

வுடன், அவரால் இரண்டொரு வார்த்தைகள் பேசாமல் இருக்க முடியவில்லை. வண்டியை விட்டு இறங்கி அவள் வீட்டுத் திண்ணையில் அமர்ந்தார்.

எப்படியோ ஆரம்பித்த பேச்சு. திருப்பங்கள் பல வற்றைக் கடந்து உண்மையின் விளிம்பிலே போய் நின்றது. கண்களில் நீர் மல்க அஞ்சலை, அவரிடம் எதையும் மறைக்காமல், உள்ளதை உள்ளபடியே சொல்லிவிட்டாள் — இதுவரை ஜமீன்தாருக்குத் தெரியாதிருந்த ஒரு பெரிய இரகசியம் இப்போது தெரிந்தது. அவள் பேச்சை யார் நம்பப் போகிறார்கள்? அப்படியே எடுத்துக் கொண்டாலும் ரங்கநாயகியும் அவளைப் போன்ற ஒரு பெண் தானே? அவள் தண்டனை அடைவதால் மட்டும் சின்னசாமி மீண்டும் உயிரோடு வந்துவிடப் போவதில்லை......இவ்வளவு காரணங்களால் அஞ்சலை வாயை மூடிக் கொண்டிருந்தாள். ஜமீன்தாருக்கு உண்மை தெரியாமல் போய்விடக் கூடாதே என்பதற்காக மட்டுமே அவள் இப்போது இதைச் சொல்கிறாளே அன்றி, ரங்கநாயகியின் மீது அவளுக்கிருந்த பொறாமையின் காரணமாக அல்ல! அவள் சொல்லிய கதை இதுதான்.........

## 2

ரங்கநாயகியின், ஊரைச் சேர்ந்தவன்தானே சின்னசாமி? ரங்கநாயகி எப்படி அழகாக கட்டுக் குலையாத உருவத்தோடு இருந்தாளோ அதே போல் சின்னசாமியும் கல்லால் வடித்த சிலைபோல் உருண்டு திரண்ட அங்கங்களோடு இருப்பான். அருகருகே இருந்த வீடுகள்-அடிக்கடி பழக இருந்த வாய்ப்புகள்—இரு குடும்பத்தாருக்கும் இருந்த நெருங்கிய உறவு...... இவ்வளவும் ரங்கநாயகியைச் சின்னசாமியின் அருகே தள்ளி விட்டன. கொஞ்சம் படிப்பு வாசனையும் கலந்து கொண்டது. எங்கெங்கோ சந்தித்தார்கள். சரச மாடினார்கள். ஊராருக்குத் தெரிய நியாய மில்லை. ஆனால் இரு குடும்பங்களுக்கும் தெரிந்து விட்டது. ரங்கநாயகியின் தகப்பனாருக்குத் தன் மகளைச் சொத்தில்லாத ஒரு வெறும் பயலுக்குக் கொடுக்க இஷ்டமில்லை. அதனால் காதலர்கள் ஒன்று சேர வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இந்தச் சமயத்தில்தான் ஜமீன்தாருக்குப் பெண் தேடிக் கொண்டிருந்தார்கள். சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் ரங்கநாயகியை விலை பேசி விட்டார் அவள் தந்தை—



கல்யாணம் முடிந்தது. வேலி போட்டாகி விட்டதே என்ற தைரியத்தில் ரங்கநாயகியின் தந்தை சின்னசாமிக்குக் கூட ஜமீனில் கணக்கன் உத்தியோகம் பார்த்துக் கொடுத்தார் தன் மகளின் தூண்டுதல்பேரில்! ஆக, ரங்கநாயகி இருந்த இடத்திற்கே சின்னசாமியும் வந்து சேர்ந்தான்—சில தினங்கள்... கழிந்தன. ஜமீன்தார் வெளியூருக்குப் போய்விட்டால் சின்னசாமிக்குப் படுக்கை, மாளிகையில்தான்......! மூன்றாம் பேருக்குத் தெரியாமல் நடந்த இந்த நாடகத்திற்குத் தற்காலிகமாக முற்றுப் புள்ளி வைத்தவள் அஞ்சலைதான். அஞ்சலை சேர்ந்து விட்டவுடன் சின்னசாமிக்கு மாளிகைச் சிநேகிதம் அவ்வளவு ருசிக்கவில்லை. ரங்கநாயகி அவனுடைய காதலிதான்...எவ்வளவோ நன்மைகள் அவனுக்கு அவளால்... இருந்தாலும் பெரிய இடத்து விஷயம் என்றாவது ஒரு நாள் வெளியாகி விட்டால் முடிவு இப்படித்தான் இருக்கும் என்று சொல்ல முடியாதல்லவா? அந்தப் பயத்தைஅதிகமாக்கியவள் அஞ்சலைதான்! சின்னசாமி தன் சொல்படி கேட்டு இனிமேல் நடக்கமாட்டான் என்பதை ரங்கநாயகி நன்றாக அறிந்து கொண்டாள். அதற்குக் காரணம் அஞ்சலை என்பதும் அவளுக்குச் தெரியும். இதற்கு வழி என்ன? சின்னசாமியைப் பயமுறுத்திப் பணிய வைப்பதைத் தவிர வேறு எந்த வழியும் அவள் அறிவுக்கு எட்ட வில்லை......அதனால் கொஞ்சம் பலனும் கிடைத்தது. நான்கு தடவை வரச் சொன்னால், சின்னசாமி ஒரு தடவைதான் மாளிகைக்கு வருவான். இந்த விஷயமாக அடிக்கடி அவர்களுக்குள் சண்டை ஏற்படுவதுண்டு சமரசத்திற்கு வழியே இல்லாமல் நீடிக்கும் இந்தப் பூசலுக்கு ஒருமுடிவு வேண்டாமா? ரங்கநாயகி அதைத் தெரிந்து கொள்ள விரும்பினாள். ஜமீன்தார் வெளியூருக்குப் போய்விட்ட தினம் சின்னசாமி வழக்கம் போல் வரவழைக்கப் பட்டான்........... பேச்சு முற்றி கடைசியில் ரங்கநாயகி அவனைச் சுட்டு விட்டாள்—அவள் விரும்பியதெல்லாம், சின்னசாமி தனக்காக மட்டும் இருக்க வேண்டும், இன்னொருத்திக்கும் சொந்தமாக இருக்கக் கூடாது என்பதுதான்! அதைச் சின்னசாமி ஆரம்பத்திலிருந்தே ஆதரிக்கவில்லை. நிலையாக இருப்பவள் அஞ்சலை ஒருத்திதான். ரங்கநாயகியின் உறவு என்றாவது ஒரு நாள் அறுந்து போகவேண்டியதுதானே?

அஞ்சலை, சின்னசாமி இறந்ததற்கான காரணத்தை யூகித்தாலும் உண்மையென்னவோ அதுதான். கடைசி வரை அஞ்சலையை விரட்டிவிடச் சின்னசாமி சம்மதிக்காததால்............முடிவு அப்படி ஆகிவிட்டது. வெளியில் இதெல்லாம் தெரிந்தால் எவ்வளவு அவமானம்? அதனால் தான் ரங்கநாயகி கொஞ்சம் புத்திசாலித்தனமாகக் கற்பனை செய்து, கதையைஜோடித்து... நீதியிடம் வெற்றியும் பெற்றுவிட்டாள்.........!

*　　*　　*

ஜமீன்தாரிடம் இவைகளைச் சொன்னதோடு மட்டும் அஞ்சலை நிற்கவில்லை. கடைசியாக ரங்கநாயகி, சின்னசாமிக்கு எழுதிய கடிதத்தையும் கொண்டு வந்து அவரிடம் கொடுத்தாள்...... அதிலிருந்தது இரண்டே வரிதான்......"அவர் இரவு வரமாட்டார்...வழக்கம் போல் வந்துவிடவும்...!"

அந்த எழுத்து யாருடையதென்று அவருக்குத் தெரியும், அதற்கு மேல் வேறு சாட்சி எதற்கு? இடிந்து போய் உட்கார்ந்து விட்ட ஜமீன்தார் அஞ்சலையின் வீட்டை விட்டுக் கிளம்ப வெகு நேரம் பிடித்தது. தனக்கு ஏற்பட்டு விட்ட அதிர்ச்சியில் அவர் அஞ்சலையிடம் சொல்லிக்கொள்ளக்கூட இல்லை!

## 3

வழக்கு முடிந்து விட்டபின் தன்னிடம்ஏதோவேறொருகாரியமாக வந்திருப்பார் என்றுதான் ஜமீன்தாரைப் பார்த்தவுடன் ராமசாமிக்கவுண்டர்நினைத்தார்-அவருக்கு என்ன தெரியும் ஊரில் நடந்திருக்கும் விஷயம்?

கலவரமில்லாமல் சாவகாசமாக எல்லாவற்றையும் சொல்லி முடித்த ஆறுமுகக் கவுண்டர், தம்முடைய முடிவு என்ன என்பதைக் கடைசியில்தான் சொன்னார்......

"என்னை மோசம் செய்துட்டாங்கிறதுக்காகக் கூட நான் வருத்தப்படல்லே அண்ணாச்சி!...அந்தப் பொண்ணு அஞ்சலை இவளுக்கு என்ன கெடுதல் செஞ்சா? சின்னசாமியை அவகிட்டே இருந்து ஏன் பிரிக்கணும்? இப்ப அவளுக்கு யார் ஆதரவு? அதனால்தான் நேத்து இராத்திரி ரங்கத்தை நான் சுட்டுக் கொன்னுட்டேன்......அப்படிப்பட்ட ஒரு பெண்சாதி எனக்குத் தேவையே இல்லை...! இப்ப நான் உங்ககிட்டே எதுக்கு வந்தேன் தெரியுமா? கேஸ் எப்படியும் நடக்கத்தானே போவுது?......அதுலே ரங்கம் தற்கொலை பண்ணிகிட்ட மாதிரி இருந்தாப் போதும்... எனக்கும் அவ செத்தத்துக்கும் சம்பந்தமே இருக்கக் கூடாது; தெரியுமா? தற்கொலை...ஆமா; ரங்கம் தற்கொலை பண்ணிக்கிட்டா; தெரியுமா?"

ஆடாமல் அசையாமல் அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார் வக்கீல். இதிலும் அவருக்கு வெற்றி கிடைக்காமல் போகாது!

●●●

## நிரந்தரத் தாமதம்!



● உங்கள் கைக்கடிகாரம் சிலசமயங்களில்பல நிமிஷங்கள் தாமதமாகச் செல்லும்.
சிலருடைய கடிகாரங்கள் எப்போதுமே தாமதமாகச் செல்லும்—அதற்கு கடிகாரத்தின்கோளாறு காரணமாக இருக்கும்!

ஆனால் ஒரு பொது இடத்தில் வைக்கப்பட்டிருக்கிற கடிகாரத்தின் முட்கள் வேண்டுமென்றே தாமதமாக திருப்பிவைக்கப் பட்டிருப்பதைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?

ஜெர்மனியிலேயுள்ள கோயர் விட்ஸ் என்னும் ஊரிலேயுள்ள நகர மன்றத்திலேதான் எப்போதும் அந்த நகரத்தின் சபை கூடுவது வழக்கம்.

1253-ம் ஆண்டில் ஒரு நாள் அந்த நகர சபை நடந்து கொண்டிருக்கும் போது; அங்கத்தினர்கள் அனைவரையுமேகூண்டோடு ஒழித்துவிட சிலர் சதித்திட்டம் தீட்டினர்.

ஆனால் என்னகாரணமோ தெரியவில்லை; சதிகாரர்களில் ஒருவன் மனம் மாறிவிட்டான். அதோடு மட்டுமல்லாது அதிகாரிகளிடம் சென்று சொல்லியும் விட்டான்.

உடனே அதிகாரிகள் சதிகாரர்களைப் பிடிப்பதற்கு நேரமில்லாது; நகர சபை மன்றத்திலிருந்த பெரிய கடிகாரத்தின் முள்ளை ஏழு நிமிஷம் தாமதாகத் திருப்பி வைத்து விட்டார்கள்.

கடிகாரம் தாமதமாக ஓடியதால் சபை கூடவில்லை. ஆனால் சதிகாரர்களோ ஏழு நிமிஷம் முன்னதாகவே வந்து சேர்ந்தனர். காத்துக் கொண்டிருந்த அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்!

அந்த 1253-ம் ஆண்டு முதல் இதுநாள் வரை அந்தக் கடிகாரம் இன்னும் ஏழு நிமிஷ நேரம் தாமதாக ஓடிக்கொண்டிருக்கிறது!

# இங்குக் கண்டேன்!

புதுவை ச. சிவப்பிரகாசம்

தேனை நாடும் ஈக்களைப்போல்
சிறந்த பதவி தனையடைந்து,
மானம் மறந்து வாழ்பவரை—
மதியை அடகு வைப்பவரை,
ஈன விளைவுக் கஞ்சாமல்
இனத்தைக் காட்டிக் கொடுப்பவரை,
நானி லத்தில் நான்காணேன்;
நந்தமிழ் நாட்டில் கண்டேனே!

நிலையா ஒன்றை நிலையென்று
நெஞ்சந் தன்னில் களிகொண்டு,
கலையா இன்ப வாழ்வெண்ணிக்
காட்டிக் கொடுக்கும் தொழில்நாடிச்
சிலையாய் உணர்வற் றிருப்போரைத்—
தீமை யாட்சி புரிவோரை,
அலைசூழ் உலகில் நான்காணேன்;
அருந்தமிழ் நாட்டில் கண்டேனே!

கட்சி நலனே பெரிதென்று
கண்ணும் உரிமை தனைப்பழித்துத்,
திட்பம் வாய்ந்த இனத்தினர்க்குத்
தீராப் பழியை—ஏளனத்தை
வெட்க மின்றி விளைவித்து
வீம்பு பேசும் துரோகிகளை,
எப்பா ரகத்தும் நான்காணேன்;
இந்த நாட்டில் கண்டேனே!

# வலைப்புழு

**க. அறிவழகன் எம்.ஏ.**

"நண்பா!

வணக்கம். நீண்ட கால நினைவு அலைகளை அணைத்துக் கொள்கிறேன். பீறிட்டு வரும் இதயப் பேரிரைச்சலை முறித்துக் கொள்கிறேன். அன்பு, கோடை நீராக வேண்டாம் — எப்போதும்! வாட்டமின்றிப் பறந்த வானம்பாடி இன்று வலைப்புழுவாகி விட்டது! நினைவு அலைகளைக் கிழித்துக் கொண்டு வரும் நீளச்சுருவாக ஆகிவிட்டேன். வான வீதியிலே வலம் வந்து கொண்டிருந்த வண்ண நிலவு—என் வாழ்வு—இருட்டுத் திரையினருகே இழுத்துச் செல்லப்படுகிறது.

கோல நிலாவின் குளிர்ச் சிரிப்பு, இனி எனக்கு வாழ்க்கையாகக் கிடைக்குமோ, என்னவோ? ஓரச்சிரிப்பின்றி, உள்ளச்சிரிப்புடன் 'பாண்டியன்' என்று தொடரும் அன்புக்குரல் தூர இழுத்துச்செல்லப்படுகிறது.

மலர் வனத்திலே மயங்கிய வண்டு, கருவிழிகளிலே துவண்ட காதலன், இவர்க்கோ துன்பத்திலேயும் இன்பமுண்டு. கஞ்சியை இரக்கும் பொழுது கலயத்தை இழந்தவன் நிலையிலே நான் இருக்கின்றேன்.

உள்ளப் புழுவாகி விட்டது! இந்த ஆண்டுத் தேர்வு என்னை அணைக்கவில்லை! எதிர்பாராத விபத்து!

உறுதி கொண்டிருந்த என் உள்ளம் உடைந்து சுக்குநூறாகி விட்டது. இதயப்புழுக்கத்தைச் சிந்தனையும் பெருமூச்சும் கலைக்கின்றன.

சோர்ந்து விட்டேன். வீடு திரும்ப விழைவு இல்லை. எது எப்படி இருப்பினும் இனி கல்லூரி வாழ்வு இல்லை! உயிர் வாழ்வு எந்த இடத்திலோ?

துடிக்கும் தோழன்
பாண்டியன்"

நான்கு ஆண்டுகளுக்கு முன் என் நண்பன் எழுதிய கடிதத்தை, ஓடும் ரயிலில் இரண்டாவது முறையாகப் படித்தேன். பரிதாபத்திற்குரியவன் பாண்டியன்!

ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்த அவன், ஓராண்டு தேர்வு பெறவில்லை என்றவுடனேயே, படிப்பை அதோடு முடிக்க வேண்டியவனான். ஆனால் அவன் தேர்வில் தான் வெற்றி பெறவில்லையே ஒழிய — எழுத்தோவியங்களைச் சிருஷ்டிப்பதில் வல்லவன். அன்று, அவன் எழுத்தைப்படித்த நண்பர்கள். "இவன் தான் எதிர் காலத்தின் ஷா' என்று பாராட்டினர்.

அத்தனை, பெரும்புகழும் பெற்று, நேர்கொண்ட பார்வையுடனும், நிமிர்ந்த நெஞ்சத்தோடும் உலவினன்! ஆனால்... தேர்விலோ வெற்றி அவனைத் தழுவவில்லை! தூண்டில் மீனெனத்துடித்தே போனான்!

அவன் கடைசியாக எனக்கு எழுதிய கடிதம், இதோ, மின்னும் பொன்னென இன்றும் மிளிர்கிறது! இதற்கு நானும் ஏதோ, ஆங்கிலத்தில் ஆறுதல் எழுதிப் போட்டேன். என்ன நினைத்தானோ என்னவோ?

எனக்கு வேறு கடிதம் எழுதவேயில்லை.

மூன்று ஆண்டுகள் வெளி நாட்டில் பயின்று விட்டு வீடு திரும்புகிற நான் — அற்றை நாட்களில் அவனோடு பழகிய எண்ணங்களைத் தழுவிக் கொண்டேன். ஒரு விதத்தில் வேறு கடிதம் அவன் எழுதாததும் நல்லதாயிற்று. எழுதியிருந்தால்......அவன் என்னையும் தன் உலகத்திற்கு அழைத்துச் சென்றிருப்பான்!

ஆனால்—அவனைப்பற்றிய பேச்சையே இப்பொழுது காணோம்! பத்திரிகைகளில் அவன் ஏதும் எழுதுவதாகவும் தெரியவில்லை.

நான் ஏன் இப்போது எதை எதையோ எண்ணி ஏங்கவேண்டும். இன்று ஊர் சென்றவுடன் முதன் முதலில் அவனைப் பார்ப்பேன். என்னைத் தூரத்தில் கண்டவுடன் ஓடோடி வருவான் 'வேலா, வேலா' என்று உவகையோடழைப்பான். இருதோள்களையும்இறுகப்பிடித்துக் கொண்டு பேசுவான். "பாண்டியா! நல்ல நண்பனப்பா நீ! வெளி நாடு சென்ற எனக்கு ஒரு கடிதம் கூடப்போடவில்லையே!" என்று கோபித்துக் கொள்வேன். அவனே சிரித்துக் கொண்டே அதையும், இதையும் அறிந்து கொள்ளும் ஆசையில் பல கேள்விகளைப் பைத்தியம் போல் கேட்பான். நானும், அமெரிக்காவைப்பற்றி ஆயிரம் சொல்வேன்! அசந்து போவான்!... அவனா? அலட்சியமாகக் கூட ஏதாவது எதிர்த்துச் சொன்னாலும் சொல்வான்!

அவனுக்காக, அமெரிக்காவில் வாங்கிய. அறிவு நூல்கள், கலைச்சித்திரங்கள்- அத்தனையும் தருவேன். அகமகிழ்வான். பெண்களுக்கேற்ற இந்த அழகிய கைக்கடிகாரத்தையும் தருவேன்......மறுத்து விடுவானா? அவனுக்கும் யாராவது 'காதல் தோழி' இருக்க மாட்டாளா?

எண்ண வெள்ளத்தில் நான் மிதந்து சென்று கொண்டிருந்த போது, அணை போட்டது போல்-வண்டி நின்றது.ஓர் அழகிய மங்கை நான் ஏகாந்தமாய் இருந்த அந்த இரண்டாம் வகுப்பில் வந்து அமர்ந்தாள்.

வண்டி நகர்ந்தது. என் விழிகள் எப்பக்கமும் நகர முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தன! அவள் விழிகள் என் நிலையைப் பரிகசிப்பது போல் தோன்றியது! திரும்பிக் கொண்டேன்,

தூரத்திலே தெரிந்த ஆலயத்தின் கோபுர விளக்குகள், அப்போது தான் கொளுத்தப் பட்டிருக்கவேண்டும். அவைகள் பளிச்செனத் தெரிந்தன!

ஆம்! அன்றோர் நாள்...... "கோபுரத்தின் உச்சியிலே விளக்கேற்றுகிறார்கள். ஏழைகள், இரவில் படிக்க விளக்குக்கு எண்ணெயின்றித் தவிக்கிறார்கள்" என்று பாண்டியன் சொன்னான்.

தெருவில் ஒருவர், "கோபுரத்தின் உச்சியிலே விளக்கேற்றும்போதுவீரையன் விழுந்துட்

முரசொலி பொங்கல் மலர்-1957




விடுதலைத் தானைத் தலைவர்

நடமாடும் பல்கலைக்கழகம்

டான்" என்று சொல்லிக் கொண்டே போனார்.

ஓடோடிப் போய்ப் பார்த்தோம், ஒரு எலும்பும் முழுதாயில்லை...அந்த கோரத்தைக் கண்கொண்டு பார்க்கச் சகிக்கவில்லை. பாண்டியன் தன் நிலையிழந்து கதறினான். அழுத பாண்டியன், எழுந்தான், நடந்தான்-கோவில் பாதுகாப்பாளர் வீடு நோக்கி!

"வீரையன் குடும்பத்தைக் காப்பாற்ற, கோயில் நிலத்தில் ஒரு பகுதியை எழுதி வையுங்கள்" என்றான். இதுகேட்ட கோவில் பாதுகாப்பாளர் பரமசிவம்பிள்ளை, சீறினார். பலன்...?

பாண்டியனின் கூரை வீடு எரிந்து சாம்பலானதுதான் மிச்சம்! அந்த வேதனையான நேரத்தில், ஓடிவந்து, நீர் ததும்பும் கண்களுடன், பாண்டியனுக்கு ஆறுதல் சொன்னாள் ஒருத்தி! ஆனால்...கடைசியில் பாண்டியன் அவளுக்கு ஆறுதல் சொல்லி அனுப்பவேண்டியதாயிற்று.

என் சிந்தனைச் சங்கிலி அறுபட்டது. வேகமாகத் திரும்பி அந்த நங்கையைப் பார்த்தேன். என்ன...! அன்று பாண்டியனிடம் பேசிய, அவளே தான்—இவள்!

அந்தப் பெண்ணிடம் ஏதாவது பாண்டியனைப் பற்றிக் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும் போலத் தோன்றியது.

நான் மௌனமானேன். திரும்பி வானத்தை நோக்கினேன். மங்கிய நிலவொளியில் கருமேகங்கள் இங்கு மங்குமாக சிதறிக் கிடந்தன. சற்று நேரத்திற்கு முன்பு தெரிந்த கோபுரம் இப்போது தெரியவில்லை. பச்சைப் பசேல் என்றிருந்த மரங்கள் இருட்குகைகள் போல் தோன்றின.

நானாகவே பேச ஆரம்பித்தேன்.

"நீங்கள் தஞ்சை தானே?" என்று கேட்டேன். வெறிச் சென்ற பார்வையுடன் "இல்லை" என்றாள்.

"நீங்கள் உலக நாதர் உயர்நிலைப் பள்ளியில் படிக்கவில்லையா?" என்றேன்.

அவள்முகத்தில்சோகம்!

வேறு பக்கம் திரும்பிக் கொண்டாள்.

"பாண்டியனின் தோழி இவ





## வாய் பிளந்தார்!

சுல்தான் முகம்மது கஸ்னாவின் ஆஸ்தானகவியாகத்தேனிசைப் பாக்கள் பல இயற்றும் உன்சுரி இருந்து வந்தார்.

ஒருநாள் சுல்தான் மனைவியின் மீது வெறுப்பு கொண்டு தற்கொலை செய்து கொள்ள முயன்றான்.

அப்போது அங்கு வந்த ஆஸ்தான கவிஞர் தேமதுரப் பாசுரம் ஒன்று இயற்ற; அதைக் கேட்ட சுல்தான் தற்கொலை முயற்சியைக் கைவிட்டு; கவிஞரை கஜானாவிற்கு அழைத்துச் சென்றான்.

அங்குள்ள பொன்னையும் மணியையும் கண்ட கவிஞர் ஆச்சரியத்தால் வாயைப் பிளந்தார்.

சுல்தான் எவ்வளவோ எச்சரித்தும் கவிஞர் வாயை மூடவில்லை.

உடனே சுல்தான் அவரது வாய் நிறைய கஜானாப் பொருள்களை எடுத்து நிரப்பினார். அதுபோல் மூன்று முறை செய்து ''அத்தனை பொருளும் உனக்குத்தான்'' என்றார்.

சுல்தான் இப்படி அளித்த சன்மானத் தொகையில் 24,000 காரட் முத்துக்களும், வைரமும், கோமேதகமும் இருந்தனவாம். அந்த திரவியத்தின் தற்போதைய மதிப்பு மட்டும்சுமார் இருபத்தைந்து லட்சம் டாலர்கள் என்று கூறுகிறார்கள்!

ளில்லையோ? நாம்தான் தவறு செய்து விட்டோமோ! மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டியதுதான்'' என்று எண்ணியவாறு திரும்பினேன். அவள் வேறு பக்கம் பார்த்துக்கொண்டிருந்தாள்.

ரயில் ஒரு பாலத்தைக் கடந்தது பேரிரைச்சலோடு. மழையும் தூற ஆரம்பித்தது.மறுபடியும் பாண்டியன் என் முன் தோன்றினான்.

அன்றோர் நாள் பாண்டியன் மழையில் நனைந்து, தண்ணீர் சொட்டச் சொட்ட-இந்நேரம் தான் இருக்கும்-என் வீட்டிற்கு வந்தான். அவன் நெற்றியில் பலத்த காயம்பட்டு, இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. அவசர அவசரமாகக் காயங்கட்டுக் கட்டுப் போட்டேன். இவ்வளவு காயம்பட்டும் பாண்டியன் சிரித்துக்கொண்டே இருந்தான்.

''காயம், காதற் பரிசு'' என்றான். எனக்குக் கோபம்தான் வந்தது. 'உனக்கென்ன பைத்தியமா?' என்றேன். அவன் சிரித்துக்கொண்டே சொன்னான், ''நேற்று, பார்வதி என்னைச் சந்தித்தாள். 'நாளை, என் பிறந்த நாள்! எனக்கென்ன பரிசு தருகிறீர்கள்?' என்றாள். 'நான் என்ன பரிசு தரப் போகிறேன்...?' என்றேன். 'நீங்கள் பரிசு தரவேண்டாம், எனக்கு வாழ்வு தாருங்கள்! நாளை என்னைச் சந்தித்து வாழ்த்துத் தர வேண்டும்.'' என்றாள். ''நிலைமை மோசமாகிவிடும்'' என்று திரும்பிச் சொன்னேன். அவள் அழுதாள். ''நான் சரி'' என்றேன். திட்டமிட்டபடி அவள் வீட்டுத்தோட்டப்புறம் சென்றேன். அந்த இருட்டிலும் வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தாள். வாழ்த்துச் சொன்னேன். அதற்கு அவள் தந்தை பரமசிவம் பிள்ளை தந்த பரிசுதான் இது.''

'விரோதியின் மகளைக் காதலித்து வேதனையை விலைக்கு வாங்குகிறாயே, இந்தக் காதலை விட்டுவிடு' என்றேன்.

''வேலா! பரமசிவம் பிள்ளை சொன்னதைத்தான் நீயும் சொல்கிறாய். 'காதலை' விட்டு விடு என்று சொல்வதற்குபதில் இனி உயிர் வாழும் எண்ணத்தை விட்டு விடு, என்று சொல்லியிருந்தால், மகிழ்ந்திருப்பேன்' என்றான்.

செம்மண்ணில் பெய்த மழை நீரைப் பிரித்தெடுத்தாலும் எடுக்கலாம். இந்தக் காதல் நோயில் 'சிக்கியவர்களைத் தேற்றுவது இயலாது, என்று எண்ணி, என்முயற்சியைவிட்டு விட்டேன்......

''ஆம்! அன்று பார்த்த பார்வதி போல்தான் தோன்றுகிறாள் இவள்! பாண்டியனைப் பற்றி அறியலாம் என்றாலோ, பேச மறுக்கிறாளே! இவள் பார்வதியாக இருக்கமாட்டாளோ...!''

இவ்வாறு நான் எண்ணிக் கொண்டே, தூங்கியிருக்க வேண்டும். நீண்டநேரத்திற்குப் பின் விழித்துப் பார்த்தேன்... அவளைக் காணவில்லை! ஏதோ ஓர் ரயில் நிலையத்தில் அவள் இறங்கி விட்டாள் போலும்!

என் ஊரும் வந்தது. பெட்டி, படுக்கைகளைக் குதிரை வண்டியில் ஏற்றியவுடன், வண்டியை வேகமாக ஓட்டச்சொன்னேன்.

அதோ! பாண்டியன் வீடும் வந்து விட்டது. வேகமாக இறங்கி, வீட்டுக்குள் நுழைந்தேன். என் கண்களை என்னாலேயே நம்ப முடியவில்லை......! அவன் பெற்றோரின் எதிரே, ஒரு தூணில் இரும்புச் சங்கிலியால் கட்டப்பட்டிருந்தான்! ஒரே கோரச் சிரிப்பு! ஆம்! பாண்டியன் பயித்தியமாகிவிட்டான்!

பரமசிவம் பிள்ளை பார்வதியைக் கட்டாயமாக வேறொருவனுக்கு மணம் செய்து கொடுத்து விட்டாராம்! எத்தனை தோல்விகள்! பாண்டியன் அவை அத்தனையும் எப்படிச் சகிப்பான்?

''பீறிட்டு வரும் இதயப் பேரிரைச்சலை, முறித்துக் கொள்கிறேன். வாட்டமின்றிப் பறந்த வானம்பாடி இன்று வலைப்புள்ளாகி விட்டது. நினைவு அலைகளைக் கிழித்துக் கொண்டு செல்லும் நீளச் சுருவாக.நான் ஆகி விட்டேன்''

பாண்டியன் கடிதத்தின் இவ்வரிகள், என் மனத் திரையில் மின்னி மறைந்தன!

# துப்புத் துலக்கிய நாய்!



# ஊழ்

புலவர் குழந்தை

ஒரு பெரிய இடத்துப் பெண். அப்பெண்ணுக்கேற்ற அத்தகு இடத்து மாப்பிள்ளை. ஒருவர் இருவர் அல்ல, நாலைந்து பேரிடம் பொருத்தம் பார்த்தனர். பஞ்சாங்கப் பொருத்தம். பத்தில் ஐந்து பொருத்தம் இருந்தால் போதுமாம். ஆனால், இம் மணமக்களுக்கோ பத்துக்குப் பத்தும் பழுதில்லாமல் பொருந்தி யிருந்தது. கணவனின் வாழ்நாளை இறுகக்கட்டி வைத்திருக்கும் கயிற்றுப் பொருத்தம் மிக மிக நன்கு பொருந்தி யிருந்தது. கேட்ட சாமிகளெல்லாம் நல்ல பூவே தந்தன. பல்லிகளெல்லாம் கேட்டது கேட்டபடி கலகலவென்று சொல்லின. தடம் வழியும் நன்றாகவே இருந்தன.

திருமணம் மிகச் சிறப்பாக நடந்தது. சடங்குகளெல்லாம் குறைவின்றி நடந்தன. பச்சைப் புரோகிதத் திருமணம்! சுயமரியாதையோ, தமிழோ அங்கு தலைகாட்டவில்லை. மணமகன் எழுந்து மிக்க மகிழ்ச்சியோடு மணமகள் கழுத்தில் தாலி கட்டினான். யாவரும்நீடுவாழ்க என வாழ்த்தினர். வாழ்த்தொலி கேட்டு மணமக்கள் புன்முறுவல் பூத்தனர். அவ்வளவுதான்! மணமகனுக்கு என்னவோ ஒரு வித மயக்கம் வந்தது. ஐந்து நொடிகூட ஆகவில்லை. மணமகன் பிண மகன் ஆனான். அம்மண வீடு இழவுவீடானது. மணப்பறைபிணப்பறையானது ஆடையணிகளால் அணிசெய்யப்பட்டுச் செம்பொற் பாவை போல் சிறப்புடன் வீற்றிருந்த மணமகள் விதவையாக்கப்பட்டாள். மஞ்சளும் கலவையும் மணிப்பொற்கலன்களும் மாலையும் வண்ணச் சேலையும் அவளுக்குத் தீண்டப்படாதவையாயின. என்னே பெண் பிறப்பு!

மணமகனின் திடீர்ச் சாவுக்குக் காரணம், மாரடைப்பென்றனர் மருத்துவர்; ஆங்குக் குழீஇ யிருந்தோருள் ஒரு சிலர் ஊழ்வினை யென்றனர்; ஒரு சிலர் ஆண்டவன் கட்டளை என்றனர்; ஒரு சிலர் அவன் செய்த தீவினை என்றனர்; ஒரு சிலர் இவள் செய்த கர்மம் என்றனர்; அக் கைம்மைப் பெண்ணின் பெற்றோர் எங்கள் தலைவிதி என்றனர்; அப்பெண் என் தலையெழுத்து என்றனள். அவர்கள் எல்லோரும் கூறியன ஒன்றே.

சாமி, சகுனம், சடங்கு, பொருத்தம், புரோகிதம் எல்லாம் வினைவலியின் முன்னிற்க முடியாமல் புறங்காட்டியோடின. வினையின் வலியே வலி! இக் கொலைகாரக் கொடு வினையை வெல்லும் வழியும் இல்லையோ? இல்லை என்பது தான் மக்கள் நம்பிக்கை.

'ஓர் உயிர் முற்பிறப்பில் செய்த வினையின் பயனை இப் பிறப்பில் நுகர்கிறது. வினையினாலேயே உயிர் பிறப்பெடுக்கிறது. வினையற்றால் உயிர் பிறப்பற்று வீடு பெறும். கடவுள் நம்மைப் படைக்கும்போதே இவ்விவ்வாறு வாழ வேண்டுமென்றும் படைத்து விடுகிறார். அவ்வாறேதான் வாழ வேண்டும். செல்வம் வறுமை, நன்மை தீமை, இன்பதுன்பம் எல்லாம் வினையின்படியே நிகழ்கின்றன. வினைப்பயனை நுகர்ந்தேதான் ஆகவேண்டும். ஊழ்வினைப் படியே நம் வாழ்வியல் நிகழ்கிறது. நம்மால் ஆவதொன்றுமில்லை' என்பது சமயக் கொள்கை.

சமயச் சார்பின்றித் தனித்து வாழ முடியாதென்ற நம்பிக்கையுடைய மக்கள், அச்சமயக் கொள்கையை நம்பி வாழ்ந்து வருகின்றனர். அந்நம்பிக்கையே மக்களிடை யுள்ள ஏற்றத்தாழ்வை, வேற்றுமை மனப்பான்மையைப் போக்க முடியாமல் தடுத்து வருகிறது.

இந்நம்பிக்கை மக்களுக்குச் செய்யுங் கொடுமை கொஞ்ச நஞ்சமல்ல. ஆணுக்குப் பெண்ணடிமை. உள்ளோர்க்கு இல்லோர் அடிமை. பிறப்பால் உயர்வு தாழ்வு; எல்லாம்வினைப் படி. இந்நம்பிக்கை யொழியாமல், 'எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓரினம்' என்பது வெறும் வாய்ப்பேச்சேயாகும்.

பழந்தமிழ் மக்களிடை இந் நம்பிக்கை யில்லை. வள்ளுவர் கூறும் 'ஊழ்' என்பதற்கும், இவ்வூழ்வினைக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. ஊழ் என்பதனோடு வினை என்பதைச் சேர்த்து, ஊழ் என்னும் சொல்லின் பொருளைக் கெடுத்து விட்டனர் பிற்காலத்தவர்.



ஊழ் என்பது முறைமை அதாவது, உலகியல் நிகழும் முறைமை; உலகியலின் இயற்கை நிகழ்ச்சி. அதாவது, மக்களின் எண்ணத்திற்கும் செயலுக்கும் அடங்காமல் அப்பாற்பட்டு இயற்கையாக நிகழும் நிகழ்ச்சி ஊழ் எனப்படும். அவ்வியற்கை நிகழ்ச்சி நம் எண்ணத்திற்கும் செயலுக்கும் ஒத்து வருதல்—ஆகூழ் எனப்படும்; ஒவ்வாது வருதல்—போகூழ் எனப்படும். அவ்வியற்கை நிகழ்ச்சியின் போக்கில் நாம் எண்ணுவன, செய்வன ஆகும்; அதற்கெதிரிடையாக எண்ணுவனவும் செய்வனவும் ஆகா. இவையே ஊழ் எனப்படும்.

ஒருவன் அதி காலையில் எழுந்து பனம்பழத்திற்காகப் பனந்தோப்பிற்குச் செல்கிறன். பழம் விழுந்துகிடந்தால்எடுத்து வருவான்; விழாமலிருந்தாலோ, அல்லது முன்னமே ஒருவன் வந்துஎடுத்துசென்றிருந்தாலோ வெறுங்கையோடு வீடு திரும்புவான். திரும்பி வரும்போது தொப்பென்று ஒரு பழம் விழுந்தால் ஆவலோடு ஓடி எடுத்துச் செல்வான். பழமெடுத்து வரும்போது பனைக்குடையவன் கண்டு பழத்தைத் பிடுங்கிக் கொண்டாலும் கொள்வான். வெறுங்கையோடு செல்வதைக் கண்டு இரங்கி, தானெடுத்து வந்த பழத்தில் ஒன்று கொடுத்தாலும் கொடுப்பான். பனம் பழங் கிடைக்காமல் வரும் வழியில் மாம்பழங் கிடைத்தாலும் கிடைக்கும். மாம்பழம் எடுத்து வரும் போது திருடனென்று பிடிப்பட்டாலும் பிடிபடுவான். அடியுதை தின்றலும் தின்பான். நாயோ, பாம்போ கடித்தாலுங் கடிக்கும். வழியிலேயே இறந்தாலும் இறப்பான்.

முன்னடியேசென்றல் மோட்டாருக்கு இடங்கிடைக்கும். காலந்தாழ்த்துச் சென்றல் சீட்டுக் கொடுப்போன் இடம் இல்லை என்பான். ஒருவன் ஒரு நாட் காலந்தாழ்த்துச் சென்றன். அன்று புகை வண்டியும் காலந்தாழ்த்து வந்தது, ஏறிக்கொண்டான். மற்றெரு நாள் அவ்வாறே சென்றன், வண்டி போய் விட்டது. வருத்தத்தோடு வீடு திரும்பினன், பின்னெரு நாள் சீட்டு வாங்கும்போது வண்டி புறப்பட்டு விட்டது.

ஒரு நாள் சுற்றத்தார் வருவதாகக் கடிதம் எழுதியிருந்தனர். பலகாரத்தோடு சமையல் செய்து வைத்துக் கொண்டு எதிர்பார்த்திருந்தனர். ஆனல், சுற்றத்தார் வரவில்லை. மற்றெரு நாள் எதிர்பாராமல் வந்தனர்; வீட்டுக்காரர் வேறூர்க்குப் போய்விட்டனர்.

உலகியல் இங்ஙனம் நிகழும். உலகியலின் இயற்கை நிகழ்ச்சியாகிய இவ்வுண்மையை-ஊழை அறியாது, எண்ணியது முடிந்தால் மகிழ்வதும், முடியாவிட்டால் வருந்துவதும் அறிவுடைமை ஆகாதென அவ்வூழின் தன்மை கூறுவதே திருக்குறள் 38-வது அதிகாரம். இஃதறியார் அதை ஊழ்வினை எனக் கொண்டு தம் மனம் போனவாறு சமயக் கருத்தைப் புகுத்தி அவ்வதிகாரத்தையே இழிவுபடுத்தி விட்டனர்.

23-11-56 இரவு சென்னையிற் புறப்பட்ட தூத்துக்குடிப் புகை வண்டிக்கு வந்து, வண்டி புறப்பட்டதால் வருத்தத்தோடு திரும்பிச் சென்றவரை ஆகூழ் காப்பாற்றியது. அதே வண்டியில் 8-வது பெட்டியில் சென்றவர்களையும் ஆகூழ் காப்பாறியது. 1-7 பெட்டிகளில் சென்றவர்களிற் பெரும் பாலோரைப் போகூழ் கொன்றது. பெண்கள் பெட்டிப் பக்கங்கூட ஆகூழ்ப் போகவில்லை.

இறந்தவர் அத்தனை பேர் தலையிலுமா அரியலூர்ப் புகை வண்டி வீழ்ச்சியில் சாக வேண்டும் என்று ஆண்டவன் எழுதியிருந்தான்? இதில் ஆண்டவனுக்குஎன்னநன்மை? திருமால் கோயில்களை வழிபட்டு, வழிபடச் செல்லும் போது ஆற்றில் விழுந்து சாகவேண்டும் என்று கோத்தகிரியார் ஐம்பது பேர் தலையிலும் எழுத வேண்டும்; இதுவா கடவுளின் அருட்டன்மை! புகை வண்டித்துறை அதிகாரிகளின், அத்துறை அமைச்சரின் கருத்தின்மையே அக்கேட்டுக் காரணமாகும். அவ்வண்டியில் ஏறிச் செத்தவர்க்குப் போகூழ்; சாகாதவர்க்கும் ஏறுதவர்க்கும் ஆகூழ்.

பொட்டி ராமுலு உண்ணுநோன்பிருந்து உயிர்விட்டு வெற்றி பெற்றர். ஆனல், நம் சங்கரலிங்கனரோ வெற்றி பெறவில்லை. உயிர் போனதுதான் மிச்சம். காரணம், ஆகூழும் போகூழுமே.

தமிழ் நாட்டில் பொன்னடை போர்த்துவதென்பது ஒரு சடங்காகி விட்டது. ஒரு சிலர் ஒன்றன்மேலொன்றகப் பல பொன்னடைகளைப் போர்த்துப் பொலிகின்றனர். இது அன்னரின் நல்வினையன்று. அதற்கு ஏற்பாடு செய்தோரின் ஆகூழே யாகும்.

நாம் யாருக்காகப் பாடுபடுகிறேமோ அவர்களே நாம் இறந்த பிறகு நம்மை இழிபடுத்துவர் என்பது தெரிந்திருந்தால் ஸ்டாலின் கம்யூனிசத்தைப்



பரப்புவதில் அவ்வளவு முயற்சி யெடுத்திருக்க மாட்டார். இது ஸ்டாலின் கொள்கையைக் கடைப் பிடித்த பிற நாட்டுக் கம்யூனிஸ்டுக்களின் போகூழாகும்ஸ்டாலின் உயிரோடிருக்கும் வரை புகழோடு வாழ்ந்ததால் அவர்க்கு அது ஆகூழாகும்.

வழி பாட்டுக் கூட்டத்தின் போதுகோட்சே தம்மைச்சுட்டு கொன்றுவிடுவான் என்பது தெரிந்திருந்தால் காந்தியடிகள் அன்று வழிபாட்டுக் கூட்டத்திற்குப் போயிருக்க மாட்டார். போனது அடிகளின் போகூழ். முன்னமே தெரிந்திருந்து போயிருக்கின் அது கோட்சேயின் ஆகூழாகும். அவன் எண்ணியது முடிந்ததல்லவா ?

அன்று அவ்வாஞர்தியில் ஏருதிருந்திருந்தால் இன்று பன்னீர்ச் செல்வம் அவர்கள் தமிழர் தலைவராய்த் திகழ்வாரன்ரே ? அன்று அவ்வூர்தியில் ஏறியது அவரது போகூழ்; அவரது இடத்தைப் பிடித்தவரது ஆகூழே.

இந்தியச் சிற்றரசர்களெல்லாம் அரசிழந்து வேருெருவர் அதிகாரத்தின் கீழ் இருக்க, மைசூர் மன்னர் அரசிழந்தும் மன்னர் போலவே இருத்தல் அவரது ஆகூழே.

அரசியல் வட்டாரத்தில் இவ்வாகூழும் போகூழும் அடிக்கடி மோதிக்கொள்ளும். நேற்று அமைச்சராக இருந்தவர் இன்று சட்டமன்ற உறுப்பினராகவும் முடியாமல் போவதும் உண்டு. நேற்று முகவரி தெரியாத ஒருவர் இன்று உயர்ந்த நிலையை அடைதலும் உண்டு. இவையெல்லாம் அந்தந்த நேரத்தில் நிகழும் ஆகூழும் போகூழுமேயாகும்.

இவ்விருவகை ஊழினையும் நன்கு அறிந்து அவற்றிற்கேற்ப நடந்து கொள்பவர்க்கே எண்ணிய எண்ணியாங் கெய்தும். அங்ஙனம் இயற்கை நிகழ்ச்சிக்கேற்ப நடந்து கொள்வோரே அறிவுடையோராவர்.

கட்டுப்பாட்டுக் காலத்தில், கட்டுப்பாட்டதிகாரிகளைக் கட்டுப்படுத்தத் தெரிந்த, அன்னாரின் போக்கறிந்து நடந்து கொண்ட வணிகர்கள் பெருஞ் செல்வங்குவித்தனர். அங்ஙனம் நடந்து கொள்ளத் தெரியாதவர் முன்னிருந்த இடத்திலேயே அசையாமல் இருந்தனர் அல்லவா ? இவர்களில் யார் அறிவுடையவர்? ஊழின்படி படந்து கொள்ளத் தெரியாமல் அவ்வாறு நடந்து கொள்வோரைக் குறை கூறிப் பயனென் ? ஒருவருடைய உயர்வுக்கும் தாழ்வுக்குங் காரணமாகவுள்ள இவ்வறிவு ஒவ்வொருவருக்கும் கட்டாயம் தேவை. இஃதே உலகத்தோடொட்ட ஒழுக லென்பது.

இவ்வுண்மை யுணர்ந்து, நமது வாழ்வுக்கும் தாழ்வுக்கும் அவ்வறிவே காரணமென்பதை அறிந்து, அதற்கேற்ப நடந்து கொள்ளாமல், நாம் என் செய்வது ? நம்மால் ஆவது என்ன ? எல்லாம் தலைவிதிப்படியே நடக்கும். நாம் வீண் முயற்சி செய்வதில் என்ன பயன் ? ‘ஊழையும் உப்பக்கம் காண்பர்’ என்பது பொய்யுரை என்று வீண் பேச்சுப் பேசிக் கொண்டிருப்பது பகுத்தறிவுக் கேற்புடைத்தாகாது. இயற்கை நிகழ்ச்சிக்கேற்ப ஒழுகி, எண்ணிய எண்ணியாங் கெய்தி, எடுத்த காரியம் யாவினும் வெற்றி பெற்று இனிது வாழ்வீராக. இயற்கை நிகழ்ச்சிக் கெதிராகச் சென்று எடுத்ததிலெல்லாம் தோல்வியுற்று, மனமுடைந்து வாழ்க்கையில் வெறுப்புக் கொள்ளாமல், திருக்குறள் ‘ஊழ்’ என்னும் அதிகாரத்திலுள்ள பத்துக்குறளையும் நன்கு பயின்று, ஊழின் இயல்பை யறிந்து,

“ தெய்வத்தா லாகா தெனினும் முயற்சிதன் மெய்
வருத்தக்கூலி தரும்”

“ ஊழையும் உப்பக்கம்
காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்”

என்னும் வள்ளுவர் வாய்மொழியைத் துணைக்கொண்டு ஊழை வென்று இனிது வாழ்வீராக.

❋

## “ ஆபத்பாந்தவன் !’

மலேரியா மிகக் கொடுமையான வியாதி. ஆண்டு தோறும் பல கோடிக் கணக்கான மக்கள் அந்த வியாதியால் மடிந்து வந்தனர், குயினைன் மாத்திரை கண்டு பிடிப்பதற்கு முன்பு!



இந்தக் குயினைன் மாத்திரைகள் சின்கோனு மரத்திலிருந்து தயார் செய்யப் படுகின்றன.

ஆரம்பத்தில் அமேசான் பிரதேசத்தில் மட்டுமே இந்தத் தாவரம் இருந்து வந்தது. உலகத்தின் தேவைக்கு இது போதுமானதாக இல்லை.

அப்போது தான் பிரான்ஸ் வில்லியம் ஜான் குஹ்ன் என்பவர் முன் வந்து சின்கோனு மரத்தை கிழக் கிந்தியத் தீவுகளிலே வெற்றிகரமாகச் சாகுபடி செய்து காட்டினர்.

இந்த சாதனை மூலம் சுமார் நாலு கோடிப் பேர்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றனர்.

ஆனால் இதற்கெல்லாம் ஆவன செய்த அந்த வில்லியம் ஜான் குஹ்ன் யார் தெரியுமா?

ஒரு காலத்தில் தற்கொலை செய்து கொண்டு சாகமுயற்சித்தவர்.

அதுமட்டுமா?

அவர் ஒரு கொலையும் செய்து; அதன் பிறகு பைத்தியக்கார மருத்துவ மனைக்கும் அனுப்பப்பட்டிருக்கிருர்.

அவர் அந்தப் பைத்தியாக்கார விடுதியிலிருந்துமட்டும் தப்பித்திருக்காவிடில் 4 கோடிப் பேருடைய கதி என்ன ஆகியிருக்கும்?



''அதுலே எனக்கு ஒரு கஜம் டீ கொடுப்பா!''

திராவிடம் என்றால் யாருக்குமே புரியாத-வழக்காற்றில் இல்லாத ஒரு வரட்டுக் கற்பனை—அரசியல் செப்படி வித்தை—பிரிவினை உணர்ச்சி படைத்த பிற்போக்குவாதிகளின் கூட்டுக் குரல்—அப்படி ஒரு சொல் என்றும் நிலவியதில்லை—அப்படி ஒரு இனம் உலகில் உலவியதுமில்லை—என்றெல்லாம் கதைப்போரைக் கண்கூடாகப் பார்க்கிறோம். சென்னை ராஜ்யத்தைத் தமிழ் நாடு என மாற்றுக என்ற தமிழரின் வேண்டுகோளுக்கு செவி சாய்க்காது, 'உலகறியாது திராவிட நாட்டை' என்று உரைத்திட்ட உத்தமர்கள் அமைச்சுக் கட்டிலில் வீற்றிருக்கும் இழிவுமிக்க அவல நாட்களில் நாமெல்லாம் முடங்கிக் கிடக்கிறோம்.



இத்தருணத்தில் திராவிடத்தின் உலகத் தொடர்புகள் பற்றி அறிந்துகொள்வது நமக்கும், நம்மனோர் விடுதலை முழக்கத்தைக் கேலி புரிந்து அடிமைத்தளையில் சுகம் காணுவோருக்கும் ஒவ்வொரு வகையில் எழுச்சி பயக்கும் என்பதில் ஐயமில்லை. உலகில் எல்லா நாடுகளும் ஒன்றுக்கொன்று நாகரிகத்தாலோ-வாணிபத்தாலோ-படையெடுப்பாலோ-ஆட்சியாலோ-மொழியாலோ-தொடர்பு கொண்டவைகளாக இருப்பினும், அந்தத் தொடர்பிலும் தொன்மை வாய்ந்ததாய்த் திகழ்வது தென்னகமே தான்! உலகிலே மூத்தவள் தமிழ்த் தாய் என்னும்போது அத்தாயின் வீடாம் தென்னாடுதான் உலகிலே முதல் நாடாகவும் அமைந்திருத்தல் வேண்டும். அத்துணைப் பழம் பெருமை சான்ற தென்னகத்தின் கரங்கள் உலகில் எந்த மூலை வரையில் நீட்டப்பட்டன. அந்தக் கரம் குலுக்கிக் களித்தோர் எத்தனை பேர்—அந்தக் கரம் எதிர்த்து உரமழிந்தோர் எத்தனை பேர்—இந்தக் கணக்கு நமக்கோர்

# திராவிடத்தின் உலகத்




பெருமூச்சை வெளிப்படுத்தும் சக்தி பெற்றதாயினும் விடுதலைப் போருக்குப் புதிய வலிவும் அளிப்பதாகும். திருமூலர் நாள் தொட்டு இதுகாறும் குமுறிக் கொண்டிருக்கிற ஆரிய திராவிடப் போர்ச் சூறாவளியில் ஆரிய இயக்கத்தைச் சேர்ந்த வரலாற்று ஆசிரியர்கள் கையில் திராவிடர் வரலாறு சிக்கிக் கொண்ட காரணத்தால் உண்மைச் செய்திகள் பல உருவிழந்து போய் விட்டன என்பது ஆன்றோர் பலரின் முடிந்த முடிபாகும். சிலந்தி வலையில் மாட்டி உயிர் தப்பிய பூச்சிகள் போல அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெளிவில்லாத சரித்திரக் குறிப்புகள் தென்னகத்து மன்னர் பெருமக்களைப்பற்றிக் கிடைத்திருக்கின்றனவாயினும். கிடைத்தவற்றை வைத்து ஆராயுங்கால் புவி மெச்ச வாழ்ந்த போர்ப் பரம்பரை யொன்றின் குலக்கொடிகள் நாம் என்று தெரிந்து மகிழ்கின்றோம். அந்தப் பரம்பரை எல்லா நலனும் எல்லா வளமும் பெற்று வாழ்ந்த பரம்பரையாகும்! அதன் கீர்த்தி பாடிய நாடுகள் உலகெங்கும் உண்டு. அவைபற்றி நாமும் சிறிது தெரிந்துகொள்ள நம் மூதாதையரைச் சற்றுத் திரும்பிப் பார்ப்போம்:

## நாகரீகம்

தென்னாட்டிலும் இலங்கையிலும் காணப்படுகிற மலைப் பாறை உலகத்தில் மிகப் பழமையானவை என்றும், அவை எக்காலத்திலும் நீரில் மூழ்கவில்லை யென்றும் நிலநூல் வல்லுநர்கள் அறிவிப்பதுபோலவே தென்னாட்டு நாகரீகமும் மிகப் பழமையானது. இங்கே எழுந்த நாகரீகந்தான் எகிப்து, கிரேத்தா, சின்ன ஆசியா, மேற்கு ஆசியா முதலிய நாடுகளுக்குச் சென்றது எனக் கூறலாம். நாட்டு மக்களின் குடில்களில் துவங்குகின்ற நாகரீகம் நகர்ப் புறங்களில் நுழைந்து, அங்கு கூடுகின்ற பல்வேறு தேயத்து வணிகப் பெரு மக்களின் பால் தொத்திக் கொண்டு அடுத்த நாட்டுப் பயணத்தையும் தொடங்குகிறது. புதிய கண்டு பிடிப்புக்களும்-புதிய வாழ்க்கை அமைப்பு முறைகளும்-சந்திக்கும் இடமாக நகரங்கள் இருக்கிறபடியால் அங்கிருந்து பரவுகிற கிராமீயப் பழக்க வழக்கங்களின் தொகுப்பு 'நாகரீகம்' என்ற பெயரில் வளருகிறது. நகரிலிருந்து பெருகுவதால் நாகரீகமெனப்பட்டது என்றும் கூறுவாருளர். ஆங்கிலத்தில் ''சிவிலிசேஷன்'' என்னும் சொல்லும் இப்பொருளுடையதே என்ற ஆதாரமும் காட்டுகின்றனர் அவர்கள், பல பகுதிகளில் தோன்றி வளர்ந்து நகரில் வந்து பண்பட்ட நிலையடையும் போதுதான் அது நாகரீகமாகிறது. தமிழர்கள் தென்னாட்டிலே வந்து குடியேறினார்களா— முன்பே வாழ்ந்தார்களா என்று அறியக்கூடாத அளவுக்கு அவ்வளவு தொன்மை வாய்ந்தவர்களென்று டாக்டர் பெர்கூசன் எனும் அறிஞர் குறிப்பிடுவதிலிருந்து தமிழர்கள் கட்டி வளர்த்த நாகரீகம் எத்துணை மூத்தது என்பது தெளிவாகும்.

''தென்னகத்திலுள்ள மக்கள் தங்கள் அறிவையும் உயர்ந்த பண்பையும், தோற்றம், வடிவம் முதலியவற்றையும் உலக முழுவதிலும் பரப்பினர்'' என்று டாக்டர் இ. மெக்லீன் என்பார் குறிப்பிடுகிறார். ''மிகப் பழமையானது என்று வர்ணிக்கப்படும் பாபிலோனியநாகரீகத்துக்கு அடிப்படை அமைத்து உதவியது தமிழர் நாகரீகந்தான்! மலையாளக் கரை வழியாகச் சென்ற தமிழர் நூதனமான எகிப்து நாகரீகத்தைக் கட்டி எழுப்பினார்கள், எகிப்திலும் பாபிலோனியாவிலும் நாகரீக விதையூன்றியவர்கள் பூர்வ எகிப்திலும் பாபிலோனியாவிலும் வாழ்ந்தவர்கள்-அவர்களே இந்தியாவின் தென் பகுதியில் காணப்படும் திராவிடர்'' என்பதாக விவேகானந்தர், தனது 'மேற்றிசைப் பயணம்' என்ற நூலில் எழுதுகிறார்!

கேட்பதற்கே நமக்கு வியப்பாயிருக்கும்; ஒரு காலத்தில் வடநாட்டுக்கும் தென்னாட்டுக்குமிடையே கடல் இருந்ததாம். அந்தக் கடலைத் தென்ன

# தொடர்புகள்

வர்கள் தோணிகள் மூலம் கடந்து, வடக்கே சென்று வாணிபம் நடத்தினார்களாம். அப்படிச் சென்றவர்கள் வட நாட்டாரால் பாணீஸ் என்றும் பாணர் என்றும் அழைக்கப் பட்டனர். வடக்கு தெற்குக் கடல் தூர்ந்து மேடிட்ட பிறகு சோழ மண்டலத் தமிழர் வடக்கேயிருந்த பாணர் எனப் படும் தமிழருடன் கூடி ஒரு நாட்டில் குடியேறினர். அப்படிக் குடியேறிய அந்த மக்கள் தாங்கள் குடியேறிய இடத்தைச் ''சோழ தேயம்'' என அழைத்துக் கொண்டனர். அதுவே நாளடைவில் ''சாலீதியா'' என மாறி-பிறகு பாபிலோனியா என அழைக்கப்பட்டது.

சாலிதியாவில், 'டெல்லா' என்னுமிடத்தில் அகப்பட்டுள்ள சில உருவங்களின் தலைகள் தமிழர்களின் தலைகளையே ஒத்திருக்கின்றன; மலையாளக் கரையிலே கிடைக்கக் கூடிய சந்தன மரம் தனித்துவம் வாய்ந்தது. அந்த மரத்தைப்பற்றிய குறிப்புகள் பாபிலோனிய இலக்கியங்களில் காணப்படுவதொன்றே இந்த உண்மைக்கு மேலும் பலம் தருகிறது. 'சேத்துக்கள்' என்போர் தென்னாட்டிலிருந்து சென்று சாரீதியாவில் குடியேறினர். அவர்கள் அங்கு 'சேட்டுக்கள்' என அழைக்கப்பட்டனர். செட்டிகள் என்ற தமிழ்ச் சொல் திரிந்ததே சேட்டுக்கள் என்றும் சில அறிஞர்கள் கூறுவர்.

'பண்டு' நாடு என வழங்கப் பட்ட பாண்டி மண்டலமிருந்து

...விவேகானந்தர் தமது ''மேற்றிசைப் பயணம்'' என்ற நூலில் எழுதுவதுபோல......



தமிழர்கள், பெர்சியா—அரபியா வழியாகச் சென்று எகிப்தில் குடியேறினர். 'மொகஞ்சதாரோ' மீனாடு என்று அழைக்கப்பட்ட பகுதியே யாகும். தெறல் பறிஎன்னும் நகரத்து ராணி அஷ்தாப் என்பவளின் அரண்மனையில் உள்ள கல்வெட்டில் ''இந்த எகிப்தியர், தென் கடல் குமரி நாட்டில் உள்ள பண்டு தேசத்திலிருந்து நீலாற்றங்கரையில் குடியேறியவர்கள்'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது! அதுமட்டுமல்லாமல் எகிப்தியர்—தமிழர்களின் மண்டையோடுகளின் ஒற்றுமையும்—பன்றி யிறைச்சியை இருவரும் இகழ்வதும்-மாதம் ஒரு தடவை மலக் கழிவு ஔடதம் உண்பதும்—ஆகிய ஆதாரங்கள் தமிழர்களின் நாகரீகம் அங்கெல்லாம் சென்று பரவியதைப் பறை சாற்றுகின்றன. பாபிலோனியா, மெஸபடோமியா, பாரசீகம், பசிஸ்லுதானம், தென்னகம், சிந்து வெளி-முதலிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட ஈமத்தாழிகளும் நாம் இங்கு எடுத்துக் காட்டுகிற உண்மைகளுக்கு ஒளி வழங்கு வனவாம்!

இவ்வண்ணம் தமிழகத்திலிருந்து குடியேற்றத்தின் மூலம் எகிப்தும் பாபிலோனியாவும் நாகரீகம் பயின்று, அதைக் கிரேக்கருக்குக் கற்பிக்க, கிரேக்கர் ரோமருக்குக் கற்பிக்க, உலகில் தலைசிறந்த நாகரீகம் தமிழருடையது என்ற உயர்வுப் புகழ்ச்சி ஏற்பட்டது.

பகலிரவு வேறுபாடின்றிப் பச்சைமரப்பட்டைகளை — இலைதழைகளைக்கொண்டு உடல் மறைத்து உலகிலே பலபகுதி மக்கள் நாகரீகத்தின் தொட்டிலில் கிடந்தபோது- திருவிடத்தார் பால்வண்ண உடையுடுத்திக், காதலுக்கும் வீரத்துக்கும் இலக்கணம் வகுத்து, இன்ப இலக்கியம் தொடுத்துக்கொண்டிருந்தனர், முல்லை - நெய்தல் - மருதம்-பாலை எனும் நால்வகை நிலங்களிலே!..... நானிலத்துக்கு நாகரீகம் கற்பித்த அவர்கள் எங்கே இப்போது? பொற்காலம் உருவாக்கிய அந்தச் சிற்பிகளின் புகழ் ஏனோ மங்கிவிட்டது?......கதிரவன் சந்திரனுக்கு ஒளிவழங்கித் தன் ஒளியைக் குறைத்துக் கொண்டதில்லையே; தென்னவர் மட்டும் ஏனோ தேய்ந்தனர்?......

நாகரீகத்தில் மட்டுமா ஏற்றம் பெற்றிருந்தோம்...இதோ-மொழியிலே என்னவாம்?...

### மொழித்தொடர்பு

தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளே தமிழின் பிரிவுகள் என இதுவரை கண்டோம்......இதோ சரித்திர மேதைகள் கூறுகிறார்கள்; சாவகம் புட்பகம் முதலிய ஐவகைத் தீவுகளில் வழங்குகின்ற மொழியும், பெலுசிஸ்தானத்தில்



...தென்னாட்டுக்கும் வடநாட்டுக்கும் இடையே கடல்......

'' தவுத் புத்ரா '' எனும் சாதியினர் பேசும் மொழியும், ஆஸ்திரியாவில் பேசப்படும் ஒரு மொழியும், தமிழ்மொழியின் சிதைவுகள்தானும்!

ஆப்கனித்தானத்தில் ஒரு நகருக்கு '' தமிழக் '' என்ற பெயரே வழங்குகிறது அந்நகரில் குடியேறிய மகம்மதியர்கள் தமதுமொழியோடு தமிழையும் கலந்து கலந்து பேசுகின்றனர். '' திராவிடமொழிலிருந்துதான் சப்பான்மொழி தோன்றியது '' என்று புங்கி உத்தமர் என்னும் பெரியார் கூறுகிருர்.

எபிரேய நாட்டில் நமது தமிழ்மொழி எவ்வண்ணம் அவர்களது மொழியிலே நின்று நடமிடுகிறது என்று பார்ப்போம்.

இங்கே அகில்—
அங்கே அஹல்!
இங்கே தோகை—
அங்கே துகிம்!
இங்கே கவி—
அங்கே கவ்'

கிரேக்க மொழியிலே நமது திப்பிலி, பேப்பிரி ஆயிற்று. அரிசியின் திரிபுதான் ஒரிசா என்றும் கூறுவாருளர்.

இவ்வாறு மொழிகள் குலத் தலைவியாம் தமிழன்னையின் ஆட்சி அகிலத்தின் எட்டுத் திக்கிலும் பரவியிருந்திருக்கிறது. இங்கிருக்கும் '' அடிமை முறிச்சீட்டுக் '' களோ, தமிழெனும் சொல்லும், தமிழ் நாடெனும் பெயரும் உலகிற்குத் தெரியாது எனப் புலம்புகின்றன. இவர்களையும் தமிழன்னை தனது வயிற்றில் சுமந்தாளே என எண்ணி வேதனையுறுகிறோம் — இவர்களோடு நாமும் சேர்ந்து பிறந்தோமே யென்று வெட்கப் படுகிறோம்!

'' நாக்கைப் பிடுங்கிக் கொண்டுசெத்துவிடுவேன்; கை எச்சிலாகி விடுமே யென்று பார்க்கிறேன் எனக் கதைக்கும் '' மானஸ்தனி '' ன் மரபிலே வந்தவர்கள் தமிழ்மொழி கொண்டிருந்த தொடர்புகளை சற்று சிந்தித்துப் பார்க்கட்டும்! மதி தெளியும்! மமதை விலகும்! மாயை அகலும்! மானம் ஒளிவிடும்!

எழில் குலுங்கிய தமிழ்ப் பொழிலாம் தென்னகம் பெற்றிருந்த ஏற்ற மென்னை! இப்போது பெற்றுள்ள ஏமாற்றந்தான் என்னே!... அம்மவோ— மொழி நீட்டி விழி திறந்து நாகரீக வழிகாட்டிய தமிழ்த் தாயே! உனை இந்தியெனும் காச நோய் பற்றுதற்கு முன்பு காப்பாற்றும் வழி யாது எனத் திகைத்துத் தேம்பி நிற்கிறது



...இலை தழைகளைக் கொண்டு உடல் மறைத்து வாழ்ந்தபோது நாம் இன்ப இலக்கியம் தொடுத்துக்கொண்டிருந்தோம்......

தெற்குச் சீமை! அந்த நாள் பெற்றிருந்த உலகத் தொடர்பு எத்துணை மேன்மையானது— இன்று உலகத்தோடு நாம் தொடர்பு கொள்ள இழிமொழி இந்திதான் கற்க வேண்டுமாமே ......இந்த ஈனம் தவிர்க்க இந்த நாட்டுத் தமிழ்ப் பெருமக்கள் காணும் இறுதி முடிவுதான் என்ன ?...இதைக் கேட்டவாறு—இருதயத்தில் அந்தக் கேள்வியைப் பதித்தவாறு— திராவிடம் உலகிலே கொண்டிருந்த வாணிபத் தொடர்பு பற்றிச் சிறிது அறிவோம்.

## வாணிபத்தொடர்பு

தமிழர் கடலில் வாணிபம் நடத்திய பரம்பரை! கடல் தாண்டிச் செல்வது பெரும் பாபம் என சாஸ்திரங் கற்பித்த ஆரியக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் முரண்பட்டவர்கள் தமிழர்கள்!

'' முந்நீர் வழ்க்கம் மகடூஉ வோடில்லை '' எனும் தொல்காப்பிய சூத்திரமும், '' திரை கடலோடியும் திரவியம் தேடு '' எனும் பழமொழியும், '' காலிற் பிரிதல் ''—'' கலத்திற் பிரிதல் '' எனவரும் பழந்தமிழ் நூல் வழக்கும் தமிழருக்குக் கடல் வாணிபத்தின்பால் ஏற்பட்டிருந்த தொடர்புகளுக்கு நல்ல எடுத்துக்காட்டுக்கள்! கடல் வாணிபத்திற்காகத் தென்னவர் பயன்படுத்திய மரக்கலங்கள் பல திறப்பட்டவை!

| | |
|---|---|
| பகடு | தெப்பம் |
| பஃறி | வங்கம் |
| அம்பி | பாதை |
| ஓடம் | தங்கு |
| திமில் | மதலை |
| தோணி | பாரதி |
| பட்டிகை | நவ்வு |
| யாநம் | போகம் |
| படுவை | நாவாய் |
| தொள்ளம் | மிதவை |
| புணை | |

என்பன அவைகள்! இந்த மரக் கலங்கள் தமிழகத்துப் பொருள்களை வெளி நாடுகளுக்கு எடுத்துச் சென்று வெளி நாட்டுத் தங்க, வெள்ளி நாணயங்களைத் தமிழகத்திற்கு ஏற்றி வந்தன. யவன தேசத்தாரின் மரக்கலங்கள் நமது கடற்கரையில்வரிசையாக நின்று அசைவது குதிரைப் பந்தியை நினைவூட்டுகிறது என்று வர்ணிக்கிறார் பத்துப் பாடல் ஆசிரியர். அராபிய நாட்டுக் குதிரைகள் தமிழ் நாட்டுத் துறை முகங்களில் இறக்குமதியாயின. அராபிக் குதிரைகளிலே அமர்ந்து திராவிடத்துப் பெரும் வீரர்கள் வேல் தாங்கிப் போர்க் களம் சென்ற காட்சிகளை அவர் தம் வேல் விழிக் காதலியர் கண்டு மகிழ்ந்த ஓவியங்களே


உலகப் பேரழகி
கிளியோபாட்ரா
தமிழ்நாட்டு முத்-
துக்களை சாராயத்-
தில் போட்டுக்
குடித்தாள்....
கொடுங்கோல்
வேந்தன் நீரோ
செருப்பிலே முத்-
துக்களை பதித்து
அழகு பார்த்-
தான்....
ஆடம்பர அரசி
லால்லியோ பாலினு
பதினாயிரம் ரோம
நாணயங்களுக்கு
மதிப்புள்ள முத்து
நகைகளை வைத்தி-
ருந்தாள்.....
இருக்கலாமா


அறிஞன் செனக்கா
வாணிபத்தின்
மூலம் தமிழகத்-
துக்குப்பொருள்
தந்து, தந்து;
கிரேக்கம் ஒட்-
-டாண்டியாகி-
விடுமோ என்று
கவலைப்பட்டான்
இப்படியெல்லாம்
சரித்திரத்துப்
பொன்னேட்டிலே
புகழ் பெற்றுக்-
கிடக்கிறது தென்
பாண்டிக் கடல்
முத்து!
ஆனல் இன்றோ
அவையனைத்தும்
வடநாட்டு அர-
சுக்கு அடிமைப்
பாத்தியதை!
இந்த நிலைமை!

தமிழ் இலக்கியக் காவியங்களாய் மலர்ந்தன!

பத்து லட்சம் பொன் நாணய மதிப்புள்ள (ஐந்தரை கோடி செஸ்டர்ஷிகள்) பொருள்கள் தென்னாட்டிலேயிருந்து ஆண்டுதோறும் ரோம் நாட்டுக்கு வந்தன என்று பிளினி என்னும் ரோம் ஆசிரியனொருவன் குறிப்பிட்டிருக்கிறான். இப்போதும் ரோம் நாட்டு நாணயங்கள் தமிழகத்தில் பல பகுதிகளில் அகப்படுவதிலிருந்து இந்த உண்மை உறுதிப்படுத்தப்படுகிறது.

மயில், மிளகு, தந்தம், முத்து, ரத்தினம், மஸ்லீன், மற்றும் வாசனைப் பொருள்கள் தமிழகத்திலிருந்து சுமத்ரா, ஜாவா, பர்மா, வங்காளம், இலங்கை, யவனம், ரோம், முதலிய நாடுகள் நோக்கிப் போய்க் கொண்டிருந்தன. பாபிலோனியாவில் ஒரு ஊரின் இடிபாடுகளிடையே மலையாளக் கரையைச் சேர்ந்த தேக்கு மரத் துண்டொன்று கண்டு பிடிக்கப்பட்டு, லண்டனிலுள்ள கண் காட்சியில் வைக்கப்பட்டிருக்கிறது. கி. மு. 1462-ல் முடிவெய்திய எகிப்திய அரச பரம்பரையினரின் சவங்கள் நமது நாட்டு மெல்லிய மஸ்லீன் துணிகளால் மூடப்பட்டு, அடக்கம் செய்யப்பட்டன.



......அராபியக் குதிரைகளில் அமர்ந்து திராவிடத்துப் பெரும் வீரர்கள் வேல் தாங்கி...

"நோக்கு நுழைகல்லா
நுண்மைய பூக்கனிந்து
அரவுரியன்ன அறுவை நல்கி"

என்று நம் நாட்டுத் துணிகளின் சிறப்புபற்றிப் பேசுகிறது பொருநராற்றுப்படை! பாம்புத் தோல் போன்ற மென்மையுடைய ஆடைகளாம்!

அலாரிக் என்ற ஒரு மன்னன் ரோமை வெற்றி கண்ட பொழுது நஷ்ட ஈட்டுத்தொகை நிறையக் கேட்டான். அப்படித் தரப்படும் பொருள்களோடு ரோம் நாட்டான் மூவாயிரம் பவுண்டு தமிழ் நாட்டு மிளகையும் சேர்த்துத் தரவேண்டுமென்று ஆணையிட்டான். இந்த நிகழ்ச்சி கி. மு. 409-ல் நடந்திருக்கிறது. மிளகிற்கு ஆரிய மொழியில் "யவனப்பிரியா" என்ற ஒரு பெயரும் உண்டு! யவனர்களுக்குப் பிரியமான பொருள் போலும் தமிழகத்து மிளகு! கிரேக்கத்து ராணி லாரியா பாலினா, சாதாரண காலங்களிலே கூட சுமார் நாற்பது மிலியன் செஸ்டர்களுக்கு ஒப்பான தமிழ் நாட்டு முத்துக்களைத் தன் அழகான மேனியில் அணிந்து மேலும் எழில் வளர்த்துக் கொள்வாளாம்! அலங்காரப்பிரியனும், அகம்பாவம் கொண்டவனுமான நீரோ மன்னன், தன் காலணியிலே தமிழ் நாட்டு முத்துக்களைப்பதித்து அழகு பார்த்துக் கொள்வானாம். கிளியோ பாட்-






ராவைப் பற்றித்தான் கேட்க வேண்டியதில்லை! அவளை உலகமே வட்டமிட்டுக்கிடந்தது— ஆனால் அவளோ தமிழ் நாட்டு முத்துக் குவியல் தாங்கி வரும் நாவாய்களை நோக்கி வாட்டமுற்றுக்கிடந்தாள். அவள் பருகும் சாராயத்திலே கூட முத்துக்கள் உருண்டு கொண்டிருக்குமாம்!

தென்னகத்து விலை உயர்ந்த பொருள்களிலே கம்பளியும்— பொன்னும்கூட கிரேக்கத்திலே எதிர்பார்க்கப்பட்டது. கம்பளி ஒரு மரத்திலே காய்க்கிறது என்றும், பொன்னை ஒரு சாதி எறும்பு தரையிலே கிண்டி எடுக்கிறது என்றும் ஆசிரியன் 'எரதோதசு' என்பான் கற்பனை செய்திருக்கிறான்.

தமிழகத்துப் பொருள்களை வாங்கி கிரேக்கத்தையே வறுமைக்காடாக ஆக்குவதாக கிரேக்கப் பெண்கள்மீது சீறி விழுந்தான் 'செனக்கா' என்ற சிந்தனையாளன். ஆனால் அவன் வீட்டில் இருந்த ஐநூறு மேசைகளும் சேர நாட்டு யானைத்தந்தத்தால் செய்யப்பட்ட கால்களையுடையவை என்று கேள்விப்படும்போது சிரிப்பும், இறுமாப்பும் ஏற்படுகிறதல்லவா நமக்கு!

நமது பொருள்களை வெளி நாடுகளுக்கு அனுப்பியது போலவே, அமெரிக்கா, அராபியா முதலிய நாடுகளில்இருந்து



*...உலகறியாது தமிழ்நாடென்ற பெயரை என்று இங்குள்ள அடிமை முறிச் சீட்டுக்கள்'...*

புகையிலை, மிளகாய், பப்பாளி கொய்யா, முதலியவைகளையும் குதிரைகளையும் இறக்குமதி செய்திருக்கிறது தென்னகம்.

"நீரின் வந்த நிமிர்
பரிப்புரவியும்
காலின் வந்த
கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த
மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த
அரமும் ஆகிலும்
தென் கடல் முத்தும்
குணகடற்றுகிரும்
கங்கைவாரியும்......
காவிரிப்பயனும்—
ஈழத்துணவும்—
காழகத்தாக்
கமும்......"

என விவரித்து விளக்குகிறது பட்டினப்பாலை!

அந்த வாணிப வேந்தர்கள் வாழ்ந்த தென்னகம் இன்று வட்டிக்கடை வேந்தர்களால் சூழப்பட்டு — வந்தவர்க்கெல்லெல்லாம் இடமளித்து வாய் பிளந்து நிற்கிற சோகக்காட்சியை எண்ணும்போது யார் கண்தான் குளமாகாமல் போய்விடும்! கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கடமையை நெஞ்சிலிறுத்திக்கலைத் தொடர்பில் திராவிடம் எவ்விதமிருந்தது என்பதைக் காண்போம்.

## கலைத் தொடர்பு

"பிளிண்டர்ஸ் பெற்றி" என்னும் சரித்திர வீரர் எகிப்து நாட்டில் தமிழ் நாட்டு ஆடவர் மகளிர் உருவுள்ள ஓவியங்கள் இருப்பதைக் கண்டு பிடித்து வெளியிட்டிருக்கிறார். கி. மு. இரண்டாம் நூற்றுண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிற ஒரு எகிப்திய நாடகத்தில் சில கன்னட மொழிப்பகுதிகள்



இடம் பெற்றிருக்கின்றன. அதாவது தற்கால உடுப்பிக்கு அருகாமையில் மால்ப்பே என்னும் இடத்தில் கதை நடப்பதாக அந்த எகிப்திய நாடகம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த உண்மை 1899-ல் எகிப்திலுள்ள "ஆக்சிரின்ச்சஸ்" என்னும் இடத்தில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

## அரசியல் தொடர்பு

இவ்வாறு கலைத்துறை, பொருளாதாரத் துறையெனும் வாணிபத்துறை, நாகரீகத்துறையெனும் சமுதாயத்துறை அனைத்திலும் ஈடும் எடுப்புமின்றி உலகத்தோடு தொடர்பு கொண்டிருந்த திராவிடம், அரசியல் துறையிலும் கீர்த்தி வாய்ந்த தொடர்பு கொண்டிருந்தது என்பதற்குப் பற்பல ஆதாரங்கள் மோதிக்கொண்டு முந்துகின்றன.

கி.பி. 20-ல் பாண்டிய நாட்டு மன்னன் தனது தூதுவனை ரோமாபுரியிலிருந்த 'அகஸ்டஸ் சீசர் கொலுமண்டபத்தில்' வீற்றிருக்கச் செய்தான். அதே போன்று சீசரின் தூர்தன் பாண்டியப் பேரவையை அலங்கரித்தான். ரோம் நாட்டு வீரர்கள் தென்னகத்தில் சிப்பாய்களாகவும் இருந்திருக்கின்றனர். கி.பி. 226-வரை முசிறியில் 1200 ரோம் வீரர்கள் தங்கியிருந்தனர். வங்காளக் குடாக்கடலைக் கடந்து கடாரத்தை வென்ற ராஜேந்திர சோழ மன்னன். 'பெகு'வில் உள்ள வெற்றித் தூண்கள் இன்றைக்கும் ராஜேந்திர சோழனின் புகழைப்பாடிக் கொண்டிருக்கின்றன. அந்தமான் நிக்கோபர் தீவுகளை இணைத்த பெருமையும் ராஜேந்திரப் பேரரசனையே சாரும். கி. பி. 1023-ல் வங்காளம், பீஹார் ஆகியவற்றை அரசோச்சிய மகிபாலனை வென்று, கங்கையை அடைந்து கங்கை கொண்ட சோழன் என்னும் சிறப்புப் பெயர் பெற்றான். கனக விசயன் தலையில் கல்லேற்றிய செங்குட்டுவனை—காவிரிக்குக் கரையெடுத்த கரிகாலன் சிங்களவரைக் கைது செய்து பெருமை கொண்ட சரித்திரத்தை—இலங்கைக் கயவாகுவும் செங்குட்டுவனும் கொண்டிருந்த ராஜீய நட்பை--திராவிடம் உலகத்தோடு கொண்டிருந்த தொடர்புகளுக்குத் துணை ஆதாரங்களாக அளிக்க முடியும்.

---

## முடிவு

அரசியல், கலை, வாணிபம், மொழி, நாகரீகம்-அனைத்திலும் மேம்பாடு கொண்டிருந்த திராவிடம் தன் செல்வாக்கையும், சுதந்திரத்தையும், கோட்டை விட்டது எவ்வாறு?...

அராபியருக்கும் தமிழருக்கும் நடந்த வாணிபப் போட்டி வலுத்தது-தமிழ்ப் பேரரசர்கள் ஆரியர் நுழைவால் சிதறுண்டனர். அதனால் திராவிடத்தில் பலமிக்க அரசு அமைய வழியற்றுப் போயிற்று! வடவர் அரசோ எனில் கடல் பலமற்ற நிலையில் இருந்தது. அந்த நேரம் பார்த்து 1498-ல் மேல் நாட்டினர் புகுந்தனர். சீரழிந்திருந்த தமிழரசர்கள் அவர்களை எதிர்த்தொழிக்கும் முழு வலிமையும் அற்றுப்போயினர். தெற்கே மிஞ்சியிருந்த பாண்டியரும்—விஜய நகர வமிசத்தினரும் நாளடைவில் கரைந்தனர். அதன் பின்னர் பிரான்சு, போர்ச்சுகீசிய, பிரிட்டிஷ் வாணிபங்கள் துவக்கப்பட்டு... தென்னகம் ஒரே ஆட்சியின் கீழ் வடநாட்டோடு இணைக்கப்பட்டு, 1947-க்குப் பிறகு வடநாட்டுக்காரர்களின் ஏக போகச் சந்தையாக—கூட்டுக் கொள்ளையடிக்கும் திறந்த வீடாக ஆகிவிட்டது!

முன்னொரு காலத்தில்...தென்னாட்டையும் வடநாட்டையும் கடல் பிரித்திருந்ததாம்; முன்பு கண்டோம்!

இப்போது கலை, நாகரீகம், வாணிபம், மொழி எல்லாமே இருநாட்டையும் பிரித்துக்காட்டிக் கொண்டுதானிருக்கின்றன: அரசு தவிர!...

அந்த அரசும் பிரிக்கப்பட்டால்......!!

திராவிடம் விடுதலை பெற்றுத் தனித்து இயங்கினால்......!!

திராவிடத்தின் உலகத் தொடர்புகள் முன்னிலும் அதிகமாகப் பெருமைதரத் தக்கதாக அமையும் என்பதில் ஐயமில்லை ......!!

வாழ்க திராவிடம்!
வெல்க விடுதலைப் படை!!



காரிருள் கலையுமுன் கண்மணிக்குக் காட்டுவதென்னவோ?
புகைப்படம்:
டி. பி. எஸ். சுந்தரநாதன்.



# அறிவகத்தில் ஒரு நாள்



திராவிடர் விடுதலைத் தாணையின் தளபதி
‘அறிவகம்’ வந்திறங்குகிறார்.



‘நம் நாடு’ இதழின் பொருளாளர் தோழர் சிவப்பிரகாசத்துடன் அலுவலகப் பணிகள் குறித்துப் பேசுகிறார்.



கழக ஏட்டின் ஆசிரியர் காஞ்சி கல்யாண சுந்தரத்துடனும் உதவி ஆசிரியர் தோழர் பாண்டியனுடனும், “நம் நாடு” பற்றிக் கலந்தாலோசிக்கிறார்.

அச்சகப் பகுதியை மேற்பார்வை யிடுகிறார்!





‘தொலைபேசி’ மூலம் தொடர்பு கொள்ளும் தோழர்களுக்கும் பதிலளிக்கிறார்!

அவருடன் அன்புரையாடல் நிகழ்த்தவும் அறிவுரை கேட்கவும் கூடும் தோழர்களுடன் அளவளாவுகிறார்!







இந்தச் சிறு மேசையில் அமர்ந்தபடி தான் தென்னகமெங்கும் தழைத்துநிற்கும் ஆயிரக் கணக்கான கிளைக் கழகங்களை இயக்குகிருர் இயக்கத்தின் இதயம் நிகர் பொதுச் செயலாளர்.

அந்த எளிய மோட்டார்கள் இரண்டும் தான் ஏழையர் இயக்கத்தின் போக்கு வரத்துச் சாதனம்!

புகைப் படங்கள் : சாமுவேல்

# சுதமதி



## பூவும் பூவையும்

பல்வகை மலர்தொறும் பாடிப் பாடிப்
புல்லிதழ் அகமெலாம் ஞெகிழப் புக்குத்
தேறல் மாந்திச் சுரும்பினந் திரிதரும்
ஆரல் பார்த்து நாரை தவஞ்செயும்
பொய்கை சூழும் பொதும்பர் அதனுள்
பெய்வளை யொருத்தி பேணினள் செலீஇ
நறுமலர்ச் செடிதொறும் நாண்மலர் கொய்தனள்
திருமணம் பெருஅச் சேயிழை: அவள்இடை
நிகர்த்தோம் நாமென நினைத்தலர் பூங்கொடி
முகிழ்த்தநல் லரும்பால் நகைத்துச் செருக்கத்
தருக்கினை நோக்கிய தையல் முறுவலால்
தருக்கினை யடக்கித் தலைகொய் தனளே:
தாமரைப் பொய்கையுள் தளையவிழ் மலர்க்குக்
காமரு பொலிமுகங் காட்டினள்: அவ்வுழைப்
புரியவி ழாமுகைப் போதுகள் நோக்கலும்
கருவிளை விழியாள் கவிழ்த்தனள் தலையை
இச்சிறு முகைக்கொரு ஒப்பிலை என்பால்
எனவாங்த
வெய்துயிர்ப் புறங்கால் விம்மிய மார்பகம்
கண்டனள் களித்தனள் அம்முகை: கொவ்வைக்
[கனியைச்
சுவைத்தனள் அதுதான் துணையிதழ்க் கொவ்வாத்
தகைத்தென உமிழ்ந்தனள்: சாயல் நடைஎழில்
காணலும் மயிலொடு அன்னங் கலங்கின:
பாவொலி கேட்டுப் பைங்கிளி குயிலொடு
நாணின: இவ்வணம் நங்கை நின்றுழி.

## அவனும் அவளும்

தொடுக்குந் தெரியல் தோளினன் சுடரொளி
விடுக்கும் பொற்பூண் விடலை பலர்தொழும்
கடவுட் கோலக் காளை ஒருவன்
தடமலர்ச் சோலையுள் தையலைக் கண்டனன்
கண்டார்ப் பிணிக்கும் காரிகை எழில்நலம்
உண்டான் விழியால். உலகின் அழகெலாம்
ஒருருக் கொண்டிங் குற்ற தோவெனத்
திகைத்து நின்றனன். நிலத்தை நோக்கினள்.
பதைத்தனள் நிமிர்ந்தாள் பார்வையைத் திருப்பினன்.
ஈரிரு விழிகளும் மாறி மாறி
ஓரிரு முறையில் ஒன்றிக் கவ்வின:
"நன்னுதல்! யார்நீ?" என்னலும் நாணினள்
பின்னர்த் தொங்கும் பின்னல் கண்டவன்
"என்னுயிர் பின்னினை! எழில்முகங் காட்டி
நின்வர லாறுரை நேரிழாய்!" என்னலும்

---

**கவிஞர் முடியரசன்**



''சண்பை நகரெனச் சாற்றும் இவ்வூர்ப்
பண்பினன் வேதப் பார்ப்பன முதுமகன்
அழலோம் பாளன் அன்பினன் கோசிகன்
என்பான் மகள்யான் என்பெயர் சுதமதி''
இம்மொழி செப்புமுன் இளையன் உணர்வால்
கைம்மலர் பற்றிக் கனியிதழ் கொய்தான்
செய்வகை யற்றுச் சேயிழை நின்றனள் :
''வயங்கிழை மாதே! வடபுலத் துறைவேன்
பயங்கெழு பூம்புகார்ப் பதியில் நிகழ்வுறூஉம்
இந்திர விழாவுக் கேகினன் வழியிடை
முந்திய தவத்தால் முன்வந் துற்றனை!
என்பெயர் மாருத வேகன் என்பர்
அன்பின் கிழத்தி ஆகுதி!'' என்று
வன்பாய் அவள்கைம் மலரினைப் பற்றினன்
''இணர்மண மாலை ஏற்று மகிழும்
மணம்பெரு முன்னர் மலருடல் தீண்டுதல்
குணமிகு செயலெனக் கூறுர்'' என்றனள்
''யாழோர் மணத்தால் யானுனைக் கூடுவேன்
தோழீஇ!'' எனஅவள் தோள்தழீஇச் சென்று
பூம்புகார்த் தங்கி போகம் சுவைத்தனன்.

## யாழும் வாழ்வும்

பெருமுழ வெங்கணும் திருவிழா அறைந்தன
தெருவெலாம் தோரணம் வாரணம் திகழ்ந்தன
மகார்முதல் யாவரும் மனங்களி கூர்ந்தனர்
புகார்நகர் விழாவிற் பொலிந்தது யாண்டும்
அலைமணற் கரையெலாம் நிலவினர் மக்கள்
இளைஞர் துணையொடும் இன்னிசை பாடினர்
குழலும் யாழும் கூடி இசைத்தன
மழலைச் சிறமகார் மணலில் ஆடினர்
மாந்தர் ஒலியொடு மற்றிசை ஒலியும்
சேர்ந்து கடலொலி சிறிதெனச் செய்தது;
மாருத வேகன் மனத்தினில் மகிழ்ச்சி
சாருத லின்றித் தனிமையை நாடிச்
சிந்தனை முகத்தில் தேக்கின னாகி
நந்தின் சினைகள் சிந்திய ஒரு பால்
புரத்தியில் அலைகள் புரள இருந்தனன் :
''என்மனங் கவர்ந்தோய்! யாதுற் றனைகொல்?
நின்முகஞ் சோர்வுறின் என்னுளஞ் சோர்வுறும்
இந்திர விழாவில் வந்தோர் யாரும்
நொந்திலர் மகிழ்வைச் சிந்தையில் தேக்கினர்
நாமுங் களிப்போம் வா''வென நீவிச்
சுதமதி யாழினைச் சுருதி கூட்டினள்
புதுவகைச் சுவையெலாம் பொருந்தப் பாடிக்
காணு இன்பக் காதல் கூட்டினள்
ஆணு யாழில் அவலம் மீட்டினன்
மாருத வேகன் மாறின னாகக்
காரிகை கலங்கினள் ; ''காதலீ! இசையில்
அவலம் காதல் அனைத்தும் சுவையே
கவலை நினக்கேன்? கைவிரல் ஓட்டி
மீண்டும் யாழினை மீட்டுதி கண்ணே!
காண்டும் இன்பங் களிஉல கதனில்''
என்றனன் ; தோகை எடுத்தனள் யாழை
ஒன்றிய குரலால் உள்ளம் உருக
அவலச் சுவையே அவளும் பாடினள்
தவவுக் கோல்யாழ் தெரிநரம் பிடையே
சுனைவசெய் சிறுவரல் துடிப்புடன் தடவி

முடிநிலை யுறுங்கால் முறிந்ததோர் நரம்பே
இடியொலி கேட்டெனத் துடியிடை நடுங்கி
இதய நரம்புதான் இற்ற தோவெனப்
பதறினள்: ''அஞ்சேல் பாவாய்'' என்றனன்;
இருப்பினும் அவள் மனம் ஒருப்பட வில்லை:

## காதலும் கடவுளும்

சிரிப்பினை யிழந்தனள் சிந்தையிற் கலக்கம்
நிறைத்தனள் அவளுறு துயரம் நீக்குவான்
''அலையெழு புனலிடை மலைநிகர் மரக்கலம்
பலவருஉம் அழகினைப் பார்''எனப் பகர்ந்தனன்
''அலமரும் மரக்கலம் ஆகினன் யான்''எனச்
சிலைநிகர் அம்மகள் செப்பின ளாகப்
''பலவகைச் செடிதொறும் பறந்து படிந்து
மலரிடைத் தேன்நுகர் வண்டுகள் காண்''என,
''அலர்தரு நறவம் அருந்திப் பிறிதொரு
மலர்முகம் நோக்கும் வண்டினம் புரிசெயல்
நின்னிற் றோன்று தொழிலதில் அம்ம!''
என்னலும், இளையன் ''ஏனுனக் கையம்?
உலையில் காய்ச்சி உருக்கிய பொன்னால்
மேற்றிசை வானை மெருகிடல் போல்நிறம்
நீற்றிய கதிரோன் மறையும் செக்கர்
வானெழில் காணுதி! வாட்டந் தவிர்தி!
வீணில் ஐயுறின் விளைவன தீயவே''
இங்ஙனம் ஆற்றியும் இளையோள் தெளிந்திலள்;
''வானை மினுக்கி மறைவுறுங் கதிரென
என்னை மயக்கி என்னலம் நுகர்ந்து
மின்போல் மறைதல் நின்பால் நிகழுமோ
என்னும் ஐயம் எழுந்ததென் உளனே
யாழோர் கூட்டமென் றென்னலம் உண்டனை
கீழோர் நாட்டம் எனநிலங் கிளக்கவும்
நம்பிய நானிவண் நரம்பறும் யாழென
வெம்பவுங் கைவிடல் கனவிலும் விழையேல்''
இருவிழி கலங்க இயம்பினள் இங்ஙனம்;
''சிறுமதி யுடையாய்! செய்கையில் பொய்க்கும்
குறுமனம் இல்லேன், கொண்டவள் தவிக்கக்
காதல் பொய்க்கும் கயவனும் அல்லேன்,
காதல் இன்றேல் சாதல்! இதுமெய்!
தெய்வம் உண்டெனத் தெளிகுவை யாயின்
செய்நம் காதல் மெய்யெனத் தெளிகுவை
பெண்மதி பின்மதி! ஆம்இஃ துண்மை!
கண்ணிழி நீர்துடை கலங்குதல் ஒழி''என்
றுள்ளம் மாற்றி ஊக்கினன் சென்றான்:
கள்ளவிழ் கோதை கனவுகண் டஞ்சி
நள்ளிர வதனில் நடுங்கிப் பிதற்றினள்.
தேற்றினன் தெளிந்தாள். துயிற்றினன் துயின்றாள்.
காற்றுடல் வருடக் கண்மலர் அவிழ்ந்தாள்

## பூவையும் புலம்பலும்

கதிரவற் கண்டாள் காதலற் காணாள்
அதிர்ந்தனள் உள்ளம் அந்தோ பேதை!
ஓடினள் தேடினள் ஊரெலாந் தேடினள்
வாடினள் இரவொடு மாருத வேகன்
ஓடினன் என்பதை உணர்ந்தனள் தளர்ந்தனள்
''கடவுளைக் காட்டிக் கழறினன் நம்பினேன்
'கடவுள்' போலவன் கட்படாஅ தொழிந்தனன்
மடவன் இவ்வணம் மாறினன் காதல்





நலமறி யாமகன் நயவஞ் சகனிவன்
குலமகன் அல்லன் கொடியன்! எங்கே
ஏகுவேன் யானினி எங்ஙனம் வாழ்கேன்?
வேக மாருதம் என்ன விரைந்தனன்
போகிய மாருத வேகனுக் கப்பெயர்
ஒன்றும் பரிசென இன்றிங் குணர்ந்தேன்''
என்றெலாம் அரற்றி இருந்தனள் சுதமதி.

## தந்தையும் மகளும்

சண்பை நகரோன் சதுர்மறை யாளன்
நன்மனை யிழந்த நரைமுதிர் கோசிகன்
தன்மகட் காணான் தனித்துயர் எய்தித்
தென்னங் குமரி நன்னீர் ஆட
நண்ணும் மாக்களொடு நாடினன் பெயர்வோன்
கடலொடு கலக்கும் காவிரி மூழ்கிய
வடமொழி யாளரொடு வருவோன் புகாரில்
பிழைமணப் பட்டஅப் பேதையைக் கண்டனன்:
மழையெனக் கண்ணீர் வடித்துத் தன்மகள்
உற்ற இடும்பை முற்ற வுணர்ந்து
பெற்றவள் நிலைக்குப் பெரிதும் வருந்தித்
தன்பதி செல்லின் வன்பழி நேரும்
என்பதால் ஆங்கண் இருந்தனன் அவளைப்
பிரியா னாகிப் பிச்சையாற் புரந்து
திரிவோன் ஒருநாள் தெருவரு புனிற்றுப்
பாய்ந்திட ஆங்கே சாய்ந்தனன்; பின்னர்ச்
சமணப் பள்ளியைச் சார்ந்து ''நும்சரண்!
இவணெமக் கொருதுணை யில்லேம்'' என்றனன்;
''புரிநூன் மார்பிற் பொலிவீர்! நீவிர்
வேள்வி யியற்றி வேத நெறிப்படூஉம்
ஆள்வினை யுடையீர் ஆதலின் ஈண்டுப்
புகுந்தக வில்லீர்! மேலும் புன்மைகள்
நுழைந்திடின் எம்நெறி பிழையுறும்'' என்று
கையுதிர்த் தொதுக்கினர்; கலங்கிய முதுமகன்
வெய்துயிர்த் தாங்கோர் வேற்றிடன் குறுகினன்
பாங்குறும் புத்தப் பள்ளியைக் காணலும்
ஈங்குறல் சாலவும் ஏற்புடைத் தாகும்
என்றுளங் கொண்டோன் மகளொடும் புக்குப்
''பெரியீர்! நும்சரண்! பேதுற வுற்றேம்
அருளீர்! அருளீர்! ஐயகோ அருளீர்!''
என்றரற் றுரைக்க இரங்கிய சாரணர்
''நின்றுயர் துடைத்தோம் நீள்துய ருற்று
நின்ற மகளொடும் வைகுதி'' என்றனர்
தப்பிய தன்மகள் சுதமதி தன்னொடும்
புத்தப் பள்ளியில் புகலிடம் பெற்றனன்.

## பாலும் பிரையும்

புகுந்த மறைநூல் புகல்நெறி யாளர்க்கு
நெகிழ்ந்திடங் கொடாஅ நிலையின தாதலின்
சமணக் கொள்கை தகவிழந் தழியப்
பகையாய் மாறிப் பழிவாங் கினரே:
புத்தமோ அவர்க்குச் சித்தம் நெகிழ்ந்தது
கருணை ஒன்றே கருப்பொரு ளாதலின்
முரணிய கொள்கை நெறியினர் தமக்கும்
புகலிடம் தந்தது. புக்கவர் நண்பாய்
நகுமுக முடையராய் நன்கனம் பழகினர்
காய்ச்சிய பாலிற் கலந்தது பிரையே
புத்தமுந் திரிந்தது பூத்தநன் னிலத்தே!

★




நாடகம் உயர்எண்ணத் தாமரைகள் பூத்திடும் தடாகம், இயல்: இசை; கூத்து — என தமிழினத்தின் வாழ்க்கையிலே ஒன்றி விட்ட அற்புதக் கலவை!

அது அன்று முதல் இன்று வரை கலையின் ஒரு கிளையாகவே இருந்து வருகிறது, நம் தாயகத்தில்!

காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்கின்றனர் அந்தக் கூத்துக் கலையை!

அந்தக் கண்ணாடியைச் சற்றுத் திருப்பி, மேலை நாட்டிலே அதன் வளர்ச்சியைப் பார்த்தால் கிரேக்கம்தான் ஐரோப்பியக் கூத்துக் கலையின் தொட்டிலாக இருப்பதைக் காணலாம்.

கூத்து திடீரென மேடையிலே உதயமாகி; மக்கள் இதயத்திலே மகிழ்ச்சியைப் பரப்புவதையே நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை.

நாட்டியம் போல் கலா உணர்ச்சி கொண்ட சக்கரவர்த்திகளின் சபா மண்டபத்திலோ; அழகிகளின் அந்தப்புரத்திலோ உருவெடுக்க வில்லை அது!

கோவிலிலேதான் அது பிறந்திருக்கிறது, கிரேக்கத்தில்!

பக்கூஸ் என்பது அங்கே திராட்சை ரசத்தின் கடவுள்!

அந்தக் கடவுளுக்கு ஆண்டு தோறும் விழாக்கள் கொண்டாடுவர்.

அந்த விழாவிலே பல திறப்பட்ட மக்களும் ஒன்றுகூடி ஆண்டவன் சன்னிதானத்திலே கூட்டமாகப் பாட்டிசைத்து மகிழ்வர். இந்தக் 'கோரஸ்' கீதம்தான் ஐரோப்பியக்கூத்தின் தலைப் பிள்ளையாகும்!

அந்த இசை வரிகளிலே தேவதைகளைப் பற்றிய கதைகள் கலந்திருக்கும். பாடுபவர்கள் சம்பவத்திற்குத் தகுந்தாற்போல் இனிமையாகவோ; அல்லது சோகமாகவோ பாடுவர்.

அரிஸ்டாட்டில் வரையறுத்த இலக்கணப்படி நாடக நிகழ்ச்சி முழுவதும் ஒரே நாளில் நடைபெறுவதாகவே இருந்தது.

நாளடைவிலே கூட்டிசையை (கோரஸ்)மையமாகக்கொண்டு எழுந்த நாடகத்திலே 'புதுமைகள்' தோன்றலாயின.

திஸ்பிஸ் என்பவன் முதல் தடவையாக கூட்டிசை எழுப்புபவர்களோடு ஒரு நடிகனையும் சேர்த்தான்.

பிறகு அஸ்சிலஸ் என்பான் கூட்டிசையோடு இரண்டு நடிகர்களை மேடைக்குக் கொண்டு வந்தான். அதுமட்டுமின்றி அவன் நடிகர்களுக்கு முகமூடிகளையும்; கதாநாயகனுக்குரிய நீண்ட 'கவுன்'களையும் அணிவித்தான்.

இதுவரை இருந்த இரண்டு நடிகர்களோடு மூன்றாவது நடிகனையும் சேர்த்த பெருமை சோபக்கில்ஸ் என்பானுக்குத் தான் உண்டு!



இங்கிலாந்தில் மாதா கோவில் நாடகத்தை அழித்தது; அதன் மறு பிறப்பிற்கும் அதுவே காரணமாக அமைந்தது.

—இவ்வாறு கோரஸ் இசை வாணர்கள் சுமார் ஐம்பது பேர் இருப்பர்.

பின்னர் காலப்போக்கிலே இவர்கள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு; நடிகர்களுடன் சேர்ந்து ஏதாவதொரு கட்டுக் கதையை விவரித்தனர்!

இவ்விதம் மலர்ந்த கிரேக்க நாடகத்தின் நோக்கம் என்னவென்று நினைக்கிறீர்கள்?

மக்களுக்கு பொழுது போக்கு தருவதோ; அல்லது அவர்களை அறவழிப் படுத்துவதோ அல்ல!

ஆண்டவனுக்குப் பூஜை, நைவேதனை செய்வதைப் போலவே தேவ சன்னிதானத்தில் நாடகமாடுவதையும் கடவுளுக்குச் செய்யப்படும் ஒரு கைங்கரியமாகவே கருதினர்.

''பரமசிவன் அருள்புரிய
வந்து வந்து போவார்!
பதிவிரதைக் கின்னல் வரும்
பழையபடி தீரும்!
சிரமமொடு தாளமெண்ணிப்
போட்டியிலே பாட்டுச்
சிலபாடி மிருதங்கம்
ஆவர்த்தம் தந்து
வரும்காதல்! அவ்விதமே
துன்பம் வரும், போகும்!
மகரிஷிகள் கோயில்குளம்—
இவைகள் கதாசாரம்!...''

—என்று கவிதை படிக்கிறோமல்லவா?

தமிழகத்து நாடகங்களிலும், சினிமாக்களிலும் நாம் அவ்வப்போது கண்டுவரும் இந்த 'விசித்திரங்கள்'தான் இந்தப்பழங்கால கிரேக்க நாடகத்திலும் காணப்பட்டன.

கதாநாயகனுக்கு இன்னல் வரும்; அவன் உடனே இங்கு கைலாசத்துக்கு ஒப்பான ஒலிம்பஸ் மலைக்கு செய்தி

கிரேக்க நாடகம்!





மாதா கோவிலில் துவங்கிய ஆங்கில நாடகம்!





நகரும் நாடக மேடை!



எலிசபெத்ராணி காலத்து 'குளோப்' தியேட்டர்!


எலிசபெத் காலத்து நாடக
-மேடை! (உட்புறம்)


18 வது நூற்றாண்டு நாடக
அரங்கம்!


௨௦-ம் நூற்றாண்டில் நாடகம்!
செல்லப்பன்

யனுப்ப; உடனே சியஸ்போன்ற 'பரம சிவனுர்கள்' ஓடி வந்து அபயம் அளிப்பர் அவனுக்கு!

இதுபோன்ற நாடகங்களை ராஜமாணிக்கம் பிள்ளை நடிக்க இருபதாம் நூற்ருண்டிலே அதை நாம் பார்க்கிருேம்,

இதையேதான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கிரேக்கர்கள் பார்த்தனர்!

திருப்பி சொல்ல வேண்டுமானுல் கிருஸ்து பிறப்பதற்கு முன்பு கிரேக்கத்திலே நடந்த நாடகச் சம்பவங்களைத்தான் இன்றைய தமிழகம் பார்க்க வேண்டிய அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்கிறது!

—கிரேக்கர்களிடத்திலே இப்படிப் பல வளர்ச்சிப் பருவங்களைப் பெற்றிருந்த நாடகம் பின் ரோமானியர்கள் கைக்கு மாறியது!

ரோமானியர்கள் புதுவித நாடகங்களை நடத்தவில்லை. அவர்கள் பெரும்பாலும் கிரேக்க நாடகங்களையே தங்கள் நாட்டிற்கேற்றுற்போல் மாற்றிக் கொண்டு நடத்திக் காட்டினர்.

ஆனுல் இதுவரையிருந்து வந்த கதையமைப்பிலே மகத்தான புரட்சி செய்தான் செனக்கா என்னும் நாடகப் புலவன்.

கிரேக்க நாடகத்திலே வரும் பாத்திரங்களுக்கு கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும்; கவலைகள் தோன்றும்.

ஆனுல் கதாபாத்திரங்களுக்கு தோன்றிய இன்னல்களுக்கும் இடையூறுகளுக்கும் காரணம் 'விதி' என்னும் மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்ட தெய்வீக சக்தியின் பலன்தான் என்று காட்டப்படும்!

கிரேக்கத்தின் அவலச் சுவை நாடகங்கள் ஒவ்வொன்றின் சம்பவங்களும் 'விதி என்னும் சக்தியால்தான் உந்தப்பட்டு வந்தன.

ஆனுல் செனக்கா இந்த முறையை மாற்றினுன்.

சொந்த விருப்பு வெறுப்புகள்; பழிவாங்கும் தன்மை— இவைகளையே நாடகச் சம்பவங்களை இழுத்துச் செல்லும் ஜீவனுக வைத்து நாடகங்களை வரைந்தான் அவன்.

செனக்காவிற்கு நாடகம் பார்ப்போரிடையே ஒரு பீதி உணர்ச்சியைக் கிளப்புவதென்ருல் மிகவும் பிரியம். இத்தகைய விளைவு கிட்டுவதற்கு கதாபாத்திரங்கள் சோகத்திலே மிதக்க வேண்டுமே!

அதற்கு 'பழிவாங்குதல்' போன்ற உணர்ச்சிப் பின்னணிகள் மட்டும் போதவில்லை.



செனக்கா 'விதி'யை அழித்தான்; ஆனுல் 'பிசாசுகளை'ப் புகுத்தினுன். ஷேக்ஸ்பியர் முதலானேர் அதையே கையாண்டனர்.

எனவே அவன் துன்பமிழைப்பதையே பிரதான நோக்கமாகக்கொண்ட பிசாசுகளையும் கதாபாத்திரங்களுள் ஒன்ருகச் சேர்த்துக்கொண்டான்.

நாடகத்தில் நுழைந்த இந்தப் பழிவாங்கும் உணர்ச்சியும்; பிசாசுகளும்தான் ஆங்கில நாடகத்துக்கு அடித்தளமிட்டன வென்ருல் அது மிகையாகாது. ஷேக்ஸ்பியர் உள்ளிட்ட எல்லா நாடகாசிரியர்களும் செனக்காவின் இந்தச் 'சீர்திருத்தத்தை' ஏற்றுக்கொண்டு: அவனுல் கவரப்பட்டு: அவன் கையாண்ட 'உத்தி'களைக் கொண்டே தங்கள் நாடகத்தையும் தீட்டினர்.

இருந்தும் நாடகக் கலை இங்கிலாந்திலே மலர்ந்து மணம் கமழ்வதற்கு பல நூற்ருண்டுகளைக் கடக்க வேண்டியிருந்தது.

ஆமாம்! கிரேக்கத்திலே (கிரேக்க) மதம் நாடகம் தவழ்ந்து விளையாடுவதற்கு மடிவிரித்தது.

ஆனுல் ஆங்கில நாட்டிலோ (கிருத்துவ) மதம் நாடகக் குழந்தையின் நாவிலே நஞ்சு தடவ முன்வந்தது.

ஏனெனில் பைபிளில் அமைந்திருந்த சில வாக்கியங்கள் கூத்துக் கலைக்குக் குழிபறிப்பதாய் இருந்தன.

"ஒரு பெண் ஆணுக்குரிய ஆடைகளை அணியக்கூடாது. அதுபோலவே ஒரு ஆண் மகனும் பெண்ணுக்குரிய உடைகளை உடுத்தக்கூடாது. ஏனென்ருல் அப்படிச் செய்பவர்கள் ஆண்டவனின் வெறுப்புக்கு ஆளாகிருர்கள்."

—இந்த வாசகம்தான் இங்கிலாந்திலே பல நூற்ருண்டுகள் நாடகம் மேடையேறுவதற்குத் தடையாக அமைந்தது.

கிறித்துவத்திற்குப் பலம் பெருகப் பெருக கூத்துக் கலை குப்புறத் தள்ளப்பட்டது.

உதாரணமாக; ஆரும் நூற்ருண்டு முதல் பத்தாம் நூற்ருண்டுவரை ஆங்கில நாட்டிலே எந்த நாடகமும் நடைபெற்றதாக ஆதாரமே கிடையாது.

இருந்தும் மக்களது மனதிலே இயற்கையாக இருந்துவரும் நாடக உணர்ச்சியை மதத்தால் தடை செய்ய முடியவில்லை!

ஆங்காங்கே 'நாடோடி நடிகர்கள்' தோன்றினர். கிறித்துவம் அவர்களைச் சமுதாய விரோதிகள் என்று பிரகடனப் படுத்தியும் கூட; இவர்கள் அங்குமிங்கும் நாடோடிகளாவேத் திரிந்து பொதுமக்களுக்கு கதை சொல்லி வந்தனர்.

இவர்களில் சிலர் காலப் போக்கில் போர்களைப் பற்றி

யும்; பிரபுக்களைப் பற்றியும் பாடல் இயற்றவே அவர்களின் ஆதரவு இவர்களுக்குக் கிடைப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டது.

அதே நேரம் மனித இருதயத்தின் அடித்தளத்தில் இருக்கும் கலை உணர்ச்சி பொது மக்களிடையே அவ்வப்போது தலை தூக்கலாயிற்று அறுவடைமுடிவு போன்ற கொண்டாட்டமான நேரங்களில் அவர்களால் சும்மாயிருக்க முடியவில்லை; அப்போதெல்லாம் கூட்டமாகச் சேர்ந்து ஆடியும் பாடியும் விழாக் கோலம் புகுந்தனர் மக்கள்!

இந்த விழா உணர்ச்சி நாளடைவில் கிராமவாசிகளை மட்டுமின்றி, மாதாகோவில் பாதிரிமார்களையும் பற்றிக் கொள்ள ஆரம்பித்தது.

கிறித்துவ மதத்திலும் விழாக்கள் உண்டல்லவா?

அப்போதெல்லாம் நாடகத்தின் நிழல் மாதா கோவிலிலே படர ஆரம்பித்தது.

கிருஸ்துவின் பிறப்பு போன்ற விசேஷ நாட்களிலே மாதா கோவில் விழாக்கோலம் பூண்டது.

அப்போது பலர் இரு பிரிவாகப் பிரிந்து நின்று பாட்டிசைப்பர்.

அப்போது ஒரு பிரிவினர், பாடல் வடிவிலே, "ஏ, கிருஸ்துவின் சிஷ்யர்களே! நீங்கள் அந்த மேடையில் எதைக் காணுகிறீர்கள்?" என்று கேட்பர்.

அதற்கு இன்னொரு பிரிவினர்: "சிலுவையில் அறையப்பட்ட நாசரத்தின் இயேசுவைப் பார்க்கிறோம்!" என்று இசை அமைத்து பதில் சொல்வர்!

இதுபோன்ற சம்பவங்கள் இங்கிலாந்திலே நாடக வரலாறு அமைக்கப் பெரிதும் உதவி புரிந்தன.

கிருஸ்துமஸ் போன்ற பெரு நாட்களிலே மட்டும் நடைபெற்று வந்த இந்த நிகழ்ச்சிகள், பொது மக்களிடையே ஆதரவு பெருகப் பெருக இதர நாட்களிலும் நடத்தப்பட்டன.

திரும்பத் திரும்ப ஒரே நிகழ்ச்சியைப் பார்ப்பதற்கு அலுப்புத் தட்டியவுடன் பாதிரிமார்கள் பைபிளில் வரும் இதர கதைகளை இந்த முறையில் நடத்துவதற்கும் அனுமதி தந்தனர்.

ஏசுநாதருக்குப் பகைவர்கள் முள்ளினால் முடிசெய்து சூட்டுவதையும்; அவர் கழுத்திலே சிலுவையை ஏற்றி வைத்துச் சவுக்கு நுனியால் அடித்து சித்திரவதைசெய்வதையும்; இறுதியில் அவர் உயிர் துறப்பதையும் காட்சி வடிவில் காட்டினர்!

புதுப்புது சம்பவங்கள் சேர்க்கப்பட்டதும் பொது மக்கள் அதைக் கண்டு களிக்கக் கூட்டம் கூட்டமாக மாதாகோவிலுக்கு வந்தனர்.

விளைவு?

மாதாகோவிலில் அந்த மக்கள் திரளை சமாளிப்பதற்கு இடமில்லாமற் போய்விட்டது.

பலன்?

நாடகம் சிறிய மாதாகோவிலிலிருந்து பெரிய சந்தைத் திடலுக்குக் குடியேறியது.

படிப்படியாக மக்களுக்கு பக்தி ரசத்தின் மீதிருந்த பற்றுதல் நீங்கி; காட்சி ஜோடனைகளைக் கவனிக்க ஆரம்பித்தனர்.

பிறகு நாடக அரங்கங்கள் சர்வ சாதாரணமாக உருவாகித் தோன்றின.

இங்கு பாய்ஸ் கம்பெனிகள் நாடக வளர்ச்சிக்கு எவ்வளவு பணி புரிந்திருக்கின்றன? அது போலவே அங்கும் நாடகக் கம்பெனிகளில் சிறுவர்கள் பெரிதும் கலந்து கொண்டனர்.

சலாதியல் பேவி என்னும் பிரபல நாடகக் கம்பெனிச் சிறுவன் மறைந்தபோது பென் ஜான்சன் என்னும் நாடகாசிரியன் ஒரு அழகிய கவிதையே தீட்டியிருக்கிறான்!

நாடகத்துறை இவ்வளவு வளர்ந்து வந்தபோதும்கூட பரிசுத்த மதவாதிகள் அதை எதிர்த்துத் தாக்குதல் நடத்திய வண்ணமே இருந்தனர்.

இந்த நேரத்திலேதான் எலிசபெத் அரசியானாள். அவள் பட்டத்துக்கு வந்தபோது அவளுக்கு வயது இருபத்து ஐந்து தான். எனவே வாலிபம் அவளை ஒரு கலா ரசிகையாக வைத்திருந்தது. நாடகத்திற்கு அவளது முழு ஆதரவும் இருந்தது.

இதுபோன்ற பின்னணியில் தான் ஷேக்ஸ்பியர் உலகப் பெரும் இலக்கியங்களான பல நாடகங்களை இயற்றியதுடன்; நாடகத்திலும் நடித்து வந்தார்.

இவ்விதம் முன்னேற்றம் கண்ட நாடகக் கலை முதலாம் சார்லஸ் மன்னன் காலத்தில் இன்னும் வளர்ந்து பின் 1634-ம் ஆண்டில் அவனுடைய ராணியே பிளாக் பிரயர்ஸ்சில் நடைபெற்ற ஒரு நாடகத்தைச் சென்று பார்க்குமளவுக்கு அரண்மனை வாசிகளின் ஆதரவைப் பெற்றது.

இப்படியெல்லாம் மதவாதிகளின் எதிர்ப்பிடைய வளர்ந்த நாடகம் இருபதாம் நூற்றுண்டை எட்டிப் பிடித்த போதுதான் அதில் மகத்தான தொரு மாற்றம் ஏற்பட்டது!

நாடகம் கதை சொல்வதற்காகத்தான்; மக்களுக்கு பொழுதுபோக்கு சாதனமாகத் தான்—என்று இருந்தபோது புவிப் பெரியார் பெர்னுட்ஷா நாடக மேடை மீது படையெடுத்தார்.

அவரது நாடகம் ஒவ்வொன்றும் சோஷலிசக் கருத்துக்களின் பிரச்சாரமாகவே இருந்தது! இன்னும் கூறவேண்டுமானால் நாடகத்தை அரும் பெரும் பிரச்சார சாதனமாகப் பயன்படுத்தி வெற்றி பெற்ற முதல் நாடகாசிரியர் ஷா என்று தான் கூறவேண்டும்.

அவர் காட்டிய வழியில் இன்று தென்னகத்து விடுதலைப் பட்டாளமாம் திராவிட முன்னேற்றக் கழகமும் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையிலே நாடகத்தைப் பிரச்சாரக் கருவிகளில் ஒன்றாக்கி; அறிவுப் பணியாற்றி வருகிறது!

●

# அந்த நாளும் வந்திடாதோ?

"அடித்துப்பிடித்துக் கொண்டுசாகிறார்கள் மன்னா! அமர்க்களம் நடைபெறுகிறது, அங்கே. காலிழந்தோரும், கரமிழந்தோரும், உறுப்பிழந்தோரும், உயிர் துறந்தோருமாக அல்லாடுவோர் தொகை ஏராளம்..."

"அண்ணன் தம்பிகள்தானே, எதற்காக இப்படிப்போரிட்டுக் கொண்டு மாள்கின்றனர்?"

"அண்ணனுக்காக அரச பதவியைத் துறக்கும் இளங்கோவடிகள் ஏது வேந்தே அங்கே? வடநாடன்றோ! வஞ்சகமும், சூதும் களவும் தானே சொந்தம் அவர்களுக்கு..."

"ஐயோ, பாபம்! அவர்களை நினைத்து வருந்துகிறேன். இப்படிப் போரிடும்போது, அவர்களுக்கு வேண்டிய உணவு எங்கிருந்து கிடைக்கும்?"

* * * *

தூதுவன் திகைத்தான்! வடக்கே நடைபெறும் போரினைப்பற்றிக் கூறியதும், மன்னனின் மனம் எங்கோ போகிறதே என்று நினைத்தான். "வடக்கேதானே! எப்படியோ கெடட்டும்!" என்று கருதவில்லை, மன்னன். இருதரப்பாரும் போரிடுகின்றனர். அப்படிப் போரிடும் போது, வீரர்களுக்குவேண்டிய உணவு கிடைக்க வேண்டும். அது இல்லாமல் அவர்கள் அல்லற்படுவதாகத் தெரிகிறது! ஒரு தரப்புப் படைகள் மட்டுமல்ல, இருதரப்பு வீரருமே இந்த நெருக்கடிக்கு ஆளாகித் தவிப்பதாகத் தெரிகிறது. வடக்கேயிருந்தாலென்ன, தெற்கே யிருந்தாலென்ன, உயிர் ஒன்றுதானே! அனைவருக்கும் ஒரு வேளை உணவு இல்லாவிடில் அந்த உயிர் என்ன பாடு படும்! அதுவும் போர்க்களத்திலே, காயங்களேந்தியும், குருதி கொட்டியும் அல்லலுறும் அவர்களுக்கு உணவு எவ்வளவு இன்றியமையாதது?—இதை எண்ணினான் வேந்தன். உணவு ஏது? என்று கேட்டான். அதற்கும் கஷ்டம்தான் என்கிற தகவல் கிடைத்ததும் அரசர்க்கரசனான அவன் உள்ளம் துடித்தது. "தூதுவனே! போராடும் வீரருக்கு உணவு படைக்கும் பொறுப்பு நம்முடையதாயிருக்கட்டும். சேர நாட்டின் நெல் மணிகள் செங்குருதி சிந்துவோரின் பசியைத் தீர்க்கப் பயன்படட்டும். சீக்கிரம், வடக்கே அனுப்பி வைக்க வழி செய்யச் சொல்," என்றான். தூதுவனுக்குத்திகைப்பு அதிக மாயிற்று! சொக்கட்டான் ஆடி அரசை மட்டுமல்ல அன்புக் குரியாளையும் தோற்றனர் பாண்டவர். அவர்களுக்கு எதிரியாக அமைந்தனர் கௌரவர். இவர்கட்கு உணவு அனுப்பப் போவதாகச் சொல்கிறாரே அரசர், என்கிற சிந்தனையுடன், "மன்னா! தங்களது பேருதவியை யாருக்கு அளிக்கப் போகிறீர்கள்?



பாண்டவருக்கா! அன்றி கௌரவருக்கா !!", என்று கேட்டான்.

"இதென்ன கேள்வி! ஏன் உனக்கு இந்த ஐயம் எழும்பிற்று...?"

"இல்லை! போரில் உதவி புரிவதென்றால் யாராவது ஒருவருக்குத்தானே உதவி புரிவது வழக்கம். அதனால் கேட்டேன், தங்கள் உதவி பெறும் பாக்கியம் பெறப்போவது பாண்டவர்களா! துரியோதனாதியர்களா !!"

"மனிதர்கள் !" என்றான், வேந்தன் இரத்னச் சுருக்கமாக. தூதுவனுக்கு விளங்கவில்லை. சேரலாதன் செப்பினான், "இருதரப்புப்படைகளுக்கும்தான்! உணவின்றிவாடும், இருதரப்பு வீரர்களுக்கும், அவர் தம் நாட்டினருக்கும் சேர நாட்டுச் செந்நெல் பயன் படட்டும். பசியால் அவதியுறுவோர் யாவராயினும், அதைக்கண்டும் வாளாயிருத்தல் நன்றோ? எவரானாலென்ன! இங்கிருந்து அனுப்பி உதவிபுரிவோம்."

* * * *

மாவேந்தன் சேரலாதனுக்கும், அவனது அவைக்களத்துத் தூதுவனுக்கும் இதுபோல உரையாடல் நடந்ததோ, என்னவோ, ஆனால் அவன் வடநாட்டினருக்கு 'சோறு' அளித்தான் என்பது மட்டும் உண்மை. இதனைப் புறநானூற்றில், முரஞ்சியூர் முடிநாகராயர் என்பார் குறிப்பிட்டிருக்கிறார்,

...அலங்குளைப் புரவி
ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட
பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும்
பொருது களத்தொழியப்
பெருஞ் சோற்றுமிகுபதம்
வரையாது கொடுத்தோய்...

ஆகா! எண்ணும்போதே எவ்வளவு இனிக்கிறது கவிதை? வரையாது கொடுத்தானாம் வேந்தன்! வடநாடு, எனினும் அதற்குப் பெரிய அளவில் உணவுப்பண்டம் வழங்குகிற அளவுக்கு வளம் பெற்று இருந்தது சேரலாதன் நாடு. அங்ஙனம் சோறு அளித்ததால் அவனுக்குப்பெருஞ்சோற்று உதியன் நெடுஞ் சேரலாதன் எனும் பெயரே அமைந்தது! புறநானூறு செப்பும் புகழ் வடிக்கும் அந்தஅழகுச் செய்யுளை, ஒரு முறை படியுங்கள்:

மண் திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும்
என்றாங்கு
ஐம் பெரும் பூதத்து
இயற்கைபோல...

புரிகிறதா? நிலம், வானம், காற்று, தீ, நீர் எனும் ஐம்பெரும் இயற்கைப் பொருள்களைப் போல,

போற்றார்ப் பொறுத்தலும்,
சூழ்ச்சியது அகலமும்
வலியும் தேறலும்
அளியும் உடையோய்!

தெளிவாக விளங்குமே! ஐம்பொருள்களின் குணநலன்கள் அத்தனையும் உடையவனாம், வேந்தன்—பொறுமைக்குப் பூமாதாவாம், மாற்றாருக்கு எட்ட இயலாதவனாம், சூறுவளியையொக்கும் சூரனாம், காரியமுடிப்பதிலே சுட்டெரிக்கும் தீயாம், அளித்தலில் நீர் போன்றவனாம்—சேரலாதன். ஆகா, எவ்வளவு இனிமையும் இயற்கையும் குழைந்தோடுகிறது, வர்ணனையில்! இப்படிப்பட்ட குண நலன்களைக் கொண்ட கோமானுடைய நாட்டுக்கு எல்லை எது தெரியுமா?

நின் கடற் பிறந்த
ஞாயிறு பெயர்த்தும்நின்



வெண்டலைப்புணரி
குடக்கடற் குளிக்கும்
யாணர் வைப்பின்
நன்னாட்டுப் பொருந,
வான வரம்பனை
நீயோ பெரும !

அவனுடைய கடலிலேசூரியன் உதிக்கிறதாம்! அவனுடைய கடலிலே சூரியன் மறைகிறதாம் !! கீழ்த்திசையிலும் கடலே, அவன் நாட்டுக்கு எல்லை ; மேற்றிசைக்கும் அதுதான் எல்லை. இடையிடைப்பட்டதாம் அவனது நாடு. அதனை யாளும் அவனே, வானவரம்பனும் ! அதாவது வானமளாவும் பெருமை கொண்டவனும் !! அப்படிப்பட்ட தமிழ் வேந்தன்,

அலங் குளைப்புரவி
ஐவரோடு சினைஇ
நிலந் தலைக்கொண்ட
பொலம்பூந் தும்பை
ஈரைம்பதின் மரும்
பொருதுகளத்து ஒழியப்
பெருஞ்சோற்று மிகுபதம்
வரையாது கொடுத்தோய்,
பாஅல் புளிப்பினும்
பகல் இருளினும்
நாஅல் வேத
நெறிதிரியினும்
திரியாச் சுற்றமொடு
முழுதுகேண் விளங்கி
நடுக்கின்றி நிலீஇயரோ
அத்தை ! அடுக்கத்துச்
சிறுதலை நவ்விப்
பெருங்கண் மாப்பிணை
அந்தி அந்தணர்
அருங்கடன் இறுக்கும்
முத்தீ விளக்கில்
துஞ்சும்,
பொற்கோட்டு இமயமும்
பொதியமும் போன்றே.

பொருளழகு புரியப் புலவரை நாடுங்கள்—கருத்தழகை மட்டுமேகவனிக்க வேண்டுகிறேன். பால் புளிப்பினும் ! பகல் இருளினும் !! அவனுடைய புகழும் சிறப்பும் மட்டும் மாறாதென் கிறார் புலவர். அவனுடைய புகழும் சிறப்பும் பொற் கோட்டு இமயமும் பொதியமும் போன்றதாம் !!

கண்கள் குளமாகின்றன—பால் புளிக்கினும் பகல் இருளினும் அழியாததாம் புகழ்—பொற் கோட்டு இமயம் போன்றதாம் பழந்தமிழ் வேந்தனின் சிறப்பு—அந்த வேந்தனே வடவருக்கே உணவளித்தான்—அதுவும் பஞ்ச பாண்டவர் காலத்தில் !! எண்ணிடவே இதயஞ்சிலிர்க்கிறது நமக்கு—பால் புளிக்குமோ ? பகலில் இரவு வருமோ ? உன் புகழும் சாயுமோ ? என்றார் புலவர். பால் புளித்தது ! பகலில் இரவு வந்தது! நாமும்பஞ்சைகளாய்வாழுகிறோம்,பழம்பெருமை சார்ந்த] திருவிடத்தில். எப்போதோ படித்த இந்தக் கவிதைகள், இதயத்தை விட்டு மறையாததாலும், இந்தப் பெருமைகள் எண்ணத்தோடு உறைந்து கிடப்பதாலும், ''அந்த நாளும் வந்திடாதோ !'' என்று அனுதினமும் கூவுகிறோம், நாட்டில். காமராஜர்களோ, நெற்றிக் கண்ணில்லையே எரிக்கஎன்றெண்ணுகின்றனர் ! ஏடா, மூடா, ஏதடா தமிழ் நாடு எனவும் கேட்கின்றனர் !!

●●●

## பர்மாவிலே ஒரு 'தாஜ்மஹால்'!



அழியாத காதலின் சின்னமாக எழுந்ததுதான் தாஜ்மகால் மாளிகை! அது இன்று உலகப் பேரதிசயங்களில் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது!

இதுபோன்றே ஒரு பெண்ணின் நினைவாக நிறுவப்பட்ட மாளிகை வேறொன்றும் இருக்கிறது.

பர்மாவிலே போதப்பாயா என்னும் அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவனது அந்தப்புர அரசிகளிலே ஒருத்திக்குக் கடுமையான அம்மை நோய் வந்து; அது அவளது சுந்தர வதனத்தையே பாழ்படுத்தி விட்டது!

அம்மை நோய் அவளை அவலட்சணமாக்கிய போதும் அவள்மீது தான் கொண்டிருந்த அன்பு மாறவில்லை என்பதைக் காட்டிக் கொள்ள விரும்பினான் மன்னன்.

எனவே 1783-ம் ஆண்டு அவன் பர்மியத் தலைநகரிலே ஒரு கோபுரம் 'பகோடா'' கட்டுவதற்கு உத்தரவிட்டான். அதன் கோபுரத்திலே தனது காதலியின் அம்மைத் தழும்புகளை நினைவுபடுத்தும் வகையிலே ஆயிரக் கணக்கான துவாரங்களை ஏற்படுத்தினான். ஒவ்வொரு துவாரத்திலும் ஒவ்வொரு புத்தர் சிலை நிர்மாணித்தான்.

அந்த அன்புச் சின்னம்தான் அமராபுரம் கோவில்என அழைக்கப்படுகிறது.

# கல்லூரி மாணவிகட்கு...



கல்வி அதிகாரிகளின் விதிப்படிப் பதினைன்கு வயது நிரம்பிய பெண்கள் தான் தமிழ் நாட்டிலும், ஆந்திர, கேரள, மைசூர் நாடுகளிலும் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க முடியும். முதல் வகுப்பு முடித்து மேலும் பட்டங்கள் பெற நினைத்தால் சுமார் இருபது வயது வரையிலும் படிப்பார்கள். ஒரு சிலர் பல ஆண்டுகள் தாமதித்துக் கல்லூரிகளில் சேருவதாலும், மேலும், ஆசிரியர், மருத்துவர், இஞ்சினியர், வழக்கறிஞர் முதலிய தொழில்களில் பயிற்சி பெற விரும்புவதாலும் இக்கல்லூரிப் பெண்களின் வயது இருபதுக்கும் மேற்பட்ட தாகிறது. ஆகவே கல்லூரி மாணவிகள்-வயதைப் பொறுத்த வரையில்—பதினைந்து முதல் முப்பத்துநான்கு வயது நிரம்பிய இந்தியப் பெண் தொகுதியைச் சேர்ந்தவர்கள் ஆகின்றனர். நம் தென்னாட்டின் மொத்த மக்கட் தொகை எட்டு கோடி. ஆண்களும் பெண்களும் இதில் சம தொகையினர்; பெண்கள் நாலு கோடி. இதில் மேற்கூறிய வயதுடையவர்கள் முப்பத்து மூன்று சதவிகிதம். அதாவது சுமார் 132 லட்சம். இவர்களில் கல்லூரி மாணவிகள் இரண்டு லட்சம்.

கல்லூரி மாணவிகள், எட்டு கோடியில் இரண்டு லட்சம் தான். மக்கள் தொகுதியில் கால் சத விகிதம் தான். ஆனால் அவர்களைப் பற்றி எண்ணுபவர்கள். அவர்களுடைய உடை அலங்காரம், சிகை அலங்கார மாற்றங்கள், நடைபாவங்கள், சினிமா நடிகைகளும் ஆச்சரியப்படக்கூடிய தோற்றம் முதலியவற்றை மட்டும் கண்டு இவர்கள் புது உலகப் பெண்கள் தான் என்று நம்பிவிடும் இளைஞர்களின் எண்ணிக்கை மிக அதிகம். பெற்ருேர்கள் தங்கள் படித்த பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்க இயலாது திணறுவதும். முதியவர்கள் — மணமான பின்னும் புகுந்த வீட்டில் வாழாமல் திரும்பி வந்த பெண்களைக் காப்பற்ற அல்லற்படுவதும், சேய்கள்—'படித்த' தாய்க்குப் பிறந்து, தாயன்பையே கண்டறியாது வாழ்வதும், பாமர கிராமப் பெண்கள் தங்களுக்குப் படித்த பெண்கள் ஒரு வகையிலும் வழிகாட்டிகள் அல்ல என்று நம்புவதும், நாம் அன்ருடும் காணும் நிகழ்ச்சிகள்.

சுமார் முப்பது ஆண்டுகட்கு முன்பு, கல்லூரிகளில் படித்த ஆண்கள் தொகை மிகவும் குறைவு அப்பொழுது பட்டதாரிகள் தங்களைப் புதுரக மனிதர்களாக எண்ணினர். அவர்கள் ஆங்கிலேயருக்கு வாரிசுகள் என்றும் கருதினர். அவர்களுக்கு நம் தமிழ்ப் பண்பு முற்றும் இல்லை என்றே சொல்லி விடலாம். ஆனால் தற்பொழுது, ஆண் பட்டதாரிகள் லட்சக்கணக்கில் பெருகி விட்டதாலும், இவர்களில் பெரும்பாலோர் வேலை இல்லாத்திண்டாட்டத்தில் அவதியுறுவதாலும். தங்களுடைய உண்மையான சமுதாய நிலைமை என்ன என்பதைத் தெரிந்து கெள்ள ஆரம்பித்து விட்டார்கள். பாவம், பெண் பட்டதாரிகளோ இப்பொழுது தான், ஆண் பட்டதாரிகள் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலையை அடைந்து இருக்கிருர்கள். அவர்கள் எண்ணிக்கையில் குறைவாகவும், உத்தியோக தனிச் சலுகைகளைப் பெற்று இருப்பதாலும் தங்கள் உண்மைச் சமுதாய நிலை என்ன என்பதை எண்ணக்கூட நேரமின்றி இருக்கின்றனர்.

படித்த பெண்கள் தாங்கள் பிறந்த குடும்பத்திலும், புகுந்த குடும்பத்திலும் சமுதாயத் துறைகளிலும் இப்பொழுது மற்ற பெண்களை விடச்சிறப்பாக இருக்கிருர்கள் என்று சொல்லிவிட முடியாது. எனக்குக் கிடைத்த அறுநூறுக்கு மேற்பட்ட, பட்டதாரிகளின் திருமண அழைப்புகளில் பட்டம் பெற்ற பெண்களின் பெயர்கள் இருபத்து ஏழு அழைப்புகளில் தான் இருந்தன. இவைகளிலும் நான்கு திருமணங்கள் பெற்ருேர்களின் விருப்பத்திற்கு மாருக நடந்தவை. ஆண் பட்டதாரிகள் தங்கள் மனைவியர் கல்லூரிகளிலே பயிலாதவர்களாக இருந்தாலே நலம் என்று எண்ணுகிருர்கள் போலும். காரணம் வேறு

பேராசிரியர்
வேதகிரி சண்முகசுந்தரம் எம்.ஏ.



ஏதுவாக இருந்தாலும் கல்
லூரிப் படிப்புதான் பெண்
களின் நல்ல அன்புக் குறை
வுக்கும், அடக்கம் இன்மைக்
கும், வெளி வேஷ ஏமாற்றத்
திற்கும், தமிழ்ப் பண்பின்
மைக்கும், குடும்ப நலனை
நாடாமைக்கும், அயல் நாட்
டுப் பாணியிலே கண் மூடித்
தனமாக நடப்பதற்கும் கார
ணம் என்று இவர்கள் கருது
கிறார்களோ, என்னவோ?

கல்லூரி, ஒரு செங்கல்
லையோ கூழாங்கல்லையோ
மாணிக்கமாக்கிவிட முடி
யாது. ஆனால் நல்ல பண்பு
டைய குடும்பத்தில் வளர்ந்த
இளைஞர்கள், கல்லூரிகளில்







தங்கள் அறிவைக் கூர்மையாக்
கிக் கொள்கிறார்கள். அவ்
விளைஞர்கள் தங்கள் கல்லூரி
களில் செலவிடும் இரண்டு
மூன்று ஆண்டுகளை எதிர் கால
வாழ்க்கைக்கு மிகப் பயனுள்ள
தாக்கிக் கொள்கிறார்கள். இந்த
நியதி பெண்களுக்கும் பொருந்
தும். மருத்துவக் கல்லூரியில்
படிப்பவர்கள் மருத்துவம் கற்
றுக்கொள்ள வேண்டுமேயன்றி
ஏனைய தொடர்பற்ற
பிறவற்றில் மனதைச் செலுத்
துவது எவ்வாறு பொருந்தும்?
எல்லா நாடுகளிலும் பெண்
கள் சாதாரணமாக, நடனம்,
இசை, ஓவியம், சமூகக்கலை,
பொருளாதாரம், அரசியல் முத
லிய கலைகளை விரும்பிப்
பயிலுகின்றனர். நம் நாட்
டிலோ, சில பெண்கள்
கல்லூரிகளில் கூடப்
பத்து, பன்னிரண்டு
மாணவிகளுக்குத்தான்
இசை கற்பிக்க முடியு
மென்ற நிலை இருக்கிறது.
கல்லூரிகளில் நடனமும்.
ஓவியமும் கற்பிக்கும்
ஆசிரியர்கள் மிகவும்
குறைவு. ஆங்கிலத்தை
யும் தாய் மொழியையும்,
பொருளியலையும் தான்,
தமிழ் நாட்டுக் கல்லூ
ரிப் பெண்கள் அதிகமாகப்
படிக்கின்றனர்.

எந்தக்கலையையும் சரிவரக்
கற்றால் மனம் பண்படையும்.
பல நூல்களைக்கற்றுத் தேர்ந்த
போழ்திலும் அவற்றின் பய
னாக நல்ல மனமுடையராகப்
பழகுதல், உள்ளன்பினால்
மாட்சிமை அடையாதார்க்கு
இல்லை. "பல நல்ல கற்றக்
கடைத்தும் மன நல்லர் ஆகுதல்
மாணார்க்கு அரிது"—(குறள்.)
சிறந்த தமிழ் நூல்களைக் கற்ற
விரிவுரையாளரானாலும் குடும்
பத்தில் மன மொத்து வாழும்
பண்பு இல்லையானால் அவர்கள்
உறவு "முகத்தின் இனிய
நகாஅ அகத்தின்னா வஞ்சரை
அஞ்சப்படும்." ஆங்கில நூற்
களைப் படிக்கும் பெண்கள்
பர்க், ரூசோ, ஸ்டீல், கோதே,
ஷேக்ஸ்பியர் முதலிய அறிஞர்
களைப் பற்றிக் கேள்விப்பட்
டிருப்பார்கள். அவர்கள்
பெண்களைப் பற்றிக் கூறுவ
தெல்லாம், மனத்தைச்
சென்ற இடத்தில் செல்ல
விடாமல், தீமையிலிருந்து
நீக்கி, காத்து, நன்மையான
தில் செல்ல விடுவதே அறி
வாகு மென்பது. "சென்ற
இடத்தால் செலவிடா தீதொ
ரீஇ நன்றின்பால் உய்ப்பத
றிவு" (குறள்) "எல்லோரு
டைய புகழ்ச்சியையும் விரும்பு
பவளல்ல பெண். ஒருவனு
டைய வாழ்வைப் பொலிவிப்ப
வள்தான்" என்று பர்க்கும்
"ஒரு பெண்ணின் பெருமை,
அவள் உலகத்தோர் அனைவரும்
போற்ற வேண்டும் என்பதற்
காக மட்டும் வாழாத பண்பு;
அவள் புகழ் தன் கணவனு
டைய நன் மதிப்பே; அவள்
சுகம் தன் குடும்பத்தினுடைய
குதூகலமே" என ரூசோவும்,
"பெண்கள் செய்ய வேண்டி
யவையாவும்—மகள், தங்கை,
தமக்கை, மனைவி, தாய், பாட்டி
ஆகியவர்களின் கடமைகளில்
அடங்கி இருக்கின்றது" என
ஸ்டீலும், "நல்ல பெண்ணின்
அன்பு, மக்களை நன்னடத்தை

யில் 'கொண்டு செல்லும் சாலை'' ; என' கோதேவும், இவர், களுக்கெல்லாம் மேலாக ''பெண்களே புத்தகங்கள், கலைகள், கலைக்கூடங்கள்—உலகத்தைப் படைத்துக் காத்து, வாழ வைப்பவர்கள்'' என ஷேக்ஸ்பியரும் கூறியவற்றைச் சரியாகக் கற்காத குறையினாலோ, என்னவோ, அவர்களுக்குப் புரியவில்லை போலும்!



நம் நாட்டில் கல்லூரிப் படிப்பு, பெண்களால் சில சமயங்களில் தவறாகப் பயன்படுத்தப் படுகின்றது. பொருளியலை முழுதும் கற்றறியாத ஒரு பெண்—இந்திய தேசிய







வருமானம் ஆண்டு தோறும் ஒன்பதாயிரம் கோடி ரூபாய்களாக இருக்க, தனக்கு ஒரு லட்சம் ரூபாயாவது கிடைக்கக் கூடாதா என்று ஏங்கவும், நம் நாட்டிலே மூன்று லட்சத்து முப்பத்து மூன்றாயிரம் கார்கள் இருக்க நம் வீட்டில் இரண்டு கார்களாவது இருக்கக்கூடாதா என்று நினைக்கவும், கம்பெனிகளிலே பதினோராயிரத்து இருநூற்றைம்பத்தோரு பேர்கள் மாதம் ஒன்றுக்கு ரூபாய் ஆயிரத்திற்கு மேல் சம்பாதிக்கும் பொழுது, என் கணவரும் ஏன் அப்படி சம்பாதிக்கக் கூடாது என்று கவலையடையவும், ஏதோ ஒரு வீட்டுக்காரன் பெரிய மெத்தை வீட்டிலே வாழ்வதைக் கண்டு, தனக்கும் நகரிலே ஒரு தனி வீடு வேண்டும் என்று எண்ணவும் கூடும். இவைகளில் எதுவும் கிடைக்காத காரணத்தால் தான் வாழ்க்கையிலே தோல்வியடைந்து விட்டதாகக் கருதக் கூடும். இது பொருளியல் கலையின் குற்றமல்ல. இந்தியாவில் ஒரு தனி மனிதனின் சராசரி மாத வருமானம் ரூ 26. ஏழ்மை மிகுந்த தென்னாட்டில் இந்தத் தொகை ரூ 22 தான். நம் நாட்டில் ஒரு லட்சம் மக்களில் 76 பேர்கள் தான் கார் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தம் கணவனுடைய அன்பைவிடக் காரை அதிகமாக விரும்பினால் அவர்கள் அமெரிக்காவில், பிறந்திருக்க வேண்டும். ஆனால் இனிமேல் அங்குச்சென்று தங்கிவிட முடியாது—நம்முடைய நிறம் அமெரிக்கர்கள் விரும்பக்கூடியதல்ல. சாதாரணமாக ஒரு கம்பெனி குமாஸ்தா மாதம் ஒன்றுக்கு ரூ 100-க்கு மேல் சம்பாதிக்க முடியாது. இந்த வருமானத்தை நம்பி வாழும் குடும்பங்களில் ஆறு பேர்களாவது இருக்கிறார்கள். இந்த உண்மைகளை அறிந்திருந்தால்—மறக்காதிருந்தால் எந்தப் பெண்ணும் பொருளாதாரத்தையோ, அரசியலையோ கல்லூரியில் படித்த காரணத்தால், குடும்ப வாழ்க்கைக்குப் பயனற்றவளாகி விடமாட்டாள்.

மற்றக்கலைகளை விடச் சமுதாயக் கலைகளில் படித்த பெண்கள் நல்ல பணி ஆற்ற முடியும். இத்துறைகளில் ஆராய்ச்சி செய்வதற்குப் பல ஆண்டுகளும் மிகுந்த பொறுமையும் தேவை. ஏழ்மையான ஒரு சமுதாயத்தையே ஒரு ஆராய்ச்சிக் கூடமாக அமைத்துக் கொள்ளலாம். பியட்ரிஸ் வெப், நோவல்ஸ், மேரி ஹாண்ட்லின், ஹிக்ஸ் போன்ற ஆங்கில அமெரிக்க சமுதாய ஆராய்ச்சியாளர்களும், மேடம் க்யூரி போன்ற விஞ்ஞான வல்லுநரும் தங்கள் குடும்ப வாழ்க்கையுடன் தான் சிறந்த பணி ஆற்றி இருக்கின்றனர். நம் நாட்டு உயர் கல்வி பெற்ற பெண்டிர் சரித்திரத்துறையிலும் பொருளியல் துறையிலும் ஆராய்ச்சியைக் குடும்பப் பொறுப்போடும் ஏன் ஏற்றுக் கொள்ளக்கூடாது?

ஆராய்ச்சியைவிடவும் பெண்களுக்கு மிகவும் முக்கியமானது

குடும்பப்பணிதான். நாட்டின் சிறப்பு குடும்பத்தின் சிறப்பைப் பொறுத்திருக்கிறது. பெண்மை இளம் வயதிலிருந்து முதுமை வரை அமைந்த ஒரு பெரும் ஆபரணம். அவர்கள் செய்யும்பணி சாசனங்களிலோ கல் வெட்டுக்களிலோ காண முடியாது—அவர்களுடைய 'சந்ததிகளின் வாழ்க்கையில், காண முடியும். ஒரு பெண் வயதாக வயதாக அன்புக்கடலாக மாற முடியும்; தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்வர். இவ்வுண்மையைக் கல்லூரிகளிலிருந்தோ புத்தக நிலையங்களிலிருந்தோ நன்றாகத் தெரிந்து கொள்ள முடியாது. தான் இறக்கும் தறுவாயிலும் ''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனுமது'' என்ற அறிவுரைக் கேற்பச் சொல்லும் செயலும் அமையும் எண்பத்து நான்கு வயது நிரம்பிய என் பாட்டி திருமதி வேதாசலம் லட்சுமியம்மாள் எழுபது ஆண்டுகள் செவ்வையாக கருங்குழி-மதுராந்தகத்தை அடுத்த கினார் கிராமத்திலே குடும்பப்பணி ஆற்றினார். அவர் சேவைசெய்த பண்பை அக்கிராமமே போற்றும். தன் மனமார வாழ்த்தித் தன் செலவில் மணம் செய்து வைத்த ஏழைக் குடும்பங்களின் எண்ணிக்கை அனேகம். அவர் கல்லூரியைக் கண்டதும் இல்லை; கேட்டதுமில்லை. ஆனால் அவைகளைப் பற்றி அதிகமாகத் தெரிந்த பட்டதாரிகள் பலர் இவருடைய புத்தி மதியைப் போற்றினர். இறுதியாக அவர் பேசிய சொற்கள், இளமையிலிருந்து முதுமை வரையிலும் மாறாது அமைந்த குடும்பப் பண்பை அறிவுறுத்துவதாக இருந்தன. தன்னைக் காணவந்த மருத்துவர் தொலை தூரத்திலுள்ள தன் ஊருக்குச் சுகமாகத் திரும்ப வேண்டுமென்பதே அவர் கவலையாக இருந்தது. ''இருந்தோம்பி இல் வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு'' என்ற குறளுக் கேற்ப அமைந்திருந்தது இவர் வாழ்க்கை.' இப்படிப்பட்ட சரித்திரத்தி லடங்காத நம் தமிழ் மூதாட்டியர் வாழ்க்கையே பல் கலைக் கழகங்களுக் கொப்பாகும். அவர்களுடைய ஆசிகள் கல்லூரிப் பட்டங்களை விடச் சிறப்பானவை ''பெண்களே புத்தகங்கள், கலைகள், கலைக் கூடங்கள்—உலகத்தைப் படைத்துக்காத்து வாழவைப்பவர்கள்—'' —ஷேக்ஸ்பியர்.



''ஆற்றைக் கடந்து நாம் அக்கரையைச் சேர்வதற்கு
ஏற்றதொரு பாலம் இதோபாராய் என்அண்ணா!''

—புகைப் படம்: பி. குருமூர்த்தி



# தியாக மாளிகை

அந்த இன்பமான நிலவொளியில் தாஜ் மகாலில் நின்ற பொழுது, மொகலாய சாம்ராஜ்யத்திலேயே, ஆடம்பரமும் ஆணவமும் ஆட்சி புரிந்த ஷாஜஹானின் காலத்திலேயே வாழ்வது போன்ற 'பிரமை' தோன்றியது. நிலவு வெள்ளத்தில் அந்தக் காதல் பளிங்கு மாளிகை எத்தனை எத்தனையோ எண்ணங்களை என்னுடைய இதயத்தில் தோற்றுவித்தது!

மொகலாய வம்சத்தில் மும்தாஜ் கொடுத்து வைத்தவள்! நூர்ஜஹான் பேரழகி. ஜஹாங்கீரின் உள்ளத்தை மட்டுமல்ல மாபெரும் சாம்ராஜ்யம் ஒன்றையே மனம் போனபடி ஆட்டி வைத்தவள். மீர்—உல்—நிசா என்ற இயற்பெயரும், நூர்ஜஹான் அல்லது உலக ஜோதி என்ற காரணப் பெயரும் பெற்றுவிட்ட அவள் கூட, தனக்காக இவ்வளவு பெரும் கலைச் சின்னத்தை விட்டுச் செல்லவில்லை.

ஷாஜஹான் இதயத்தை மும்தாஜ் வசப்படுத்தினாள்! சாகாத பளிங்குக் கோயிலை அவள் சவ அடக்கத்தின் சின்னமாக்கி மகிழ்ந்தாள் அவள். உலகத்தில் எத்தனையோ பெண்கள் பிறக்கிறார்கள்—இறக்கிறார்கள். ஆனால் மும்தாஜ்; பெண்ணினத்தில் பெறற்கரிய பேறு பெற்றவள்

கைக் கடிகாரத்தைப் பார்த்தேன். இரவு பன்னிரண்டு மணியாகி இருந்தது. அன்று பௌர்ணமி நிலா. கள்ளங் கபடமின்றி இன்பத்தை அள்ளி வீசிக் கொண்டிருந்தது. நான், தாஜ் மஹாலின் காவல்காரனிடம வீசி யெறந்த பத்து ரூபாய். எனக்கு அந்த இன்பதைை அநுபவிகும்



பி. சி. கணேசன் B,Sc., B,T

செல்லப்பா

சந்தர்ப்பத்தை அளித்தது.

"தாஜ்மகாலை பூரண நிலவொளியில் ரசிக்க வேண்டும்" என்று சொன்னவனின் வாக்கு எவ்வளவு அனுபவப் பூர்வமானது. ஆம். அந்த இன்பம் வாழ்க்கையில் ஒவ்வொருவரும் அனுபவித்துப் பார்க்க வேண்டிய ஒன்றுதான்.

நீரில் கால்களை விட்டுக் கொண்டு நடைபாதையின் ஓரமாக உட்கார்ந்தேன். தென்றல் மெதுவாக வீசியது. உமார் கயாமின் கற்பனை நினைவுக்கு வந்தது; நிலவு, தாஜ்மகால், மது, மங்கை, கவிதைப் புத்தகம்! பையைத் தடவிப் பார்த்தேன்; பாரதிதாசனின் 'அழகின் சிரிப்பு!' இருந்தது, மதுவும், மங்கையும் தான் பாக்கி! தாஜ்மகாலின் ஒவ்வொரு கல்லிலும் மும்தாஜின் முகத்தைப் பார்த்தேன். அதே இன்பத்தில் உள்ளம் கள்வெறி கொண்டது......சித்ரா தேவி என்னை ஆலிங்கனம் செய்து கொண்டாள்.

* * *

சிதாரின் இன்னொலி என் செவிகளில் வந்து பாய்ந்தது. அருமையான கீதம். நான் இது வரையில் கேட்டதே இல்லை. என் உடலெல்லாம் மயிர்க் கூச்செறிந்தது. நான் மட்டும்தானே இங்கிருந்தேன்; காவல்காரன் தான் வேறு ஒருவரையும் அனுமதிக்கவில்லையே!

மெதுவாக எழுந்து, இசை வந்த திக்கு நோக்கிச் சென்றேன். மகிழ மரத்தினடியில் நீண்ட கருப்பு அங்கி அணிந்த ஒருவன் மெய் மறந்து சிதார் வாசித்துக்கொண்டிருந்தான். கீதத்தில் சோகரசம்மேலோங்கி நின்றது. இசையில் லயித்து ஓசைப்படுத்தாமல் நானும் நின்றேன். அவன் யாரென்று அறியும் ஆவல் என் உள்ளத்தில் கிளர்ந்தது. அவன் பாட்டை முடிக்கும் வரையில் பொறுமையாக ஆவலை அடக்கிக்கொண்டு நின்றேன்.

சிதாரை, தோளில் தொங்கிய பையில் வைத்துக் கொண்டு அவன் எழுந்து நடந்தான், நான் வேகமாகப் போய் அவன் முதுகைத் தொட்டேன். அவன் திடுக்கிட்டு என்னைத் திரும்பிப் பார்த்தான். மேலும் கீழும் என்னை ஒரு முறை பார்த்தபின் "நீ யார்?" என்றான்.

அவனுடைய முகத்தில் இளமையின் அழகு பொலிந்தது. அரும்பியிருந்த மீசையும் தாடியும் அதற்கு அழகிட்டன. ஆனால் அந்த அழகின் ஆழத்தில் கவலை புதைந்து கிடப்பதும் தெளிவாகத் தெரிந்தது.

"நான் ஒரு சரித்திரப் பேராசிரியன்," என்றேன்.

"நீ சரித்திரம் எழுதினால் உள்ளபடி எழுதுவாயா?" என்றான்.

நான் சிரித்தேன்.

"என்னைப்பற்றி நீ கேள்விப் பட்டதில்லையா?" என்றான்.

"நீ யார் என்று சொன்னாலல்லவா உன் கேள்விக்கு விடையளிக்க முடியும்," என்றேன்.

"நான்தான் கவி பக்ரம்; ஷாஜஹானின் நண்பன்"

"அப்படி ஒரு கவிஞன் ஷாஜஹானுக்கு நண்பனாக இருந்ததாக நான் படித்ததில்லையே!"

"சரித்திரம் எழுதியவன் உண்மையைச் சொன்னால் தானே......சரி, நான் சொல்லுவதைப் பொறுமையாகக் கேட்கிறாயா?" என்று அவசர அவசரமாகப் பேசினான்.

"சரி," என்றேன் நான், டைரியும் பென்சிலும் கையில் எடுத்துக் கொண்டு!

கவி பக்ரம் கதையை ஆரம்பித்தான்:

மன்னன் ஷாஜஹானைப்பற்றி சரித்திரப் பேராசிரியனாகிய உனக்கு அறிமுகம் தேவையில்லையென்றெண்ணுகிறேன். வயதில் ஷாஜஹானை விட நான் எவ்வளவோ சிறியவன். ஆனாலும் ஷாஜஹான் வயதிலும் அந்தஸ்திலும் நான் அவருக்குச் சாமானம் ஆனவன் போலவே நடத்தினர். காரணம், என்னுடைய கவிதைகளின் மேல் அவருக்கு அவ்வளவு பிரேமை! மும்தாஜ் முகம் சுளித்தால் என்னை அழைக்க ஆள் வந்து விடுவான். அரசனுக்கும் அரசிக்கும் இடையில் எழுந்த எத்தனையோ ஊடல்களை, என்னுடைய கவிதையும் அதோடு சுருதி லயம் சேர்க்கும் சிதாரும் தீர்த்திருக்கின்றன. அந்தப்புரத்தில் எனக்கிருந்த உரிமை எல்லோருக்கும் ஆச்சரியத்தையும் சிலருக்குப் பொறாமையையும் விளைவித்தது.

இதைச் சொல்லி விட்டு பக்ரம் மௌனம் ஆனான்.

"பிறகு?" என்றேன் நான். குரல் கரகரக்க பக்ரம்தொடர்ந்தான்.

கலையும் காரிகைகளும்தானே மொகலாய மன்னர்களின் சிறப்புக்கும் சீரழிவுக்கும் காரணம். ருசியா, மும்தாஜின் வளர்ப்புப் பெண். அழகு மெருகோடிருந்த அவள் மேனி, வண்டுகளெனச் சுழலும் வசீகரக் கண்கள், அல்லாவின் படைப்பில் அவள் ஒரு சிறப்பு என்றால் மிகையாகாது. ஷாஜஹானின் அந்தப்புரத்தில் என் கவிதையும் இசையும் விளக்கமுறக் காரணம் அழகி ருசியாதான்!

அவள் முறுவலிப்பாள்-என்னுடைய உள்ளத்தில் கவிதை ஊற்றெடுக்கும்.

அவள் விழி இமைகள் படபடக்கும்—சிதாரின் தந்திகள் இசையைப் பிரவகிக்கும்.

கலையின் ஆக்கமே பெண்களின் பேரழகில்தானே இருக்கிறது?

நான்தான் அவளைக் காதலித்தேன். ஆனால் அவள்......?

அவளும் காதலித்தாள்—பிரபல சிற்பியான உஸ்தாத் ஈசாவின் மகன் முகம்மது ஷரீஃப் என்பவனை. ஆனால் இந்த உண்மை நெடு நாள் வரையில் எனக்குத் தெரியாது.

மும்தாஜ் பேகம்—ஷாஜஹானின் மனைவி-படுத்த படுக்கையானாள். இனிப் பிழைக்கமாட்டோம் என்று அவள் நம்பினாள். ஷாஜஹானுக்கும் தன்னுடைய இதய ஒளி அணைந்து விடுமோ என்ற பீதி ஏற்பட்டது. மும்தாஜ் கடைசியாக ஒரு ஆசை


கே.மாதவன்

வைத்திருந்தாள். அவள் பெயர் என்றும் அழியாமல் அவள் இறந்த பின் ஷாஜஹான் ஒரு நினைவுச் சின்னம் அவளுக்காக எழுப்ப வேண்டும்!

மும்தாஜின் ஆசைதான் ஷாஜஹானின் ஆணை! அரண்மனை சிற்பி உஸ்தாத் ஈசா வரவழைக்கப் பட்டார்!

அரசியின் ஆசை ஈசாவிடம் அறிவிக்கப்பட்டது. உலகத்தின் உன்னதமான கலைப் படைப்பு அவரிடம் ஒப்புவிக்கப்பட்டது.

ஈசாவும், ஷரீஃபும் கலைக் கோயிலுக்கான மாதிரிகள் செய்வதில் முனைந்தார்கள். தன்னுடைய மகன் ஷரீஃப் மனம் வைத்தால் சிற்பக் கலையின் சீரிய செல்வம் ஒன்று உருவாகிவிடும் என்பதை ஈசா அறிவார். ஆகவே ஷாஜஹானிடம் அனுமதி பெற்று, ஷரீஃபுக்கு வேலை செய்ய எல்லா வசதிகளும் படைத்த மாளிகையொன்று வாங்கிக் கொடுத்தார். இரவு பகல் இல்லாமல் எப்பொழுது பார்த்தாலும் 'கல் கல்' என்ற ஒலி அந்த மாளிகையில் கேட்ட வண்ணம் இருந்தது. மகனின் வேலையில் குறுக்கிடாமல் ஒதுங்கியே இருந்தார் உஸ்தாத் ஈசா!

இதற்கிடையில் வளர்ப்புப் பெண் ருசியாவிற்கு 'நிக்கா' முடித்துவிட வேண்டுமென்று மரணத் தறுவாயில் இருந்த மும்தாஜ் விரும்பினாள்.

ஷாஜஹான் மணமகன் தேடவில்லை! ருசியாவிற்கும் எனக்கும் திருமணம் என்று அவர் என்னிடம் கூறியபோது...அந்த வண்டு விழிகளும் வண்ணப் பொன்மேனியும் எனக்கே சொந்தம் என்று எண்ண எண்ண என் மனம் இன்பக் கூத்தாடியது! எங்கள் திருமணம் பேசப்பட்ட பிறகு ருசியாவை நான் பார்க்கவேயில்லை! நாணம்—இயற்கைதானே?

மறுநாள் ஷரீஃபு செய்து வைத்த மாதிரியைப் பார்க்க வேண்டுமென்று ஷாஜஹானும் உஸ்தாத் ஈசாவும் நானும் சென்றோம்!

கவலையே உருவமாக ஷரீஃப் வீற்றிருந்தான். அவனைப் பார்த்தால் பைத்தியக்காரனைப் போல் இருந்தது. வேலையின் களைப்பால் அவன் அப்படியிருப்பதாக நாங்கள் எண்ணிக் கொண்டோம்.

"கலைக்கோயிலின் மாதிரி எங்கே?"—மன்னர் கேட்டார்.

கடகடவென்று சிரித்தான் ஷரீஃப்!

மரியாதையற்ற இந்தச் செய்கை மன்னனின் மனதில் கோபத்தை மூட்டியது! அவர் கண்கள் சிவப்பேறின.

கோபத்தோடு, தொங்கிக் கொண்டிருந்த திரையைக் கிழித்தெறிந்தார் ஈசா.

ருசியாவின் அழகு மேனியை அப்படியே சிலையாக வடித்திருந்தான் சிற்பி ஷரீஃப்!

"என்ன இது?"—சீறினார் ஷாஜஹான்.



''கலை—என் காதலியின் வண்ணச் சிலை!''-அமைதியாகப் பதிலளித்தான் ஷரீஃப்!

''உஸ்தாத், இது என்ன நாடகம்?''

உஸ்தாத் தலை கவிழ்ந்து நின்றார்.

''மகராஜ், காதல் தீய்ந்து போன உள்ளத்தில் கலையைப் பிறக்கச் செய்யும் ஜாலவித்தை, என் தந்தைக்கும் தெரியாது! அவர் குற்ற மற்றவர்......''

''என் ஆணை......?''

''ஆணை மட்டும் போதாது மகராஜ், அழகுக் கலைக்கோயில் நிர்மாணிக்க...கலைஞனின் உள்ளத்தில் கனிவு தோன்றினால் கலை தானாகவே பிறந்து விடும்......''

நான் அதற்கு மேல் அங்கு நிற்க இஷ்டப்படவில்லை. குற்றவாளி நானல்லவா? உண்மை தெரிந்திருந்தால் குற்றத்திற்கே உடன்பட்டிருக்க மாட்டேன். நான் ருசியாவின்மீது கொண்டு விட்ட காதல் ஒரு தலைக் காமம் என்பதை உணர்ந்தேன். என் பாட்டின் இசையோடு கலந்து, என் உயிரில் ஒன்றிவிட்ட அந்த அழகு ஓவியத்தை மனத் திரையிலிருந்து கலைத்தபடியே வெளியே நடந்தேன். 'படீ' ரென்று ஒரு பெரும் ஓசைகேட்டது. திரும்பிப் பார்த்தேன், என் உள்ளத்தில் வரையப்பட்ட ஓவியம் கலைந்ததோஎன்னவோ, ருசியாவின் அழகுச் சிலை சிறு கற்களாக நொறுங்கிக்கிடந்தது!

மகனின் படைப்பை, தந்தையின் கோபம் அழித்து விட்டது!

மறுநாள் நான் மன்னனிடம் வாதாடினேன். ருசியாவிற்கும் ஷரீஃபுக்கும் திருமணம் முடிப்பதே முறையென்று வாதிட்டேன். ஷாஜஹான் பிடிவாதக்காரர். ஆனால், நானும் தோல்வியடைய விரும்பவில்லை.

ஷரீஃபிடம் மனதைப் பறிகொடுத்து விட்ட ருசியா, என் மனைவியாகிப் பலன்?...இசைக்காத சிதாரும், மணமற்ற மலரும், பொருளற்ற கவிதையும், போதையற்ற மதுவும் யாருக்கு வேண்டும்?

இரண்டொரு நாளில் திருமணம். அதற்குள்......

இன்றபோல் அன்றும் முழு நிலா நாள். யமுனையின் நீர், நிலவின் ஒளியில் உருகிவிட்ட வெள்ளி அருவி போல் ஓடிக் கொண்டிருந்தது.

மெட்டியின் நாதம், வளையல் ஒலி என் இசையைக் கலைத்



தது. மலர்வன மண்டபத்தில் ருசியா தன்னந்தனியாக அமர்ந்திருந்தாள். இந்தச் சந்தர்ப்பத்தைத்தான் நானும் எதிர் பார்த்திருந்தேன். மெதுவாக சிதாரைக் கீழே வைத்துவிட்டு அவளிடம் சென்றேன். என்னைக் கண்டவுடன் அவள் எழுந்து போக முயன்றாள். நான் எதிரே சென்று அவளை மறைத்தேன்.

''ஹுசூர்!''-என் கால்களைப் பிடித்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள்.

''அழாதே ருசியா...இனி உனக்கு நான் ஹுசூரல்ல... யார், தெரியுமா? ஷரீஃப்! உன் காதலன் ஷரீஃப்! இதைப் பற்றி என்னிடம் நீ ஒரு வார்த்தை முன்பே சொல்லியிருந்தால் இந்த நெருக்கடியே வந்திருக்காதே!''

அவள் மீண்டும் அழுதாள்! சோகம், இப்பொழுது கண்ணீராகவில்லை; இன்பம் கண்ணீர் வெள்ளமாக ஊற்றெடுத்தது.

''அரசர்......''—அவள் பயந்தாள்.

''பயப்படாதே! உன் திருமணத்தன்று, என்னுடைய வேஷத்தில் ஷரீஃப் உன்னை 'நிக்கா' செய்து விடுவான். பிறகுதான் உண்மை தெரியும்!''

''ஐயோ, மகராஜின் கோபம்......''

''குற்றவாளி நானாக இருக்கும்போது அவருடைய கோபம் உங்களை என்ன செய்யும்? பிறகு விஷயங்களை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்''

அவள் முகத்தை என் மார்பில் புதைத்துக் கொண்டு, நன்றியுணர்ச்சியோடு கண்ணீர் விட்டாள்.

அவளை விட்டுப் பிரிந்துபோய் நான் சிதாரை எடுத்துக் கொண்டு, மனதின் பாரம் குறைய நடந்தேன். சற்று தூரம் சென்ற பின், யாரோ அலறும் ஒலி கேட்டது. திரும்பிப் பார்த்தேன். ஒன்றும் தெளிவாகத் தெரியவில்லை! ஓசை வந்த திசை நோக்கி ஓடினேன்.

முன்பு சிலை சிதைந்தது; இப்பொழுது அந்தச் செதுக்காத பொற்சிலை, இரத்தக் குட்டையில் துவண்டுகிடந்தது. அருகே கத்தியுடன் ஷரீஃப் நின்று கொண்டிருந்தான்—திகிலை பிடித்து!

ஒருவாறு விஷயத்தையூகித்த நான், 'கத்தியைக் கீழேபோட்டு விட்டு ஓடு!' என்றேன். 'ஆள் வரும் அரவம்கேட்கிறது, ஓடிப் போய் விடு: மற்றவைகளை நான்

பார்த்துக் கொள்ளுகிறேன்' என்று துரிதப்படுத்தினேன். கத்தியைக் கீழேபோட்டுவிட்டு யந்திரம்போல் என் உத்தரவுக்குக் கீழ்ப் படிந்து ஓடினான். அவன் ஓடுவதற்கும் ஓசையிட்ட காவலாளிகள் வருவதற்கும் சரியாக இருந்தது.

கொலையுண்ட ருசியாவின் அருகில் கத்தியுடன் நான் அமர்ந்திருப்பதைக்கண்ட காவலாளிகள் திடுக்கிட்டனர். அது சிறிது நேரம்தான். பிறகு அவர்கள் தங்கள் கடமையைச் செய்தனர்—நான் கைது செய்யப்பட்டேன்.

மனச் சான்றால் தொல்லைப் படுத்தப்பட்ட ஷரீஃப், ஷாஜஹான்முன் தானே குற்றவாளி என்று மன்றாடினான். தன்னுடைய காதலி ருசியா, கவி பக்ரமுடன் திருமணம் நடக்குமுன் நிலவொளியில் கொஞ்சிக் கிடந்ததைக்காணச்சகிக்காமல் கொலை புரிந்ததாகக் கூறினான். உண்மையும் அதுதான்! ஆனால் என்னுடைய கற்பனை தான் வென்றது. நிகழ்ச்சிகளை அப்படியே மாற்றினேன்-என்னைக் கொலைகாரனாக்கிக் கொண்டேன்.

மன்னன்—கண்ணீர் சிந்தியபடியே—மரண தண்டனை விதித்தான்!

பக்ரம் கதையை நிறுத்தினான். "மரண தண்டனை பெற்றுவிட்ட நீ, இப்பொழுது பேயாக இங்கு உலவுகிறாயா?" என்றேன்.

"பேயுமில்லை, பிசாசுமில்லை... இன்னும் கதையைக் கேள்!" என்று பக்ரம் தொடர்ந்தான்:

"ருசியா மாண்ட அதிர்ச்சி, என்னுடைய பயங்கரக் 'குற்றம்', நினைவுச்சின்னம் எழுப்பும் வேலையில் ஏற்பட்ட குழப்பம்- மும்தாஜின் உயிரைக் குடித்துவிட்டது. அவள் மரணச் சடங்கில் கலந்துகொள்ள, எனக்கு மூன்று நாள் விடுதலை கிடைத்தது. மும்தாஜ் பேகம்-ஷாஜஹானின் இதய தீபம்—புதைக்கப்பட்ட இடத்தில், ஒரு பளிங்கு மாளிகை நிர்மாணித்து அவளுடைய கடைசி ஆசையைப் பூர்த்திசெய்ய ஷாஜஹான் துடித்தார்.

மீண்டும் சிறை சென்று, மரண தண்டனை நிறைவேறுமுன் எனக்கு ஒருவேலை பாக்கி இருந்தது. ருசியாவின் கல்லறைக்கு நள்ளிரவில் சென்று சவப் பெட்டியைத் தோண்டி எடுத்தேன். அதை அப்படியே ஷரீஃபிடம் சுமந்து சென்று, அவனையும் அழைத்துக் கொண்டு, மும்தாஜின் கல்



லறையில் ருசியாவின் சவப் பெட்டியையும் வைத்து மூடினோம்: என்னுடைய பழைய தியாகம் ஷரீஃபை நான் சொன்னவைகளையெல்லாம் கேட்கச் செய்தது.

ஷரீஃப் என்னைப் பார்த்து விழித்தான்!

"இனி உன் உள்ளம் முழு மூச்சோடு, நினைவு மாளிகை வேலையில் ஈடுபடும்," என்றேன்.

"நீ தியாகி; எனக்காக உன் காதலைக் கைவிட்டாய்—பொய்யாகக் கொலைப் பழி சுமந்து மரண தண்டனையும் பெற்றாய்- மும்தாஜுக்கு நினைவு மாளிகை எழுப்ப, என் உள்ளம் அதில் முழு மூச்சோடு ஈடுபட—அப்பப்பா! நீ வெறும் கவி—பாடகன் மட்டுமல்ல, தியாக இமயம்! நான் கட்டப்போவது, காதல் மாளிகையல்ல—தியாக மாளிகை!" என்று ஷரீஃப் புகழ்மாலை சூட்டினான்.

உஸ்தாத் ஈசா, ஷரீஃப் என்ற புகழ் பெற்ற இரு கலைஞர்களின் கைவண்ணத்தால் உருப்பெற்றதுதான் இக்கலைக் கோயில் தாஜ் மஹால்!"

"வெரோனியோ என்ற இத்தாலியக் கலைஞன் இதை நிர்மாணித்ததாகச் சொல்லுகிறார்களே?" என்றேன் நான்.

"ஆமாம், புளுகுகளின் தொகுப்புதானே சரித்திரம்! பாமரர்களுக்கு தாஜ் மகாலைக் கட்டியது ஷாஜஹான். ஆனால் அதை உருவாக்கிய சிற்பிகள் உஸ்தாத் ஈசாவும் அவர் மகன் முகம்மது ஷரீஃபும் என்று பல ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக்கொண்டு விட்டார்களே!" என்றான் பக்ரம்!

"அது போகட்டும், உன் கதி என்னாயிற்று?" என்றேன்.

"என் கதி...தண்டனை நிறைவேறியது...ருசியாவின் மீது எனக்குள்ள காதலைப் பாட்டாக்கி, பாடுகிறேன்; சிதார் வாசிக்கிறேன்......"

"அப்படியானால் நீ பேய்தானே?" 'கட, கட' வென்று சிரித்தான் பக்ரம். நான் வெருண்டு எழுந்தேன். கீழ்வானத்தில் சிவப்புக்கோளமாக சூரியன் பவனி புறப்பட்டுக்கொண்டிருந்தான். பறவைகள் காலை கீதம் இசைத்துக்கொண்டிருந்தன. 'சிலு சிலு'வென்று காற்று வீசிக்கொண்டிருந்தது!

தாஜ்மகாலைப் பார்த்தேன். அது தியாக மாளிகையா, காதல் மாளிகையா, அன்றிக் கனவு மாளிகையா எனத் தெரியாமல் விழித்தேன்!

# இலக்கியத்தில் தோழி

★ முதல்வன் ★

ஆம், அவள் ஒரு சிறந்த வடிவழகி. கற்பனையிலே கண்டு, வார்த்தைகளால் வடித்தெடுக்க முடியாத வஞ்சிக் கொடி. கட்டுக் கோப்பான உடலில் பட்டு நிகர்த்த பளபளப்பு. அதிலே ஒரு கவர்ச்சி. அந்த வசீகரத்திலே மெய்ம் மறந்து நின்ருள் அவள் தோழி! ஒரு பெண், தன்னைவிட மற்றவள் அழகில் சிறந்தவள் என்று கூறமாட்டாள். ஆனால் இந்தத் தோழி தலைவியின் தனிப் பெரும் அழகில் மனதைப் பறிகொடுத்து விட்டாள். அவள் எழிலைச் சுவைக்கத் தான் ஒரு ஆணுக இல்லையே என்று ஏங்கினுள், சில நாட்களுக்குப் பின் தலைவியின் சிவந்த முகம் ஒளியிழந்து வெளுக்கத் துவங்கியது. குறித்த காலத்தே காதலன் திரும்பி வரவில்லையே என்ற கவலையில் தலைவி துயரமடைந்தாள். ஆகையால் அவள் உடலின் வனப்பும் மறையத் தொடங்கியது. தோழிக்கு இந்த ஆண் வர்க்கத்தின் மீதே வெறுப்பு ஏற்பட்டது! சாதாரணப் பிரிவிலேயே தலைவியின் கட்டுடல் தளர்ச்சி அடைந்தால், மணமான பின் தலைவன் வியாபாரத்திற்கு நெடுந் தொலைவு சென்ருல் இவள் அழகே அழிந்து விடுமே என்று தோழி வருத்தப்பட்டாள். எனவே அதைத் தலைவியிடம் சொல்கிருள், "அம்மா, சில நாட்கள் தலைவனைக் காணுததால் இவ்வளவு வருந்துகிறீர்களே. நாளை மணமான பின், பொருள் தேடி அவர் அடிக்கடி வெளியூர் சென்று விடுவாரே. அப்பொழுதெல்லாம் நீங்கள் எவ்வளவு துயரப் படுவீர்கள். உங்கள் துயரத்தால் உங்கள் பேரழகே சிதைந்து விடுமே, அம்மா, நீங்கள் திருமணமே செய்து கொள்ளாதீர்கள். அப்பொழுதுதான் உங்கள் இளமையும் அழகும் அழியாமல் இருக்கும்" என்று கூறினுள்! தலைவியின் அழகில் தான் கொண்ட ஈடுபாட்டினுல் அவளைத் திருமணமே செய்து கொள்ள வேண்டாம் என்று கூறுகிருள்! அப்பொழுது மழை பெய்து கொண்டிருந்தது. நிலத்திலே நீர்க் குமிழிகள் தோன்றின. அங்கு வந்த ஒரு குரங்கு ஒரு குச்சியால் அக்குமிழிகளை அழித்துக் கொண்டிருந்தது. இக்காட்சியைத்தன் தோழிக்குக் காட்டித் தலைவி சொல்லுகிருள்:—"தோழி! இதோ பார், அந்தக் குரங்கு குச்சியால் குமிழிகளைக் குலைக்கிறது குரங்கு கைக்கு எட்டாத அந்தக் குமிழிகளைப் பார். அவைகளும் அழிந்து போகின்றன. அவற்றை யாரேனும் அழித்தார்களா? அது போலத் தலைவனது பிரிவினுல் மட்டும் என் அழகு அழிவதில்லை. இயற்கையிலேயே இந்த இளமையும் அழகும் அழியக் கூடியதுதான்." என்று சமாதானம் சொன்னுள்! ஐங்குறுநூறு காட்டும் இந்தத் தோழி, தலைவியின் அழகைக் காக்க முற்படுகிருள். தமிழ் இலக்கியத்திலே அகத்திணை முழுதும் விரவி நிற்கும் இந்தத் தோழியர், தலைவிக்கு எல்லா வகையிலும் துணை புரிகின்றனர்.

தலைவியரது ஊடலை இத்தோழி தீர்த்து வைக்கிருள். பிரிவுத் துன்பத்தால் ஏங்கும் தலைவிக்கு ஆறுதல் பல கூறி, தலைவனிடம் தூது செல்லுகிருள். காதலன் கல்யாணத்தைப் பற்றியே சிந்தனை செய்ய விரும்பாத சமயத்தில், அது பற்றி அவன் சிந்தனையைத் தூண்டிவிட்டு, திருமணத்திற்கு வழி செய்கிருள் களவுக் காலங்களில். தலைவிக்கு உறுதுணையாக இருக்கிருள். தலைவியின் காதல் நோயை அவள் தாயிடம் கூறி அறத்தொடு நிற்கிருள். பரத்தையரை நாடித் திரியும் தலைவனுக்குப் புத்திமதி கூறுகிருள். இப்படியாக இலக்கியத்திலே தலைவன், தலைவி இவர்களுடன் தோழி பெரும் பகுதிகளில் வந்து போகிருள். தோழன், பாணன், விறலி இவர்களைவிட தோழியே அடிக்கடி தோன்றுகிருள். தோழியானவள், பேச ஆரம்பித்தால் தேன் தளும்பும் பொற்குடம் கவிழ்ந்தது போல அமுதம் ஆருகப் பெருகி ஓடும். அவள் குரலினிமையைப் பற்றி அவ்விதம் சொல்லவில்லை. அவளது சொல் நயம் பற்றியே அங்ஙனம் கூறப்படுகிறது. அவளது பேச்சில் இருக்கும் கருத்தாழம் அவ்வளவு இனிமையானது. அவளின் அறிவாற்றலை என்னவென்று சொல்வது!

ஒரு இடத்தில் தலைவன் திருமணப் பேச்சே பேசாது, களவில் நிதமும் தலைவியைக் கண்டு செல்லுகிருன். தலைவிக்கு அவனிடம் இடித்துரைக்கத் துணிவில்லை. இந்த இக்கட்டில் தலைவி தோழியைத் துணைக்கழைக்கிருள். தோழி தலைவனைச் சந்திக்கிருள். அவனிடம் பேச ஆரம்பிக்கிருள் தோழி—"இனியவைகளுடன்

இன்னாததும் செய்யும் தலைவரே வணக்கம்!

தலைவன் ; என்னது, இன்னாதவைகளையும் செய்கிறேனா?

தோழி :—ஆமாம் தலைவனே! நீ தலைவியிடத்துக் காதல் கொண்டுள்ளது இனியது : அதற்காக வேண்டி அஞ்சத்தக்க இரவு வேளைகளில் இங்கு வருவது இன்னாதது. நீ தலைவியிடம் அன்பு கொண்டிருப்பது இனியது; அதன் காரணமாக உயர்ந்த மலைகளைத் தாண்டி வருவது இன்னாதது. நீ தலைவியிடம் அருள் கொண்டது இனியது; அதற்காக மதம் பிடித்த யானைகள் உலவும் அடர்த்தியான காடுகளைக் கடந்து வருவது இன்னாதது. புரிகிறதோ? இதனால் தலைவி மிகவும் பயப்படுகிறாள்.

தலை ;—அவள் ஏன் பயப்பட வேண்டும்?

தோழி :— நீ தினமும் தலைவியைச் சந்திக்க யாருமறியாமல் இரவு வேளைகளில் கொடிய விலங்குகள் திரியும் வனங்களைக் கடந்து வருகின்றனை, அதனால் உனக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்தால் என் செய்வது என்று மிகவும் பயந்து நடுங்குகிறாள். அவள் அச்சத்தைப் போக்க, நீ தயவு செய்து இனிமேல் இப்படி வராதே!'' என்று கூறிவிட்டுப் போய்விடுகிறாள். இந்த உரையாடல் அவன் சிந்தனையைத் தூண்டுகிறது. அவள் தன்னை வர வேண்டாம் என்று கூறியதன் பொருள் என்ன என்று சிந்திக்கிறான். அவளைக் காணாது நாம் எப்படியிருப்பது? நம் பிரிவை அவள்தான் எப்படி சகிப்பாள். இதைத் தீர்க்க வழி என்ன என்று ஆராய்கிறான். திருமணத்தைத் தவிர வேறு என்ன வழி இருக்க முடியும்? ''நீ திருமணம் செய்து கொள்ளாமல் இப்படியெல்லாம் வராதே'' என்று கூறியிருந்தால் அவன் மனதிலே ஒரு வகை வெறுப்புணர்ச்சி தோன்றுமல்லவா? அதைத் தவிர்க்கத் தான் தன் அறிவாற்றலால் தோழி, சுற்றி வளைத்துப் பேசினாள். என்னே அவள் திறமை!

இதே மாதிரியான சந்தர்ப்பத்தில் வேறு ஒரு தோழி தலைவனிடம் இன்னும் திறமையாகப் பேசுகிறாள். '' மணம் வீசுகின்ற தாழையின் வெண் மொக்கு பார்ப்பதற்கு நாரையின் குஞ்சு போலிருக்கும், அதை ஒரு நாரை உண்மையிலேயே தன் குஞ்சு என்று எண்ணி, தான்கொண்டு வந்த உணவை அந்த மொக்கின் மேல் வைத்தது. அது உண்ணாமல் இருக்கவே வருத்தம் கொண்டு, தானும் உண்ணாது, அந்த வெண் மொக்கு வெய்யிலில் காய்வதைத் தன் குஞ்சு காய்வதாக எண்ணி, தன் சிறகை விரித்து அதற்கு நிழல் தந்ததாம். அத்தகைய நாரைகள் வாழும் ஊரில் உள்ள தலைவனே! நீ திருட்டுத் தனமாக வந்து சந்திப்பது நிலையில்லாதது ஆகவே நிலையில்லாத அச் சந்திப்பை இனி மறந்து விடு'' என்று சொன்னாள். இதில், பெண்களின் உலகத்தையும், அவர் தம் இயல்பையும் வெகு அழகாகக் கூறுகிறாள். பெண்கள் குழந்தை



களைப்பெற்று, அக்குழந்தைக்குப் பாலூட்டி தாலாட்டி சீராட்டுவார்கள். இது தான் அவர்களது இயல்பு. நாரை வெண் மொக்கை குஞ்சு என்று எண்ணி உணவு ஊட்ட முயன்றதைக் கூறி தலைவியும் குழந்தை பெற்று அக் குழந்தைக்குப் பாலூட்ட விரும்புகிறாள் என்பதை வெளிப் படுத்துகிறாள். அப்படித் தலைவி குழந்தை பெற விரும்பும்போது தலைவன் திருட்டுத்தனமாக வந்து சந்தித்துப் போவதால் நன்மை ஏதும் இல்லை அதுவும் தவிர, எத்தனை நாட்களுக்குப் பிறர் அறியாமல் சந்திப்பது? எனவே அதை மறந்து விடும்படிக் கூறுகிறாள். நாரைகள் வாழும் ஊரில் உள்ளவன் என்று அழைப்பதால், அந்த நாரைகள்போல் வாழ உன் தலைவியை மணந்து கொள் என்று சொல்லாமல் சொல்லுகிறாள். எவ்வளவு கருத்தாழத்துடன் பேசியிருக்கிறாள்!

இன்னொரு இடத்தில், திருமண ஏற்பாட்டை கவனிக்காதிருக்கும் தலைவனுக்கு அதை அறிவுறுத்த ஒரு நாடகமே நடத்துகிறாள் தோழி! தினைப் புனத்தில் உரலில் நெல்லையிட்டு தலைவியும் தோழியும் குத்திக் கொண்டிருக்கின்றனர். தலைவன் அந்த இடத்திற்கு வருகிறான். முன்னேற்பாட்டின் படி, அவன் வந்ததைத் தாங்கள் கவனிக்காதது போல் இருவரும் பேசிக் கொள்கிறார்கள்.

தலைவி ;—தோழி! நம் தலைவர் என்னை மணந்தே தீருவதாகச் சூளுரைத்தார். ஆனால் இன்னும் என்னை அவர் மணக்கவில்லை. இப்படிப் பொய்யாக சூளுரைத்த அவர் மலையில் உள்ள அருவியில் இன்னும் நீர் நிறையக் கொட்டுவது, எனக்கு ஆச்சர்யமாய் இருக்கிறது"

தோழி :—நம் தலைவரா பொய் பேசினார்? இருக்கவே இருக்காது! சொன்ன சொல் தவறாத அந்த உத்தமர் பொய் பேசினார் என்பது குளிர்ந்த வெண்ணிலாவில் நெருப்பு தோன்றியது போலல்லவா இருக்கிறது!

தலைவி :—தோழி! என்னிடம் சொன்ன சொல் தவறியவரின் மலையில் நிறைய மழை பொழிவது எனக்கு அதிசயமாக இருக்கிறது.

தோழி :—அம்மா, அவர் சொன்ன சொல் தவறவே மாட்டார். நீங்கள் அப்படி சொல்வது தடாகத்தில் உள்ள தாமரை மலர் வெந்து போய் விட்டது என்பது போலிருக்கிறது.

தலைவி :—தோழி! என்னைத் துறந்து விட்டுப் போன அவரின் மலை நீல மணி போல்இருக்கிறதே!

தோழி :—என்னம்மா, நம்மைத் துறந்து விட்டார் என்று சொல்லுகிறீர்கள். சூரியனில் என்றாவது இருள் பரவுமா அம்மா!—இப்படியாகத் தலைவி தூற்றவும், தோழி போற்றவும் தலைவன் கேட்டுக் கொண்டிருக்கிறான். தலைவிக்கு தன் மீதுள்ள கோபத்தையும், தோழி தன் மீது வைத்திருக்கும் மதிப்பையும் எண்ணிட அம்மதிப்பைக் காப்பாற்றிக் கொள்ள உடனே திருமண ஏற்பாட்டைச் செய்கிறான். தலைவனைத் தூக்கி வைக்க அவள் கூறும் உவமைகள் எவ்வளவு இனிமையாக இருக்கின்றன! உவமைகள் கூறுவதற்கென்றே பிறந்தவள் போலும்! இன்னொரு இடத்தில் ஒரு உவமை கூறுகிறாள்:

தலைவன் அடிக்கடி பிற மகளிரை நாடிச் சென்று வருகிறான்; வழக்கம் போல் தலைவி வாடுகிறாள். அவனைப் பார்த்து நீ பரத்தையரிடம் செல்லக் கூடாது என்று யார் சொல்ல முடியும் என்று அவனையே கேட்கிறாள்...யார்? தலைவியா? இல்லவே இல்லை. நமது மதிப்பிற்குரிய தோழிதான். எடுத்த எடுப்பில் இப்படிக் கேட்கவில்லை. அவன் ஊரை வர்ணிக்கும் விதமாக ஒரு உவமையைக் கூறிவிட்டுத்தான் கேட்கிறாள். தலைவன் பொதுமகள் வீட்டிலிருந்து திரும்பி வருகிறான், வீட்டு வாசற்படியில் வந்தவனுக்கு வழியை மறைத்துக் கொண்டு, தோழி வரவேற்கிறாள். "வருக! வருக! இளம் மனைவியை ஏங்கவிட்ட ஏந்தலே வருக! ஆமாம் உங்கள் ஊரைப் பற்றி ஒன்று கேள்விப்பட்டேனே உண்மையா? சிவந்த கண்களை உடைய உங்கள் ஊர் எருமைகள் கட்டுத் தறியை சேருக்கிக் கொண்டு, கட்டியிருக்கும் கயிற்றை அறுத்துக் கொண்டு, தம் கொம்புகளால் வேலியை நீக்கிக் கொண்டு குளத்திற்கு போய், அங்குள்ள மீன்கள் பயந்தோட தாமரைக் கொடியை மயக்கி மலர்ச்சியில்லாது கூம்பியிருக்கும் தாமரையை உண்ணுமாமே! அப்படியா? ஏன் அப்படிப் பார்க்கிறீர்? கோபிக்கிறேனே என்று பார்க்கிறீரா? அப்படித்தான் கோபிப்பேன். அதற்குக் கூடவா உரிமையில்லை? நீவிர் விலைமகளைச் சேர்ந்தீர் என்று நாங்கள் கூறமாட்டோம். பிற பெண்கள் அப்படிச் சொன்னார்கள். அது கேட்ட தலைவி உடலும் உள்ளமும் சோர்ந்து போய்விட்டாள். தலைவி எப்படி மெலிந்துபோனால் என்ன, நும்மைப் பரத்தையர் வீட்டிற்குப் போகக் கூடாது என்று யார் தடுக்க முடியும்?" என்று மிகப் பணிவாகக் கேட்கிறாள். கூர்ந்து கவனித்தால் தோழியின் உவமை நயம் நன்கு விளங்கும்.

"தலைவனே! எருமையானது தன் கொட்டிலைச் சேருக்கிக் கொண்டு, கயிற்றை அறுத்துக் கொண்டு, வேலியை நீக்கிவிட்டு, குளத்து மீன்கள் பயந்தோட, தாமரைக் கொடியை மயக்கி, வண்டோடு குவிந்திருக்கும் தாமரையைச் சேர்வது போல், நீயே விரும்பிக் காதலித்து மணந்து கொண்ட தலைவியை நீயே வேறுபடுத்திவிட்டு, வெட்கமாகிய கயிற்றை அறுத்துக்கொண்டு, தாசிக்குக் காவலாகிய விறலியை உன்னுடைய பாணனின் உதவியால் விலக்கிவிட்டு, தாசியின் தோழிகள் பயந்தோட, அவளின் அன்னையை மயக்கி, உன்னை உள்ளம் மலர்ந்து விரும்பி ஏற்றுக் கொள்ளாத கணிகையை சேர்பவனல்லவா நீ?!" என்ற கருத்தில்தான் அப்படிக் கூறினாள். அவன் மீது கோபம் கொள்

வதற்குக் கூடவா உரிமையில்லை என்று கடுமையாக கேட்ட தால். அவன் பரத்தையரை நாடிச் செல்வதை எவர் தடுக்க முடியும் என்று பவ்யமாகக் கேட்கும் பொழுது தலைவன் எவ்வளவு வருந்தியிருப்பான்!

ஆறுதல் கூறுவதிலும் இவளுக்கு நிகர் வேறு யாருமே இல்லை. கார் பருவத்தே திரும்பி விடுவதாகக் கூறிச் சென்ற தலைவன் சொன்னபடி வரவில்லை. உடனே தலைவியின் நீலப் பூவிழிகள் இரண்டும் அருவிகளாயின. இது கண்ட தோழி ஆறுதல் கூறுகிருள். கார் காலத்து மழையை மாரிக் காலத்து மழை என்று பொய் சொல்லி வாதிட்டு தலைவியை தேற்றுகிருள், "அழாதீர்கள் அம்மா. அழுது அழுது முகமெல்லாம் வீங்கி விட்டதே! இப்பொழுது மழை பெய்வதைப் பார்த்து இது கார் காலம் என்று எண்ணி விட்டீர்களா? மாரிக் காலத்தில் பெய்யாது மிஞ்சிய நீரை மேகங்கள் இப்பொழுது கொட்டுகின்றனவே தவிர. இது கார்ப் பருவமல்ல. ஏதோ இயற்கை மயங்கியதால் மழை பொழிகிறது. அதையறியாமல் மயிலும் மாவினமும் ஆடுகின்றன. முல்லைப் பூக்கள் கூட காலந் தவறி பூத்திருக்கின்றன. நம் தலைவர் சொன்ன சொல் தவருதவர். இது கார் காலமாயிருந்தால் அவர் வந்திருப்பாரே. அவர் இருக்கும் ஊரிலும் மாலைப் பொழுது இருக்குமே அம்மாலைப் பொழுது அவரையும் வாட்டுமல்லவா? கலைமான் தன் பிணையுடன் நீரருந்துவதைக் கண்டால் உங்களைப் பற்றி எண்ணுமல் இருப்பாரா? யானை கரும்பையும் தழைகளையும் ஒடித்து தனது பிடிக்கு ஊட்டுவதைக் கண்டால் ஒரு வீநாடி தங்குவாரா அம்மா? இல்லாவிடில் தூதனுப்பலாமா? பீர்க்கின் பூ வெண்மையாகத்தான் இருக்கிறது. இதைக் காட்டி இப்படியாயினள் நும் மனைவி என்று கூறட்டுமா? அவர் இருப்பிடம் தெரியாது என்கிறீர்களா? எங்கேயம்மா போய்விடுவார்? வானில் பறந்து விடுவாரா? பூமிக்குள் மறைந்து விடுவாரா? கடலுக்கடியில் புதந்து விடுவாரா? ஊர் ஊராக வீடு வீடாகத் தேடி நான் கண்டு பிடிக்கிறேன். நீங்கள் கவலைப்படாதீர்கள்" என்று பலவாறு கூறி தேற்றுகிருள். இவ்வளவு அழகாக உவமை நயத்துடன் பேசும் இலக்கியத்தில் உள்ள தோழியை ஏன் "சொல்லின் செல்வி" என்று அழைக்கக் கூடாது?

●●●


அரசியல் தலைவர் — சினிமா நடிகைகளின் அழகிய காலண்டர்களுக்கும் உயர்தர அச்சு கலர் வேலைகளுக்கும்

**நாதன் அண்ட் கோ.,**

77, மதுரை ரோடு, : : திருச்சி.

# நடிகையின் செல்வன்



'கிரீச்' சென்ற சப்தத்துடன் திடீரென்று பிரேக் போட்டு நிறுத்தப்பட்டது. அந்தப் புத்தம் புதிய ஃபியட் கார். அலறியடித்துத் துள்ளிக் குதித்தான் கையில் புததகங்களுடன் காலேஜ் காம்பவுண்டருகில் நின்று கொண்டிருந்த மாணவன். தொடர்ந்து கலகலவென்ற சிரிப்பு; காரின் உள்ளே யிருந்துதான்!

வேர்த்து விலவிலத்து விட்டது மாணவனுக்கு. சிரிப்பொலிதான் அவனை நினைவுலகத்துக்குக்கொண்டு வந்தது. இருந்தும்இழுத்துவிட்ட ஸ்பிரிங் போல நடுங்கிக் கொண்டிருந்தான்;

"அடபடுபாவி! நீயா? கொஞ்சம் தவறியிருந்தா என் கதி?"

"நம்ம விஞ்ஞானி ஏதோ ஆகாசக் கோட்டை, கட்டிக்கிட்டிருந்தாற்போல இருந்ததே அந்த இடத்தைக் கொஞ்சம் சீக்கிரமே எட்டிப் பிடித்திருப்பார்: அவ்வளவுதான்;"

"போடா குறும்பு. உன்னைத் தாண்டா எதிர் பார்த்துக் கொண்டேயிருந்தேன். வேறு யாரை நினைத்து இப்படி உச்சி வெயிலிலே நின்று தபஸ் பண்ணிக் கொண்டிருக்கப் போகிறேன்,"

கதவைத் திறந்து கொண்டு காரில் ஏறி நண்பனருகில்போய் உட்கார்ந்தான்.

பெரிய ஆக்ஸிடண்டோ! அடி கிடி பலமோ? என்னவோ ஏதோ வென்று குழம்பிப்போய் அருகே ஓடி வந்த சிலர் இக் காட்சியைக் கண்டு முகத்தைச் சுளித்துக் கொண்டு திரும்பினர்.

"இது என்ன இழவு விளையாட்டோ!"

"காலேஜ் படிப்பு போற போக்கு இது?"

"கொஞ்சம் தவறியிருக்கணும், அப்புறம் தெரியும் பசங்களது சிரிப்பும் கும்மாளமும் என்ன ஆகிறது என்று!"

இந்த முணு முணுப்புகள் காதில் விழும்படியாக இருந்த போதிலும் நண்பர்களின் கவனத்தைக் கவரவில்லை.

கார் காலேஜ் காம்பவுண்டுக்குள் திரும்ப ஆரம்பித்தது.

"டேய் செல்வம்! வேண்டாம். மவுண்ட்ரோடுக்கு ஓட்டுடா!"

"ஏன்'பா? என்ன வந்தது உனக்கு இப்போ?"

"இன்று உங்கம்மா நடிக்கும் புதுப் படம் ஆரம்பம். மறந்து விட்டாயா? முதல் நாள், முதல் ஷோ தவறலாமா என்ன?"

"ம்-உம்-வகுப்பு என்னடா ஆவது?"

"பெரிய வகுப்பு. பாதி நாள்தான்டிமிக்கி கொடுப்போமே!'

செல்வம்! பிரபல சினிமா நடிகைஉமாதேவியின் மகன். இப்போது இன்டர்மீடியட் படித்துக் கொண்டிருக்கிறான். படிப்பிலும்சரிவிளையாட்டிலும் சரி அவன்தான் முதலாவது. செல்வம் என்றாலே, ஆசிரியர்களிலிருந்து, சக மாணவர்கள் வரை அந்தக் காலேஜிலுள்ள யாவருக்குமே ஒரு பெருமை.

அம்மா போலவே இருப்பான் சிரிக்கும் போது! அந்தக்குரலும் கன்னங்களில்தோன்றும்- வெண் மணலில் மழைத் துளியொன்று சிதறும்போது ஏற்படுகிறதே சிறு குழி, அது போன்று—ஆனால் அசைந்தாடும் அந்தக்குழிகளும் உமா தேவியை அப்படியே பிரதி பதிப்பனபோலிருக்கும். நடையுடை பாவனைகளில்



எல்லாம் பெண்மை இல்லை. இருந்தும், பெண்கள் மோகங் கொள்ளும் கவர்ச்சி அவனது முகத்தில். பெண் வேஷம் போட்டால் இவன் வேறு உமாதேவி வேறு என்று வேறு படுத்திக்கூற முடியாது. நல்ல காலம்! உமையொரு பாகன் அவதரிக்க முடியாத கலியுகமாச்சே இது!

மவுண்ட்ரோடு தியேட்டர் நோக்கி கார்வேகமாய் பறந்தது, தண்ணீரின் மேல் மட்டத்தில் நெளிந்து விளையாடும் சிறுமீனைநோக்கி மீன் கொத்திப்பறவை பாய்வதேபோன்று.

உமாதேவி நடிக்கும் "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" என்ற படத்தின் ஆரம்ப நாள். தியேட்டர் ஏக தடபுடலாக அலங்கரிக்கப்பட்டிருந்தது, பல விதமான வளைவுகளில் ஹீரோயினது அங்க அசைவுகள் கவர்ச்சிகரமாகத் தீட்டப்பட்ட பெரிய பெரிய படங்கள். நான் முந்தி, நீ முந்தி என்று விழுந்தடித்துமோதிக் கொண்டு நிற்கும் ஏழைப் பாமர மக்களின் கூட்டம். எள் போட்டால்எள் விழாது என்று வர்ணிப்பார்கள் நாம் அதைச் செய்து காட்டி ருஜுப்படுத்தியதுகிடையாது அதற்குரிய வாய்ப்போ தைரியமோ கூட நமக்கு இல்லை. ஆனால் செல்வம் தனது காரை தியேட்டர் காம்பவுண்டுக்குள் கொண்டு போக முடியவில்லை, அதை நாம் பார்க்க முடிந்தது.

தியேட்டர் மானேஜர் கையில் கழியுடன் ஆர்ப்பாட்டம் செய்யும் காட்சி, போலீஸாரின் பயமுறுத்தல், கடைசியாக இவனுக்கு வழி வகுத்துக் கொடுத்தன.

கூட்டத்தில் யாரோ சிலர் கவனித்து விட்டார்கள்.

"டேய்! அதோ, உமாதேவியின் மகனடா!"

கும்பல் திடீரென்று செல்வத்தின் காரைச் சுற்றி வளைந்தது,

"டேய்! பையன் அவ மாதிரி தாண்டா இருக்கிறான்."

"அடுத்த படத்தில் இவன் தாண்டா ஹீரோ. அவுங்க அம்மாவே ஹீரோயினாய் நடிப்பா?"

—



திடீரென்று ஒரு அதிர்ச்சி—விபரமாக இவ்வார்த்தைகள் செல்வத்தின் காதில் விழாமலிருக்கும்போதே அவனுக்கு என்னவோபோலிருந்தது.

படம் ஆரம்பமாய்விட்டது. மக்களின் உல்லாச வெறி—இரண்டு நிமிடத்துக் கொருமுறை கைதட்டல். ஆரவாரம், காதல் கட்டங்களில் சீட்டியடிப்பு-செல்வத்தின் முன்னால் உட்கார்ந்திருந்த இருவர், புதுமணத் தம்பதிகள் போலிருக்கிறது, படத்தைப் பார்த்தவாறே ஒருவரை யொருவர் அணைத்துக் கொள்ளுகின்றனர்.

"எவ்வளவு தத்ரூபமாக நடிக்கிறாள்-நல்ல அனுபவசாலிபோலிருக்கிறது."

"இவ்வளவு வயசான பிறகு இந்தப் பேரப்பா அவளுக்கு."

"சும்மாதானா? எவ்வளவு அழகா நடிக்கிறா பாருடா!"

"இதற்கு எத்தனை நாள் எத்தனை பேருடன் 'ரிகர்ஸல்' பண்ணினாளோ யாருக்குத்தெரியும்!"

"சினிமா ஸ்டார்னா, அவுங்களுக்கு என்ன அநுபவத்துக்குக் கேட்கவா வேணும்?"

இம்மாதிரியான பேச்சுக்கள் செல்வத்தினருகிலிருப்பவர்களிடமிருந்து வெளிவந்து கொண்டிருந்தன-ஆனால் மெதுவாக!

அவனை யாரென்று தெரிந்த சில இளைஞர்கள், செல்வத்தின் காதில் விழும்படியாகவே இன்னும் மட்டமான பாஷையில் விமர்சித்தனர்.

"ஏய்-இந்த உமாதேவி இப்போ யாரோஒரு டைரக்டர் கூடவல்ல இருக்கிறாளாம்!"

"இந்தப் படத்துக்கும் அவன் தானப்பா டைரக்டரு!"

"எத்தனாவது மாப்பிள்ளையோ!"

"ஆமா-இவனுக்கு இவுங்க அப்பன் யாருன்னாவது தெரியுமாடா?"

இவ்வார்த்தைகள் மிகத்தெளிவாக செல்வத்தின் காதுகளில் விழுந்துகொண்டிருந்தன. அந்த இருளில் கூட நண்பனின் முக மாற்றத்தைக் கவனிக்கத் தவறவில்லை, சுந்தரேசன். இவைகளை அவனுந்தான் கேட்டுக் கொண்டிருக்கிறானே.

"யாரையா இது-வளவளான்னு பேசிக்கிட்டு."

சிறிது கோபமாகவேதான் எச்சரித்தான் சுந்தேரசன்.

அங்கிருந்த மற்றவர்கள்கூட இதை ஆமோதிப்பது போன்ற முணுமுணுப்பு-காசைக் கொடுத்துபடம் பார்க்க வந்தவர்களுக்கு எரிச்சல்வரத்தானே செய்யும். உடன் அங்கே நிசப்தம் நிலவியது.

ஆனால் செல்வத்தின் உள்ளம் அங்கே நிலவிய அமைதி, எல்லோரும் அவனையே கவனிப்பது போன்ற பிரமையை ஏற்படுத்தியது. படத்தைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் எந்தக் காட்சியும் அவனது மனதில் பதியவில்லை. எண்ணங்கள் தியேட்டரின் வெளியே சிறகடித்துப் பறக்க ஆரம்பித்தன.

திடீரென்று எழுந்து வெளியே வந்துவிட்டான். அவனைத் தொடர்ந்து செல்லுவதைத் தவிர நண்பனுக்கும் வேறு வழியில்லாது போயிற்று.

செல்வம் வீட்டிற்கு வரும்போது உமாதேவி ஷூட்டிங்கிலிருந்து இன்னும் திரும்பி வரவில்லை. தன்னறைக்குள்சென்றவன் பேயறைந்தவன் போல் உட்கார்ந்திருந்தான்.

"என்ன தம்பி! காலேஜுக்கு போகலியா?". வேலைக்காரியின் கேள்வி இது.

"ம்."

வேறொன்றும் பதில் சொல்லவில்லை. வேலைக்காரிகாப்பியைக் கொண்டு வந்து மேஜைமீது வைத்துவிட்டுச் சென்றாள்.

காப்பி சில்லிட்டுப் போனது கூட அவனுக்குத் தெரியாது. காலேஜில் கௌரவிக்கப்படும் அவன், விசிறிகளும், கலாமன்றங்களும் வானமளாவத் தூக்கி வைத்துக் கொண்டாடும் அவனது தாய்; இவ்விரண்டு உறவுகளின் அடித்தளத்தில் சலசலத்துக்கொண்டிருக்கும் அவமான அருவி. இத்தனை வருட காலம் அவன் இதை உணரவில்லை. ஒருபுறம் கைதட்டி ஆரவாரம் செய்யும் அதே மக்கள் மறுபுறம் கேலி பேசி அவமானப்படுத்தவும் தவறுவதில்லை, ஏன்? சினிமா நடிகையின் பேரும் புகழும் வெறும் வெளி மயக்குத்தானா! போலிதானா!

பேரும் புகழும் பெற்ற அவனது தாய், தந்தையென்று கருதியிருந்த டைரக்டரின்






வைப்பாட்டியா? டைரக்டர் தன் சொந்தத்தந்தையில்லையா? இத்தனை நாள் இவன் இதை எப்படி உணராமலிருந்தான்!

அவனது தாய் மணமாகாதவள். அவன் ஒரு விபசாரியின் மகன். இது ஊருக்கெல்லாம் தெரிந்திருக்கிறது. ஆனால் அவனுக்குத் தெரியாது இந்த வெளிப்படையான உண்மை. அவமானத்தால் குறுகினான்.

ஐநூறு மைல்களுக்கு அப்பால் ஏதோ ஒரு கிறிஸ்துவ வளர்ப்புப் பள்ளியில் இத்தனை வருடங்கள் படித்து வந்ததின் இரகஸியம் இப்போதுதான் அவனுக்குச் சிறிது சிறிதாக புலப்பட ஆரம்பித்தது.

ஒன்றிரண்டு மாதத்துக்கொருமுறை அவனை வந்து பார்த்துப் போகும் தாய், தந்தையைப்பற்றி ஏன் சாக்கு போக்கு காட்டி மறைத்து வந்தாள் என்பதின் காரணம் இப்போதுதான் புலப்பட ஆரம்பித்தது.

"குப்பம்மா ?"

சாதாரணமாக அழைப்பதாகத்தான் அவனது எண்ணம். ஆனால் வேலைக்காரி பதறியவாறு ஓடி வந்து "என்ன? தம்பீ ?" என்று படபடப்புடன் கேட்டபோதுதான், உணர்ச்சி வேகத்தில் அவன் அலறியிருப்பதாக உணர்ந்தான்.

அதற்கு அவன் பதில்சொல்லவில்லை, வேலைக்காரியின் முகத்தையே உற்று நோக்கினான். அவனது பார்வை அவளை சந்தேகப்பட வைத்தது.

"குப்பம்மா, நீ இந்த வீட்டில் எத்தனை வருடங்களாயிருக்கிறாய் ?"

"ஏன்? பத்துப் பன்னிரண்டு வருஷமாக நான் உங்கம்மா கூடவேதானிருக்கிறேன்."

"அப்போ, இந்த டைரக்டர், அம்மாவோட வந்து?"

வேலைக்காரி பயந்துவிட்டாள். இதுவரை செல்வம் டைரக்டரை அப்பாவென்றுதான் அழைத்து வந்தான். உண்மையை உணர்ந்துவிட்டானா?

குப்பம்மாவின் திகைப்பு செல்வத்தை வெறியனாக்கியது. அவளது தோள்களை பலமாகப் பிடித்து உலுக்கியவாறு "என்னிடம் ஒன்றையும் ஒளிக்காமல் சொல்லி விடு-நான் யார்? இந்த அம்மா யார்! டைரக்டருக்கும் அம்மாவுக்கும் எப்படி உறவு?" என்று படபடவென்று கேட்டான். உண்மையை எப்படியும் தெரிந்து கொள்ளுவது என்ற உறுதி அவனது குரலில் தெரிந்தது.

அவன் தெரிந்து கொண்ட கதை இதுதான். அவனது தாய் உமாதேவி சாதாரண மளிகைக் கடை குமாஸ்தாவின் மனைவி-பெயர் பார்வதி-நன்றாகப் பாடுவாள். ஒருநாள் கணவனுடைய எஜமான் வீட்டு விருந்தொன்றில் பாடினாள். அடிக்கடி மனைவியை அந்த வீட்டுக்குக்கூட்டிப் போக ஆரம்பித்தான். மளிகைக் கடை முதலாளியோ உல்லாசப் பேர்வழி-பெண் பிள்ளை இதைத் தெரிந்து கொள்ளுவதற்கு அதிக நேரமாகவில்லை, பார்வதி மறுப்பாள். உடன் வீட்டில் சண்டையும் ரகளையும் தான்-கணவனே இதற்கு உடன்பாடு என்பதைப் பிறகுதான் தெரிந்து கொண்டாள். நரக வேதனையுடன் நாட்களைப் போக்கி வந்தாள். ஒரு நாள் திடீரென்று அந்த ஊருக்கு வந்திருந்த நாடகக்காரன் ஒருவனுடன் கைக்குழந்தையையும் தூக்கிக் கொண்டு ஓடி விட்டாள். இரண்டு வருடங்களில் புகழ் பெற்ற நாடக நடிகையாக விளங்கினாள். இடையில் அவளுக்கு சினிமாவில்சேர வாய்ப்பு கிடைத்தது.

பிரபல டைரக்டர் மோகனின் தொடர்பும் சேரவே பெரும் புகழும் வந்தது-பணம் மட்டும் வந்து சேராமலா போகும்!

குழந்தை தன்னுடனேயே இருந்தால் தொழிலுக்குக் குந்தகம் ஏற்படுமோ என்ற பயத்தால் ஹாஸ்டலில் சேர்த்துவிட்டாள்.

ஹாஸ்டல் படிப்பு முடிந்தது. காலேஜ் படிப்புக்காக சென்னைக்குஅழைத்துவரப்பட்டான்.

சாரமற்ற இந்தக் கதையைக் கேட்டு உள்ள மொடிந்து போனான் செல்வம்-தலை நிமிர்ந்து நடக்க முடியுமா இனி! பைத்தியக்காரன் யாரோ செய்த குற்றத்துக்கு இவன் இப்படி மனங் குமுறினான்-குற்றமா? இல்லை, இது சகஜமானது - வாழ்க்கையை வளப்படுத்த இன்னும் எவ்வளவோ முறைகளைக் கையாள்கிறார்களே! பணமும் புகழும் வந்து விட்டால், இவைகள் அந்த செல்வாக்கின் வேகத்தில்அடித்






துத்தானே செல்லப்படுகின்றன.

இவன் எவ்வளவு பேரைக் கிண்டல் செய்திருக்கிறான்-ஆனால் அந்த அனுபவம் தனக்கே வருமென்று கனவு கூடக் காணவில்லை.

உமாதேவி டைரக்டர் ஒருவருடன் ஒழுங்கான குடும்ப வாழ்க்கையில் தானே ஈடுபட்டிருக்கிறாள். மற்றவர்களைப் போல் மனம்போன வாழ்வு நடத்தவில்லையே! மேலை நாட்டு நடிக நடிகைகளைப் பற்றி ஏதேதெல்லாமோ கேள்விப்படுகிறாமே! இங்கு அப்படியில்லையே! பலவிதமாக சமாதானம்செய்து கொள்ளுகிறான். இருந்தும் அவமான உணர்ச்சிதான் மேலோங்கி நின்றது. அமுக்க அமுக்கப்பந்து மேலே கிளம்புவதற்கு முயற்சிப்பது போல!

இன்னும் சிறிது நேரத்தில் அவனது தாயும் அந்த டைரக்டரும் வந்து விடுவார்கள். அவர்களுடன் மனம் விட்டுப் பேச வேண்டுமே! அவர்களுடைய அன்புப் பார்வைகளை சகித்துக் கொள்ள வேண்டுமே! நினைக்கும் போது உள்ளமும் உடலும் சேர்ந்து கூசியது.

வெளியே ஓடினான்; "தம்பி!" என்று அலறியவாறு பின்னால் ஓடிவந்த வேலைக்காரி தடுக்க முயற்சித்தாள்.

வாயிலருகே வந்த செல்வம் அங்கேயே நின்று விட்டான். போர்டிகோவின் அருகே காரை நிறுத்திக் கொண்டு, அவனுடைய தாய் யாரோ ஒருவனுடன் இரைந்துபேசிக்கொண்டிருப்பதைக் கண்டான்.

பிச்சைக்காரன் போன்ற தோற்றம். குரலில் கேலியும் கிண்டலும் கலந்திருந்தன. உமாதேவி ஆத்திரத்துடன் கத்தினாள்.

"இனி இங்கே அடிக்கடி வந்து கொண்டிருந்தால் தர்வானை விட்டு வெளியே பிடித்து தள்ளுவேன்."

"அதுகூட எனக்குப்பெருமை தான். போடி-" குடிபோதையிலிருக்கிறான் என்பதைக் காட்டியது அவனது பேச்சு.

"உங்களுக்கு வெட்கமாயில்லையா எங்கிட்ட அடிக்கடிவந்து பணங் கேட்டுக்கொண்டிருப்பதற்கு!"



"என் பெண்டாட்டியிடம் பணம் கேட்க நான் ஏனடி வெட்கப்படணும்!"

"உங்க பெண்டாட்டி! அந்தக் காலம் மலையேறித்தான் பதினைந்து வருஷமாச்சே!"

செல்வம் தன்னையறியாமலேயே அவர்களருகே சென்று கொண்டிருந்தான். குப்பம்மா திக்பிரமை யடைந்து வாயிலண்டையே நின்று விட்டாள்.

"ஒழுங்கா இருக்கும் என் வாழ்க்கையை பழயபடி பாழாக்கிடாதீங்க."

"என்னடி கதை அளக்கிறே புருஷனை விட்டுட்டு எவனோ ஒரு சினிமாக்காரனுடன் இருக்கிறாயே அது தானடி ஒழுங்கான வாழ்க்கை?"

"அதுக்குக் காரணமும் நீங்க தானே! உங்க வேலைத்தரம் உயருவதற்காக அன்று என்னை அந்த மளிகைக் கடை முதலாளியிடம் அனுப்பாமலிருந்தால் எனக்கு இந்த கதி வந்திருக்காதே!"

"நீயும் அப்படி ஒரு நாடகக்காரனுடன் ஓடிப் போகாமலிருந்தால் நான் இப்படி நடுத்தெருவில் நின்று வெட்கப்பட வேண்டி வந்திருக்குமா?"

"பெண்டாட்டியை இன்னொருவனிடம் ஒப்படைக்கும் போது ஏற்படாத மான உணர்ச்சி இப்போது மட்டும் உங்களுக்கு எப்படி வந்தது? தயவு செய்து வெளியே போயிடுங்க. செல்வத்துக்கு இது தெரிந்தால் அப்பறம் நான் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாக வேண்டியது தான்."

"அட என் ராசாத்தி! நீ அவ்வளவு ரோஷமுடையவளா?"

"நீங்க இப்ப வெளியே போறீங்களா இல்லையா!"

ஆத்திரத்தால் சப்தமிட்டாள்.

"நான் போயிடறேன். இன்னும் ஒரு ஐநூறு ரூபாமட்டும் கொடுத்திடு. உடனே நான் போயிடறேன்."

"ஒரு தம்பிடி காசு கூட கொடுக்க மாட்டேன் இனி."

"அப்போ என் மகனையாவது ஒரு தரம் பார்த்துவிட்டு போயிடறேன்."

"ஆ!"

"ஆமா பார்வதி! என்ன இருந்தாலும் அவன் என்னுடைய பையன் இல்லையா? உனக்கு மட்டும் தானா; எனக்கும் ஆசையிருக்காதா என்ன?"

"என் உயிர் போனாலும் சரி, நீங்க அவனை சந்திக்க விடமாட்டேன்."

"அப்படீன்னா பணமாவது கொடுத்து விடு."

"பணந்தானே, எவ்வளவு வேண்டுமானாலும் கொடுத்து விடுகிறேன். போய் விடுங்க. கேவலமான இந்தத் தாயின் வாழ்க்கையை என் செல்வம் தெரிந்து கொள்ளாமலே யிருக்கட்டும், என்ன வேண்டுமானாலும் தருகிறேன், நீங்கள் மட்டும் அவனைப் பார்க்காமலிருந்தால் போதும். உங்களை யாரென்று அவனிடம் காட்டிக் கொள்ளாமலிருந்தால் போதும்."

உமாதேவியின் உடம்பு முழுவதும் நடுங்கிக் கொண்டிருந்தது. வார்த்தைகள் அவளது கண்டத்தை விட்டு வெளிவர முடியாமல் தவித்தன. காரின் மீது சாய்ந்தபடி முகம்புதைத்து அழுதாள்.

அந்தக் குடிகாரக் கணவன் முகத்தில் இரக்கமோ பச்சாத்தாபமோ சிறிதும் ஏற்படவில்லை. அவள் துடிப்பதை பார்த்துக் கொண்டிருப்பதில் ஒரு தனி ஆர்வங் காட்டினான். வெள்ளாட்டின் நடுக்கங்கண்டு

நாக்கை நீட்டி வாலைச் சுழற்றும் வேங்கைப்புலி போல.

இவ்வளவையும் கவனித்துக் கொண்டு தானிருந்தான் செல்வம். யாரை நினைத்து அவமானத்தால் கூனிக்குறுகி நின்ருனே, அந்த அன்புள்ளம் தன்னெருவனுக்காக எவ்வளவு பெரிய அவமானத்தை பொறுத்துக் கொண்டிருக்கிறது என்பதை எண்ணினுன். கோழையும் பஞ்சையுமாகிய ஒரு கணவனுல் படுபாதாளத்துக்குத் தள்ளப்பட்ட ஒரு பேதைத்தாய் தன்னெரு மகனின் எதிர்கால வாழ்வுக்காக வேண்டி எத்தனை பெரிய அவமானத்தைச்சகித்து வந்திருக்கிருள். இதற்காக ஒவ்வொரு நாளும் பயந்து பயந்து செத்திருக்கிருள் இந்தக் குடிகாரனைக் கண்டு. எவ்வளவு கீழ்த்தரமானவனு யிருக்கிருன் தன் தந்தை. இவனேடு எப்படி வாழ்க்கை நடத்தியிருக்க முடியும் ஒரு மனைவி--மனைவியை விபசாரியாக்கி, அந்தத் தொழிலில் கமிஷன் பெறும் ஒரு மனிதன் தன் தந்தை—தன்னைக் காட்டித்தன் தாயையே மிரட்டுகிருன் அந்தக் கொடியவன். வெறுப்பும் ஆத்திரமும் கலந்து வெளிவந்தன.

உமாதேவி தனது கைப்பையைத்திறந்து ஐந்து நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து நீட்டினுள் அந்தக்குடிகாரக்கணவனிடம்.

திடீரென்று குறுக்கே பாய்ந்து அந்த நோட்டுகளைப் பிடுங்கிக் கொண்டான் செல்வம்,

"கொடுக்காதே அம்மா! ஒரு செல்லாக்காசு கூட கொடுக்காதே."

இதைச் சிறிதும் எதிர்பார்க்காத உமாதேவி அப்படியே அசைவற்று நின்று விட்டாள். அந்தக் குமாஸ்தா கூட எதிர்பார்க்கவில்லை தான். இருந்தும் குடிபோதை அவனைச் சமாளிக்கும்படிச்செய்து விட்டது.

"அட என் மகனு? நான் தாண்டா உன் அப்பா!"

"போ வெளியே—நீ என் தந்தையுமல்ல—நான் உன் மகனுமல்ல—போ இங்கிருந்து."

"ஏன்'பா இப்படிக்கோபப்படுகிறே! முதல்லே உங்கம்மா கொடுத்த ரூபாயைக் கொடுத்து விடு, நான் போயிடறேன்,"

"ரூபாயும் கிடையாது-ஒண்ணும் கிடையாது — போய்யா வெளியே."

"டேய் மரியாதையாய் பேசு. என் ரூபாயையும் பிடுங்கிக் கொண்டு என்னையும் விரட்டுகிறீயா! அம்மாவைப் போலத் தாண்டா இருக்கிருன் பிள்ளையும்,"

"இப்போ வெளியே போகிருயா இல்லையா? மரியாதை கெட்டுப் போகும்."

உரத்துக் கத்தினுன் செல்வம்.

"அட துள்ளறதைப் பாரு—பொடிப்பய—விபசாரி பெற்ற பிள்ளை தானே, மரியாதை தெரியவா போகுது!"

இதைச் சொல்லி முடித்தானே இல்லையோ, அவனது கன்னத்தில் பளார் என்று அடி விழுந்தது.

"செல்வம்!" என்று அலறினுள் உமாதேவி.

கேட்டின் வெளிப்புறமாகக் கையைத் தூண்டிக் காண்பித்துக் கொண்டு நின்ருன் செல்வம். குமாஸ்தாவின் குடிபோதை கூடத் தெளிந்து விட்டது. அவமான உணர்ச்சி முதன் முறையாக இப்போது தான் அவனது முகத்தில் பிரதிபலித்தது.

மகனை ஏறிட்டு நோக்கினுன். அவ்விளங் கண்களில் தோன்றிய வெறுப்புணர்ச்சி அக்குடிகாரத் தந்தையை ஒரு கலக்குக் கலக்கி விட்டது. உணர்வழிந்து போன சவத்தின் சாயல் முகத்தில் படர்ந்தது. மனைவியைக் கூடத் திரும்பிப் பார்க்காது வெளியே ஓடினுன்.



ஏதோ சப்தம் கெட்டு செல்வம் திரும்பிப் பார்த்தான். காரின் மீது சாய்ந்து நின்று கொண்டிருந்த உமாதேவி மயங்கிக்கீழே விழுந்து கொண்டிருந்தாள்.

"அம்மா!"

ஓடிச் சென்று அவளைத் தாங்கிப்பிடித்தான். வேலைக்காரி குப்பம்மா அருகில் ஓடி வந்தாள்.

இரவு முழுவதும் உமாதேவி கண் திறக்கவே இல்லை. டாக்டர் வரவழைக்கப் பட்டார்—திரையுலகப் பெருமக்களெல்லாம் திரண்டு வந்தனர் செய்தி கேட்டு — அவர்களுக் கல்லவா தெரியும் உமா தேவியைப் பணயமாக வைத்து எத்தனை லக்ஷம் ரூபாய் முடக்கப் பட்டிருக்கின்றன என்பது?

"மன அதிர்ச்சி தான் காரணம்—பயப்படத் தேவையில்லை" என்று தைரியமளித்துச் சென்ருர் டாக்டர்.

செல்வம் தாயினருகிலிருந்து அகலவேயில்லை. அவளது முகத்தையே ஆவலுடன் கவனித்துக் கொண்டிருந்தான். தாயின் முகத்தில் சிறிது சலனமாவது ஏற்படாதா என்ற ஏக்கம்அவனது உள்ளத்தில். டைரக்டர் மோகன் அருகே வந்து அவனைச் சமாதானம்செய்தார். இப்போது செல்வம் அவரைக் கண்டு வெட்க மடையவில்லை. எப்போதும் போல் அப்பாவென்றே அழைத்தான். ஆனுல் அந்த இடத்தை விட்டு மட்டும் அப்புறம் நகர மறுத்து விட்டான்.

கொஞ்ச நேரத்துக்கு முன்னுல் தான் தாயின் கண்களில் படாதவாறு ஒளிந்து ஓட வேண்டுமென்று நினைத்தான். அதே கண்கள் தன்னை ஆவலுடன் நோக்காதா என்று ஏங்குகிருன் இப்போது!

தான் ஒரு விபசாரியின் மகன் என்று எண்ணி யிருந்தான்.

இல்லை. அவன் விபசாரியின் மகன் இல்லை. விபசாரியாக ஆக்கப்பட்டவளின் மகன்.

தனது செல்வமகன் அவமானத்தால் குறுகி அழக்கூடாதே என்று ஏதோ ஒரு குடிகார

னிடம் தினம் தினம் பயந்து செத்துக் கொண்டிருந்திருக்கிறாள் இந்தத்தாய். இது சாரமற்றது; சகஜம் என்று மற்றவர்கள் போல் ஒதுக்கித் தள்ளாமல் தன்னைத்தானே வருத்திக்கொண்டு வந்திருக்கிறாள் நாட்டு மக்கள் போற்றிப் புகழும் இந்த திரையுலக நட்சத்திரம்.

உமாதேவி கண்களைத்திறந்து பார்க்கும்போதுஆவல் நிறைந்த தனது அருமைச் செல்வனின் முகத்தைத்தான் கண்டாள்.

செல்வம் அந்த முகத்தை பலவந்தமாய் தன் பக்கமாகத்திருப்பினான்.

"ஏன் அம்மா! நீ என்னைப் பார்க்கக் கூடாத அளவு நான் என்னம்மா கொடுமை செய்தேன். ஏம்மா நீ என்னைப் பார்க்க வெட்கப்படுகிறாய் ஒரு சிறு விநாடி நேரம் நான் ஏமாந்து விட்டேன், அவ்வளவுதான். இந்தத்தாயும் மகனும் மனம் தெரிந்து எந்தவிதத் தவறும் செய்யவில்லை. அப்படியிருக்கும்போது நாம் ஏம்மா வெட்கப் படவேண்டும். உன் மகன் என்பதை நினைத்து நான் பெருமைப் படுகிறேன் அம்மா!"

உணர்ச்சி வேகத்தில் அன்பையெல்லாம் கொட்டியளந்தான். ஏதேதெல்லாமோ சொல்ல நினைத்தான்-வார்த்தைகள் தான் கிடைக்கவில்லை.

உமாதேவி மகனைக் கட்டிக் கொண்டு ஓவென்று கதறினாள்,

அருகில் நின்று இதைக் கவனித்துக்கொண்டிருந்த மோகன் தனது கண்களைத் துடைத்துக் கொண்டார்.

யாரோ ஒரு பிச்சைக்காரன் கடலில் விழுந்து செத்து விட்டான் என்ற செய்தி காலைப் பத்திரிகையில் வெளிவந்தது.

*



"உள்ளத்திற் கள்ளமில்லா
உன் சிரிப்பைக் காணுங்கால்

வெள்ளம்போல் இன்பம்
விரையுதடா என்மனதில்!"

புகைப்படம்; பி. குருமூர்த்தி.

# தெய்வ (அ) நீதி!



தாய்ப் பன்றி இறந்ததால் பசியால் தவித்த 32 பன்றிக் குட்டிகளிடம் பரிதாபப் பட்டு. தானே தாய்ப் பன்றி யாக மாறிப் பாலூட்டி வளர்த்தானும் பரம சிவன்!...

...ஆனுல் அதே பரமசிவன் தான், சிறுத்தொண்ட நாய ஞரைச் சோதிக்க அவரது ஒரே மகனை, தாய் பிடித்தி ருக்க தந்தை யறுக்கக் கறி சமைத்துப் படைக்கச் சொல்லியிருக்கிருன்!





சுந்தரமூர்த்தி நாயனாருக்கும் அவரது ஆசை நாயகி, தாசி பரவை நாச்சியாருக்கும் ஊடல் ஏற்பட்டபோது தூது சென்றானும் சிவ பெருமான்!...

...ஆனால் இயற்பகை நாயனாரின் பக்தியைப் பரிசோதிக்க, அவர் மனைவியைத் தன்னோடு அனுப்பச் சொன்னானும். அதே சிவபெருமான்!





மகாவிஷ்ணு, இராமாவதா
ரத்தில் ஏகபத்தினி விரத
னாம்; தன்னை விரும்பிய
ஒரே குற்றத்துக்காகச்
சூர்ப்பநகையைச் சித்திர
வதை செய்வித்தானாம்!...

...ஆனால் கிருஷ்ணவ
தாரத்திலோ அதே விஷ்ணு,
மாற்றான் மனைவி ராதை,
மற்றும் எண்ணற்ற
கோபிகையருடன் கூடிக்
கும்மாளம் போட்டானாம்!





துச்சாதனனால் துகிலுரியப்பட்ட திரௌபதியின் மானத்தைக் காக்கப் புடவைகளைத் தந்துகொண்டேயிருந்தானும், கிருஷ்ணன்!...

...ஆனால், அதே கிருஷ்ணன்தான் குளித்துக் கொண்டிருந்த கோபியரின் சேலைகளைத் திருடி, மரத்தின் மேல் ஏறிக்கொண்டு, நிர்வாணமாய்க் கரைக்கு வந்த பின் திருப்பித் தந்தானும்!





இளவேனிற்காலம்; இருளை விலக்கி எழும் ஒளிப்பிழம்பு—உதய சூரியன், ஓர் அழகிய குன்றமலை மீது அடர்ந்திருக்கும் குளிர் மரங்கள் மென் காற்றால் ஊஞ்சல் போல் அசைந்து கொடுக்க, அதன் மேல் நின்று

# இளவரசியின் காதல்

நிலப்பரப்பை எட்டிப் பார்க்கும் நேரம், அச்சிறு மலைச் சரிவின் அடித் தளத்தில் தாமரைத் தடாகம் ஒன்று. தாமரையைப் போன்ற வடிவத்திலே அமைக்கப்பட்டிருந்த அந்த நீர்த் தேக்கத்தில், அதுவரை கூம்பிக் கிடந்த கமலங்கள் உச்சியிலே பவனி வரும் காதலனைக் காணக் கண்கள் விரித்தன. நாற்புறமும் கனி குலுங்கும் மரங்களும், மணமெழுப்பிப் பூச்சொரியும் செடிகளும், பள்ளி யெழுச்சி பாடிப் பறக்கும் புள்ளினங்கள் சிதறடிக்கும் தாளச் சேர்க்கையும் கவிதைக்கும் காதலர்க்கும் புத்துணர்வு புகுத்தும் வாய்ப்பில் இருந்தன.

அந்த நேரத்தில் அங்கொரு மனிதக் குரலிலிருந்து இன்னிசை எழுந்தது.

"அன்னை உன் மடியில்
வண்ணம் பல விளையாடுதே!—ஒளி
அண்ணல் உதயம் இல்லையெனில்—உன்
வண்ணம் எல்லாம் இருளாகுதே!"



சக்தி



இடத்திற் கேற்ப உதயமானது இப்பாடல் அவனுக்கு. அவன் ஒருகவி—காளைப் பருவத்தான்—கல்யாணமாகாதவன். அந்தக் காலமானால் அவனைப் பார்த்து அம்பிகாபதியோ வென்று சந்தேகப்பட்டிருக்கலாம். ஆனால் அவன் பெயர் மதுக்கண்ணன். தேமதுரப் பண்ணமைத்து இன்பமுறத் தானே இசைக்கும் திறத்தினன். பாடிக்கொண்டே தடாகத்திடம் வந்துவிட்டான். எண்ணி நினைவு படுத்திக்கொள்ள முடியாத அளவில் பாட்டின் கற்பனை மிதமிஞ்சி யிருந்தது. ஆனால் அங்கு கண்ட வேறோர் அழகுக் காட்சி அவன் பாடலுக்கு முற்றுப்புள்ளியாகி விட்டது.

நீரின் நடுவே ஒரு சிலைதான் அவன் கண்டது. அது அமைந்திருந்த விதம் உண்மையிலேயே அதிசயமானதுதான். சுமார் எட்டு தாமரை மலர்களை வட்டமாக வைத்து. அதன் நடுவே ஓர் அழகிய மங்கையின் தலை, ராணிக் கமலம்போல் அமைக்கப்பட்டிருந்தது. கூம்பிய இரு குமுதம்போல் கண்கள் மட்டும் காம மயக்கத்தால் மூடப்பட்டுக் கிடந்தன. மதுக்கண்ணனுக்குக் கண்கள் வேலை செய்யவில்லை, வெறித்துப் பார்த்துக்கொண்டே யிருந்தான். இவ்வளவு திறமையோடு கற்பனையின் எல்லைவரை சென்று அச் சிலையைச் சமைத்துத் தண்ணீரில் விளையாடவிட்ட சிற்பியை எண்ணி, எண்ணித் தன்னுடலின் வலுவைக் குறைத்துக்கொண்டே யிருந்தான். அதாவது உருகும் நிலை அவனுக்கு.

"சிற்பி செதுக்காத சிலைகள்
உண்டோ—அவன்
சிந்தனைக் கெட்டாத அழகும்
உண்டோ—தமிழ் (சிற்பி)

கால்களை நீரிலாட்டிக்கொண்டு கரையில் அமர்ந்த மதுக்கண்ணன் சிலை கண்டு இசைக்கத் தொடங்கிய பாடல் அது. காவிய வளர்ச்சியில் கருத்தைச் செலுத்திக் கண்ணை இறுக்கி இசைத்துக் கொண்டிருந்தவன் தெளிவு பெற்று விழித்தான். தமிழிசைக்கு உருகிக் கற்சிலை உயிர் பெற்றதாவென அலறிவிட்டான். தன்னை அடுத்து வந்திருந்த வண்ணச் சிலையின் செவ்விதழ் திறந்தது. தேன் துளி அரும்பித் துடிதுடிக்கத் தொடங்கியது. மதுக் கண்ணன் புருவம் உயர்த்தினன். தன் புத்தி பேதலித்ததோ வெனத் தலையைக் குலுக்கி மூளையை ஒரு முறை சரி செய்துகொண்டான்.

கற்சிலையா, உயிர்க்கன்னிகையாவெனக் காண எண்ணினன், பரீட்சை தொடங்கியது, விரிந்த சிலையின் இதழோடு தன் னிதழைப் பொருத்தினன். உடல் புல்லரித்தது. உயிர் பறிபோனது, சிலையல்ல, ஆடவரின் உயிர் பறிக்கும் கலை கண்ட ஆரணங்கெனத் தெளிவு பெற்றான். அவளை அப்படியே வாரிக் கரைமேல் நிறுத்தினன்.

அது சமயம் திடீரென ராஜகுருவும் அரசனும் தோன்றினர்கள், 'மகளே வஸந்தி!' என்று அலறினர் அரச குரு. காடெல்லாம் அவர் கர்ஜனை எதிரொலித்தது. ஆனால் கட்டுண்டுகிடந்த காதலர்களின் காது ஏனோ செவிடாகிவிட்டதென அறிய முடியவில்லை. கைத்தடிகொண்டு கவிஞனை எழுப்பினர்—புடைத்தார் குரு. மண்ணுலகிற்குத் திரும்பினன் மதுக்கண்ணன். கலக்கப்பட்ட நிலை கண்டு சிறினன். (அடுத்து கொலு மண்டபத்தி)

அரசன் : குருதேவா! தங்கள் சித்தப்படி இக் கவிஞனைச் சிரச்சேதம் செய்ய நான் தயார். அதற்கு முன், மௌனம் சாதிக்கும் தங்கள் மகளின் மனக் கருத்தை அறிவது நீதியல்லவா?

குரு: தேவையில்லை. உலகறியா மங்கை யென்மகள். அவளை அல்லல் படுத்திய கயவன் இவன். அத்துடன் என் மகள் உன் மகன் இளவரசனுக்கு உரியவளென நாம் ஒப்பந்தம் செய்துள்ளோம். அரியாசனமேற வேண்டியவளை நான் ஆண்டிக்கு இரையாக்க முடியாது.

வஸந்தி ; தந்தையே! அரசே! வாதங்கள் நிற்கட்டும், நான் பேசுகிறேன், எனக்குச் சரிவர மறுமொழி கிடைத்தால் மற்றதைப் பிறகு யோசிக்கலாம். கேட்கட்டுமா?

அரசன்; கேள் வஸந்தி!

வஸந்தி; என்னை மனைவியாக ஏற்றுக் கொள்ள இளவரசர் இஷ்டப்படுகிறாரா? கேளுங்கள்!

குரு: கேட்பதென்ன? இளவரசர் என்றோ இவளை மணக்கக் காத்திருக்கிறார்.

வஸந்தி: இன்று இஷ்டமா? அதைக் கேட்டால் போதும்.

குரு: இளவரசா! 'ஆம்' என்று சொல்.

வஸந்தி: அவர் இன்பத்துக்கு என் தந்தை உத்தரவாதமளித்து நிற்பது சிரிப்புக்கிடமானது. அவருக்குப் பயந்து இளவரசர் 'ஆம்' என்றால், அந்த மான ஈனச் செயலுக்கு நான் தலைகுனிய வேண்டியிருக்கும், காரணம், மற்றொரு ஆடவன் என்னை ஏற்றுக் கொள்ள இணங்குவாரானால், அவர் மரபைக் குறித்துச் சந்தேகப்பட ஏதுவாகும். எதையும் சிந்தித்து அரசர் மறுமொழி கூறக் கோருகிறேன்.

அரசர்; மகளே! இக்கட்டான நிலையை ஏற்படுத்தி என் குலத்தைக் குறைக்காதே! என் மரபு தன் மானமுள்ள மறக்குல வழி வந்தது. ராஜகுரு அவர்கள் சிந்திக்க வேண்டுகிறேன்.

குரு; மன்னா! உன்னை மாயை மறைக்கிறது. திடமாக யிரு. இந்த வீண் பூசலுக்கு இப்போது இடமில்லை. இளவரசனுக்குத்தான் இவள். இவள் அரசி ஆவதை மறுக்க உனக்குத் துணிவு இருக்கிறதா? அதைக் கூறு.

அரசன்: மகளே! (மன்னன் மயங்கிச் சாய்கிறான்)

வஸந்தி: பெருமக்களே! அனைவரும் என்னை மன்னிக்க வேண்டும். என் தந்தையான ராஜகுரு அவர்களுக்கு இழுக்

கைத் தேடிக் கொடுக்க எனக்கு மனமில்லை. என்றாலும் பெண்ணுக்குக் காதலென்பது சாதலைவிட உயர்ந்தது. என் காதல் பணயமாக்கப்பட்டிருக்கும் இந்த வேளையில், உலகில் நான் வேறெதைப்பற்றியும் கவலைப்படக்கூடாதல்லவா? அதனால் சில உண்மைகளை இந்த அவைக்கு எடுத்துக் காட்டி அரசரையும் என்னையும் காத்துக் கொள்ள விரும்புகிறேன்.

கேளுங்கள்! இதுவரை இந்நாடு கருதியிருப்பது போல நான் ராஜகுருவின் மகள் அல்ல. அவர் என் தந்தையுமல்ல. நான் அரசரின் மகள்! ஏன் திகைக்கிறீர்கள்! ஆத்திரப்படாமல் அமைதியாக மற்றதையும் கேளுங்கள். வெகு நாட்கள் மகப் பேறற்றிருந்தமன்னருக்கு நான் மகளாய்ப் பிறந்தேன். அதுபோதே, ராஜகுருவுக்கும் இந்த இளவரசர் மகனாய் ஜனித்தார். என் தந்தையை மாயை காட்டி ஆட்டிப் படைத்து வந்த குருநாதர், தன் வம்சத்திற்கே இவ்வரசையும் உரிமையாக்க விரும்பினார். ''பெண் அரசாள்வது தெய்வ நீதியல்ல- ஆகையால் சிசுக்களைமாற்றிவிட வேண்டும்,''என்று என் தந்தையான அரசரை அச்சப்படுத்தித் தன் எண்ணத்தை நிறைவேற்ற முனைந்தார். அரசர் செயலற்றுப் போயினும், தன் மகள் அரசற்றுப் போவதைத் தாங்க முடியாது துடித்தார். அதற்கும் ஒரு சாணக்கிய வழி கண்டு கூறினார் குருதேவர். அதன்படி அவர் மகளாக வளரும் நான், அரசர் மகனாக வளரும் அவர் மகனுக்கே மனையாளாக்கப்பட்டு, அதன் பிறகு நானும் அவர் மகனுமே அரசன் அரசியாக இந்த நாட்டை ஆளவேண்டுமென்று ஒப்பந்தம் செய்து அரசரைச் சாந்தப் படுத்தி விட்டார்.

மகள் பாசத்தைக்காட்டியே என் தந்தையான மன்னரை இதுவரை ஆட்டிப் படைத்தது போதாதென்று இன்றும் அந்தப் பாசக் கயிற்றைக் காட்டித்தான் அரசரை மிரட்டினார். அதனால்தான் அசர் மயக்குற்றதும். அதோடு குருநாதரின் இனவழக்கப்படி கற்பிழந்த மங்கையாயினும், தன் மகனை இளவரசன் அவளை அடைந்து சுகம்பெறட்டுமென வாதித்தும் நின்றார். ஆனால் மறக்குல மன்னன் மகளாகிய நான் ஏமாறமாட்டேனென்பதை அவர் எதிர் பார்த்திருக்க முடியாதுதான்.

அந்தோ அவருக்காக இரக்கப்படுகிறேன்.

இன்று முதல்நானும் என் காதலர் மதுக் கண்ணருமே இவ்வரசுக்குரியவர்களாக வாழ்வோமென்பதை உங்களிடைக் கூறிக் கொள்கிறேன்: வணக்கம்.

* * *

''டுமீர்! டுமீர்! டுமீர்!''

இது நாள்வரை வாழ்ந்த இளவரசரும் அவர் தந்தை குருதேவரும் புல்லேந்திப் புறப்பட, உண்மையான அரசகுலம், உதய சூரியன் புறப்படுங் காலை அரியாசன மேறுவதை முரசொலித்துக் காட்டிற்று நாட்டிற்கு!

## தைமூர் தந்த தேநீர்ப் பழக்கம்!

இன்று ஆசியா வெங்கும் எந்தவித வேறுபாடுமின்றி, எல்லோராலும் கைக் கொள்ளப்பட்டிருக்கும் தேநீர் அருந்தும் பழக்கம் எப்படி ஏற்பட்டது என்பது ஒரு விசித்திரமான கதை! அதுவும் அந்தப் பழக்கத்தை உண்டாக்கி வைத்த இடம் இந்த நாடுதான் என்ற உண்மையும் வியப்பைத்தான் தருகிறது.

கொடுமைக்குப் பெயர் போன மங்கோலிய மாவீரன் தைமூர் லட்சக் கணக்கான மக்களைக் கொன்று குவித்திருக்கிறான். இருந்தும் சுகாதாரத்தைப் பொறுத்தவரையில் அவன் அன்று கைக் கொண்ட முறை இன்று எல்லோரையும்திகைப்பிலாழ்த்துகிறது.

தன் படை வீரர்கள் எவரும் தண்ணீரைக் கொதிக்க வைக்காமல்அருந்தக்கூடாது என்று கண்டிப்பாக உத்தரவிட்டிருந்தான். இதனால் அவன் படை வீரர்கள் உயிர்



குடிக்கும் தொத்து வியாதியிலிருந்து தப்பித்தனர்.

கொதிக்க வைத்த தண்ணீரில் சுவை இருக்காதல்லவா?

அதனால் தைமூரின்சிப்பாய்கள் அதிலே டீ இலையைக் கலந்து கொண்டனர். இந்தப் பழக்கத்தால் தேநீர் குடி பரவ ஆரம்பித்தது.

அதுமட்டுமா? தைமூரும் அவனது பட்டாளமும் அழிந்து விட்டனர். ஆனால் அவன் சென்ற விடமெங்கும் தேநீர் குடிக்கும் பழக்கத்தைக் கைக்கொண்டனர்.

இன்று ஆசியாவின் பெரும் பகுதியில் 'தேநீர்ப் பழக்கம்' இருந்து வருகிறதென்றால் அதற்குக் காரணம் தைமூர் தான் என்பதை மறந்துவிடாதீர்கள்!



மலேயா சிங்கப்பூர் பகுதிகளில் எங்கள் குழுவினரின் நாடகங்களை நடத்தி கடல் கடந்த தமிழர்களுக்குக் கருத்து விருந்தளிப்பதன் மூலம் களிப்பூட்ட வேண்டுமென்று தோழர் கும்பலிங்கம் சென்னைக்கு வந்திருந்து, எங்கள் குழுவினர் புறப்படுவதற்கு ஆவன செய்தார்.

3-8-56 அன்று காலை 10-45 மணிக்கு மீனம்பாக்கம் நிலையத்தை விட்டு எங்கள் தனி விமானம் புறப்பட்டது. அங்கு எங்களை வழியனுப்பி வைக்க வந்திருந்த ஏராளமான இயக்கத் தோழர்களும், இதர நண்பர்களும் பார்வைக்கு மறைய ஆரம்பித்தனர். விமானம் முன்னோக்கித்தான் பறந்து கொண்டிருந்தது, ஆனால் என் மனமோ பின்னோக்கிச் சென்னைககே திரும்பிவிட்டது. இவ்வளவு நாள் என்னைப் பிரிந்திருக்க வேண்டுமே

# மலேயாவில்

என்ற ஏக்கத்துடன், அடுத்த மாதம் தாயாகும் நிலையில், கண்ணீரும் கவலையுமாய் நிற்கும் கல்யாணி (என் மனைவி)யும், குழந்தைகளும் ஒருவர்பின் ஒருவராய் மனக்கண் முன் தோன்றி மறையலாயினர். 25-7-56 அன்று மாலை சென்னை உட்லண்ட்ஸில் எனது நடிக நண்பர்கள் எஸ். எஸ். ராஜேந்திரன் குழுவினர் அளித்த பிரிவுபசார விருந்தின் போது எனதருமை அறிஞர் அண்ணா அவர்களும், மற்ற தலைவர்களும், நடிகத் தோழர்களும் அளித்த அறிவுரைகள் காதுகளில் ரீங்காரம் செய்து கொண்டேயிருந்தன.

நீண்டதூர விமானப் பிரயாணம் இதுவே எனக்கு முதல் தடவை. அந்த எண்ணம் வேறு, என் சிந்தையைக் குழப்பிக் கொண்டிருந்தது, அதே நேரத்தில், இடி இடித்த காரணத்தால் விமானத்திற்கு பலத்த அதிர்ச்சி ஏற்படவே அனைவரும் பயந்து விட்டோம். யாரோ ஒரு அம்மையார் அழுவதற்கே ஆரம்பித்து விட்டார்கள். பிறகு ஒருவாறு சமாளித்துக் கொண்டோம். சரியாக இரவு எட்டு மணிக்கு (அப்போது நம் ஊரில் மாலை ஆறு மணியாக இருக்கும்!) சிங்கப்பூர் விமான நிலையம் சேர்ந்தோம், கழகத் தோழர்களும், நண்பர்களும் பெருவாரியாய் உள்ளே வந்திருந்து வரவேற்றனர். வெளியிலே வந்து பார்த்தால், அனுமதி பெற முடியாத பொதுமக்கள் எண்ணற்றவர்கள் மலர் மாலைகளுடனும் மகிழ்ச்சி ஆரவாரத்தோடும் எங்களுக்கு வரவேற்பு வழங்கினார்கள்.

# மூன்று மாதம்!

சிங்கப்பூரில் பத்து நாட்கள் வரை தங்கியிருந்தோம். 'ஸீ ஹோட்டல்' என்ற விடுதியில், நாடகம் நடத்தியது போக, ஓய்வு கிடைத்த போது புத்தர் கோயில் ஒன்றையும், ஏராளமான பொருட் செலவில் புதிதாகக் கட்டியுள்ள பாலம் ஒன்றையும் பார்வையிட்டோம். அங்கிருக்கும் போதும், நம் ஊரைப்போலவே தாராளமாய் வெளியில் உலவவோ அந்த மாநகரின் அழகைப் பார்க்கவோ முடியாமற் போய்விட்டது. சினிமா நடிகர்களுக்கு ஏற்படுகின்ற அந்தச் சிரமம் சிங்கை நகரிலும் இல்லாது போகவில்லை. அன்புத் தொல்லைகள் அவ்வளவு!

அடுத்தபடியாகக் கோலாலம்பூர் சென்றோம். சுமார் 15 நாடகங்கள் வரையில் அங்கே நடத்தினோம். நாடகம் நடந்த 'சின்ஹூஸ்டேடியம்' மிகப் பிரமாண்டமான வட்டவடிவமுள்ள அழகான தியேட்டர். அதன் அருகில் மிகப்பெரிய நீச்சல் குளம் ஒன்றும் இருக்கிறது. கோலாலம்பூரில் இருந்தவரையில் நடைபெற்ற வரவேற்பு விருந்துகளுக்குக் கணக்கேயில்லை. உபசரிப்பதில் நமது தமிழர்களுக்கு இணையேது? அதிலும் குறிப்பிடத் தக்க முறையிலிருந்தது. கோலக்கிள்ளானிலும், அநேகமாக எல்லா ஊர்களிலுமே திராவிடர் கழகத் தோழர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தோழர்களும் இணைந்திருந்தே எல்லா ஏற்பாடுகளையும் செய்தனர், அதைப் பார்த்ததும், நமது தாயகத்தின் நிலைமையை எண்ணிப் பெருமூச்சு விட்டேன்.

அங்கே, பொதுக் கூட்டங்கள் எதிலும் நான் தனியே கலந்து கொள்ளவில்லை. ஆனால் விருந்து மன்றம் ஒவ்வொன்றிலும் பொதுக் கூட்டம் போலவே நமது தாயக நிலை. இயக்கக் கருத்துகள் பற்றிச் சொற்பொழி வாற்றினேன்.

கோலாலம்பூரிலிருந்து எட்டு மைல் தூரத்திலுள்ள ஒங்பாட் ஈயச் சுரங்கத்தைப் போய்ப் பார்த்து வந்தோம். இது உலகப்பிரசித்தி பெற்றதாம். இதற்கு "ஓப்பன் காஸ்ட் மைன்" என்று பெயராம். அதாவது திறந்த வயல் வெளி போன்ற இடங்களில் தண்ணீருடன் கலந்து மணல்போன்ற ஈயத்துகள் இறைக்கப் பட்டு. தண்ணீர் வடிகட்டப்படுகிறது. ஈயம் அடியில் தங்கி விடுகிறது. சீனர்கள் அநேகமாய் இம்முறையைப் பின்பற்றித்தான் ஈயம் தோண்டுகின்றனர்.

ஈயத்தைத்தவிர மலாய் நாட்டின் இன்னொரு சொத்து ரப்பர். சவுக்கு மரத்தைப் போலவே, இன்னுங் கொஞ்சம் பருமனாய். பெரிய இலைகளுடன் உயர்ந்து வளரும் ரப்பர் மரங்கள் தான், பத்தி பத்திகளாய் மலைச்சரிவுகள் தோறும் பார்க்குமிடமெல்லாம் காட்சி தருகின்றன. ரப்பர் பால் எடுக்குந்தொழில் தான் மிக முக்கியமான தொழிலாம். அதில் ஈடுபட்டுள்ளவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள்தான். ஒரு தொழிலாளி நாளொன்றுக்கு சுமார் 350 மரங்களில் பால் எடுக்க வேண்டுமாம். சிறு சிறு கொட்டாங்கச்சி போன்ற கிண்ணங்களை மரத்தோடு கட்டி விடுகிறார்கள். பட்டையை வளைவாக செதுக்கியதும் பால் வடிய ஆரம்பிக்கிறது. மறுநாள் காலையில் எடுக்கவரும் போது. பசும்பால் நிறமாய்க் குழம்பு போல் ரப்பர் பால் நிறைந்து விடுகிறது. அதைக் கொண்டுதான் ரப்பர் சாமான்கள் அனைத்தும் செய்கிறார்கள். ரப்பர் தொழிற்சாலை ஈயத் தொழிற்சாலை இரண்டும் மலாயா நாடு முழுதும் நிறைந்திருக்கின்றன.

கோலாலம்பூரில், நமது இயக்கத் தோழரான திருத்துறைப்பூண்டி ஹாஜாபீர் அவர்கள் எனக்கு உற்ற துணையாயிருந்தார். அங்கிருந்து பினாங்கு சென்றோம். ஒருவாரம் தங்கியிருந்தபோது நல்ல முறையில் நேரம் கழிந்தது. நம்முடைய உதகமண்டலத்தைப் போல் அங்கே கொடிமலை என்ற மலைப் பிரதேசம் ஒன்று இருக்கிறது. மலைமேலுள்ள தமிழர்களின் அழைப்பின் பேரில் 9-9-56 காலை அங்கு விருந்துக்குச் சென்று வந்தோம். ரயில் பயணம் ரம்மியம் மிகுந்ததாயிருந்தது. எங்களுக்கு ஆங்காங்கே நடைபெற்ற விருந்துகளில் 500-க்குமேல் நண்பர்கள் கலந்து கொள்கிறார்கள். ஆர்வத்தோடு.

பினாங்கில் பாம்புக் கோயில் என்று ஒரு கோயிலுக்கு நண்பர்கள் அழைத்துச் சென்றார்கள். அது சீனர்களின் கோயிலாம். சீனர்கள்தான் வணங்குவதற்கு அங்கு செல்கிறார்கள். மற்றவர்கள் நம்மைப்போல் வேடிக்கை பார்க்கத்தான் செல்லுகிறார்கள். என்ன அதிசயமென்றால், அங்கே சுமார் 400;

நடிப்பிசைப் புலவர்

**கே. ஆர். ராமசாமி**



*கோலாலம்பூர் 'தமிழ் நேசன்' பத்திரிகை அலுவலகத்தில்......*

500 பாம்புகள் அந்தக் கோயிலேயே தங்கள் இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றன. ஒரு முழம் அல்லது கொஞ்சம் அதிக மான நீளமுள்ள அந்தப் பாம்புகளால் தீங்கொன்றும் ஏற்படுவதில்லையாம். பச்சை நிறமாயிருக்கின்றன அவை. இன்னொரு பெரிய மலைப் பாம்பு. ஆறு ஏழு அடி நீளமிருக்கும். அதை ஒரு பள்ளத்தில் போட்டு அழைத்து வைத்திருக்கிறார்கள். அதற்கு தினமும் ஐந்தாறு கோழிகளே ஆகாரமாம்.

ஈப்போவுக்குச் சென்று நான்கு நாடகங்கள் நடத்திவிட்டு மலாக்காவுக்கு வந்தோம். என்ன, மலாக்கா என்றா சொன்னேன்? ஏதோ நமது தமிழகத்திலுள்ள ஒரு ஊருக்கு வந்தது போலவே தோன்றியது காரணம் அங்குள்ள வீடுகளுக்கெல்லாம் திண்ணையிருந்தது. மக்களும் தமிழர்களே. அவர்கள் கீழ்த்திசை நாடுகளில் முதலாவதாகக் குடியேறியது மலாக்காவில்தான் என்கிறார்கள். அங்கேயும் நான்கு நாடகங்கள்.

பிறகு சிரம்பான்: அங்கே நமது நண்பர்—பாரதி பிரஸ்—ராம. சின்னையா அவர்கள், நாங்கள் நான்கு நாடகங்கள் நடத்திப் புறப்படும் வரையில் பிரமாதமான விருந்து வைபவங்கள் நடத்திச் சிறப்பித்தார்கள்.

நம்மவர் என்ற உணர்வோடு, நாடகங்களிலும், கூட்டங்களிலும் தமிழர்கள் தான் கலந்து கொள்கிறார்களே தவிர, மலேயாக்காரர்களோ, சீனர்களோ அநேகமாகக் கலந்து கொள்வதில்லை. சீனாக்காரர்களைப் பார்க்கும் போது, மலேயாக்காரர்களுக்காகவும், தமிழர்களுக்காகவும் மிக மிகப் பரிதாபப்படக் கூடிய சில ஏற்



*கோலாலம்பூரிலிருந்து 8 மைல் தூரத்திலுள்ள ஓங்பாட் ஈயச் சுரங்கம்.*



மலேயா முதலமைச்சர், துங்கு அப்துல் ரகிமானுடன் பேட்டி.

படுகிறது. சீனா தேசத்தில் ஏதோ ஒரு ஊரிலிருப்பதாகத் தான் தோன்றுகிறது. வெளி நாட்டுக்காரர்களாக அவர்களை யாரும் சொல்ல முடியாது. அந்த அளவு பெரும்பான்மை யினராகவும், ஆதிக்கம் படைத் தவர்களாகவும் இருக்கிறார்கள். சீனாவிலுள்ளவர்கள் எப்படியி ருப்பார்களோ தெரியாது: ஆனால் மலேயாவிலுள்ள சீனர் களின் நடத்தை எனக்கு அரு வருப்பையும் அச்சத்தையுமே உண்டாக்கிற்று.

மறு முறை சிங்கப்பூர்சென்ற போது முதலமைச்சர் லிம்-யூ-ஹாக்கைச் சந்தித்து. சுமார் ஒருமணி நேரம் பேசினேன். அவர் சீனாக்காரர்தான் என்றா லும் மிக மிக மேலான முறை யில் பழகினார். மலேயாவில் தோழர் கணபதியைத் தூக்கி விட்டதைக் கண்டித்து நமது இயக்க ஏடுகள் எழுதிய தால் நம்மையும் கம்யூனிஸ்டுகள் என்றே தீர்மானித்து, அவை வரக்கூடாதெனத் தடுத்து விட்டனர். மலேயா, சிங்கப் பூர் அரசாங்கத்தினரின் இந்த எண்ணம் தவறான தென்பதை எடுத்துக் காட்டி சிங்கப்பூர் முதலமைச்சரிடமும் மலேயா முதலமைச்சர் துங்கு அப்துல் ரகிமானிடமும் தனித்தனியே வாதாடினேன். ஆவன செய்வ தாக இருவருமே வாக்களித் துள்ளார்கள்.

நமது இயக்க ஏடுகள் வராத தால் நண்பர்கள் மிகவும் மன முடைந்து போயிருக்கின்றனர்.

ஏதேதோ சங்கங்கள் பல இருப்பதாகத் தோன்றினாலும் உண்மையில் ஒன்று கூடத் தமி ழர் நன்மைக்கும் முன்னேற் றத்துக்கும் பாடுபட வில்லை என்பதே என்னுடைய தனிப் பட்ட கருத்தாகும். நமது இயக்கத் தலைவர்களான அறி ஞர் அண்ணா, மு. கருணாநிதி.



பினாங்கிலுள்ள கொடி மலைக் குச் செல்லும் ரயில்பாதை



கோலாலம்பூரில் திராவிடர் கழகம் நடத்திய விருந்தில்—தோழர் ஹாஜாபீருடன்.

நாவலர் நெடுஞ்செழியன், சம்பத் ஆகியோர் வரவேண்டுமென்பது அவர்களின் அடக்க முடியாத ஆவல் நானும் எல்லாரையும் விரைவில் அனுப்பி வைப்பதாகக் கூறி வந்தேன். பொதுத் தேர்தல் முடிந்த பிறகாவது யாராவது சென்றுவருவதுபயனுள்ள தாயிருக்குமென்பதை இந்தச் சந்தர்ப்பத்திலேயே கூறிக்கொள்ளுகிறேன்.

தெலுக் ஆன்சன் என்ற நகரில் நான்கைந்து நாட்கள் தங்கினோம். அதைச் சுற்றிலும் அழகான கிராமங்கள் ஏராளம். எல்லோரும் தோட்ட வேலை செய்யும் தமிழ்மக்கள். அவர்கள் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருப்பதாகக் கூறவே முடியாது. வசிக்குமிடங்களில் கொசுத்தொல்லை. அசுத்தம் நிறைந்த இடத்தில் தானே கொசு குடியிருக்கும்? இங்கு போலவே தொழிலாளர்களுக்கு அவதிகளும், சங்கடங்களும் நிரம்ப இருக்கின்றன. ஆனால் கூலி கொஞ்சம் உயர்வு. தினசரி ரூ. 4-8-0 கிடைக்குமாம். என்றாலும் அதையும் பறித்துக் கொள்ளும் மார்க்கங்களும் சில இல்லாமற் போகவில்லை என்பதைக் குறிப்பிடுவதால் தவறென்ன? ஏதோ ஒரு சிலர் தான் வசதியான வாழ்க்கை நடத்துகிறார்கள். எப்படிப்பட்ட நிலையில்—தரத்தில் இருந்தாலும் தமிழ் மொழிமீதும், தாயகத்தின் மீதும் அவர்களுக்குள்ள தணியாத பற்றும் பாசமும் பாராட்டப் படவேண்டியதே!

என்னுடைய பிரயாணங்களைப் பெரும்பாலும் விமான மூலமாகவே வைத்துக்கொண்டேன். அவசியம், அப்படி ஆகிவிட்டது. ஒரேயொரு முறைதான் கோலாலம்பூரிலிருந்து சிங்கப்பூருக்கு ரயிலில் சென்றேன். இரவு எட்டரை அல்லது ஒன்பது மணிக்கு ஏறிப்படுத்தேன். காலையில் தான் சிங்கப்பூர் சேர்ந்தது. நம் நாட்டைவிட அங்கே ரயிலில் வசதிகள் அதிகம். ஒரு வண்டியில் ஏறினால் கடைசிப் பெட்டிவரை போகலாம். முதல் வகுப்பு, உறங்குவதற்கு மிக ஏற்றது. ஒரு பொத்தானை அழுக்கினால் உடனே ஒரு பையன் வருகிறான். நமக்குத் தேவையான தேநீர் அவன் மூலமாகப் பெற்றுக் கொள்ளலாம். இரவு நேர ரயில்களில் மது வகைகள் கூட வழங்கப் படுவதாகக்கேள்விப்பட்டேன். மூன்றாம் வகுப்பு வண்டிகளில் இங்கு மாதிரிக் கூட்டம் அதிகந்தான். நமது ஊரில் இப்போது ரயில் விபத்துகளால் அடிக்கடி அச்சம் உண்டாகிறதல்லவா? அங்கே கம்யூனிஸ்டு பலாத்கார வாதிகளால் ரயில் பிரயாணிகளுக்கு ஆபத்து ஏற்படாமலிருக்க, ஒவ்வொரு ரயிலிலும் முன்னும், பின்னும் 50, 60 ஆயுதந்தாங்கிய போலீஸ் வைத்திருக்கிறார்கள்.

சுமார் மூன்று மாதங்களுக்கு மேல், தாயகத்தை விட்டு வந்திருக்கும் நமது தமிழ்ப் பெருங்குடிமக்களின் அன்பான உபசாரங்களுக்கு ஆட்பட்டு நானும் தமிழ் நாட்டை மறந்திருந்தேன். அவர்களின் தமிழ் ஆர்வத்தைக் கண்டும், கேட்டும் மிக மிக இன்புற்றேன். குறிப்பாக, நான்கைந்து சகோதரிகள் நமது இயக்கப் பேச்சாளர்களாக இருந்து சிறந்த முறையில் பணி புரிகிறார்கள்.

ஊருக்குத்திரும்புவதற்கு முன்னர் சிங்கப்பூரில் திரு மார்ட்டின் என்ற நண்பரின்

விருந்தினராகச் சுமார் பத்து நாட்கள் தங்கியிருந்தோம். அவர்கள் நமது காரைக்கால் பகுதியைச் சேர்ந்தவர்கள். அன்னார், குடும்பத்தோடு எங்கள்பால் காட்டிய அன்பும் ஆதரவும் ஆயுள் பூராவும் மறக்க முடியாது.

சென்னையிலிருந்து புறப்படும்போது நமது கூத்தாநல்லூர் நண்பர் ஜே. எம். கமாலுதீன் அவர்கள் சிங்கப்பூரில் திரு. சலீம் அவர்களுக்கு அறிமுகக் கடிதம் கொடுத்திருந்தார்கள். அவர்களும் நல்ல முறையில் உதவி புரிந்தார்கள்.

இன்னும் எண்ணற்ற அன்பர்கள் நாங்கள் அங்கிருந்தபோது செய்துள்ள உதவிகள் மறக்க முடியாதவை. பல நண்பர்களின் பெயர்களை மறந்து விட்டேன். (மன்னிக்கவும்!) அவர்களுடைய வாழ்த்துக்களை யெல்லாம் நிறையப் பெற்றுக்கொண்டு, பிரிய மனமின்றி, சிங்கப்பூர் விமான நிலையத்தில் 13-11-56 அன்று காலை 1-மணிக்குப் புறப்பட்டேன், தாய் நாட்டுக்கு.

என் வரவை எதிர்பார்த்துப் புதியதொரு ஜீவன் சென்னையில் "குவா குவா" என்று கத்திக் கொண்டிருந்ததே. இரண்டு மாதம் வயதாகியிருந்த என் புதிய மகளைத்தான் குறிப்பிடுகிறேன் அதனைக் காணும் ஆவலில்தான் கடல் கடந்தும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மறவாத அருமைத் தமிழ்த் தோழர்களைப் பிரிந்து வர மனந் துணிந்தேன்.

வாழிய தமிழ் உலகம்! வணக்கம்.






## மூடநம்பிக்கையின் சிகரம்!

ஒரு நபருக்காக இன்னொருவர் சில நிமிஷங்களோ, சில மணிகளோ காத்திருப்பதைத்தான் நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள்!

காதலன் போருக்குச் சென்றிருந்தால் காதலி அவனுக்காகச் சில ஆண்டுகள் காத்திருப்பாள்!

ஆனால் திரும்பி வராத நபருக்காக சிலர் பல ஆண்டுகள் காத்துக் கொண்டிருக்கும் கதையை நீங்கள் கேள்விப் பட்டதுண்டா?

இதோ, அந்தக் கதை :—

சீனாவிலுள்ள ஹாங்செள என்னு மிடத்திலே வாழ்ந்த சன்யாசி ஒருவர் சாகும்போது :

"நான் மீண்டும் திரும்பி வருவேன்?" என்னும் வார்த்தைகளைக் கடைசியாக உச்சரித்தவாறே உயிர் நீத்தார்!

அவர் பிராணன் பிரியும்போது கூடியிருந்த அவரது சீடர்கள் அனைவரும் அவரது வார்த்தைகள் அனைத்தும் நூற்றுக்கு நூறு உண்மை என்றே கருதினர்.

எனவே அவர் செத்துப்போய் அவரது பிரேதம் அடக்கம் செய்யப்பட்ட பிறகு கூட அவர் கடைசியாகப் படுத்திருந்த படுக்கையை இன்னும் தினசரி சுத்தம் செய்து, படுக்கை விரிப்புத் துணியைத்தினந்தினம் மாற்றிக்கொண்டே வருகின்றனர்.

இன்று நேற்றல்ல; ஆயிரத்து நானூறு ஆண்டுகளாக இந்தப் பழக்கம் இருந்து வருகிறது.

ஐம்பத்து ஏழு தலை முறைகளாக சன்யாசிகள் அவருடைய படுக்கையைச் சுத்தம் செய்து விரிப்புத் துணியை மாற்றுகின்றனர்.

சரியாகக் கணக்கிட்டால் இதுவரை அவர்கள் ஐம்பது லட்சம் தடவைகள் படுக்கை விரிப்பை மாற்றியிருக்கின்றனர்; சாமியார் திரும்பி வருவார் என்ற மூட நம்பிக்கை காரணமாக!

# உரிமை உணர்ச்சி!

க. அன்பழகன் M.A

நாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வரும் இந்த மண் நமது மண்ணாக இல்லை. முப்புரங்களிலும் முந்நீர் சூழ்ந்து அணிசெய்யும் நம் தாயகம், நமது ஆட்சியில் இல்லை. கல் தோன்றி மண் தோன்றாக் காலம் என குறிக்கப்படும் தொன்னாள் முதலாகவே தனிச்சிறப்புடன் விளங்கிய நாடு தனிக் காவல் பெற்றிருக்கவில்லை. மணிமுடி தரித்து மாட்சிமை விளங்க ஆட்சி நடாத்திய மூவேந்தர் வழியினர் தாம், இன்று தமக்கென ஓர் தனியாட்சியும் எய்தியிருக்கவில்லை.

இந்நாளிலோ தமிழ் மக்கள், தமக்கென ஒரு நாடும் பெறாதவராய், தாம் வதிந்து வாழும் நாட்டையும் வேற்றினத்தவர்கள் வட்டமிட்டுக் கொட்டமடிக்கும் இடமாக்கி விட்டு, தம் வயிறு கழுவவே வேற்று நாடுகளுக்கு ஓடும் நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

தமிழ் மக்களுக்குத் தமிழகத்தின் மாவட்டங்கள் எவை எவை என்று தெரிய வழியில்லாவிடினும் சிலோன், பர்மா, சிங்கப்பூர், மலேயா, இந்தோசீனா, இந்தோனேஷியா, ஜாவா, சுமத்ரா, சான்சிபார், மடகாஸ்கர் இவைகளிலே உள்ள உழைப்புக்கு ஆள் தேவைப்படும் ஊர்களும், மலைகளும், தோட்டங்களும், காடுகளும் ஓரளவு நன்றாகவே தெரியும். இங்கு வாழ வழியில்லை என்ற நிலை தோன்றும் போதெல்லாம், "ஏனில்லை? நாம் பிறந்த மண்ணில் நமக்குப் பிழைக்க வழியில்லையா?" என்னும் கேள்விகள் நெஞ்சிலே பிறப்பதற்கு முன்னரே, எந்தச் சீமைக்குச் சென்று பிழைக்கலாம், எங்கே சென்றால் தொழில் கிடைக்கும், என்று எண்ணத் தொடங்கி விடுகிறான் தமிழன்.

அங்கு மட்டும் நிம்மதியாக வாழ முடிகிறதா? ரப்பர்க் காட்டிலும், தேயிலைத் தோட்டத்திலும் மலையிலும் மடுவிலும் நாளும் எலும்பு முறிய, நரம்பு தளரப் பாடுபடும் நிலையே அமைந்திருக்கிறது. அங்கிலையிலும் விட்டுவைக்கப்படாமல் விரட்டியடிக்கப்படும் வேதனைக் காட்சிகள் இன்று காணத் தொடங்கிவிட்டன. எண்ணவே நெஞ்சம் குமுறுகிறது! "நாடாண்ட நற்றமிழர்" வழியினர்தாம் இன்று நாடற்ற நாடோடிகளாய், கையேந்திப் பிழைக்கும் அகதிகளாய் அல்லற் படுகின்றனர். "பிழைப்போ! பிழைப்பு! உழைப்பைக் கண்டு கூலி தாரீர்! பிழைக்கும் வழி காட்டீர்!" என்று பிறநாட்டவரை யெல்லாம் வேண்டும் நிலையில் ஏங்கி நிற்கின்றனர்.

எஃகுடம்பும் எக்கழுத்தும் பீடு நடையும் பெருநோக்கும் கொண்டு தலை நிமிர்ந்து வாழ்ந்த மறத்தமிழ் மரபினர்தாம், இன்று கூனிக் குறுகிய வடிவினராய்க் குனிந்த தலையினராய், உரிமையிழந்த உள்ளத்தினராய், ஊசலாடும் உயிரினராய் நடமாடிக் கொண்டுள்ளனர்.

தாருங் கண்ணியும் சூடி
யாழுங் குழலும் பண்ணி
வீரமும் ஈரமுஞ் செறிந்து
வாகையும் வளமும் கண்டு
ஈகையும் உவகையும் பூண்டு
பேரும் புகழும் கொண்டு
வாழ்ந்த தமிழ் மக்கள்தாம் இன்று
வாழ்வும் பிழைப்பும் கெட்டு
வாயையும் வயிற்றையும் காட்டி
அவலமும் ஏக்கமும் மிகுந்து
அடிமையும் மிடிமையும் அழுத்தக்
கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சி
தருகின்றனர்.

அம்மக்களின் இழந்த வாழ்வை மீட்க, அழிந்த உரிமையைத் தேட ஒரு வழியும் காணவில்லை ஊராளும் உரிமை பெற்றோர்.

கண்ணீர் பொங்குகிறதே என்றால் 'கண் துடைப்பு' நடத்துகின்றனர். வாழ்வு வாட்டுகிறதே என்றால், 'வாழ்வாவது மாயம்' என உபதேசம் புரிகின்றனர். வயிறு கொட்டுகிறதே என்றால், பசியின் இயற்கையே அதுதானே என்று 'பகுத்தறிவு' பேசுகின்றனர். தனி உரிமை பெற்றாக வேண்டும் என்றால், "உரிமையைக் காப்பது கடினம்; பொறுப்பும் மிகுதி; ஆட்சி கொண்டவரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதே மன நிம்மதி, கவலையற்ற வாழ்வு" என்று 'உண்மை விளக்கம்' உரைக்கின்றனர்.

இவற்றின் விளைவுதான், உயர் தனிச் செம்மொழியாம் ஒப்பற்ற தமிழ் மொழிபிறந்த நமது நிலம் — இன்றும் தமிழ் நாடு அல்லது தமிழகம் என்னும் உரிமைப் பெயர்களுள் எதுவும் இன்னும் சூட்டப் பெறவில்லை.

உரிமையின் இயல்பும் அதன் பயனும் அறியாதார் நிறைந்த இந்நாட்களில் தமிழ் நிலத்தின் எல்லையைக் காக்க முனைவதும் அதை இணைக்க நினைப்பதுமே தமக்குத் தொல்லையாம் என்று கருதுவோர் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்துள்ளனர், இந்நாட்களில்!

அந்நாளிலோ நிலைமையும் நினைப்பும் வேறு! பண்டைத் தமிழர் தம் உள்ளத் துடிப்பையும் உரிமை உணர்ச்சியையும், ஊக்கத்தையும் எழுச்சியையும் என்னென்பது! எப்படிப் போற்றுவது! அந்தக் காட்சிகளைக் காண்போர் வியப்படையாமலிரார். அந்த பண்புகளே பழந்தமிழர் வாழ்விற்கு வகை செய்தவையாம்.

'உரிமை உணர்வு' தீக்கடை கோலினிடத்துக் கரந்துறையும் தீயைப் போல் உள்ளது. தீக்கடை கோலை வீட்டின் இறப்பில் செருகி வைப்பது வழக்கம். அச்சமயங்களில் அதில் நெருப்பும் தோன்றாது, இடரும் விளையாது. ஆனால்

அதனை எடுத்துக் கடைந்தால் தீ வெளிப்பட்டுத் தோன்றும். அதைப் போன்றே ‘ உரிமை உணர்வும் ’ அயலார் தமது உரிமைக்குக் கேடு செய்யும்போது பொங்கித் தோன்றும் இயல்புடையது.

ஆற்றல் மிக்க அதியமான் நெடுமான் அஞ்சியைப் போற்றும் ஔவையார் இந்தப் பண்பு அவனிடத்தில் காணப்பட்டதென அழகுபட எடுத்துக் கூறுகிறார்.

"......................நெடுமா னஞ்சி
இல் இறைச் செரீஇய ஞெலிகோல் போலத்
தோன்றா திருக்கவும் வல்லன் ; மற்றதன்
கான்றுபடு கனையெரி போலத்
தோன்றவும்வல்லன் தான் தோன்றுங் காலே!"

[இல் இறை : வீட்டின் இறப்பு
ஞெலி கோல் : தீக்கடை கோல்
கான்று படு : வெளிப்பட்டுத் தோன்றும்
கனையெரி : மிக்க நெருப்பு]

தனது பேராற்றலும் வெளியே தெரியாதவாறு தன் குடிகளோடு தானும் ஒருவனாகக் கலந்து வாழும், தன்மை இயல்புடையவன் அஞ்.சி அவனைப் பகைவர்கள் சினமடையச் செய்தாலோ, அவனுடைய உரிமைக்கு ஊறு தேடினாலோ, அவனிடத்தே மறைந்து கிடந்த மறத்தன்மை, பெரு வீரம், தீக்கடை கோலைக் கடையும்போது அதனின்றும் வெளிப்பட்டுச்சுடும் நெருப்பைப் போல், உலகோர் அஞ்சும் வகையாக வெளிப்படும் என்பது இதன் கருத்தாகும். அஞ்சி அன்பர்களிடத்தே அடக்கமாகவும், அடங்காதோரிடத்தே அவர்கள் அஞ்சுமாறும் ஆற்றலோடு திகழ்ந்தான்.

இந்நாளிலோ, தன்னை ஒத்த உரிமைகொண்ட குடிகளிடத்தே உரத்தக்குரலிலே உறுமி விட்டு, உரிமை பறிபோகும் நேரத்தில் ஊமையராகிடுவோர்தான் ஊராள்வோராக உள்ளனர். என்னே நம் நிலை !

தனியரசு பெற்றிருந்த அந்நிலையிலும் அத்துடன் அடங்கி மடிந்திருக்கவில்லை பழந்தமிழர். மடிந்திருத்தல் ஒரு நாட்டவரின் ஒடுக்கமாகி விடும் என்றே கருதினர்.

தமது முன்னோர்கள் மூப்பு எய்தினமையின் இறந்து போனார்களா? அவர்கள் வலியாலும் திறத்தாலும் அமைக்கப்பட்ட அரசுரிமை பிறப்புரிமையினாலே தம்மை வந்தடைந்த அளவில்—அதுவே ‘ சிறப்பு ’ எனக் கொள்ளுதல் நன்றல்ல !

மேலும் குடிமக்களை அவர்கள் செலுத்த வேண்டிய இறைப்பொருளினும் மிகுதியாகச் செலுத்தச் செய்யும் ஆண்மை குறைந்த உள்ளச் சிறியோன் ஆட்சி அவனுக்குத் தாங்குதற்கு அரிதாகக் கனத்துவிடும். மாறாக நெருங்கிப் பொரும் போரைத் தாங்கும் மன வெழுச்சியும் வலிய முயற்சியுமுடையோன் அரசுரிமை எய்தின். அவனுக்கு அவ்வாட்சி உலர்ந்த நெட்டியைப் போன்று, தாங்குதற்கு மிகவும் எளிதாகும். இதனை விளக்குகின்றது இப்புறப் பாடல்.

"மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தெனப்
பால் தர வந்தப் பழவிறல் தாயம்
எய்தினம் ஆயின் எய் தினஞ் சிறப்பென
குடிபுர(வு) இரக்குங் கூரில் ஆண்மைச்
சிறியோன் பெறினது சிறந்தன்று மன்னே
மண்(டு) அமர்ப் பரிக்கு(ம்) மதனுடை
நோன்றாள்
விழுமியோன் பெருகுவன் ஆயின் ஆழ்நீர்
அறு கய(ம்) மருங்கிற் சிறுகோல்
வெண்கிடை
என்றூழ் வாடுவறல் போல நன்றும்
நொய்தால் அம்ம !"........................

[பால் தர : பிறப்புரிமையால் வந்தடைந்த
பழவிறல் : பழைய(முன்னோர்)வெற்றியால்
புரவு இரக்கும் : வரி மிகுதியாக வாங்கும்
கூரில் ஆண்மை : சிறப்பில்லாத வீரம்
மண்டு அமர் : நெருங்கி நின்று நிகழ்த்தும்
போர்
நோன் தாள் : வலிய முயற்சி (உடைய)
வெண் கிடை : வெண்ணிற நெட்டி
என்றூழ் : கோடை (வெயில்)
நொய்து : எளிது (கனமற்றது.)]

ஆட்சிப் பொறுப்பேற்றோர் ஊக்கங்கொண்டு தந்நிலத்து மக்களின் நல்வாழ்விற்கென நாளும் முனைய வேண்டும் என்று இப்பாட்டில் விளக்குகிறான் சோழன் நலங்கிள்ளி.

மக்களைப் பிழிந்தெடுத்து, அவர்கள் உழைப்பின் சாற்றைப் பருகி மகிழ்ந்திருக்கும் தன்னலப் போக்கு—ஆட்சிப் பாரத்தை அரசன் தாங்குவதற்குப் பதில் குடி மக்கள் தாங்கிக் கொள்ளும் துன்ப நிலை—அவ்வாட்சி அவன் கையை விட்டு நீங்கக் காரணமாகிவிடும் என்பதை மன்னவனே உணர்ந்து உரைத்திருக்கிறான் இங்கே. மக்களை வருத்தும் ஆட்சி மன்னவனால் காத்துக்கொள்ள முடியாததாகி விடும். அந்த மன்னனும் மக்களும் வேறு வேறாவர், அரசு சிதறும், ஆட்சி அழியும், நாடு கைமாறும். மக்கள் நலம் நாடி, நாடு காக்கும் ஊக்கமில்லாதவர் மன்னராயினும்—அவருக்கே இம்முடிவு கூறப்பட்டுள்ளது.

இன்றோ, குடியாட்சியில் கோலோச்சும் அமைச்சர்கள் குடிமக்கள் நலம் மறந்து முடிமன்னர் போன்ற வடிவில் நடமாடுகின்றனர். ஆட்சி மாறாது என்ற நினைப்பும், எவரும் தம்மை அசைக்க முடியாது என்ற தடிப்பும், ஆட்சிப் பண்புகளையே மாய்த்துள்ள நிலையைக் காண்கிறோம்.

உரிமைவேட்கையும் ஊக்கமிகுதியும்கொண்ட பழங்கால மன்னர் இயல்பைப் புலவர் கபிலர் பாட்டு ஒன்றும் இனிது விளக்குகின்றது.

உலகத்தினைக் காக்கும் பிறமன்னர்களும் தம்மைப் போற்றி நடத்தலாகிய தனித் தலைமை இன்பத்தை விரும்புவது மன்னவர் இயல்பு. நிலம் பிறவேந்தர்க்கும் பொது என்னும் சொல்லைப் பொறுக்கும் மனமில்லாது, தன்னாட்டின் இடப் பரப்பு சிறிது என்னும் எண்ணத்தால்

தூண்டப்பெற்று, மடியாத ஊக்கத்துடன் மாற்றார் மீது சென்று, வஞ்சியாது நேர் நின்று போரிட்டுக் கொல்வது அவர்கட்குப் பெருமை. அத்தகு இயல்பும் பெருமையுங் கொண்ட வணாகச் சேரமான் கடுங்கோவாழியாதன் போற்றப்படுகின்றான் இப்பாட்டில்.

> "வையங் காவலர் வழிமொழிந் தொழுகப்
> போகம் வேண்டிப் பொதுச்சொல் பொறா அ(து)
> இடஞ் சிறி(து) என்னும் ஊக்கந் துரப்ப
> ஒடுங்கா உள்ளத்(து) ஓம்பா ஈகைக்
> கடந்தடு தானைச் சேர லாதன்."

அக்கால மன்னரின் உளப்பாங்கை இவ்வடிகள் உணர்த்தும். வீர வெற்றிகளையும், நாட்டின் பரப்பை விரிவு படுத்துவதையும் பிறமன்னரும் தமக்கு அடக்கம் என்ற உயர்நிலை பெறுவதையுமே, அவர்கள் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர்.

அவை இக்காலக் குடியாட்சிக்கு முற்றும் பொருந்தாதவையே, ஆனால் அக்குறிக்கோள்களுக்குக் காரணமான கடமை உணர்ச்சியும் காவல் ஊக்கமும் இன்றையக் குடியாட்சியினர்க்கும் வேண்டிடுவனவேயாம்.

முன்னாட்களில் மன்னனையும் அவன் ஆற்றலையும் கொண்டே, நாடும் எல்லையும், குடிமக்கள் வாழ்வும், உயர்வும், வரையறுக்கப்பட்டன. இந்நாட்களில் குடிமக்களையும் அவர்கள் விருப்பத்தையும், நல்வாழ்வையும், உரிமையையும் போற்றும் முறையினாலேயே, நாடும் மொழியும் எல்லையும் பிறவும் தீர்மானிக்கப்பட வேண்டும்.



குடிகளின் உரிமையை—நிலத்து வாழும் மக்களின் விருப்பத்தைப் புறக்கணித்து விட்டு, அவர்களின் எழுச்சியைத் தடை செய்யும் முறையில் நடந்து கொள்வது குடியாட்சி நடத்தும் குணாளரின் குறை மதியையும்—குன்றிய உள்ளத்தையுமே காட்டுவனவாம்.

அண்டையில், தமிழ் நிலத்தின் தெற்கு எல்லைப் பகுதியில் உள்ள தேவிகுளம், பீர்மேடு, நெய்யாத்தங்கரை, பாலக்காடு ஆகிய வட்டங்கள் தமிழ் ஆட்சியில் இணைய வேண்டுமென்று, அங்குள்ள பெரும்பான்மைத் தமிழர்களும் இங்குறையும் எல்லோருமே வேண்டினர். கட்சிகள், அணைத்தும் வலியுறுத்தின, ஆனால் ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள ஆள் காட்டியாரோ, குளமாவது மேடாவது கரையாவது காடாவது? இவை தமிழருக்கு உரியதாவது ஏது? கேட்டால் மட்டும் கிடைத்துவிடுமா? நமக்கு ஏன் வீண் வம்பு? அங்குள்ளோர் எந்த ஆட்சியில் இருந்தால்தான் நமக்கென்ன என்று மளமளவென்று பேசித் தீர்த்தார். உரிமை உணர்வு அற்றுப் போனதன் அடையாளமன்றோ இந்நிலை! பிறர் ஆட்சியில் அமைந்த பகுதிகளையும் தமது ஆட்சியில் இணைக்கும் ஆற்றல் பெற்றிருந்த அந்நாள் தமிழர் எங்கே? உள்ளதையும் உரியதுமே பறிகொடுத்துவிட்டு, மக்கள் பரிதவிப்பை மறந்து பல்லிளித்துக்கிடக்கும் இந்நாள் பசுந்தமிழர் எங்கே?



சிங்கம் இருந்த இடத்தில் சிறு நரியும், புலி உலவிய காட்டில் பூனையும், நாயகன் அமரும் தவிசில் நாயும் அமர்ந்த கோலமாகத்தான். உரிமைகாக்க உயிர் கொடுத்த வீரர் ஆண்ட நாட்டில், இன்று உரிமைக்காக்க உயிர் விட்டது கேட்டு உதடு பிதுக்கும் வீணர்கள் ஆளும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த இழிவும் பழியும் துடைக்கப்பட வேண்டின், நாடாண்ட நற்றமிழ் மரபினர் 'நல்லாட்சி' காண வேண்டும்- நல்லாட்சி மலர அக்கால மன்னரின் உள்ளத்துணர்ச்சியைப் புறப்பாடல்கள் ஊட்டும் எழுச்சியை இக்கால மக்கள் பெறவேண்டும். "உரிமை உணர்ச்சி" நிரம்பினால், உண்மை உணர்ந்த மக்கள் கட்டறுத்துக் கொண்டு கிளம்புவர். அந்நாளில் அடிமைத்தளை அறுபடும்! உரிமை உணர்ச்சி நல்லாட்சி மலர வழி செய்யும்!

●●●



"புறந்தூய்மை" நீரால் அமையும் எனப் புகலுங் குறள் மொழியை
மறந்தும் தவறிடா மாணிக்கமே வாழியவே!"  (புகைப் படம்: குருமூர்த்தி)

# தந்தையும் மகனும்



காட்சி -1

காலம்: பகல்.

இடம்:நடிகர் பெரியப்பன்வீடு.

இருப்போர்: டைரக்டர் சங்கரன், படாதிபதி பரமகுரு நாதர், கதாசிரியர் வேங்கடத்தான், பெரியப்பன் மகன் நீலன், அவன் நண்பன் பாலன்.

[டைரக்டர் சங்கரன், படாதிபதி பரமகுரு நாதர், கதாசிரியர் வேங்கடத்தான் ஆகிய மூவரும், பிரபல நடிகர் பெரியப்பனை தங்கள் படம் 'தந்தையும் மகனும்'-ல் நடிக்க ஒப்பந்தம் செய்ய வந்திருக்கின்றனர். நடிகர் பெரியப்பன் இல்லை. அவர் மகன் நீலனும், அவன் நண்பன் பாலனும் வரவேற்கின்றனர்.]

நீலன்: வரவேண்டும், வணக்கம்!

வேங்கடத்தான் : தம்பி. அப்பா இல்லை?

நீ: வெளியில் போயிருக்காங்க. மேல்மாடி அறையிலே உட்கார்ந்திருங்க — நான் ஆள் அனுப்பிக் கூட்டிவரச் சொல்கிறேன்.

பரமகுருநாதர்: ஆகட்டும் தம்பி,—நாம மேலே இருப்போங்கிறேன்.

நீ: பாலா, இவங்களை மேலே கொண்டு உட்கார வை. வெற்றிலை பாக்குத் தட்டையும் எடுத்துக் கொண்டு போ—எங்க, சோடா சாப்பிட்ரீங்களா? காபி சாப்பிட்ரீங்களா?

சங்கரன்: தம்பி, அப்பாவுக்கு அனுப்புகிற ஆளிடம் என்ன சொல்லியனுப்பரே?

நீ: வேங்கடத்தண்ணேன் வந்திருக்குன்னுலே அப்பா வந்திடுவாங்க.

ச: தம்பி, இவர்தான் எங்க முதலாளி பரமகுரு நாதர். படாடோபா பிக்சர்ஸ் சொந்தக்காரர். என்னைத் தெரியுமா?

வே: இவர்தான் டைரக்டர் சங்கரன்.

ச: தம்பி, உங்க அப்பாவை, நாங்க எடுக்கப் போகும் 'தந்தையும் மகனும்' படத்தில்நடிக்க ஒப்பந்தம் செய்ய வந்திருக்கிறோம்.

நீ: ஆமாம், அப்பா கூட ராத்திரி நீங்க எல்லாம் வருவீங்கன்னு சொல்லி கிட்டிருந்தார். நீங்க மேலே உட்காருங்க. பாலா போ......

[அவர்கள் மூவரும் மேல் மாடிக்குச் செல்கிறார்கள். பாலன் அவர்களை உட்கார வைத்துவிட்டு வருகிறான்.]

நீ பாலா, இந்த நேரத்தில் என்ன செய்கிறது? அப்பா, உள் அறையில் பாதி குடியிலே உளறிகிட்டிருக்கார். இவர்கள் அவரை இந்த நிலையில் பார்த்தால், ஒப்பந்தம் நடக்காது. ஓட்டப்பந்தயம்தான் நடக்கும். உம்..... இருக்கட்டும். அவரை எழுந்திருக்காமலே செய்துட்ரேன். இன்னும் இருக்கும் சாராயத்தை ஊற்றிக் கொடுத்து மெய்மறந்து படுத்துகிடக்க வைத்துவிட்ரேன்.

[நீலன் உள்ளே செல்கிறான், அவசர அவசரமாக.]

காட்சி- 2

காலம்: பகல்.

இடம்: நடிகர் பெரியப்பன் வீட்டுக் கூடம்.

இருப்போர்: நீலன், பாலன், வீட்டுக்கார பட்டம்மாள்.

[கூடத்தில் பாலனும், நீலனும் அமர்ந்திருக்கிறார்கள். வீட்டுக்கார பட்டம்மாள் உள்ளே வருகிறாள். அவள் மிகவும் தடித்த உருவத்தினள். விகாரமான தோற்றமுடையவள். வரும்பொழுது பெரிய குரலில் பேசிக் கொண்டு வருகிறாள்.]

பட்டம்மாள்: வீட்டு வாடகை எட்டு மாதமாய்க் கொடுக்கல்லே—சினிமா ஆக்டரு—பெரிய



பேரு—எல்லாம் இருந்து என்ன செய்ரது—குடியிருக்கிற இடத்துக்கு குடக்கூலி கொடுக்கக்கூட முடியலே.

[பாலனும், நீலனும் இரகசியமாகப் பேசுகிறார்கள்.]

நீ: அடடா, இப்போ வந்துவிட்டாளே, இந்த யானைக்குட்டி. இவளை மெதுவாக அனுப்பணுமே. மேலே இருக்கிறவங்க காதிலே பட்டா நம்ம அப்பாவைப் பற்றி என்ன நினைப்பாங்க? சரி, சரி நான் எது சொன்னாலும் ஆமாம் போடு.

நீ: (கண்கலங்கியபடி) அம்மா, அம்மா, இனி நான் என்ன பண்ணப் போறேன்.

ப: என்னடாப்பா, என்ன வந்துவிட்டது?

நீ: ஐயோ, நான் இனி அனாதையாகிவிட்டேன் அம்மா. யாருமில்லாதவனாகி விட்டேன் அம்மா.

[நீலன் குய்யோ, முறையோவென்று அழத் தொடங்குகிறான்.]

ப: தம்பி, விஷயத்தைச் சொல்லு. என்னாலான ஒத்தாசை செய்ரேன்.

[பட்டம்மாளும் கண்களிலிருந்து நீரைக் கொட்ட ஆரம்பித்துவிடுகிறாள். மூக்கை சிந்தி சுவற்றில் வீசிவிட்டு புடவைத் தலைப்பில் கையைத் துடைக்கிறாள்]

நீ: வீட்டுக்கார அம்மா, நான் என்னத்தைச் சொல்வேன்—எப்படிச் சொல்வேன்?

[துண்டால் வாயை மூடிக்கொண்டு அழுகிறான்.]

ப: (மூக்கைச் சிந்தியபடி) பாலா, நீயாவது சொல்லேன்.

பா: என்னத்தம்மா சொல்ரது?

[பாலன் விழிக்கிறான்.]

நீ: அம்மா, எங்க அப்பா, ரயில் விபத்திற்கு முன்னாலே சென்னைக்குப் போனார். திரும்பி வரவில்லை. சென்னைக்கு எழுதிக் கேட்டும் அவர் அங்கு இல்லைன்னு தகவல்வந்துடுச்சி.

பா: சேதி வந்ததிலிருந்து இப்படிக்கலங்குகிறான்.

நீ: ஐயோ, அம்மா! நான் என்ன செய்யப் போறேன்?

[நீலன் பெருங்குரலெடுத்து அழுகிறான்.]

ப: தம்பி, கலங்காதே. எங்க வீட்டுக்காரரை விட்டு ரயில்வே அதிகாரிகளை விசாரிக்கச் சொல்ரேன். வீட்டு வாடகை எதுவும் இப்ப வேணும். உங்க அப்பா சங்கதி தெரிஞ்ச பிறகு ஆகட்டும். இந்தா, எதிர் வீட்டு வாடகை எண்பது ரூபாய் வாங்கினேன். ஐம்பது ரூபாய் வச்சுக்க. அப்பாவுக்கு ஒண்ணும் ஆபத்திருக்காது. வந்திடுவாரு.

[பட்டம்மாள், அழுது மூக்கைச் சிந்திய படி, அவனிடம் ஐம்பது ரூபாய் பணத்தைக் கொடுத்துவிட்டு வெளியேறுகிறாள்.]

நீ: ஆஹாஹா........ எப்படி, யானையையே ஆட வைச்சேன் பார்—சரி, சரி ஓடு—மூணு ஓவல் வாங்கியாந்து மாடியிலே இருக்கிறவங்களுக்குக் கொடு.

## காட்சி-3

காலம்: பகல்.

இடம்: பெரியப்பன் வீட்டு மாடி.

இருப்போர்: டைரக்டர் சங்கிரன், படாதிபதி பரமகுருநாதர், கதாசிரியர் வேங்கடத்தான்.

பரமகுருநாதர்: என்ன தத்ருபமாய் நடிக்கிறாங்கிரேன்.

ச: இந்த மாடி ஜன்னல் வழியாக, அந்தக் கூடத்துக் காட்சி நல்ல 'ஆங்கிள்'–'கிரேன் ஷாட்' அடிச்சா அபாரமாய் இருக்கும்.

வே: 'டைலாக் டெலிவரி' பிரமாதம். அந்த அம்மாவை அழவைத்தில்லே அனுப்பிவிட்டான். சோகம் நல்லா சோபிக்குது—உஸ். சத்தம் போடாதிங்க. நாம் அவன் செய்ரதையெல்லாம் கண்டுகிட்டோம்கிறது தெரிஞ்சா நிறுத்திடுவான்—யாரோ ஒரு ஆள் வந்திருக்கிறானே!

## காட்சி-4

காலம்: பகல்.

இடம். பெரியப்பன் வீட்டுக் கூடம்.

இருப்போர்: நீலன், பாலன், வட்டிக்கடை வர



குண செட்டி.

[வட்டி வரகுண செட்டி உள்ளே நுழைகிறார்.]

நீ: (இரகசியமாய்) யானையை விரட்டின வுடன் கரடி வருது. செட்டி, மகா கெட்டி. இருக்கட்டும், இவனையும் முடிஞ்சவரை ஓட்டிப் பார்ப்போம். என்ன, பாலா நான் செய்கிற திற்கெல்லாம் தலையாட்டணும்—ஒத்து ஊதணும்.

[நீலன் அளவிற்கு மீறிக் குடித்துவிட்டவன் போல் ஆடவும், பாடவும் ஆரம்பிக்கிறான்.]

நீ: அண்ணே, பாலுதம்பி......டேய், ...அதோ பாருடா......ஆடிவருதுடா, திருவாரூர் தேரு......

[பக்கத்திலிருக்கும் தூணைக் கட்டிப் பிடித்துக்கொண்டு பாடுகிறான்.]

அண்டசராசரமும் சுத்து தண்ணேன்!

ஆதிசேடன் அதோ ஓடுது அண்ணே

வரகுணசெட்டி: ஏமிரா இது—கலாட்டா—மீரு நயினு எக்கடா—தம்புடு, வாங்கின கடனைக் கொடுக்காமே, என்னை இப்படி அநியாயமா நடக்கவுடலாமா—அட தேவுடா!

நீ: தேவுடா...டா...டா...டடா...டடடா...அடா ......அடடா......

எடுடா கத்தி கட்டாரி, கைவண்டி

டொமாரம், ஏர்வட்டி, சக்கரம் வாளுடனே

பட்டாகத்தியைப் பார்த்தவுடன்

பதை பதைக்குது என் நெஞ்சமெல்லாம்

பஞ்சப்பயல் அவன் வந்துட்டு போகட்டும்

பா: கொடுத்த கடனை கேட்டுட்டு போறான்

பதட்டம் ஏன் இதுக்கு என் அண்ணே?

நீ:கொடுத்தான் கடன்—ஏண்டா கொடுத்தான்?

எப்படா கொடுத்தான்? திருப்பி வாங்கவா

கொடுத்தான்?

வ: அரே, தேவுடா! அப்பன் மாதிரி மகனும் குடிப்பான் போலிருக்கு.

நீ: அப்பன்......அப்பன்

அப்பனைப் பாடும் வாயால்-ஆண்டி

சுப்பனைப் பாடுவேனோ?

யாருடா இவன்? கோட்டுஸ்டாண்டு போலே குடுமி, தேள் வாலுபோலே மீசை, பட்டை தீட்டின நெற்றி, வண்ணான் சாலு போலே வயிறு, தொம்பை உடம்பு, வாத்து கால், நீட்டுகை......

அழகே உருவான அத்தான் உன்மேலே

ஆசை வைச்சேன், நேச மச்சி......

வ: அடே, என் கடனைத் திருப்பிக் கொடுக்காமே எப்ப வந்தாலும், இப்படி......என் கால்கூட தேஞ்சு போச்சு.

நீ: காலிலேதான் சேறுபட்டா யாரு துடைப்பா?

பா: மல்லிகைப்பூ செண்டெடுத்து

மாமன் துடைப்பான்.

நீ: எடுப்பான், இவன் எடுப்பான்,

இப்போ எடுப்பான்.

ஓட்டம் பிடிப்பான், பிடிப்பான், உதை வாங்க

பயந்து எடுப்பான்.

வ: அடேய், இரு, இரு, உன்னிடம் வாங்கிற வழியிலே......

நீ: பாலா எடு கத்தியை—தீட்டறேன்.

[கத்தியொன்றை எடுத்துக் கொடுக்கிறான். நீலன் தீட்டுகிறான்.]

பா: அண்ணேன், கத்தி என்னத்திற்கு.

நீ: கடன் காரப் பயல் கழுத்தை வெட்ட.

வ: ஐயோ! யார் முகத்திலே முழிச்சேனோ! அரே தேவுடா...

[வரகுண செட்டி, தலைதெறிக்க ஓடுகிறான். பாலனும், நீலனும் வயிறு வெடிக்க சிரிக்கிறார்கள்.]

## காட்சி 5

காலம்: பகல்.

இடம்: பெரியப்பன் வீட்டு மாடி.

இருப்போர்: டைரக்டர் சங்கரன், படாதிபதி பரமகுருநாதர், கதாசிரியர் வேங்கடத்தான்.

ப: என்னங்கறேன்—கொளுத்தராங்கிறேன்.

ச: 'ஓகே' 'ரிஹர்சலே' வேண்டாம் போலிருக்கு—

ஒரே 'டேக்'லே 'ஓகே' 'ஷாட்'

வே: ஒவ்வொரு வரியிலும் காமிக் 'டச்'—என்னமா, பேசி, பாடித் தள்றான்.

ச: அட, சுட்டிப் பயலே, பெண் வேஷமே போட்டிருக்கிறான். அந்தப் பயலும் பாவாடை கட்டி, தாவணி போட்டிருக்கான். இருங்கோ என்ன செய்றான் பார்க்கலாம்.

## காட்சி 6

காலம்: பகல்.

இடம்: பெரியப்பன் வீட்டுக் கூடம்.

இருப்போர்: நீலன், பாலன், ஜவுளிக்கடை ஜம்புலிங்கம்.

[நீலன் ஒரு அழகான பெண்போல வேடமணிந்திருக்கிறான். பாலனும் வேலைக்காரப் பெண் வேடமணிந்திருக்கிறான். ஜவுளிக் கடை ஜம்புலிங்கம் ஆடம்பரப் பிரியன்—'ஷோக் சுந்தரம்'—பெண்களைக் கண்டுவிட்டால், குழைவான்—அவன் உள்ளே நுழைகிறான். நீலனைப் பார்த்து மலைத்து நிற்கிறான்.]

பா: வாங்க, உக்காருங்க ஜம்புலிங்கம்! ஹி ஹி ஹி............அவுங்க..................தெரியாதுங்களா.........பூ.........இவ்வளவுதானா-அம்மா, இவர்தான் ஜவுளிக்கடை ஜம்புலிங்கம் கிறது தெரியுதா, பாருங்க.

நீ: போடி, ஏண்டி தெரியாது. ஏன் நிக்கரிங்களே-இவ என் 'சர்வன்ட் மெய்டு'—நான் வெளியிலே போனால் என்னோடு வருவா-கூட இருக்க வேண்டிய இடத்திலே-கூட

# மாதவி அரங்கேறினாள்!

★

எண்ணும் எழுத்தும் இயலைந்தும் பண்ணான்கும்
பண்ணின்ற கூத்துப் பதினொன்றும்—மண்ணின் மேற்
போக்கினாள் பூம்புகார்ப் பொற்றொடி மாதவி தன்
வாக்கினால் ஆடரங்கின் வந்து.

—சிலப்பதிகாரம்.

★

[ஓவியம்: "முரசொலி" செல்லப்பன்]

முரசொலி பொங்கல் மலர்-1957



இருப்பா-என்னைவிட்டுட்டு வெளியேஇருக்க வேண்டிய இடத்திலே வெளியிலே இருப்பா —ரொம்ப நல்லவ பாலம்மா — ஏங்க, நீங்க படம் பார்ப்பீங்களா?

ஜ: ஏன், கடையிலே ராமர் படம், கிருஷ்ணன் படம் நிறைய மாட்டியிருக்கிறன்களே!

நீ: அதைச் சொல்லலீங்க—சினிமாப் ''' 'ம்.

ஜ: ஓ, பார்ப்பேனே!

நீ: அப்பா, அம்மா, அக்கா, தங்கை, மாமன், மருமகன், மருமகள், அண்ணன், தம்பி, அண்ணி, அத்தை, சித்தப்பா, சின்னம்மா, பெரியம்மா, மகன், மகள், பிள்ளைகள், தாத்தா, பாட்டி, மனைவி, மைத்துனி, மைத்துனன் இவர்களை யெல்லாம் பார்த்திருக்கிங்களா?

ஜ: உங்களையே இன்னும்புரிஞ்சிக்கலியே; உங்க குடும்பத்தார்களை எப்படித் தெரியும்?

நீ: நீங்கவேறே—இந்த சினிமாப் படங்களைப் பார்த்திங்களான்னு கேட்டேன்.

ஜ: ஓ, பார்த்திருக்கேனே. எந்தப் படம் வந்தாலும் முதல் நாள் முதல் ஆட்டம் பார்த்துடுவேனே.

நீ: அப்படின்னு என்னை நல்லா தெரிஞ்சி[யிருக்கணுமே.

ஜ: நீங்க சினிமா 'ஆக்டரா'?

நீ: இல்லே! சினிமா 'எக்ஸ்ட்ரா!'

ஜ: எக்ஸ்ட்ராவா?

பா: சினிமாவையும் முன்னாலே சேர்த்துடுங்க—இல்லாட்டா, முனியாண்டி விலாஸ் எக்ஸ்ட்ரான்னு நினைச்சுக்கப் போறிங்க.

ஜ: இதிலே யெல்லாம் என்ன வேஷம் நடிச்சிருக்கீங்க?

நீ: தோழி, சேடி, வேலைக்காரி, தட்டுத்தூக்கி வருபவள், கூட்டத்திலே வேடிக்கை பார்ப்பவள், கோயிலிலே கும்பிடுபவள்—இப்படி பல பெரிய பெரிய வேஷங்களிலே வந்திருக்கேனே!

ஜ: ஓ, உங்க பேரு?

நீ: நீலவேணி!

ஜ: நீங்க ஏன் இங்கே இருக்கிங்க?

நீ: பெரியப்ப அண்ணனோடுதான் இப்போ இருக்கேன். நாடகங்களிலேகூட நடிக்கிறேன். வீட்டிலே யாரும் பெண் துணையில்லாததாலே, கூடமாட இருப்பேன்.

[உள்ளே குடிபோதை கொஞ்சம் தெளிந்து, புரண்டு படுக்கிறான் பெரியப்பன் சத்தம் கேட்கிறது.]

ஜ: யாரது?

நீ: அண்ணனுக்கும்தான் உடம்பு சுகமில்லை. அண்ணிதான் கோவிச்சுகிட்டு போயிருக்கு. எல்லாம் நான்தான். அது சரி, நீங்க எங்க வந்தீங்க?

ஜ: ஹிஹி .....நான் சும்மாதான் வந்தேன். ஏன், உங்களைப் பார்த்துட்டுப் போகலாம்னுதான் வந்தேன்னு வச்சுக்குங்களேன்.

நீ: (ஓரக்கண்ணால் பார்த்தபடி)......ஆகட்டுங்க ...........அண்ணன் 'ஷூட்'டிங்குக்கு நாளை மறு நாள் போயிடும். ஒரு வாரம் கோயமுத்தூருக்குப் போயிடும். நீங்க வாங்க. ஓய்வாகப் பேசலாம்.

ஜ: (மகிழ்ச்சி மிகுதியில்) ஆ...ஆ...வர்ரேன்... சேலை எதனாச்சும் வேணுமின்னா சொல்லுங்க. வரும்பொழுது கொண்டாரேன்...... உம்......அப்புறம் என்னை வரச்சொல்லிவிட்டு 'ஷூட்டிங்', அது இதுன்னு போயிடப்படாது!



"மானினம் ஒன்றுபட்ட மனத்தோடு
புல்லருந்தும்;
ஏனிந்த ஒற்றுமைதான் இங்கில்லை
மாந்தருக்குள்?"

புகைப்படம்: குருமூர்த்தி.



நீ: ஊஹூம...'ஷூட்டிங்' 'மீட்டிங்' எல்லாம் இப்போ வீட்டிலேதான்—வெளியிலே இல்லை.

ஜ: சரி...வரட்டுமா நீல...வே...ணி ?

நீ: (புன்முறுவல் செய்து) அவசியம் நாளை மறுநாள் வாங்க. காத்துகிட்டிருப்பேன்.

ஜ: ஆ...ஐயோ, என்னைத் தூக்கிகிட்டே போவுதே! (ஜம்புலிங்கம் வெளியேறுகிறான்.)

## காட்சி-7

காலம்: பகல்.

இடம்: பெரியப்பன் வீடு.

இருப்போர்: டைரக்டர் சங்கரன், படாதிபதி பரம குருநாதர், கதாசிரியர் வேங்கடத்தான், நடிகர் பெரியப்பன், நீலன், பாலன்.

[டைரக்டர், படாதிபதி, கதாசிரியர் மூவரும் மாடியிலிருந்து இறங்கியோடி வருகிறார்கள்]

மூவரும்: சபாஷ், பலே, வெகு வெகுஜோர்.

ப: புலிக்குப் பிறந்தது பூனையாகுமான்கிறேன், என்னங்கரேன், நான் அசந்துபோய்ட்டேன்கிறேன். அப்பன் ஆறடி பாய்ந்தால் மகன் அறுபதடி பாய்ரான்கிறேன்.

க: நம்ம கதைக்கு, மூணும் பொருத்தமான சீன்கள்.

வே: நான் முன்னாலேயே யோசனை பண்ணியாச்சு—இந்த மூன்று சீன்களையும் சேர்த்துவிட வேண்டியதுதான் நம்ம படத்திலேன்னு.

[போதை தெளிந்து பெரியப்பன் வெளியில் வருகிறான்]

பெ: வாங்க, எல்லோருக்கும் வணக்கம். வந்து ரொம்ப நேரமாச்சுதா? ஏண்டா நீலா, என்னை எழுப்பக் கூடாதா?

வே: பெரியப்பன் அவர்களே, உங்கள் மகன், உங்களைவிட ஆயிரம் மடங்கு திறமையான நடிகன் என்பது எங்களுடைய ஏகோபித்த அபிப்பிராயம். நாங்கள் நேரில் கண்டு மகிழ்ந்து செய்துள்ள முடிவு. நீங்கள் போதையிலிருப்பதைஎங்களுக்குத்தெரிவிக்க வெட்கப்பட்டு, நீலன் ஒரு பெரிய நாடகமே நடத்திவிட்டான். அந் நாடகத்தில் மூன்று காட்சிகள்தான் இடம் பெற்றன—மூன்றும் மூன்று வகையில் உயர்ந்த காட்சிகள்.

ச: நாங்கள் இங்கே வரும்பொழுது உங்களை மட்டும் 'தந்தையும் மகனும்' படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்வதென வந்தோம். இப்போது உங்கள் மகனையும் ஒப்பந்தம் செய்வதென முடிவு செய்துவிட்டோம்.

ப: ஆமாங்கிறேன்—அப்பாவுக்குப் பெரியப்பனையும் மகனுக்கு நீலனையும் போட்டுட்டா படம் பலே ஜோராயிருக்கும்கிறேன்.

பெ: மிகவும் மகிழ்ச்சி.

ச: ஒப்பந்தங்களை நாளைக்கு எழுதிக் கையெழுத்திடுவோம்.

நீ: ஏங்க, என்னை நடிக்கச் சொன்னால், என் 'பிரண்ட்' பாலனுக்கும் ஒரு சான்ஸ் கொடுங்க.

பா: ஆமாங்க.

ப: அதுக்கென்ன, ஆகட்டுங்கரேன்.

நீ: அப்படின்னா, சரிதாங்கரேன்.

[எல்லோரும் சிரிக்கிறார்கள்]



"காதலர் இருவர் கருத்தோருமித்து
ஆதரவு பட்டதே இன்பம்."

புகைப்படம்: மதருஸ் போட்டோ ஸ்டுடியோ, வேலூர்.



"வெள்ளி நிலா சிதறியதோ:
வெள்ளை முத்து உருகியதோ!"



"உயர்ந்துநிற்கும் தூண்களிலே
உதயத்தின் ஜோதி...பார், பாப்பா!"
புகைப்படங்கள்: குருமூர்த்தி

# நாடகத்தில் நாம்!

நடிகமணி டி. வி. நாராயணசாமி

நமது நாடக மன்றங்கள் என இன்று பூரிப்புடனும், பெருமையுடனும் சொல்லிக் கொள்ளும் விதத்தில் நடிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள் நாடகக் குழு புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் நாடக மன்றம், இலட்சிய நடிகர் இராசேந்திரன் நாடக மன்றம்—ஆகிய அமைப்புக்கள் தமிழகத்து மேடைகளில் இலட்சிய முழக்கம் செய்து வருவது கண்டு கலைத் துறையிலே கொள்கை வளர வேண்டுமென எண்ணும் என் போன்றோரின் இதயம் கழிபேருவகை அடைகிறது.

அந்தக் காலம் முதல் இந்தக் காலம்வரை நாடக மன்றங்கள் ஏராளமாகத் தோன்றியும், அழிந்துமிருக்கின்றன. இன்னும் நாடகத்தையே தொழிலாகக் கொண்ட நாடகக் குழுக்கள் பல உலவுகின்றன. எனினும் குறிப்பிட்ட ஒரு கொள்கையைக் கடைப்பிடித்து, நாட்டு நலனிலே அக்கரை காட்டி, வெற்றிப் பாதையிலே வீர நடை போட்டு, மக்களை அறிவுலகத்திற்கு அழைத்துச் செல்லும் பணியை, செவ்வனே செய்து வருகின்ற கலை மன்றங்கள் மேற்குறித்த கலை உலக மூவேந்தரின் நாடகக் குழுக்களேயாம்.

தாயக விடுதலை இயக்கமாகிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்களாக இருந்து பணியாற்றிவரும் இவர்களைத் தவிர, நகைச்சுவை மன்னர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள், ஆரம்பம் முதல் இன்று வரை, பொதுவாக முற்போக்குக் கொள்கைகளைப் பகுத்தறிவுப்பாசறைக்கு ஆக்கந்தேடும் வகையில் சினிமா நாடகம் ஆகியவற்றால், எந்தச் சூழ்நிலையிலும் திராவிட இயக்கத்திற்கு ஆதரவு பெருகும் முறையில் சுயேச்சையாகப் பாடுபட்டு வருவதையும் பகுத்தறிவு வாதிகள் பாராட்டி மன மகிழ்வு கொள்கின்றனர்.

இந்த நிலைமை கலை உலகில், தனிச் சிறப்புப் பெற்று வளருவதற்கு வழி கோலியவர் அறிஞர் அண்ணா அவர்களே யாவார்கள். அதைத் தொடர்ந்து அண்ணா வழியில் அதி தீவிரமாகக் கொள்கை முரசொலித்து மக்களை முன்னேற்ற முனைக்கு ஈர்த்துவரும் திறன்படைத்தவர் தோழர் மு. கருணாநிதி அவர்களே யாகும். தி. மு. க. கலைக் கோட்டம் அமைக்க இவர்களின் இடையறாத்தொண்டும், அன்பு வழியும், தாய் மொழிப் பற்றும், விடுதலை வேட்கையும் முழுக்க முழுக்க உதவி புரிந்திருக்கின்றன என்றால் மிகையன்று. அறிஞர் அண்ணாவும், கலைஞர் கருணாநிதியும் அறியாமையைச் சுட்டெரிக்க நாடகம் எழுதியதோடு நிற்கவில்லை; அதிலே வேடம் பூண்டு நடிக்கவும் செய்தார்கள். இதைக் கண்ணுற்ற தொழில் நடிகர்கள் விழிப்புப் பெற்றார்கள். நண்பர் கே. ஆர். ஆர். அவர்கள் நாடக மன்றம் நிறுவினார். அறிஞர் அண்ணாவின் அழகு ஓவியங்களாம் வேலைக்காரி, ஓர் இரவு-போன்ற கலைச் சிறப்பும், கருத்துப் புரட்சியும் நிறைந்த நாடகங்களைத் தொழில் முறையில் அரங்கேற்றும் முதல் வாய்ப்பும் பெருமையும் கே. ஆர். ஆர். அவர்களுக்குக் கிடைத்தது.

இதிலே வெகுவாகப் பற்று கொண்டு உழைக்க எனக்கும் சந்தர்ப்பம் கிட்டியது. கலைப் புரட்சியின் துவக்க நாட்களில் அண்ணா அவர்களோடு தொடர்பு கொண்டு, சந்திரோ



தயம், சந்திரமோகன்—ஆகிய நாடகங்களில் நடிக்கும் நல் வாய்ப்பு கிடைக்கப் பெற்ற நான், தொழில் நடிகர்கள் மத்தியிலே, கலைப் புரட்சியையும் கருத்து வளர்ச்சியையும் ஏற்படுத்த இராமசாமி அவர்களோடு மும்முரமாக ஒத்துழைத்தேன். அன்றியும், புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களோடு அளவளாவி, அண்ணாவிடம் அழைத்துச் சென்ற அறிமுகப்படுத்தினேன்.

இன்று சினிமா வானில் முன்னணி நட்சத்திரமாய்த் திகழும் எம்.ஜி.ஆர். அவர்கள், தி.மு.க. பாசறையிலே, தன்னையும் பதிவு செய்து கொண்டு கலைப்புரட்சியாளர் வரிசையிலே நிற்பதைக் காணும் நான் பெருமகிழ்வு கொள்கிறேன். மற்றும், இள வயது முதலே என்னோடு நேசமும் பாசமும் கொண்டு, டி. கே. எஸ். நாடக சபையிலிருந்து பகுத்தறிப் பணிபுரிய பக்க பலமாக இருந்து, பிறகு என்னோடு கே. ஆர். ஆர். நாடகக் குழுவில் சீரிய பணியாற்றி, இன்னுளில் இராஜேந்திரன் நாடக மன்றத்தை நிறுவி, என் போன்றோருக்கு அதில் இடந்தந்து, கொள்கையின்றி வேறறியேன்-என முழக்கமிடும் இலட்சியநடிகர் இராஜேந்திரன் ஆர்வமிக்க தொண்டும் என்னைப் பேரானந்தம் அடையச் செய்கின்றது.

இன்னும் இவர்களுடைய தலைமையிலே எத்தனையோ நடிகமணிகள் கொள்கைப்பணி புரிகின்றனர். அவர்கட்கெல்லாம் அறிவியக்கத்தின் நன்றி என்றும் உரியதாகும். இத்துறையில் வளர்ச்சி காணவும், தாயகத்தின் உரிமைப் போராட்டத்தில் முன்னின்று விடுதலைபெற்று வீறுகொண்டு விளங்கவும், இலட்சியப் பாதையிலே அவ்வப்போது தோன்றி இன்னல் விளைவித்தும், பின்னர் தூய நற்பணியால் தகர்த்தெறியப்பட்டு போகின்ற துரோக சக்திகளின் மூலைகள் கிளம்பாத வண்ணம் களங்கமற்ற தொண்டுபுரியும் முன்னேற்றக் கலைக் கழகம் ஒன்றை அமைத்து, ஒற்றுமை கூடிய முழுபலத்துடன் பழமைப் பாசறையை அறவே அழிக்க இந்நாளில் நாம் சிந்திப்போமாக.

மேலும், "கொள்கை பேசும் நடிகர்கள் வாழ முடியுமா? கொள்கை முழக்கத்தால் என்ன சாதித்து விட்டீர்கள்?" என்ற அவலக் குரலெழுப்பும் தன்னலப் புலிகள் எம்.ஜி.ஆர்., கே. ஆர். ஆர்., எஸ். எஸ். ஆர். -ஆகிய கலை உலகச் சிற்பிகளின் வளர்ச்சியைக் காணட்டும்; கண்டு தெளியட்டும் என்று கூற விரும்புவதோடு, அடுத்த பத்தாண்டுகளில் எப்பக்கம் திரும்பினும் இலட்சியக் கலைஞர்களே என்று கூறும் வண்ணம் ஏசலுக்கும் பூசலுக்கும் வாய் வீச்சுக்கும் இடையிலே, செயலாற்றும் செம்மல்களாக விளங்க இத்திருநாளில் உறுதி பூணுவோம்.

●●●

## 'அர்த்த நாரீஸ்வர' ஏரி !



விக்கிரமாதித்த அரசன் காடாறு மாதம் நாடாறு மாதம் என்ற முறையில் தன் ஆட்சியை நடத்தி வந்தான் என்கிறார்கள்.

கும்பகர்ணன் ஆறு மாதம் தொடர்ந்து தூங்கியதாகவும், பிறகு ஆறு மாதம் தொடர்ந்து விழித்திருந்ததாகவும் இராமாயணப் பிரசங்கிகள் காலட்சேபம் செய்கிறார்கள்.

பாதி ஆண் வடிவும், பாதி பெண் வடிவும் கொண்டிருக்கும் ஆண்டவன் ஒருவன் இருக்கிறான், அவன் பெயர் அர்த்தநாரீஸ்வரன் என்கிறார்கள், புராணீகர்கள்!

அதுபோல் மிகவும் விசித்திரமான ஏரியொன்றும் இருக்கிறது; வடநாட்டிலுள்ள ஜெய்பூரில்!

சம்பார் என்னும் அந்த ஏரியின் தண்ணீர் ஆண்டுக்குப் பாதி நாட்கள் உப்புக் கரிக்கும்.

மீதமுள்ள பாதி நாட்கள் அதன் தண்ணீர் தித்திப்பாக இருக்கும்!

ஏரியின் தண்ணீர் உப்புக் கரிக்கும் மாதங்களில் அதிலிருந்து சுமார் 200 000 டன்கள் உப்பு காய்ச்சி எடுக்கிறார்கள். பிறகு அதிசயமாக அந்த உப்பு மறைந்து; தண்ணீர் இனிக்க ஆரம்பிக்கிறது.

—இது போல் இனிப்பும்; கரிப்பும் கொண்ட தன்மையாய் இந்த ஏரி பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிலிருந்தே இருந்து வருகிறது.

# ஐன்ஸ்டைனின் வாழ்க்கைத் தத்துவம்

"பி.சி.ஜி."

ஐன்ஸ்டைன் ஒரு பெரிய விஞ்ஞான மேதை; அதை விடப் பெரிய விஷயம் அவர் ஓர் தத்துவ ஞானி.

அணு குண்டிலிருந்து ஆத்ம விசாரணை வரையில் திட்ட வட்டமான கருத்துக்கள் கொண்டிருந்தார். உலக நிகழ்ச்சிகளிலிருந்து துண்டித்துக் கொண்டு ஆய் கூடத்தில் அவர் ஒதுங்கி வாழவில்லை; ஆனால் அதே சமயத்தில் உலக ஆசாபாசங்களுக்கு இரையாகி, உண்மையை மறந்து விடவுமில்லை; அறிந்த உண்மைகளுக்குத் திரைபோடவுமில்லை; உயர்ந்த விஞ்ஞானியாகவும், அதை விட உயர்ந்த ஞானியாகவும் நின்று வழிகாட்டினார். அவர் ஒவ்வொரு பிரச்சினை குறித்தும் அளித்துள்ள கருத்து விளக்கம் இருளில் இடறித் தவிக்கும் மக்கள் கூட்டத்திற்கு வழிகாட்டும் அறிவு ஒளி.

## கடவுள்

"நீங்கள் நம்புகின்ற எந்த ஆற்றலையும் கடவுள் என்று அழைக்க உங்களுக்கு முழு உரிமையுண்டு; வாழ்க்கையைப் பயப்படும் பொருளாக்கியோ, அன்றி மரணத்தைக் காட்டிப் பயமுறுத்தியோ, அல்லது மூட நம்பிக்கையின் அடிப்படையிலோ கட்டப்படும் கடவுள் தத்துவத்தை நான் ஒப்புக் கொள்ள முடியாது. கடவுள் என்ற ஒரு தனிப் பொருளை நான் நிரூபிக்க முடியாது; ஆனால் அவர் இப்படிப்பட்டவர் என்று பேசுவது நான் பொய்யன் என்பதை நிரூபிப்பதாகும்."

கடவுளைப்பற்றி மேற் கண்டவாறு கூறிவிட்டு, 'நீங்கள் பின் எதைத்தான் நம்புகிறீர்கள்?' என்று கேட்ட நண்பருக்கு ஐன்ஸ்டைன் பதில் அளிக்கிறார்.

"நம்புவதற்குத் தகுதியுள்ள விஷயங்கள் உலகில் எத்தனையோ இருக்கின்றன. மனிதர்களின் சகோதரத்துவத்திலும், தனி மனிதர்களின் சிறப்பியல்புகளிலும் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்."

## ஆத்மா

ஆத்மாவில் நம்பிக்கையுண்டா—என்ற கேள்விக்கு ஐன்ஸ்டைன் கீழ்க்கண்டபடி பதிலளிக்கிறார்:

"மனிதனை நல்ல பெரிய செயல்களுக்குத் தூண்டும் உணர்ச்சிக்கு ஆத்மா என்று பெயரிடுவதானால் அதை நான் நம்புகிறேன்"

## உலக சமாதானம்

"உலக சமாதானம் விரும்பக்கூடியது மட்டுமல்ல; மனித வாழ்வு மாநிலத்தில் நீடித்து நிலை பெறுவதற்கு இன்றியமையாதது.

அடிப்படைக் கொள்கைகளில் நாடுகளுக்கிடையே ஒற்றுமை ஏற்படாவிட்டால் ஒப்பந்தங்களாலும் ஆயுதச் சேகரிப்பாலும் ஒரு பலனும் கிட்டாது.

எல்லா நாடுகளுக்கும் பாதுகாப்பு ஏற்படும் வரை ஒரு நாட்டிற்கும் பாதுகாப்பு நிலைக்காது. பாதுகாப்புப் பிரச்சினையை நாட்டின் அடிப்படையில் பிரித்துப் பேசுவது அர்த்தமற்றது. எல்லா நாடுகளையும் கொண்ட தேசியத்திற்கு அப்பாற்பட்ட சர்க்கார்தான் நம் அனைவரையும் காப்பாற்ற முடியும்—அழிவு அபாயத்திலிருந்து!"

பொருளின் அடிப்படையான அணுவைக் கண்டறிந்து, அதன் ஆற்றலை விளக்கியது போலவே உலகின் ஒவ்வொரு அடிப்படைப் பிரச்சினைகளையும் ஆராய்ந்து தெளிவான முடிவுகளோடு இருந்தார். விஞ்ஞானப் பாதையில் ஒரு புதிய திருப்பத்தையே தோற்றுவித்த அந்த விஞ்ஞானி, ஆடம்பரம், விளம்பரம் ஆகியவற்றிலிருந்து ஒதுங்கியே வாழ்ந்தார். இளைஞர்களுக்கு அவர் கீழ்க்கண்ட யோசனையைக் கூறுகிறார்:

"வெற்றி பெற்ற மனிதனாக வாழ முயல்வதைவிட, உபயோகமுள்ள மனிதனாகவே வாழ முயற்சி செய்"

வாழ்க்கையில் வெற்றி பெற விரும்பும் மனிதன் குறுகிய வழிகளைக் கையாளுகிறான். ஆனால் உபயோகமுள்ளவனாக வாழ விரும்பும் மனிதன், கரடு முரடான நீண்ட பாதையில் கஷ்டத்தைப் பொருட்படுத்தாமல் பிரயாணம் செய்கிறான். அணு சக்தியைக் கண்டறிந்து, ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பித்து வைத்த விஞ்ஞானி ஐன்ஸ்டைன், இஸ்ரேல் நாட்டுத் தலைவர் பதவி கிடைத்த பொழுது, அதை வேண்டாமென்று உதறித் தள்ளினார். பிரின்ஸ்டன் நகரில் உபயோகமுள்ள உயர்ந்த விஞ்ஞானியாக வாழ்ந்த அவருடைய வாழ்க்கை வெற்றிதானே? வாழ்க்கையில் அவர் வெற்றியடைந்த மனிதர்தானே?

●●●



# ஒரு நாள்



கருணானந்தம்

" இன்றொருநாள் காவலுக்குச் செல்லா விட்டால்
    என்னமச்சான், குடிமுழுகிப் போய்விடாதே!
கொன்றுவிடும் தென்றலுடன் கொடுமை செய்யக்
    குளிர்நிலவும் கூடிவந்தால் தாங்குவேனோ?"
என்றவள்தன் வாய்திறந்து கேட்கவில்லை!
    இருவிழியில் ஏக்கத்தைத் தேக்கி வைத்து,
மென்றுமிழ்ந்த வெற்றிலையால் சிவந்து நிற்கும்
    மெல்லிதழைப் பற்களினால் கடித்துக் கொண்டு, —

ஏற்றிவைத்த கைவிளக்கை எடுத்துத் தந்து
    ஏதுமறியாதவள்போல் முகத்தைப் பார்த்தாள்!
ஊற்றிவைத்த கஞ்சியுடன் ஊறுகாயும்
    உண்டுவிட்டுத் தலையில்மேல் துண்டைக் கட்டிப்,
போற்றிவைத்த ஆளுயரத் தடியைத் தூக்கிப்
    போர்வீரன் நடைபோட்ட பொன்னனுக்கு
மாற்றிவைத்துப் பதிலுரைக்க மார்க்கமில்லை;
    மனம்வெதும்பித் தினம்புரியும் பணிக்குச்சென்றான்

கடமையிலே எள்முனையும் வழுவ மாட்டான்;
    கள்வருக்குப் பொன்னனென்றால் கலக்கம் காணும்!
உடலொடிய விடியுமட்டும் காவல் காப்பான்.
    ஒருமணிநெல் களத்தைவிட்டுப் போகா வண்ணம்!
மடமயிலாள் செல்விக்குத் தாலி கட்டி
    மாதமொன்று சென்றதுதான் மிச்சம்; ஆனால்
உடல்விரும்பும் இன்பத்தை ஒருநாள் கூட
    ஊடலுடன் கூடியவன் தந்ததில்லை!



# இன்பம்



களத்தினிலே உலவிநின்ற பொன்னன் நெஞ்சைக்
கட்டழகி விட்டகண்ணீர் சுட்ட தாலே,
உளத்தினிலே போராட்டம் ஓய வில்லை !
உட்கார்ந் தான்; எழுந் திருந்தான்; உன்மத்தன்போல்
குளத்தருகே போய்நீரில் குனிந்து பார்த்தான் ;
குடிசையிலே இதயத்தின் குமுறல் தாங்கி
இளைத்திருக்கும் மனைவிநிலை எண்ணும் போதில்
எல்லாமே துச்சமெனத் துணிந்து விட்டான் !

"செல்வி, செல்வி ! திற. கதவை!" என்று கூவித்
திடுதிடெனக் கதவிடிக்கும் ஓசை கேட்டு,
நல்லதொரு கனவுலகில் சஞ்ச ரித்த
நங்கைமிகத் திடுக்கிட்டாள், விடிந்த தென்று !
"இல்லையில்லை ! செல்வி, உன்னை இனிமேல் என்றும்
இராப்பொழுதில் தனித்திருக்க விடவேமாட்டேன்"
சொல்லியதைத் துணைவனவன் முடிப்ப தற்குள்
தோள்மீது கிளிபோலத் தொத்திக் கொண்டாள்.

திளைத்தறியாப் பேரின்பக் கடலில் மூழ்கித்,
தினந்தினமும் புதுப்புதிதாய்த் திகழும் அன்பால்
உளத்தோடும் உளம்ஒன்றி, உணர்வு மங்கி
உலகினை மறந்திருவர் ஒருவர் ஆனார் !
களைத்துப்போய் உறங்கிவிட்ட செல்வி காதில்
கதவருகில் ஒலிகேட்கத் திறந்து பார்த்தாள் ;
களத்துநெல்லைக் கள்வர்கள் கவர்ந்த தாலே
காவலனைக் கைதுசெய்ய மூவர் நின்றார் !







# நெருப்பு

## மு. கருணாநிதி

“நண்பர்கள் எனப்படுவோர், இன்பத்தில் பங்குபெற்றுத், துன்பத்தில் துயர் துடைக்கும் துணைவர்கள்! ஆனால் எனக்குவாய்த்த நண்பர்களில் சிலரோ என்னோடு மிக அதிகமாகப் பழகிவிட்டு-இப்போது என்னைத் தணலில் போட்டு வாட்டுகிறார்கள், ‘வதக்கு’கிறார்கள். சாதாரணப் பிரச்சினைகளையெல்லாம் பெரிதாக்கிக்-கடுகை மலையாக்கி... அப்பப்பா; அவர்கள் என்னைச் சித்ரவதை செய்வது சகிக்கவில்லை. அவர்களை என்னால் வெறுத்து ஒதுக்கிவிட முடியவில்லை. காரணம்; அந்த அளவுக்கு அவர்களிடம் பற்றும் பாசமும் கொண்டு விட்டேன். அந்தப் பற்று, பாசம் என்ற அடிப்படையையே சில நேரம் தகர்த்துவிட முனைகிறார்கள்; என் நண்பர்கள்! என் சிந்தனை ஓட்டத்திற்கேகூட சில சமயம் தடையாக நின்று கொண்டு, மிக அலட்சியத்தோடு என் வேதனையைக் கவனிக்கிறார்கள். தாங்கள் செய்யும் தவறுகளை மறந்து விட்டுத், தங்களையொரு முறை திரும்பிப் பார்த்துக் கொள்ள மறுத்துவிட்டு, என் இருதயத்தை மிதித்துத் துவைக்கிறார்கள். என்றென்றும் என் இருதயக் கோயிலிலே அவர்கள் அழியாத சிற்பங்களாக இருப்பார்கள் என்று கனவு கண்டு கொண்டிருக்கும்போது; அந்தச் சிற்பங்களே வெடித்து மூளியாகி விட்டால்...பிறகு எனக்கு ஏது நிம்மதி......எனக்கு நிச்சயமாகத் தெரிகிறது; நான் தவறு செய்யவீல்லையென்று! பெருமளவுக்கு அவர்களுக்கு விட்டுக் கொடுத்து நடந்திருக்கிறேன் என்பதையும் அவர்கள் அறிவார்கள்! அவர்களுக்காக நான் சந்தித்த ‘பகை’யின் வகைகள் எத்தனையென்பதும் அவர்கள் அறியாததல்ல! ஆனாலும் என்னை அழவிடுகிறார்கள்; ஏனோ தெரியவில்லை... இந்தக் கடுமையான தண்டனை எனக்கு!”

‘நண்பன்’ என்ற கதைப்புத்தகத்தைப் படித்து முடித்த அருள். மேற்கண்ட வாசகங்களைமட்டும் திருப்பித் திருப்பிப் படித்துக் கொண்டு, தனது ரயில் பயணத்தை நடத்தினான்; மூன்றாம் வகுப்பில் இருந்தவாறு! சென்னையிலிருந்து மாயவரம் நோக்கி வரும் ரயிலில்... நல்ல இருளில்... அவன் பிரயாணம் செய்துகொண்டிருந்தான்.

‘நண்பன்’ புத்தகத்தைச் சென்னையில் அவன் வாங்கும் போதே...அவன் மனக்கண் முன்னே பூபதி நின்றுகொண்டு அலட்சியமாகச் சிரித்தான். கலங்கிய கண்களைத் துடைத்தவாறு, புத்தகத்தை வாங்கி எடுத்துக் கொண்டு ரயிலில் ஏறி உட்கார்ந்ததும் படிக்க ஆரம்பித்தான். படித்து முடித்துங்கூட திருப்பித் திருப்பிப் பல இடங்களை அவன் மனப்பாடம் செய்து கொள்ள முனைந்தான்.

“என்னை அழவிடுகிறார்கள்; ஏனோ தெரியவில்லை; இந்தக்








கடுமையான தண்டனை எனக்கு?"

இந்த வாக்கியத்தைப் படிக்கின்ற ஒவ்வொரு முறையும் அவன் மேனி புல்லரித்தது. ரோமக் கால்கள் எழுந்து நின்றன. சிலிர்த்த உடலை அமைதிப்படுத்திக் கொண்டு சிந்தனையை ஓடவிட்டான்.

O

பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன், அருளும் பூபதியும் சிதம்பரம் கல்லூரியில் மாணவத் தோழர்கள். தில்லையை அடுத்த வல்லம் படுகை தான் அருளின் சொந்த ஊர். வல்லம் படுகையை அடுத்த கொள்ளிடம் கிராமம் தான் பூபதியின் சொந்த ஊர்!

பூபதி—பெயருக்கேற்ப பணக்கார வீட்டுச் செல்லப் பிள்ளை. அருள்; அன்பு வடிவினன். நட்புக்கோர் இலக்கணம்.

கல்லூரித் தொடர்பு அருளையும் பூபதியையும் ஆருயிர்த் தோழர்களாக்கியது. அருளைத் தனியே கண்டவர்கள், "பூபதி எங்கே;" எனக் கேட்பதும், பூபதியைக் காண்பவர்கள் "அருள் நலந்தானே?" என்று கேட்பதும் வழக்கமாகி விட்டது—அந்த அளவுக்கு அவர்களின் நட்பும் வளர்ந்தது. வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ளத்தான் அருள், பூபதியை அண்டிக் கிடக்கிருன் என்ற சொல் வந்து விடக்கூடாதே என்பதற்காக அருள் மிக எச்சரிக்கையாக இருந்து கொண்டான். படிப்பதற்குப் பணமில்லாமல் கடைசியாக மிஞ்சியிருந்த சில ஏக்கர் நிலங்களையும் தந்தை விற்றுவிட முடிவு கட்டிய வேளையில்கூட அருள், பூபதியிடம் அந்தச் சேதியை வெளியிடவில்லை. அப்படி விற்கப்பட்ட நிலத்திலேயிருந்து கிடைத்த பணத்தில் ஒரு நூறு ரூபாயை பூபதிக்கு அவசரக் கடனாகக் கொடுத்து-பிறகு அவன் திருப்பித் தந்த போது வாங்கிக் கொண்டான். எந்த நேரத்திலும் எதையாவது பற்றிச் சிந்தித்துக்கொண்டிருப்பதும்...புத்தர், காந்தி, சாக்ரடீஸ் போன்ற பெரியவர்களின் அறவாழ்வைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்திக்கொண்டிருப்பதும் அருளின் வாடிக்கையாக இருப்பது பூபதிக்குப் பிடிக்கவில்லையென்றாலும் எப்படியோ ஒரு பாசம் அவர்களை நண்பர்களாகக் கட்டிப் போட்டு வைத்திருந்தது. அருள் விரும்புகின்ற நிறம் ஆகாயத்தின் நீலமென்றால், பூபதி விரும்புகின்ற நிறம் எலுமிச்சம் பழத்தின் மஞ்சளாக இருக்கும். அருள் படிப்பது "உலகைத் திருத்திய உத்தமர்கள்" என்ற நூலாயின் பூபதி "உலகப் பேரழகி இனியோ" என்னும் ஏட்டில் மூழ்கியிருப்பான். புராணக் கதைகளுக்குப் புது மெருகு தரப்பட்டுப் பொன் வண்ணத்தில் முகப்புச்சித்திரமும் தீட்டிப் புதிய மொந்தையில் பழைய மது தரப்படுகிறதல்லவா; அந்த மது மயக்கத்தில் பூபதி ஆழ்ந்துவிடுவான். சந்திரனும் தாரையும். இந்திரனும் அகலிகையும், கண்ணனும் ராதையும் இப்படிக் குவிந்தன அவனது நூலகத்தில் ஏடுகள்! தாபத்தால் தவிக்கின்ற தாரையின் உடற்கொதிப்பையும் உள்ளத் துடிப்பையும் ஒரு நொடியில் குளிரச் செய்த சந்திரனின் தழுவலிலே அவள் மெய்ம் மறந்து கிடந்த விதந்தன்னை எப்படித்தான் வர்ணிக்கிருனப்பா இந்தமாமேதையெனப் பாராட்டி மகிழ்வான் பூபதி!...அந்த வேளை அருளோ, சந்திரனில் மனிதர் உண்டா என்ற ஆராய்ச்சி நூலிலே கருத்தைப் பதிய வைத்திருப்பான்...இந்திரன் என்றுதெரிந்த பிறகும் அகலிகை பேசாதிருந்தாள் எனக் குறிப்பிடும் திறமை காம நூல் வல்லார் ஒருவருக்கே ஏற்பட முடியும். இதுவரை பெற்றிடாத பெறற்கரிய இன்பத்தைப் பெறும்போது "இந்திரனா? இழிமகனே!...இது தகாது!" என இடித்துரைக்கும் செயல் அகல்யாவுக்கு ஏற்படாதது நியாயந்தான்!...என விமர்சனம் செய்வான் பூபதி! அவனுக்கு, இந்தமாதிரி விமர்சனங்களைத் தன் நண்பனிடம் கேட்டுக் கேட்டுச் சலித்து விட்டது. ஆனாலும் அவர்கள் நட்பு இதுபோன்ற வேறுபாடுகளால் தேய்பிறை ஆகவில்லை...மாறாக வளர்ந்தது......

தந்தைக்கு இயற்கையின் அழைப்பு நெருங்கி விட்ட காரணத்தால் கல்லூரிப் படிப்பை அரை குறையாக முடித்துக் கொண்டுஅருள்,கிராமத்திற்கே திரும்பினான். தந்தையின் கடைசி ஆசையை அவன் எப்படியும் நிறைவேற்றி வைக்க வேண்டிய நெருக்கடியில் தூக்கி எறியப்பட்டான். மகனை

மணக்கோலத்தோடு பார்த்து விட்டுத்தான் சாக வேண்டுமென்று தந்தை தவித்தார்.

கொள்ளிடத்திலே ஒருபெண் இருப்பதாகவும், நல்ல அழகியென்றும், ஆனுல் அவள் தாயார் ஒரு மாதிரி யென்றும் அருளிடம் சில ஊர்ப் பெரியவர்கள் கூறினுர்கள். சேற்றிலே செந்தாமரை—சிப்பியிலே முத்து — முள்ளிலே ரோஜா— என்று பலப்பல படித்திருக்கிற அவனுக்கு அந்தப் பெண் மீது வெறுப்பு ஏற்படவில்லை. அனுதாபம் பிறந்தது.

தன்னுடைய வாழ்க்கைத் தவறுகளுக்கு, மகள் திருமணமாகாமல் தண்டனை அனுபவிக்கிருள் என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த கொள்ளிடம் கோமதியம்மாள் தன் பெண் பிரபாவை அவனுக்குத் துணைவியாக்கச் சம்மதிக்காமலிருப்பாளா?...திருமணம் நிச்சயமாயிற்று.

தன்னுடைய சொந்தக் கிராமத்தில் இதுவரை தன் பார்வையில் படாமல் இவ்வளவு சிறந்த எழிலரசி யொருத்தி யிருந்தது பூபதிக்கே ஆச்சரியத்தை அளித்தது. திருமணத்தன்று நண்பர்களிருவரும் ஒருவரை யொருவர் கட்டித்தழுவி ஆனந்தக் கண்ணீர் பெருக்கினர். எந்த வேறு பாடுகளும்—இதுவரையில்நண்பர்களுக்கிடையே எழுப்பாத ஒரு பெரும் புயலை இப்போது அந்தத் திருமணம் எழுப்பிவிட்டது என்றுதான் கூற வேண்டும். தன் நண்பனுக்குத் திருமணம் ஆனதிலே பூபதிக்கு மகிழ்ச்சிதான்! ஆனுல்......அழகுப் பதுமையாக அச்சடித்த சிலைபோல...ஆரணங்கு ஒருத்தி அருளுக்குக் கிடைத்து...அதன் மூலம் தன் உள்ளத்தில் ஒரு சூருவளியைக் கிளப்புவாள் என அவன் எதிர்பார்க்கவில்லை. நண்பனின் மனைவி, அவனுக்குத் தங்கை போல!... அவனும் அந்த எண்ணத்தை இழுத்து இழுத்துப் பிடித்து நிறுத்திப் பார்த்தான். அந்தக் கொள்கை, இருதயத்திலேயிருந்து வழுக்கி வழுக்கி ஓடிற்று!

"அய்யோ அருள் எவ்வளவு தூய்மையானவன்! களங்கமில்லாது பழகுகிற நண்பனுயிற்றே...அவன் மனைவியைப்பற்

**"களங்கமிலா இருவுள்ளம் கலந்தளிக்கும் அன்பு முத்தம்!"**

—நிழற்படம் : கே. பரமசிவம்.



றியா நாம் இப்படி நினைக்கிறோம்......''—பூபதிக்கு மனச்சாட்சி குடைந்தது!...புராணமோ இடையிலே நுழைந்தது! குருபத்தினி தாரையையே தாரமாக்கிக் கொண்டான் சந்திரன்...அவனுக்குத்தான் அனைவரையும் விட உயர்ந்த இடம்; சிவனாரின் தலையிலே!

அண்ணன் மனைவியைக் கூடி மகிழ்ந்தான் சுக்ரீவன்...... அவன்தான் அயோத்தி ராமனுக்கு ஆருயிர்த் தோழன்!......

பூபதி, துணிந்துவிடவில்லை. தாபமும் தணிந்துவிடவில்லை. மணமக்களை வாழ்த்தி விட்டுக் கொள்ளிடத்திற்குப் புறப்பட்டான்.

சில மாதங்களுக்குப் பிறகு, அருளின் தந்தை இறுதியாகக் கண்ணை மூடினார். அப்போது துக்கம் விசாரிக்க வந்த பூபதி, 'நீத்தார் நினைவு' முடிந்த பிறகும் கூட ஊருக்குப் போகவில்லை. நண்பனுக்கு ஆறுதல் அளிப்பதற்காக அங்கேயே தங்கி விட்டான். அருள், வெள்ளை மனங்கொண்டவன். பூபதியின் உள்ளத்தில் மூண்டிருக்கிற நெருப்பை அவன் உணரவில்லை. பிரபா மட்டும் அதை உணர்ந்து கொண்டு வருந்தினாள். நெஞ்சிலே கொழுந்துவிடும் தீ ஜுவாலை பூபதியின் கண்களின் வழியாக வெளிவந்து அவளைப்பல முறை சுட்டிருக்கிறது!......

''அவர் ஏன் இங்கேயே இருந்து கொண்டிருக்கிறார்?...பணக்கார வீட்டுப்பிள்ளை......நம்முடைய வீட்டு எளிய உணவை எத்தனை நாளைக்குச் சகித்துக் கொள்ள முடியும்? ஊருக்கு அனுப்பிவையுங்களேன்!''—என்று கணவனிடம் ஜாடையாகச் சொல்லிப் பார்த்தாள். அதற்குப் பரிசாக அருளின் கோபத்தைத்தான் பெற்றாள்.

பூபதியின் உள்ளப் போராட்டம் அவனை வதைத்துக் கொண்டேயிருந்தது. தவறு செய்கிறோம் என்று தெரிந்தும் அதைச் செய்யாமலிருக்க முடியவில்லையே எனத் தன்னையே நொந்து கொண்டான். இயற்கையமைப்பு தனக்கு அப்படியொரு பிரத்தியேக மன அரிப்பைப் படைத்திருப்பதாகவும் அதைத் தீர்த்துக் கொள்ள தான் தேர்ந்தெடுக்கும் மார்க்கம் சரியானதென்றும் சில சமயங்களில் முடிவுக்கு வந்தான். பிரபாவை அவன் காணாத நேரங்களில் அவ்வளவாகப் பித்தம் முதிர்வதில்லை. நண்பன் அருளுடன் ஆற்றோரம் செல்லும் போதும் மணல் மேட்டில் அமர்ந்து பழைய கதைகளைப் பேசும் போதும் ''சே சே; நண்பனுக்குத் துரோகம் செய்யக்கூடாது!'' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டேயிருப்பான். வீட்டுக்கு வந்ததும், பிரபா உணவு பரிமாற வரும் எழிலைக்கண்டதும் மணல் மேட்டு முடிவுகள் மண்ணாகவே போய்விடும். பள்ளித்தோழன், பாசம்மிக்கான்—பற்றுடையோன்— அருகிருக்கிறான், அவன் அன்புத் துணைவியைப்பற்றி அற்ப எண்ணங்களை அலையவிடுகிறோம் என்ற பயங்கரத்தையே மறந்துவிடுவான். அவளும் அவ்வளவு அழகாக இருந்தாள். உணவு பரிமாறும் போது அவனையறியாமலே அவன் கண்கள் அவளைச்சுற்றும். அவளை அண்ணாந்து பார்ப்பதற்காகவேண்டி அடிக்கடி தண்ணீர்குடிப்பான். உறிஞ்சிக் குடித்தால் பார்வை மேலே போகாது என்பதற்காக மிகவும் சுத்தக் காரன் போலக் குவளையை மேலே தூக்கிக் குடிப்பான். அந்த இழி பண்பு தெரியாத அருள், ''சும்மா எச்சில் செய்து குடிடா பூபதி!'' என்று களங்கமின்றிக் கூறுவான். பூபதி அவளை ரசிப்பான். அருளோ, பூபதியின் இலையில் என்ன இல்லை என்பதைக் கவனித்து, அடிக்கடி பிரபாவைக் கூப்பிட்டு இல்லாததைப் பரிமாறச் சொல்வான்.

செய்வது தவறுதான்! நன்றாகத் தெரிகிறது; பூபதிக்கு! அதற்காக வருந்தவும் செய்கிறான். அனுசூயா [redacted] மாகவே வந்து பரிமாற வேண்டும் என்று ஆசைப்படவில்லையா மும்மூர்த்திகளும்!........ அதைவிட இது பெரிய தவறா என்று முடிவு கட்டி விட்டான் போலும்!......

அருள், பணமில்லாமல் கஷ்டப்படுகிறான் என்பதையும் பூபதி புரிந்து கொண்டான். பண உதவி செய்தாலோ அருள் பெற்றுக் கொள்ள மாட்டான். அந்தச் சுபாவமும் பூபதிக்குத் தெரியும். வேலைகளுக்கு விண்ணப்பம் போட்ட இடங்களிலிருந்தெல்லாம் 'இல்லை' என்ற ஏகோபித்த பதிலே வந்தது. பூபதி, அருள் எதுவும் சந்தேகப்பட்டு விடக்கூடாதென்று பயந்து ஊருக்குப் புறப்பட்டு விட்டான், நினைத்தது நடக்கவில்லையே என்ற கவலையோடு!

அருளும், பிரபாவும் சாப்பாட்டுக்கே மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்ற சேதியைப் பூபதியின் பண்ணைக் காரியஸ்தன் மூலமாகத் தெரிந்து கொண்ட கோமதியம்மாள் மருமகன் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தாள். மருமகனுக்கு ஒரு வேலை கிடைக்கும் வரையில், மகள் கொள்ளிடத்திலேயே வந்து இருக்கட்டும் என்று சொல்லி அழைத்துப் போய் விட்டாள், பிரபா. அருளைப் பிரிய மனமின்றி ஒரு நாள் இரவு முழுதும் அழுதாள். அருளோ, தன் நிலைமையை எடுத்துக் கூறி. ''எங்காவது வெளியே சென்று வேலைக்கு முயற்சித்து வெற்றியோடு வந்து உன்னை அழைத்து வருகிறேன், கவலைப்படாதே!'' என்று உறுதி மொழிதந்தான்.

அதன்படி அருள் வேலைதேடிப் புறப்பட்டான்........ஒரு நாள் இரண்டு நாளல்ல; பல மாதங்கள் வேலை தேடி அலைந்தான்.

பிரபா, கொள்ளிடத்திற்கு வந்திருக்கிற சேதி கேள்விப்பட்ட பூபதி, அடிக்கடி அவள் வீட்டுக்குப் போய் அருளின் சுகத்தைப்பற்றி மிக அக்கரையோடு விசாரித்து வந்தான். பிரபாவின் தாயாருக்குப் பூபதியின்மீது மரியாதையும் அன்பும் அதிகமாயிற்று. பெரிய மனிதர் வீட்டுப்பிள்ளை, தன் குடும்பத்திலே இவ்வளவு அக்கரையாக இருக்கிறதே என்று வியந்தாள். அருளுக்கும். பூபதிக்குமுள்ள நட்பைக் கேள்விப்பட்டு, அவனைப் பரிபூரணமாகக் கோமதி நம்பியும் விட்டாள். பணமுடை ஏற்படுகிற நேரங்களில் பத்து. அஞ்சு என்று அவனிடம் கோமதியம்மாள் வாங்கிக் கொண்டாள்.

ஒரு நாள்........சிதம்பரத்திலே மார்கழித்திருநாள். கோமதியம்மாள் வழுக்கி விழுந்தவளானாலும் பக்தி அனுஷ்டானங்களில் பெரும் ஈடுபாடு உடையவள்! மார்கழித்திருநாள் காணுவதற்கு சிதம்பரத்திற்குப் புறப்பட்


பொங்கலோ
பொங்கல்!
நடனம்: திருமதி ராஜசுலோசனா.


பொங்கிடும் உதயச் செங்கதிர் எழுப்பப்
பொன்னேர் பூட்டிச் செங்நெல் விதைத்து
நங்கையர் குழல்போல் நன்கு வளர்ந்த
நாற்றுகள் இடத்தை மாற்றியே நட்டு


தங்கம் நிகர்த்தவன் தன்பசி நீக்கச்
சத்துடன் உணவு சமைத்துச் சுமந்து
எங்கும் நெருங்கி நிறைந்து விளங்க
எழில்மிகு நெற்கதிர் யாவும் அறுத்து
Sadhu



அங்கிருந் தகற்றி அடித்துத் தூற்றி
ஆண்டின் பயனை அடைந்து மகிழ்வார்
தங்கிடும் இன்பத் தமிழரின் திருநாள்
தழைத்திட என்றும் உழைப்பவர் வாழ்க!

புகைப்படங்கள்: சாமுவேல்.

டாள். பிரபா வர மறுத்து விட்டதால் அவளைத்தனியே விட்டு விட்டுக்கிளம்பினுள்.

கோமதி, சிதம்பரம் போயி ருப்பதைத் தெரிந்து கொண்ட பூபதி, பிரபாவிடம் படையெடு தான், "அருளிட மிருந்து கடி தம் ஏதாவது வந்ததா?" என்று விசாரணையைத் துவங்கி திடீரெனக் கதவைத் தாளிட்டு அவளது கரம்பற்றி இழுத் தான்.

பிரபா, கூச்சல் போட அஞ்சி னுள். கூச்சல் போட்டு ஊர் கூடிவிட்டால் பெரிய மனுஷன் விரோதம் வருமே யென்று நடுங்கினுள். அதனுல், பணி வோடு பூபதியைப் பார்த்து, "நண்பருக்குத்துரோகம் செய் யாதீர்கள்!" என்று கெஞ்சி னுள். பூபதியோ நெருப்பாக நின்று கொண்டிருந்தான்.

கதவை யாரோ தட்டும் சப் தம் கேட்டது. பூபதிக்குப்பீதி மேலிட்டது. எப்படியாவது ஓடிவிட வேண்டுமென்று கொல்லைக்கதவைத் திறந்து கொண்டு ஓடினுன். தெருக் கதவைத் தட்டியது அருள்!... கொல்லைப்புறமாக யாரோ ஓடு வதை அருள் கவனித்தான். ஓடிப்போய்ப் பார்த்தான். பூபதி தான் என்பதைப் புரிந்து கொண்டான். தெருக் கதவு திறக்கப்பட்டது. அருளைக் கண்ட, பிரபா ஓடிப்பாய்ந்து "அத்தான்" என்று தழுவிக் கொண்டாள். "விடு என்னை! நான் பூபதியல்ல!" என்று அவளை உதறிவிட்டு அருள் எங்கேயோ வேகமாக நடந் தான்.

* * *

இருண்ட வானத்தைப் பார்த் தவாறு நினைவுச் சுழலிலே சிந் தனையைச் சிக்க வைத்திருந்த அருள், தான்வரும் ரயில்வண்டி "கிள்ளை" என்ற புகைவண்டி நிலையத்திற்கு அருகாமையில் வந்து விட்டதை உணர்ந்தான். அடுத்தது சிதம்பரம்; அடுத்தது வல்லம்படுகை; அதற் கடுத்தது கொள்ளிடம்!... ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன் பிரிந்து சென்ற தன் மனைவியைப்பார்க் கப்போகிருன். பூபதியின் ஆசை நாயகியாகிவிட்டாள் என்று தவருன முடிவு செய்து நண்பன் மீதும், அவள் மீதும் ஆத்திரத்தைக் காட்டாமல் அமைதியோடு மலேயா நாடு நோக்கிப் பிழைக்க ஓடிவிட்ட 'பெருந் தகை' ஏழெட்டு வரு டங்களுக்குப் பிறகு திரும்பி வருகிருன் மனை வியைச் சந்திக்க! ஏதோ ஒருவகை யான இன்பப் பெரு மூச்சு!...... அதோடு பெட் டியைத் திறந் தான் அருள். ஒரு நீண்ட கடிதத் தை எடுத்துப் படித்தான். அந்த வழிப் பயணத் தில் அதை அவன் பதினேழாவது தடவையாகப் படிக்கிருன்.

"அன்புள்ள அத்தான்! உங் கள் பிரபாவின் வணக்கம். பல முறை யோசித்து



யோசித்துக் கடைசியாக நான் செய்த முடிவுதான் இந்தக் கடிதம். நண்பன் உங்களுக்குத் துரோகியாகி விட்டான். நானும் துரோகியாகி விட்டேன். அன்றொரு நாள் அப்பழுக்கற்ற என்மீது சந்தேகப்பட்டு, சந்தர்ப்பம் செய்த சதியால் எனக்குக் களங்கம் கற்பித்துப் பிரிந்தீர்கள். சுமார் எட்டுஆண்டுகள் உருண்டு விட்டன. இந்த இடைக் காலத்தில் பிரபாவின் வாழ்க்கையிலே ஏற்பட்ட சுழற்சிகள் எப்படிப் பட்டவை; அதற்கு யார் காரணம் என்பதை நீங்கள் உணர வேண்டாமா?

மாசுபடிந்த ஒரு மாதாவின் வயிற்றிலே தான் பிறந்தேன். தாய் செய்த குற்றம் என் தலை மீது விழுந்து எனக்குத் தாலி கட்ட யாருமே முன் வராத போது தாங்கள் வந்தீர்கள்; தெய்வம்போல! தேன் மணக்கும் வாழ்விலே என்று தான் நம்பினேன். தீக்காடு சூழுமென்று எதிர்பார்க்க வில்லை. என்னைச் சந்தேகப்பட்டுத் தெளிவற்ற நிலையில் எதையும் தீர விசாரிக்காமல் போய் விட்டீர்கள். எங்கு போனீர்கள் என்றே தெரியாமல் தவித்தோம்.

இரண்டு ஆண்டுகள் ஏங்கிக் கிடந்தோம், நானும் என் தாயும்!...தங்கள் ஆருயிர் நண்பன் பூபதியும் தங்களது இருப்பிடத்தைக் கூற வில்லை. நீங்கள் என்னைச் சந்தேகப்பட்டீர்களே, அன்றையதினம் நடந்தது தான் என்ன? ஆரம்பத்திலிருந்தே சொல்கிறேனே;

மாமாவின் சாவின் போது ஊருக்கு வந்த பூபதி, சிதம்பரம் கல்லூரிக்குக் கூடப்போகாமல் நம் வீட்டில் தங்கியிருந்தானே; அது எனக்காகத் தான்!......அப்போதே அவனைப் பற்றி ஜாடை காட்டினேன்—என்மீது சீறி விழுந்தீர்கள். அம்மா, தில்லைத் திருவிழாவுக்குப் போன நேரம் என்னைக் கெடுத்துவிட வந்தான். தக்க சமயத்தில் தாங்கள் வந்தீர்கள். கொல்லைப்புறம் ஓடினான். தாங்களோ அந்த நிகழ்ச்சியை வேறு விதமாகக் கற்பனை செய்து கொண்டீர்கள்.

இரண்டு வருடகாலம் தங்களை நான் தேட......அவனே என்னை நாடிவரத் தொடங்கினான். அம்மாவைப் பற்றித் தான் உங்களுக்குத் தெரியும். சீரழிந்தவர்கள்!......இந்த நிலையில் அவர்களைக் காசம் பற்றிக் கொண்டது. அம்மாவைக் காப்பாற்றும் பெரிய பொறுப்பு என் மீது விழுந்தது. அம்மா குடும்பத்தின் க்ஷேமத்திற்கு அறிவுரைகள் வழங்க ஆரம்பித்தார்கள். அந்த உரைகளில் தூய்மை இல்லா விட்டாலும், அம்மா] உயிர் வாழ்வதற்கு அதை' நான் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

"பூபதிக்கு இணங்கிவிடடி என் கண்ணே!" என்று தவடையைப் பிடித்துத்தாய் கெஞ்சினாள்; தன் நோயைப் போக்கிக் கொள்ளப்பணம் கிடைக்குமென்று! பிறகு, நான் என்ன எழுத இருக்கிறது; அத்தான்!

நீங்கள் கூடப்பூபதிக்கு எழுதியதாக ஒரு கடிதத்தை என்னிடம் காட்டினான். அதில் எங்களிருவரையும் வாழ்த்தியிருந்தீர்கள்......அந்தக்கடிதம் அவனுக்கு வரும்போதெல்லாம் நான் உங்களுடையவளாகத் தான் இருந்தேன். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் அவனுடைய வெள்ளாட்டியானேன்; வைப்பாட்டி யானேன்! நேரம் காலம் ஓய்வு ஒழிச்சல் இல்லாத காமப் பதுமையாக அவனுக்கு நான் மாறினேன். அதன் விளைவாகக் காசு குவிந்தது. அம்மாவின் காசம் குறைந்தது. இதோ! அந்தக் காசம் என்னைத் தொத்திக் கொண்டது!......அம்மாவுக்குக் காசம்தீர நான் சம்பாதித்துக் கொடுத்தேன்—இப்போது எனக்கே காசம்—என்னைக்காப்பாற்ற எந்த வாரிசும் இந்த வீட்டில் இல்லை. எனக்குக் காசம் என்று கேள்விப்பட்ட மறுநாளே பூபதி விலகிவிட்டான்.

சென்னையிலேஒரு நீதிபதிவீட்டுப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு, நிம்மதியாக வாழுகிறான். நானோ, நித்ய கண்டம் பூரண ஆயுசாக இருக்கிறேன்!

அத்தான், தங்களுக்குத் துரோகம் புரிந்த நண்பனுக்கு வாரந்தோறும் தாங்கள் எழுதிய வாழ்த்துக் கடிதங்களைப் படித்தேன், அதிலிருந்துதான் மலேயாவில் தங்கள் விலாசத்தையும் தெரிந்து கொண்டேன், எவ்வளவு பெரிய உத்தமர் நீங்கள். உங்களுக்கு நான் எத்துணைப் பெரிய பாவம் புரிந்திருக்கிறேன். இனியும் என்னைத் தாங்கள், மனைவியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் வேண்டவில்லை; நான் விரைவில் மறைந்து விடுவேன், இந்த மண்ணை விட்டு! அதற்



" கழனியின் காவலர் ! "
—படம் : பக்கிரிசாமி, காரைப் பிடாகை

குள் ஒரு முறை தங்கள் முகத்தைப் பார்த்து விட்டால், அதுவே நான் செய்த குற்றங்களுக்குப் பிராயச்சித்தமாக இருக்கும்!

தங்கள் காலடிகளை என் கண்ணீரால் குளிப்பாட்டி விட்டுக் கண்ணை மூடுவதில்தான் எனக்கு நிம்மதி!...வருவீர்களா?

அன்புள்ள

பிரபா."

கடிதத்தை மடித்துப் பெட்டியிலே வைத்தான்: கண்கள் நீர்வீழ்ச்சிகளாக மாறின: தனக்குத்தானே சற்று உரக்க, ஆகாயத்தைப் பார்த்து, "உன்னை மன்னித்து விட்டேன் பிரபா!" என்று கதறினான். அந்த ஒலி புகை வண்டியின் ஒலியோடு காற்றில் கலந்தது.

O

வண்டி, சிதம்பரம் நிலையத்தில் நின்றது. அருள், ஜன்னல் வழியே வெளியே எட்டிப்பார்த்தான். யார் அது?...பூபதி! ஆம் அவனேதான்—முதல் வகுப்பு வண்டியிலேயிருந்து எட்டிப் பார்த்தான். அருள், தன்னை மறந்து விட்டான், "பூபதி" என்றவாறு, ஓடிப்போய் முதல் வகுப்பில் ஏறிக் கொண்டான், பூபதிக்கு ஒன்றும் புரியவில்லை. அதற்குள் ரயிலும் புறப்பட்டு விட்டது.

மௌனமாக இருந்த பூபதியைப் பார்த்து...."இது யார்?" என்று பக்கத்திலேயிருந்த ஒரு பெண்ணைக்காட்டினான் அருள்!

"இதுதான் என் மனைவி!"

"ஓகோ...அப்படியா?...ம்... என் மனைவி சௌக்யமாக இருக்கிறாளா பூபதி?"

பூபதி, திடுக்கிட்டான். முகம் வெளுத்தது! பூபதியின் மனைவியும் விழித்தாள் எதுவும் புரியாமல்!...

"என்னடா விழிக்கிறாய்? என் மனைவிக்கு உடல் நிலை சரியில்லையாம்—அதைப் பார்க்கத்தானடா போகிறேன். இப்பொழுது அவள் உனக்கு வைப்



பாட்டியாக இல்லையா?... சாறற்ற சக்கையாகி விட்டாளாக்கும்!"

"ஏய் அருள், போதும் நிறுத்து! என்ன உளறுகிறாய்?"

"அடப்பாவி; என்னிடமிருந்து அவளைப் பிரித்தாய்! நானும் அனுமதித்தேன், உன்னிடம் நட்பின் காரணமாக நான் ஒரு பயனும் பெறவில்லை. நானே மானத்தையே நட்புக்காகப் பரிசளித்தேன்! பரிசளிக்கப்பட்ட பொருள் எவ்வளவு விலை உயர்ந்தது! அதையாவது காப்பாற்றினாயா பாவி!...வெள்ளிக் கூஜா நசுங்கிவிட்டால் உருக்கிப்புதுக் கூஜா செய்து கொள்வார்கள். நீயோ, கூஜாவையே குப்பையில் எறிந்துவிட்டு இன்னொரு கூஜா வாங்கிவிட்டாய்...அவ்வளவு பணத் திமிர் உனக்கு!..."

அருளின் பேச்சிலே ஆத்திரம் குமுறியதைப் பூபதி உணர்ந்து, நடுங்கினான்.

"என்னிடமும் வாழவிடாமல் நீயும் வாழ வைக்காமல் பிரபாவைக்கெடுத்து விட்டாய்...இது வரையில் தான் நீ எனக்கு நண்பன்-இனி என் எதிரி! எதிரி!" என்று அலறியவாறு இடுப்பில் செருகியிருந்த ஒரு கத்தியை எடுத்துப்பூபதியின் நெஞ்சிலும் வயிற்றிலும் முகத்திலும் மாறி மாறிக் குத்தினான் அருள்...

பூபதி, சுருண்டு விழுந்தான் மூச்சற்று!...அதற்குள், பூபதியின் மனைவி, அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்தாள், ரயில் நின்றது, கொள்ளிடம் பாலத்தைத் தாண்டி!...ரயில் நின்றவுடனே அருள் குதித்து ஓடினான்; இருளில் திசை தெரியாமல்!......

அதோ...ஒரு வெளிச்சம்... அங்கு ஓடினான்... சுடுகாட்டில் ஒரு பிணம் எரிந்துகொண்டிருந்தது' அந்த நெருப்பு வெளிச்சத்தில் அவன் சட்டை முழுதும் ரத்தக் கறையாக இருப்பதைக் கண்டான். அதோடு ஊருக்குள் ஓடினால் கொலைகாரனைக்கண்டு பிடித்து விடுவார்கள் என்று பயந்து, சட்டையைக் கழற்றி அந்த நெருப்பின்மீது வீசினான். பிணத்தைப் பொசுக்குவதற்கு அந்த சட்டையும்பயன்பட்டது.

அங்கிருந்து பிரபாவின் வீடு நோக்கி ஓடினான், கோமதியம்மாள் வாசலில் உட்கார்ந்திருந்தாள் வானத்தைப் பார்த்தவாறு!......விளக்கு 'மினுக் மினுக்' என்று எரிந்துகொண்டிருந்தது!

"அத்தே; பிரபா எங்கே?..." என்றான். கோமதியம்மாள் ஓவென அலறினாள்...

"தம்பீ...பிரபா, இன்று காலையில் போய் விட்டாள்...இரவு பத்து மணிக்குத்தான் என் கண்மணியின் உடலுக்கு நெருப்பு மூட்டினார்கள்" என்று வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டாள்!......

அப்படியானால், அருள், ரத்தக் கறை படிந்த சட்டையைக் கழற்றிப் போட்டது பிரபாவைப் பொசுக்கும் நெருப்பின் மீது தானா?......

அவளைப் பொசுக்கிய இரு நெருப்புகளுமே அணைந்து விட்டன...............

அருள் மட்டும் அலைந்து கொண்டிருந்தான்.

# அறிஞர்



புத்தர்

## அறம்

*** வேதமும், வேள்வியும், விரதமும், மனித இனத்தின் வேதனை தீர்க்காது. எண்ணத்திலும், செயலிலும் தூய்மை நிலவ வேண்டும் என்று இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்குமுன் போதியரசன் புத்தன் உபதேசித்த அறவழி, இந்து மதத்தின் எத்தனையோ இன்னல்களையெல்லாம் தாண்டி, அறிஞர் அம்பேத்காரின் தொண்டாக, சுயமரியாதை இயக்கமாக, நாட்டிலே ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. சித்தார்த்தன் துறவு, தோல்வியின் விளைவல்ல; அரசாங்கமும் ஆடம்பரமும் கட்டியிழுத்தாலும் தொண்டுள்ளம், தளையறுத்துச் சிறகடித்துப் பறந்து செல்லும் சீரிய பண்புடையது என்பதற்கோர் சான்று அவருடைய வாழ்க்கை. அருளரசனின் எண்வழிகள் அமைதியிழந்து தவிக்கும் உலகுக்கு ஆறுதல் மட்டுமல்ல; வழிகாட்டி.



சாக்ரடீஸ்

## சிந்தனை

*** ஏன் என்ற கேள்வி உலகில், எத்தனையோ மாறுதல்களை உண்டாக்கியிருக்கிறது. பழுத்த ஆப்பிள் பழம் கீழே விழுந்தது. ஏன் என்றான் நியூட்டன்; விளைவு, பல புதிய உண்மைகளை வானராய்ச்சித்துறை பெற்றது. கெட்டில் கொதிக்கும்போது மூடி ஆடியது. ஏன் என்றார் ஜேம்ஸ் வாட்; அதன் விளைவாக இருப்புப் பாதையில் இரயில் வண்டிகள் ஓடத்தொடங்கின. 18-ம் நூற்றாண்டில் பிரான்சிலும், 20-ம் நூற்றாண்டில் ரஷ்யாவிலும் கொதித்தெழுந்த மக்கள், ஏன் என்று கேட்ட கேள்வியின் விளைவுகள்தான் மாபெரும் பிரஞ்சுப் புரட்சியும், ரஷ்யப் புரட்சியும். இந்தக் கேள்விகளுக்குத் துவக்க விழா நடத்தியவர் தான் கிரேக்கப் பேரறிஞர் சாக்ரடீஸ்.



இயேசு

## அன்பு

*** தியாகத்தின் சின்னம் சிலுவை. சிலுவையில் மரித்த இயேசு அன்பைப்போதித்து, அந்த 'முடிவு'க்காளாக்கப்பட்டார் என்ற உண்மை, இரண்டாயிம் ஆண்டுகளுக்கு முன்பு மனித உள்ளத்தின் இருட்தன்மை எப்படியிருந்தது என்பதைக் காட்டுகிறது. ஆனால் அந்த பயங்கர மக்களின் மத்தியிலேதான், அன்பு வாழ ஆவியை அர்ப்பணிக்கும் மாபெரும் தியாகியும் வாழ்ந்தார் என்கிற உண்மைதான், தீமையின் மத்தியிலும் நன்மை வாழ்ந்து வழிகாட்டி ருக்கிறது-காட்ட முடியும்—என்ற நம்பிக்கையை நமக்கெல்லாம் ஊட்டுகிறது.

# உலகம்

## இலக்கியம்

*** உலகத்தில் எத்தனையோ வகையான மனிதர்கள் இருக்கிறார்கள்! ஷேக்ஸ்பியரின் நாடகங்களைப் படியுங்கள் தெரிந்து கொள்ளலாம். மனித உணர்ச்சிகளையும், மனப் போராட்டங்களையும் சித்தரிப்பதில் அவருக்கிணை, அவரே தான். புகழுரை கேட்டு அறிவு மயங்கும் மன்னன் லியர், குழப்பமான மனப்போராட்டத்தின் சின்னமாக விளங்கும் ஹாம்லெட், சந்தேகத்தால் வேதனைப்படும் ஒதெல்லோ, காதல் போயின் சாதலுக்குச் சான்றாகவிளங்கும் ரோமியோ-ஜூலியட், கற்பரசி டெஸ்டிமோனு, வஞ்சக அயோகா, பணப்பேய் ஷைலக் தன்னம்பிக்கையின் சின்னமான சீசர், இப்படிச் சொல்லிக் கொண்டே போனால் பட்டியல் விரியும். காலம், நாடு, மொழி ஆகிய எல்லாவற்றையும், தாண்டி உயர்ந்து நிற்கும் இலக்கிய இமயம் ஷேக்ஸ்பியர்.



ஷேக்ஸ்பியர்

## புரட்சி

*** "பிறக்கும்போது சுதந்திர ஜீவனாக மனிதன் பிறக்கிறான். ஆனால் எங்குமே கட்டுண்டு கிடக்கிறான்," இப்படி ஆரம்பிக்கிறது பிரஞ்சுப் புரட்சிக்கு வித்திட்ட ரூஸோவின் நூலான 'சமுதாய ஒப்பந்தம்', குடிதழீஇக் கோலோச்சும் பண்பில் அமையாத அரசாங்கம் அழியும், என்ற பேருண்மையை விளக்கி, குடி மக்கள் அனைவருக்கும் ஓட்டுரிமை வழங்க வேண்டும் என்றுகூறியவர் அவர். அவர்குறிப்பிட்டுள்ள 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்ற மூன்று வார்த்தைகள்தான், அவர் இறந்து பத்து ஆண்டுகளுக்குப்பின் நடந்த 'பிரஞ்சுப் புரட்சி'யின் தாரக மந்திரமாயின. கல்வியில் மாற்றம் வேண்டும் என்று அவர் எழுதிய 'இமைல்' என்ற நூல் அன்றைய அரசாங்கத்தை நடுங்க வைத்தது. ரூஸோ எண்ணப் பூங்கா.



ரூஸோ

## பொதுவுடைமை

*** பொதுவுடைமையை உலகுக்குப் போதித்த மார்க்ஸ் நம்முடைய கம்யூனிஸ்ட் தோழர்களின் தனி உடைமை அல்ல. ஐரோப்பாவில் ஏற்பட்ட தொழிற் புரட்சியால் பொருளாதார விளைவுகள் எப்படி இருக்கும் என் பதைக்கணித்து, அவர் கண்ட முடிவுகளை 'மூலதனம்' என்னும் நூலில் வெளியிட்டார். அந்த நூலும் கம்யூனிஸ்ட் அறிக்கையும், பொருளாதாரத்தத்துவ வளர்ச்சியில் ஒரு நிலையே தவிர, முடிவல்ல என்பதைச் சமீபத்திய நிகழ்ச்சிகள்விளக்கிவிட்டன. மார்க்ஸிஸத்திற்கு இப்படித் தான் வியாக்யானம் செய்ய வேண்டுமென்று எல்லை கட்டுவது, வளரும் கொள்கைக்கு முட்டுக்கட்டை போடுவதாகும். மார்க்சுக்கு இன்று ஏற்பட்டிருக்கும் பெரிய ஆபத்து அவரையே-அவருடைய கொள்கைகளையே-சிலர் தனிவுடமையாக்க முயலுவதுதான்.



மார்க்ஸ்



லிங்கன்

## சமத்துவம்

*** 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பதை வெறும் தேர்தல் கோஷமாக்கி விடாமல் நடைமுறையில் அமுல் செய்து அதன் காரணமாகவே துப்பாக்கி குண்டுகளைப்பரிசாகப் பெற்ற செயல் வீரர் ஆபிரகாம் லிங்கன், மரக்கட்டை வீட்டிலிருந்து வெள்ளை மாளிகைக்கு, உழைப்பாலும், உண்மையாலும், உயர்ந்த உத்தமர். முதல் முறை தேர்தலுக்கு நின்று தோற்றார். தேர்தல் பிரசாரத்தின்போது சொன்னாராம், "நீங்கள் எனக்கு ஓட்டளித்தால் நன்றியுள்ளவனாக இருப்பேன்...ஓட்டளிக்காவிட்டால் அப்பொழுதும் உங்களுக்கு என் நன்றிகுறையாது." அடிமை வியாபாரத்தை ஒழித்த லிங்கனுக்கு அமெரிக்கா மட்டுமல்ல; மனிதப் பண்புள்ள மக்கள் அனைவருமே நன்றி பாராட்டக் கடமைப் பட்டவர்கள்.



ரூஸ்வெல்ட்

## உரிமை

*** அணுகுண்டுகள் ஆர்ப்பரிக்கும் உலகத்தில், நம்பிக்கை ஒளி வீசிடும் ஐ.நா. விற்கு அட்லாண்டிக் சாசனத்தில் கையெழுத்திட்டு, வித்தூன்றிய அரசியல் மேதை 'ரூஸ்வெல்ட்' 1932-ம் ஆண்டு அமெரிக்காவில் வேலையில்லாத்திண்டாட்டம் தலைதூக்கி நின்ற நேரம். அப்பொழுதுதான் ரூஸ்வெல்ட் அமெரிக்கக் குடியரசுத் தலைவரானார். அவர் பதவியேற்ற சில ஆண்டுகளிலேயே, வேலையில்லாமையைத் தீர்ப்பதில் தீவிரமாக முனைந்து வெற்றியும் பெற்றார். மனித இனத்திற்குப் பெரிய விரோதி 'பயம்'தான் என்பது அவருடைய அபிப்ராயம். தனித்து வாழ்ந்த அமெரிக்கக் கொள்கையைக்கண்டித்து உலக அரங்கில் அமெரிக்கா தன் பணியைச் செய்யமுனைய வைத்தவர் ரூஸ்வெல்ட். அகில உலக அமெரிக்க செல்வாக்கிற்கு அஸ்திவாரமிட்டவரே அவர்தான்.



காந்தி

## அகிம்சை

*** லட்சியம் தூய்மையானதாக இருந்தால் அதை அடைவழியும் நேர்மையானதாக இருக்கவேண்டும் என்று சொன்ன பெரியார், அண்ணல் காந்தி. ஆனால் அவர் வழி வந்தோர்...கொடியில் தர்மசக்கரம், பேசுவது பஞ்சசீலம், நடத்துவது துப்பாக்கித் துரைத்தனம்! காந்தியாரைவிட மேதைகள் இருந்தார்கள். படிப்பாளிகள் இருந்தார்கள். ஆனால் சொல்லையும் செயலையும் ஒன்றாக்கியவர் என்ற முறையில் அவருக்கு வரலாற்றில் ஒரு தனி இடம் உண்டு. சகிப்புத்தன்மையின் இருப்பிடம் இந்து மதம் என்று போதித்த அவரை ஒரு இந்து சனாதனி கொன்றது, சிந்திக்கவேண்டிய ஒன்றாகும்.

## நாடகம்

*** வாழ்க்கையில் தன்னம்பிக்கை பெறவேண்டுமென்று எண்ணுபவர்கள், கட்டாயம் பெர்னார்ட்ஷாவின் வாழ்க்கையைப் படிக்க வேண்டும். சிறுவயதிலேயே லட்சியத்தைத் தெளிவுப்படுத்திக்கொண்டு திட்டமிட்டு வேலை செய்து, பிரமிக்கத்தக்க வெற்றியும் பெற்றவர். கலை, உண்மையிலேயே கலையாக இருக்க வேண்டுமானால் அது கருத்து விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இயங்க வேண்டுமென்பது ஷாவின் நம்பிக்கை. கலைக் காகவே ' என்ற அர்த்தமற்ற கூச்சல் எழுப்புவோர் கலையின் நோக்கம் பற்றிய ஷாவின் கருத்துரையை ஊன்றிப் படிக்க வேண்டும். ஷா ஒரு ஸ்தாபனம்; அவருடைய எண்ணங்கள் அனைத்தும் வாழ்க்கை விளக்கங்கள்.



பெர்னார்ட்ஷா

## விஞ்ஞான இலக்கியம்

*** விஞ்ஞான உண்மைகளை சுவைமிக்க கதைகளாக்கிய பேரறிஞர் வெல்ஸ், ஷாவின் நண்பர். ஆனால் அவரோடு பல விஷயங்களில் கருத்து வேறுபாடு கொண்டவர். இலக்கியத்தில் ஒரு புதிய விஞ்ஞானபாணியை வகுத்தவர். விஞ்ஞான வளர்ச்சியால் வருங்கால மக்கள் வாழ்க்கை எப்படியிருக்கும் என்பதை அவர் சுவைததும்பச் சித்தரிக்கிறார். வெல்ஸும், ஹக்ஸிலியும் விஞ்ஞான இலக்கியப் படைப்பிலே முதல் வரிசையில் நிற்பவர்கள், எளிய குடும்பத்தில் பிறந்து உழைப்பால் உயர்ந்த மேதை வெல்ஸ். அவர் நூல்கள் வெறும் கற்பனையல்ல; வருங்கால நிலை குறித்து, பிரச்சினைகள் பற்றி, மனித இனத்துக்கு விடப்பட்ட எச்சரிக்கைகள்.



வெல்ஸ்

## தத்துவம்

*** உள்ளத்தில் உணர்ந்ததை, தயவு தாட்சண்யமின்றி, அச்சமற்று உரைக்கும் உண்மையாளர் ரஸ்ஸல். உண்மையின் பின்னணியில் உலகத்தைப் பார்க்கும் தத்துவ ஞானி. குழப்பமான எண்ணங்களைச் சொல்லிவிட்டு, தத்துவப் போர்வையில் ஒளிந்து கொள்ளமாட்டார். அவருடைய நேர்மைத்திறம் ஜனநாயகப்பண்பில் வளர்ந்த பிரிட்டிஷ் அரசாங்கத்தையே அச்சுறுத்தியது. அரசியலிலிருந்து சமுதாயம் வரையில் அவர் தன்னுடைய எண்ணங்களை வெளியிட்டுள்ளார். 'திருமணமும் ஒழுக்கமும்' என்ற நூலில் அவர் வெளியிட்ட கருத்துக்கள் உலகத்தையே அதிர்ச்சியடையச் செய்தது. உண்மை கசப்பானதுதானே? தவிர, ரஸ்ஸல் ஒரு பெரிய கணித மேதை. எத்துறையிலும் நுண்ணறிவோடு பேசும் அவரது ஆற்றல், உலகத்திற்குக் கிடைத்துள்ள பெரிய செல்வம்.



ரஸ்ஸல்



நேரு

## சமாதானம்

உலக அமைதிக்காக ஓடோடித்திரிகிறார் நேரு. ஆனால் அவருடைய உபகண்டத்திலோ, பலருடைய கால்களையும் ஒன்றாகக் கட்டிக் கொண்டு ஓடும்படிப் பணித்து ஒற்றுமைகாண முயல்கிறார் பண்டிதர். முயற்சி தோல்வியடைகிறது. அதையாக அமர்ந்து, காரணம் காண்பதற்குப் பதிலாக ஆத்திர மடைகிறார். பிரத்தியட்ச உண்மைகளை மறந்து லட்சியக்கனவு காண்பது அரசியல் விவேகமாகாது. நேருவிற்குப்பின் இந்திய வரலாறு அதை நிரூபிக்கும்...வரலாற்றாசிரியர் என்ற முறையிலும், கவின்மிக ஆங்கில உரை நடை எழுதும் மேதை என்ற முறையிலும் நேரு, கட்சி, நாடு, இனம், காலம் கடந்து எல்லோராலும் பாராட்டப்படுவார் என்பது திண்ணம்.



பெரியார்

## பகுத்தறிவு

புத்தரும், மகாவீரரும், இராமலிங்கரும், சித்தர்களும் ஆரம்பித்த பணியை முழுமையடையச் செய்த மாபெரும் சாதனை பெரியார் ராமசாமியினுடையது. மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசும் காடு மணக்கவந்த கற்பூரப் பெட்டகம் அவர். பெரியாரின் பெரிய பணி சுயமரியாதை இயக்கத்தைத் தமிழகத்திற்கு அவர் அளித்துள்ளது. கால வெள்ளத்தால் மறையாதது அவருடைய தொண்டு. மானிட இனத்தில் மண்டிவிட்ட 'தூறு' வாரும் பணியில் தங்களை அர்ப்பணித்த இங்கர்சால், புரூனோ, வால்டேரின் பட்டியலில் பெரியாருக்கு ஒரு சிறப்பான இடம் உண்டு.



அண்ணா

## இன உரிமை

அண்ணா! அவர் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியின் அண்ணா! அரசியல் விழிப்புணர்ச்சியின் அண்ணா! இன உரிமைப் போராட்ட தளபதி அண்ணா! திராவிடத்தின் ஈடு இணையற்ற ஒரே அண்ணா! ஒப்பற்ற அண்ணா!

நாடகமா, பத்திரிகையா, மேடைப் பேச்சா, சினிமாவா, சிறுகதையா, தமிழகத்தின் எத்துறையிலும் தனது முத்திரையைப் பொறித்துக் கொண்டு, நம்மிடையே நடமாடும் பல்கலைக் கழகமாய் உலவிடும் அறிஞர் அண்ணாவைப்பற்றித் தீர்ப்புக்கூற நாம் யார்? வருங்கால வரலாற்று ஆசிரியர்களின் வேலையல்லவா அது!

தொகுத்தவர் : டெமாஸ்தனிஸ்

ஓவியம் : வைத்தியலிங்க


ஏற்றமிகு எழிலோவியம்!
ஜுபிட்டர் பிக்சர்ஸ் அளிக்கும்
அரசிளங்குமரி
டைரக்ஷன்: A.S.A.சாமி
திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி
சங்கீதம்: G.ராமநாதன்
ANAND

# தயாராகிறது!

மாபெரும் ஆசிரியரின்
மகத்தான கதை
மகோன்னதமான
திரை ஓவியமாகிறது!!

அமரர்
**கல்கியின்**

# பார்த்திபன் கனவு

**வைஜயந்திமாலா**
**ஜெமினி கணேசன்**
முதலியோர் நடிப்பது

வசனம்: **விந்தன்**
டைரக்ஷன்: **யோகானந்த்**

தயாரிப்பு:
**V. கோவிந்தராஜன்**




WRAPPER PRINTED AT SHANTI PRESS, MADRAS-1